ஜாதக பாஸ்கரன்.

ஜி. பொபதி ஐயர்.

1987

12/
-1PR

உ

கணபதி துணை

# ஜாதக பாஸ்கரன்

ஜாதகபலனை அறியவும், ஜாதகம் கணிக்கவும்
எவர்களுக்கும் உபயோகமாக

பல நூல்களிற் சொல்லியபடி

யாழ்ப்பாணம் ஜோதிஷர்

**வி. சபாபதி ஐயர் அவர்கள்**

வசன ரூபமாக எழுதியது.

ஐந்தாம் பதிப்பு

கொக்குவில்
சோதிடபரிபாலன மடம்

**இ. வெங்கடேச ஐயரால்**

சோதிடப்பிரகாச யந்திரசாலையிற்
அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது

பிரபவ ௵ சித்திரை ௴

**1987**

*Registered Copyright.*] [விலை ரூபா 40-00

# பதிப்புரை

இந்நூல் சோதிட சாஸ்திரத்திலும், வைத்திய சாஸ்திரங்களிலும் வல்லுனராய் யாழ்ப்பாணம் வண்ணை நகரில் மிகவும் பிரபலம் பெற்று விளங்கிய ஸ்ரீமத் வி. சபாபதி ஐயர் அவர்களால் பல சோதிஷ சாஸ்திர விதிகொண்டும் தமது அனுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டு, கீலக (கி. பி 1909) வருடத்தில் முதன் முதல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. அப்பொழுது இந்நூலைப் பலரும் ஆவலுடன் வாங்கிப் படித்துச் சோதிட சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தனர். இம் முதற் பதிப்பு வெகுசீக்கிரமே விற்பனையாகியமையாலும், அதன்பின் விரோதிகிருது (கி.பி 1912) வருடத்தில் ஸ்ரீமத் சபாபதி ஐயர் அவர்கள் சிவபதமடைந்துவிட்டதனாலும், புஸ்தகம் தேவையானோர் நெருக்கியபடியாலும் இதன் இரண்டாம் பதிப்பு ஷை சபர்பதி ஐயரவர்களின் புத்திரர் ஸ்ரீமத் V. S. ஸ்ரீபதி ஐயர் அவர்களால் நள (கி. பி. 1916) வருடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இப் பதிப்பு அவசரத்திற்கென அச்சிட்டபடியால் அச்சுப் பிழைகள் இருந்தும் இதன் அருமையை அறிந்து பலரும் வாங்கிப் படித்தமையால் இரண்டாம் பதிப்புப் பிரதிகளும் விற்பனையாகிவிட்டன. ஆகவே, சென்ற பவ (கி. பி. 1934) வருடத்தில், ஷை V. S. ஸ்ரீபதி ஐயர் அவர்களால் மூன்றும் பதிப்பு, முதற் பதிப்புப்போல தரமான காகிதத்தில் அச்சுப் பிழைகளின்றி இச் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது. இம் மூன்றும் பதிப்புப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்துவிட்டபடியாலும்; ஸ்ரீமத் V. S. ஸ்ரீபதி ஐயர் அவர்கள் சந்நியாச ஆச்சிரமம் பெற்று ஸ்ரீ சுவாமி ஸத்யானந்த ஸரஸ்வதிஜீ ஆகி, விக்கிரம (கி. பி. 1940) வருடத்தில் மஹா சமாதி அடைந்துவிட்டபடியாலும், ஷை ஸ்ரீபதி ஐயர் அவர்களின் புத்திரர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ஷை நூலின் பதிப்புரிமையைக் கிரயசாதனமாகப் பெற்று நான்காம் பதிப்பு பல திருத்தங்களுடன் வெளியிடப்பட்டது. இப்பதிப்பும் விற்பனையாகி முடிவடைந்துவிட்டமையாலும், பல சோதிட அபிமானிகளின் தேவையை நிறைவு செய்யும் நோக்குடனும் ஐந்தாவது பதிப்பாக இதனை வெளியிட்டிருக்கிறேன். ஆகவே, சோதிட அபிமானிகளும், சோதிடம் கற்கும் ஆர்வமுள்ளவர்களும் இதனை முன்போல் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சோதிடபரிபாலன மடம்,
கொக்குவில்.
பிரபவ ஹு சித்திரை மீ

இ. வெங்கடேச ஐயர்

# PREFACE

Many works on Astrology are extant in Sanskrit. The earliest one was that revealed by Brahma, the Creator in the Kiretha Yuga. Next to that was the one revealed by the Sun at the end of Kiretha Yuga - 2,165,010 yeras ago. Subsequent to this date, many works on the subject were given to the world at different periods by the Rishis, the seers into the past present and future. Based upon the works in Sanskrit, several books on Astrology have been written in Tamil, but they are less comprehensive and important than the original works in Sanskrit. If one wants to cast a horoscope and be able to predict the influences of the planets upon the life in all its bearings, he has to stady many works on Horoscopy in Tamil and the information which is needed cannot be gathered from a single work. Besides, it would be very difficult, except for those who are good Tamil scholars to understand the works on Tamil Horoscopy which are in poetry.

I have therefore undertaken to give in simple Tamil prose a digest of all principles to be found in the Sanskrit and Tamil works on Astrology which are available to me, with a view to make it easy for men of ordinary knowledge, even women boys and girls to know how to cast horoscopes and to predict the influences of planets upon the lives of men.

**V. SABAPATHY IYER**
Astrologer.

1909.

# TESTIMONIAL

By

*The Hon. Mr. P. Arunachalem* M. A., C. C. S.

Barrister - at - Law,
Registrar General.
CEYLON.

V. SABAPATHY IYER of Vannarponnai, Jaffna has been known to me for some years. He is a man of great intellectual attainments and well versed in Tamil and Sanskrit and specially proficient in Indian Astrology and Mathematics. He is reputed to be the ablest Astrologer now in Ceylon and his Tamil Calendar has a wide circulation here and in Southern India.

1 st, November 1899. **P. Arunachalem**

# TESTIMONIAL

By

*The Hon. Mr. A. Kanagasabai* B. A., M. L. C.

Advocate.
CEYLON.

M. R. Ry. SABAPATHY IYER Avergal has been known to me during the last 15 years. From his early life he devoted much attention to Tamil and Sanskrit literature and Philosophy. Astroloy has been his special study and his knowledge of this branch is very profound.

People of this Peninsula and visitors from other parts of the Island and from Southern India used to consult him frequently on questions of Astrology and openly express great satisfaction at the replies given. His reputation as a scholar and Astrologer is deservedly very high; and as a legitimate result, his Tamil Calendar obtains a very wide circulation both in and outside of Ceylon.

15th, November 1899. **A. Kanagasabai**

# TESTIMONIAL

By

*A. Mailvaganam Esqr,* J. P. & U. P. M.,

Kopay,
JAFFNA.

I have known Mr. SABAPATHY IYER of Vannarponnai, as an Astrologer for some years. He has asked me to write a few lines as to his competency as an Astrologer. But I am unable to gauge his attainments, for the simple reason that I have no knowledge of Astrology. I can, however, say that when I was ill in 1896 and my life was despaired of by friends and relatives and even by my medical attendants Drs. Grenier and Mills, some of my friends advised me to consult my Horoscope and though I was averse to do so in consequence of may not having had much faith on Astrology I was forced to yield to the wishes of my friends, and I found that Mr. SABAPATHY IYER who was consulted correctly foretoled that I would recover on the 26th of August 1896, and I was agreeably surprised to find that Mr. SABAPATHY IYER was correct in his prediction.

I am glad to state here that the Iyer's Tamil Calendar has a wide circulation both here and in South India.

**A. Mailvaganam**

4th, February 1900.

உ

# சம்மத பத்திரிகை

யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபர்களும்
காவியபாடசாலைத் தாபக அத்தியாபகர்களும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய

**சைவப்பிரகாச வித்தியாசாலை மனேச்சர்களுமாகிய**

நல்லூர்

## ஸ்ரீமாந் த. கைலாசபிள்ளை அவர்களால்

**கொடுக்கப்பட்ட சம்மத பத்திரம்**

ஸ்ரீமத் வி. சபாதி ஐயரவர்கள் என்னோடு தமிழ் படித்தவர்கள். அவர்களை நான் முப்பது வருஷ காலமாக் அறிவேன்; சோதிட விஷயத்தில் அவர்களுக்கு ஒப்பாகவேனும், மேலாகவேனும் ஒருவரையும் நான் இத் தேசத்திற் காணவில்லை. அவர்களுடைய பஞ்சாங்கமும் கணிதமும் எனக்கு அனுபவத்துக்கு ஒத்திருக்கின்றன. அவர்கள் கணிக்கும் பஞ்சாங்கம் நான் கைக்கொள்வது.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்,<br>விகாரி ஷு மார்கழி மீ | இங்ஙனம்,<br>த. கைலாசபிள்ளை |

மஹா ஜோதிஷர்களாகிய வேதாரணியம்

## பிரமஸ்ரீ முத்துஜோஸ்யரவர்களால்

**கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்**

ஸ்ரீமத் வி. சபாபதி ஐயரவர்கள் பஞ்சாங்கத்தைப் பரிசிலனை பண்ணிப் பார்த்ததில் திதி, வாரம், நக்ஷத்திரம் முதலானவைகளும், கிரகஸ்திதி முதலானவைகளும் மிகவும் சரியாயிருக்கின்றன. மேற்படி பஞ்சாங்கத்தில் விவாகப் பொருத்தம் முதலானவைகளும், சுபமுகூர்த்தங்களும், அமிர்தயோகம் முதலானவைகளும் போட்டிருத்தல் மிகவும் விசேஷமாக இருக்கிறது.

இங்ஙனம்,
முத்துஜோஸ்யர்
வேதாரணியம்.

22-12-1900.



ஜோதிஷ சித்தாந்த சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்களும், வாக்கிய பஞ்சாங்க கணிதர்களுமான

**கொழும்பு சுப்பிரமணியசுவாமி கோவில்**

## பிரமஸ்ரீ நா. குமாரசுவாமி பட்டாசாரியரவர்களால்

**கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்**

ப்ரஹ்மஶ்ரீ வி. ஸபாபதி ஜ்யௌதிஷிகை: கணிதம் ப்ரத்யக்ஷ [illegible] பஞ்சாங்கம் லௌகிகவைதிககார்யாவிரோதிதயா [illegible] இதி.

| | |
|---|---|
| விஶ்வாவஸு வர்ஷே<br>[illegible] | நா. குமாரஸ்வாமி பட்டாசார்ய:. |

திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சியிலிருக்கும்
ஸாஹித்திய நியாய வேதாந்த
மஹாமஹோபாத்தியாய பண்டித

## பிரமஸ்ரீ மு. சர்வேஸ்வர சர்மா அவர்களாற்

**கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்**

[illegible]

ப்ரஹ்மஶ்ரீ வி. ஸபாபதி ஜ்யௌதிஷிக ஶிரோமணிபி: கணிதம் [illegible]

மு. ஸர்வேஶ்வர ஶர்மா

**ஜோதிஷ சாஸ்திரத்திலே சிறந்தவர்களாகிய**

**சிதம்பரம் வியாகரணம்**

## ஸ்ரீமத் முத்தையா பட்டாரகர் அவர்களாற்

**கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்**

விஷ்ணு: காஶ்யபகோத்ரஜோ விஜயதே நாடீஶாஸ்த்ர நாயகோ
ஹ்யாவத்ஸம்பவஸாரஹ்ருத் ப்ரவிலஸத் ஸத்தர்க யஸ்ய ஸ்வயம்।
விஸ்தாரஸ்திஹஜ்ஜடேஸ ஸ்ருதிகடம்ஸ ஸுஹ்ர்த்த நாநிதம்
வஜ்ராஹம் ப்ருதிஹாயநம் ரவயதே வாக்யப்ரகாரேண ஸம்பூர்ணம்॥

**மஹா வித்துவான்**

சுன்னாகம்

## ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்

இயற்றிய

**கட்டளைக் கலித்துறை**

பூவேறு வண்ணைத் திருநகர் வாசன் புவித்தலத்தே
காவேறு சோதிட நூற்றுறை போக்கிய நல்லறிஞன்
பாவேறு கீர்த்திதன் பஞ்சாங்க மெண்ணும் பயிற்சிமிக்கோன்
சேவேறி பாதந் தொழுவோன் சபாபதி தேசிகனே.

ஈகையு மின்சொல்லுந் தாழ்நடை தானு மியல்பெனக்கொண்
டோகையில் வாழ்பவன் கற்றவர் தங்களுக் குற்றநண்பன்
சாகைக ளோடு கணித ககோளங்க டாமுணர்ந்தோர்
சேகர மாமணி வண்ணைச் சபாபதி தேசிகனே.

ஆரிய நூல்க ளருந்தமிழ் நூல்க ளறிந்தறிவிற்
கூரிய சிந்தைய னாகமந் தேர்ந்து குருத்துவம்பூண்
டேரியல் சைவக் கிரியைகள் செய்யு மியல்பின்மிகுஞ்
சீரியன் பூசுரர் கோமான் சபாபதி தேசிகனே.

அருந்தமி ழோடு வடமொழி யாள ரறியுமுறை
பொருந்திய நூல்களுஞ் சோதிடந் தன்னிற் புகுமறிஞர்
விருந்தெனக் கொள்ளும் விதானநன் னூல்களும் வேறுளவுந்
திருந்துற வச்சி லிடுவோன் சபாபதி தேசிகனே.



**நீர்வேலி, குருக்களாதீனத்தைச் சார்ந்த**

**வாய்க்காற்றரவை விநாயகராலயத்திலே**

**விகாரி ஸூ ஐப்பசி மீ 3 உ**

## கூடிய சபையாரின் அங்கீகார பத்திரம்

ஸ்ரீமத் வி. சபாபதி ஐயர் அவர்கள் சொல்லிவருஞ் சோதிட பலன்கள் அனுபவத்துக்கு முழுவதும் ஒத்திருத்தல் உலகறிந்த உண்மை. இவர் பஞ்சாங்கத்திற் குறித்த போதாயன அமாவாசை முதலிய விரதங்களின் நிர்ணயங்கள் முழுவதும் சாஸ்திர சம்மதமே என்பது நாம் ஆராய்ந்துகண்ட உண்மை.

இப்படியாயினும், இவருடைய விகாரி வருஷ பஞ்சாங்கம் வழக்கிற்கிடமாய் நிற்றமையால் நாம் ஐயுற்று, இத் தேதியில் நமது கோவிலில் இவரை வருவித்துச் சில சனசமூகத்திற் பல ஆட்சேபங்களையுந் தொடுத்தோம். நம்முடைய ஆட்சேபங்கட் கெல்லாம் இவர் பொருந்துமாறு தகுந்த சமாதானங்களை உடனுக்குடன் திடமாகச் சொல்லி நமது சந்தேகத்தை முழுவது மொழித்த சாதுரியத்தை மிகப் பாராட்டுகின்றோம். இதுமுதல் இவர் பஞ்சாங்கத்தையே நாமெல்லாம் அங்கீகரிப்பதற்குத் தடையில்லை:

சோ. சந்திரசேகரக் குருக்கள் (நீர்வேலி)
வே: பஞ்சாக்ஷரக் குருக்கள் ,,
வி. பாலசுப்பிரமணியக் குருக்கள் (சிதம்பரம் ஜோதிஷர்)
கு. வைத்தியநாதக் குருக்கள் (நவிண்டில்)
ச. கதிரேசக் குருக்கள் (ஷை கோவில் அர்ச்சகர்)
கு. கார்த்திகேயக் குருக்கள் (நீர்வேலி கந்தசுவாமி கோவில்)
ச. சிவப்பிரகாசன் (நீர்வேலி)

இவர் சம்ஸ்கிருத விற்பத்தியிலே இத்தேசத்திலே தமக்கு இணையில்லாது பெரும்புகழ் படைத்த ஸ்ரீமத் சங்கரபண்டிதரவர்களுடைய புத்திரரும், மாணாக்கருமாகிய பண்டிதர்.

# விஷய அனுக்கிரமணி


| விஷயம் | பக்கம் |
| --- | --- |
| முகவுரை ... ... | 1 |
| மங்களாசரணமும், நாற்பெயரும், காலப்பிரமாணம் ... ... | 3 |
| சதுர்யுகப் பிரமாணம் ... | 4 |
| **முதலாம் அத்தியாயம்** | |
| திதியாதிகளின் குணவிசேடம், கிரகபெலம் ... | 5 |
| கோட்களின்தானவலிமை, வர்க்கோத்தமம் இராசிகளிலும் கிரகங்களிலும் சரம்திரம்உபயம் சிரோதயம் பிருட்டோதயம் சிரபிருட்டோதயம், ஆண் பெண் அலி ... | 6 |
| இராசிகள் வலிபெறுங் காலம், கோட்கள் வலிபெறுங் காலம், கிரகங்களின் நட்பாதி ஐவகைப்பெலம், இராசிகநிறம், கிரகங்களின் நிறம் ... ... | 7 |
| இராசிகளின் வடிவம், கிரககாரகம் ... .. | 8 |
| பாவகாரகம் ... .. | 9 |
| கேந்திரபெலம் ... | 10 |
| திரிகோணபெலம், மாரகமிருத்துக்களின் விபரம் கிரக இரத்தினம் ... | 11 |
| கிரககுணம், கிரகரோகம், கிரக சுவை, கிரக அங்கம், இராசி அங்கம் புருஷ காலம் ஸ்திரீ காலம் ... ... | 12 |
| கிரகநோக்கு, யாழ்ப்பாணத்துக்குரிய இராசிப் பிரமாணம், பகல்நாழிகை ... ... | 13 |
| அவச்சாயை, பாதச்சாயை நிலவு நாழிகை ... | 14 |
| நக்ஷத்திரங்களின் வடிவவமும், உச்சமாகும் போது உதயமாகும் இராசிகளிற் சென்ற நாழிகையும் அறிய ... | 16 |
| நவக்கிரக நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம், அதி உச்சம் அதிநீசம் ... | 17 |
| கிரகமூலத் திரிகோண இராசி பாகை, கிரக மித்துரு, கிரகசத்துரு, கிரக தற்கால மித்துரு சத்துரு ... ... | 18 |
| **இரண்டாம் அத்தியாயம்** | |
| துவாதச லக்கினம் ... | 19 |
| சந்திரகதி ... ... | 20 |
| கிரக அங்கநிலை .. | 22 |
| கிரகசமயம், கிரியாகமனம் | 25 |
| கிரக அவஸ்தை, முக்குணவேளை ... ... | 26 |
| காலவோரை, கேந்திராதி ஐந்துவித இடம் ... | 27 |
| **மூன்றாம் அத்தியாயம்** | |
| அஷ்டவர்க்கம் ... ... | 28 |
| திரிகோணசோதனை, ஏகாதிபத்தியசோதனை | 30 |
| இராசிக்குணகாரம் கிரகக்குணகாரம், குணசமூகம், அஷ்டகவர்க்கப் பரமாயு ... ... | 31 |
| அஷ்டகவர்க்க பொதுப் பலன் ... ... | 32 |
| சர்வாஷ்டகவர்க்க பலன் | 36 |
| கந்தாயம் ... ... | 37 |
| திக்குவிந்து ... ... | 38 |
| **நான்காம் அத்தியாயம்** | |
| தசவர்க்கம் ... ... | 39 |
| தசவர்க்க அம்சம் ... | 44 |
| தசவர்க்க அங்கிசபலன், தசவர்க்க கிரகபெலம் | 45 |





| விஷயம் | பக்கம் |
| --- | --- |
| **ஐந்தாம் அத்தியாயம்** | |
| 1-ம் பாவ பலன் ... | 47 |
| 2-ம் பாவ பலன் ... | 48 |
| 3-ம், 4-ம் பாவ பலன் ... | 49 |
| 5-ம், 6-ம் பாவ பலன் ... | 50 |
| 7-ம், 8-ம் பர்வ பலன் ... | 51 |
| 9-ம் பாவ பலன் ... | 52 |
| 10 ம் பாவ பலன் ... | 53 |
| 11-ம், 12-ம் பாவ பலன் | 54 |
| முக்குணவேளையின் பலன், ஏழுவாரங்களின்பலன் | 55 |
| இருபத்தேழு நக்ஷத்திரங்கபலன் ... ... | 56 |
| பதினைந்து திதிகளின்பலன் | 69 |
| யோகம் இருபத்தேழின் பலன் ... ... | 71 |
| கரணம் பதினொன்றின் பல | 73 |
| காலவோரையின் பலன், உதயலக்கின பலன் ... | 74 |
| சந்திர லக்கின பலன் .. | 79 |
| அம்சபலன் ... ... | 81 |
| நக்ஷத்திரங்களின் கணம், யோனி, நாமாக்ஷரம், நக்ஷத்திர கண பலன் | 83 |
| நக்ஷத்திர யோனி பலன் | 84 |
| துவாதசபாவ காரகங்கள் | 85 |
| கிரகபலன் : சூரிய முதலிய 9 கிரகங்களும், 12 பாவங்களிலும்மாறிமாறி நிற்கும் 108 விதபலன்கள் ... ... | 86 |
| இரண்டுகிரகங்கள் கூடினால் எந்தக் கிரகத்துக்குப் பெலவீனமென்பது ... | 103 |
| மாரக ஸ்தானம் ... | 104 |
| **ஆறாம் அத்தியாயம்** | |
| மகாதெசை பிரிக்கும் வழி | 104 |
| மகாதெசாபுத்தி அந்தரங்கள் ... ... | 105 |
| மகாதெசாபுத்திகள், மகாதெசைகணிக்கும்வகை | 114 |
| மகர்தெசாபுத்தி பலன் .. | 115 |
| மகாதெசைக்குப் போதகன் முதலியோர், சூரியன் தெசர்புத்திபலன் | 116 |
| சந்திரன் தெசாபுத்திபலன் | 122 |
| செவ்வாய் தெசாபுத்தி பலன் ... .. | 128 |
| இராகு தெசாபுத்தி பலன் | 134 |
| வியாழ தெசாபுத்தி பலன் | 140 |
| சனி தெசாபுத்தி பலன் ... | 146 |
| புதன் தெசாபுத்தி பலன் | 152 |
| கேது தெசாபுத்தி பலன் ... | 158 |
| சுக்கிரன் தெசாபுத்திபலன் | 163 |
| **ஏழாம் அத்தியாயம்** | |
| நீசபங்கராஜயோகம், கேசரியோகம் குருசந்திரயோகம், சசிமங்களயோகம் ... ... | 170 |
| பர்வதயோகம், தர்மயோகம், ஆயுள்யோகம் ... | 171 |
| கேதாரயோகம், சூலயோகம், சுபயோகம், கிரகமாலிகாயோகம், சக்கரயோகம் ... | 172 |
| பாசயோகம், சுனபர்யோகம், அனபாயோகம், துரதுராயோகம், அஸ்வயோகம் ... | 173 |
| வேசியோகம், புஷ்களயோவானயோகம், கந்தர்வயோகம் ... ... | 174 |
| சிவயோகம், விஷ்ணுயோகம், பிரமயோகம், கௌரியோகம், இலட்சுமியோகம் ... | 175 |
| சரஸ்வதியோகம், பாஸ்கரயோகம், இந்திரயோகம் ... ... | 176 |

## விஷய அனுக்கிரமணி


| விஷயம் | பக்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|---|
| கலாநிதியோகம், புண்ணிய யோகம் ... ... | 176 | காலசக்கர இடவோட்டுத் தெசாபுத்திகளின்கால | 193 |
| சந்நியாசியோகம், புதயோகம், கிரந்தயோகம் | 177 | காலசக்கர தெசாபலன் .. | 195 |
| சுமந்திரயோகம், சாபயோகம், சக்கரதரயோகம் நாகயோகம், பதும யோகம் ... ... | 178 | தத்துக்கள் ... ... | 196 |
| காகளயோகம், தாந்திரி யோகம், உபயசரியோகம், மேதினியோகம், நாபியோகம், பூபயோகம் ... ... | 179 | தத்தின்பலாபலன், தெசைகளில் கிரகங்கள் பலன் செய்யும் காலம், வலவோட்டு நாள் 15 ... | 197 |
| மீனயோகம், மதனயோகம் கஜயோகம், கந்துக யோகம், சந்திரிகா யோகம், மகிடயோகம், சித்திரயோகம், சாலயோகம் ... | 180 | இடவோட்டு நாள் 12, வலவோட்டுத் தெசாபுத்திகளின் பலன் ... | 198 |
| வீணையோகம், இரவியோகம், சாமரையோகம், கமலயோகம், சாரதாயோகம், பரமானந்த யோகம் ... ... | 181 | இடவோட்டுத்தெசாபுத்திகளின் பலன் ... | 207 |
| பிதிர்பாக்கியம், 32 வித இராஜயோகங்கள் ... | 182 | **ஒன்பதாம் அத்தியாயம்** | |
| உச்சநீசபலன் ... | 184 | சகாப்தம், கலியப்தம், கலியுகாதி சுத்ததினம் | 217 |
| **எட்டாம் அத்தியாயம்** | | மாதவாக்கிய இலக்கம், கண்டதினம், கிரகங்களுக்கு மத்திமப்புடங் கணித்தல் ... | 218 |
| பஞ்சசக்கரதெசை, கால சக்கரதெசை பிரிக்கும் வழி ... ... | 185 | சூரியன்புடம் ... ... | 219 |
| காலசக்கர வலவோட்டுத் தெசைகள் ... | 186 | சந்திரன்புடம் ... ... | 220 |
| காலசக்கர இடவோட்டுத் தெசைகள் ... | 187 | செவ்வாய்புடம் ... | 221 |
| காலசக்கர தெசாபுத்திகள் | 188 | புதன்புடம் ... ... | 222 |
| காலசக்கர வலவோட்டுத் தெசாபுத்திகளின்காலம் | 191 | வியாழன்புடம் ... | 223 |
| | | சுக்கிரன்புடம் ... ... | 225 |
| | | சனிபுடம் ... ... | 226 |
| | | இராகு கேது புடம் ... | 227 |
| | | இலக்கினஸ்புடம், குளிகாதி நான்கு உபக்கிரக புடம் ... ... | 228 |
| | | தூமாதி பஞ்சக்கிரக புடம் | 225 |
| | | **பத்தாம் அத்தியாயம்** | |
| | | அனுபவ ஜாதகங்கள் ... | 230 |
| | | அனுபவ ஜாதக பலன் ... | 236 |




உ

கணபதி துணை

# ஜாதக பாஸ்கரன்

## விநாயக வணக்கம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ||

என்பது: மேலுலகத்தின் கண்ணே பிரமா இந்திரன் முதலிய எண்ணில்கோடி தேவருளராயினும் அவர் பெயரை எடுத்துரைத்தலினும் சகல தேவராலும் சிரமேற்கொள்ளப்படுபவராய் அன்பர்க்கு வேண்டியவற்றையெல்லாம் விரைந்து அருளும் இயல்பினராயுள்ள விநாயகக் கடவுளை அன்போடு வணங்குகின்றேன்,

யம் ப்ரஹ்ம வேதாந்தவிதோ வதந்தி
பரம் ப்ரதாநம் புருஷம் ததாந்யே|
விச்வோத்கதே: காரணமீச்வரம் வா
தஸ்மை நமோ விக்நவிநாயகாய||

எ-து: வேதாந்த ஞானிகள் பலராலும் பிரமமென்றும், மூலப்பகுதியைக் கடந்த புருடனென்றும், உலகங்களுக்குக் காரண கருத்தாவென்றும் புகழ்ந்துரைக்கப்படுகின்ற விநாயகக்கடவுளுக்கு வணக்கம். (2)

ஏகதந்தோ ஹேரம்ப: ஸர்வஜ்ஞோ கணநாயக:|
ஸர்வஸித்திகரோ தேவோ கௌரீபுத்ரோ விநாயக:||

எ-து: உமையம்மையாருக்குப் புதல்வரும், ஒற்றைக்கொம்பினரும், இயற்கை அறிவினரும், முற்றறிவினரும் ஆகிய கணபதி என்னும் பெரிய விநாயகக் கடவுள் அன்பர்களுக்கு எல்லாச் சித்திகளையும் கொடுத்தருளுபவர். (3)

## சூரிய வணக்கம்

உத்பத்திஸ்திதிகேவ பரிகல்பித: சம்போர்வபுர் வர்த்மாபவர்கஜுஷாம்
ஶ்ருத்யுத்தவிதாம் க்ருதாந்தயஜதாம் ஸத்ராந்தர்ஜ்யோதிஷாம்|
யோகிநாம் ப்ரஜயோர்த்வவர்த்திவிபவஸ்தாநேகயா யஶ்ஶ்ருதௌ
வாசம் ந: ஸதயாகவேநககிரண ஶ்ரேயோக்ருதீபோ ரவி:||

எ-து: மூவுலகிற்கும் பிரகாசஞ்செய்பவராய், சிவபெருமானது மூர்த்திபேதமென்றும், முமுட்சுகள் முத்திசேரச் செலுத்தும் வழியென்றும், யோகிகளுக்கு அந்தரான்மாவென்றும், வேள்விசெய்பவர் வேட்குமிடமென்றும், தேவர்களுக்கும் கிரகங்களுக்கும் தலைவரென்றும், சிருஷ்டி திதி சங்கார கருத்தாவென்றும் பலவாறு சுருதியிற் புகழப்படுபவராகிய சூரியபகவான் நமக்கு வாக்கு வல்லபத்தை அருளக்கடவர். (4)



## ஜாதகம் இத்தன்மைத்தென்பது

ஜநநீ ஜந்மஸௌக்யாநாம் வர்த்திநீ குலஸம்பதாம்|
பதவீ பூர்வபுண்யாநாம் லிக்யதே ஜந்மபத்ரிகா||

எ-து: பிறவிச் சுகங்களை ஆக்குவதும், மரபுச்செல்வங்களை வளர்ப்பதும், முன்னை நல்வினைகளின் வழியானதுமாகிய ஜாதகம் எழுதப்படுகின்றது.




## ஆதித்தியாதி நவக்கிரகங்களால் வரும் பலன்

ஸௌர்யாணாமதிவாஸிநீ: ஸமுத்ரதாம் காந்திம் காயாநாம் நிதி:
ஸௌக்ஷ்யம் க்ஷாதநயோ பலாயஸ்து பலாபதாம் ஜீவஸ்திரஞ்ஜீவிதாம்
ஸாம்ராஜ்யம் ஹ்ருதராஜகோஜோவிஜயிதாம் ராஹுர்பலோத்கர்ஷதாம்
கேதுர்யஸ்து குலோந்நதிம் ஸததம் ஸூர்யாதயோ த்ருக்ஸா:|| [ஷட்கதா]

எ-து: இந்த உத்தம ஜாதகிக்குச் சூரியன் சகல மங்கலங் களையும், சந்திரன் மிகச் சிறந்த அழகையும், செவ்வாய் செல் வத்தையும், புதன் புலமையையும், வியாழன் தீர்க்காயுளையும், வெள்ளி முழுவாசையையும் சனி வெற்றியையும், இராகு மிகுந்த வலிமையையும், கேது இஷ்டசித்திகளையும் அருளுக. (7)

𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾 𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌃 𑌸𑌰𑌾𑌶𑌯𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍁 𑌯𑌸𑍍𑌯𑍈𑌷𑌾 𑌜𑌨𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾॥

எ-து: இந்த ஜாதகிக்குச் சூரியன் முதலிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், இராசிகளும் வேண்டியனவற்றை இனிதருளுக.

## ஜாதகியின் விருத்தி

𑌵𑌂𑌶𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑍁 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑍁 𑌦𑌿𑌶𑍋 𑌦𑌶।
𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌪𑍁𑌲𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑍁 𑌯𑌸𑍍𑌯𑍈𑌷𑌾 𑌜𑌨𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾॥

எ-து: ஜாதகிக்குச் சந்ததி பெருகுக. புகழ் திசாந்தங்களிற் செல்லுக. ஆயுள் வளருக. (8)



# முகவுரை

சுத்த ஷாட்குண்ணியராகிய சிவபெருமான் ஆன்மாக்கள்பொருட்டு அருளிச்செய்த முதனூலாகிய நான்கு வேதங்களுக்கும் அங்கமாயுள்ளன ஆறு சாஸ்திரங்கள். அவை: சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பன. இவற்றுள், வேதங்களை உதாத்தம் அனுதாத்தம் முதலிய சுரவேறுபாட்டினாலே உச்சரிக்குமுறைமையை அறிவிப்பது சிக்ஷை. வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அனுட்டிக்குமுறைமையை அறிவிப்பது கற்பம்; வேதங்களின் எழுத்துச்சொல் இலக்கணங்களை அறிவிப்பது வியாகரணம்; வேதங்களின் சொற்பொருளை அறிவிப்பது நிருத்தம்; வேதமந்திரங்களின் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும், அவைகளுக்கு எழுத்து எவ்வளவென்பதையும் அறிவிப்பது சந்தோவிசிதி; வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதற்குரிய காலநியதிகளை அறிவிப்பது சோதிடம். வேதபுருஷனுக்கு சிக்ஷை நாசி, கற்பம் கரம், வியாகரணம் வாக்கு, நிருத்தம் செவி, சந்தோவிசிதி பாதம், சோதிடம் நேத்திரம். ஒவ்வொரு கருமத்துக்கும் உரிய காலநியதிகளைத் தெரிவிப்பதாதலால் சோதிடம் இன்றியமையாச் சிறப்புடையது. இது கணிதஸ்கந்தம், ஜாதகஸ்கந்தம், முகூர்த்தஸ்கந்தம், சம்மிதாஸ்கந்தமெனப் பல பகுப்பைக் கொண்டிருக்கும். இச்சோதிடத்தைப் பற்றி பிரமா, சூரியன், சந்திரன், சுக்கிரன், வியாசர், வசிஷ்டர், ரோமகர், பைலர், நாரதர், பராசரர், அத்திரி, காசிபர், கார்க்கியர், மரீசி, அங்கிரா, சௌனகர், மனு, வரருசி, பிரமகுப்தர், ஆரியபட்டர், பாஸ்கராசாரியர், வராஹமிஹிரர், ஆசாரியஸ்ரீபதி, எல்லாசாரியர், யவனாசாரியர், கணேசதைவஞ்ஞர், மல்லாரிமிசிரர், சூரிதேவயச்சுவா, பிரமதூதகசுவாமி முதலியோரால் அநேக நூல்கள் முன்னே செய்யப்பட்டிருக்கின்றன.

அவையாவும் சம்ஸ்கிருத பாஷையிலே உள்ளன. அவற்றை ஆதாரமாகக்கொண்டு தமிழிலே செய்யப்பட்ட நூல்கள் மூலபாஷையிலுள்ள நூல்களினும் பார்க்க மிக அற்பமாக இருக்கின்றன. இந்நூல்களில் ஒன்றிலேனும் ஒருவருக்குவேண்டிய பலாபலன் முழுவதும் சொல்லப்படவில்லை. அன்றியும், அவை கற்றறிந்தோர்க்கே அன்றிச் சாதாரண கல்வியறிவுடையவர்களுக்கு, ஒருவரிடத்தேயிருந்து பாடங்கேட்டாலன்றி, விளங்குதற்கரிய பாடல்களாகவும் இருக்கின்றன. ஆதலால் ஜாதக பலன்களை எவர்களும் அறியும்படி இருபாஷைகளிலும் எனக்குக் கிடைத்த சோதிடநூல்களை ஆராய்ந்து, முதலில் பொதுவாக அறியவேண்டியவைகளாகிய ஒவ்வொருவருடைய ஜன்மநக்ஷத்திரம், உதயலக்கினம், சந்திரலக்கினம் ஆதியாயுள்ளவைகளின் பலன்களும், ஒன்பது கிரகங்களும் பன்னிரண்டு இராசிகள்தோறும் சஞ்சரித்தலால்வரும் நூற்றெட்டுவிதமாகும் ஸ்தானபலன்களும், மகாதெசை ஒன்பதாலும் வரும் எண்பத்தொரு புத்திகளின் பலன்களும், காலசக்கர புத்திகளின் பேதமான இருநூற்றுப்பதினறுவித புத்திகளின் பலன்களும்; அஷ்டகவர்க்க பலன்களும், கிரகநிலைகளைக்கொண்டு அறியும் இராசயோகம் முதலிய யோகங்களின் பலன்களும் ஆகிய இவைகளையும்; மேலும் விசேஷ பலன்களை அறிவதற்கு வேண்டிய கிரகங்களின் சமயநிலை, அங்கநிலை, கிரியாகமனம், அவஸ்தை, கதி முதலியவைகளையும்; தசவர்க்க கணித நிர்ணயங்களை அறிவதற்குக் கிரகஸ்புட கணித விதியையும் இதிலே சேர்த்திருப்பதால், இவைகளாலும்; கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், நோக்கு முதலியவைகளாலும்; கேந்திரம், திரிகோணம், தனம், லாபம் முதலாகிய (இராசி) ஸ்தானபலன்களாலும் ஒரு ஜாதகியின் பலன்களை அறிவதுமல்லாமல்; பிதா மாதா புத்திரர் சகோதரர் தாரம் சத்துரு இவர்களுக்குரிய பலனையும், கல்வி, ஈசுரபக்தி, செல்வம், கீர்த்தி, ஆயுள், புண்ணியபலன், தொழில், சீவனம், சத்தியநெறி, சுகம், நோய் இவைகளையும் எவரும் இலகுவில் இந்நூலைக் கொண்டு யூகித்தறிந்துகொள்ளலாம்.

**வி. சபாபதிஐயர்**
ஜோதிஷர்

## மங்களாசரணமும் நூற்பெயரும்

உதயகாலத்திலே பிரமாவின் ரூபத்தையும் மத்தியான்ன காலத்திலே மஹேசுரனுடைய ரூபத்தையும், சாயங்காலத்திலே விஷ்ணுவின் ரூபத்தையும் பொருந்துபவரும், சிவபெருமானுடைய அஷ்டமூர்த்திகளுள் ஒன்றாயுள்ளவரும், சிவபெருமானின் வேறாகாதவரென்று வேதங்களாலே புகழப்படுபவரும், இருக்குவேதமாகிய விம்பத்தையும், யஜுர்வேதமாகிய கிரணத்தையும், சாமவேதமாகிய தேகத்தையுமுடையவரும், இராசிகளையும், நக்ஷத்திரங்களையும் முறையே ஆர்களும் ஆணிகளுமாகிய அங்கங்களாக்கிக்கொண்ட சம்வற்கரம் ஒருருவாகவும், சப்த சந்தஸுக்கள் குதிரைகளாகவும் பொருந்திய திரிலோகமாகிய இரதத்தின்கண் ஆரோகணிப்பவருமாகிய சிவசூரியபகவானை, மனம் வாக்குக் காயங்களினால் முறையே சிந்தித்துத் துதித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவருடைய நாமத்தையே (ஜாதக) பாஸ்கரன் என்று இந்நூலுக்குத் தரித்து, இஃது இனிது முடியுமாறு பிரார்த்திக்கின்றேன்.

## காலப்பிரமாணம்

6 சுவாசங்கொண்டது ஒரு விநாடி; 60 விநாடிகொண்டது ஒரு நாழிகை; 60 நாழிகை கொண்டது ஒரு மானுஷ தினம். 365 நாளும், 15 நாழிகையும், 31 விநாடியும், 15 தற்பரையுங் கொண்டது ஒரு மானுஷ வருஷம். அந்த வருஷம் 360 கொண்டது ஒரு தேவ வருஷம். அந்தத் தேவவருஷம் 12,000-க்குச் சரியாகிய மானுஷவருஷம் 43,20,000 கொண்டது ஒரு மகாயுகம். தேவவருஷம் 4800 க்குச் சரியாகிய மானுஷவருஷம் 17,28,000 கொண்டது கிருதயுகம். தேவவருஷம் 3600-க்குச் சரியாகிய மானுஷவருஷம் 12,96,000 கொண்டது திரேதாயுகம். தேவவருஷம் 2400-க்குச் சரியாகிய மானுஷவருஷம் 8,64,000 கொண்டது துவாபரயுகம். தேவ வருஷம் 1200-க்குச் சரியாகிய மானுஷவருஷம் 4,32,000 கொண்டது கலியுகம் இந்த நான்குங் கூடியது ஒரு மகாயுகம்.

இந்த மகாயுகம் 1000 கொண்டது பிரமாவுக்கு ஒரு பகல். அப்பகலிலே 14 மனுக்கள் அதிகாரம் செய்வார்கள். இவ்விதம் 1000 மகாயுகம் பிரமாவுக்கு ஒரு பகலும், 1000 மகாயுகம் ஒரு இரவுமாக 2000 மகாயுகங் கொண்டது ஒரு தினம். அப்படி 360 தினங்கொண்டது ஒரு வருஷம். அப்படி 100 வருஷங்கொண்டது பிரமாவுடைய ஆயுள். இதுவரை ஆறு மனுக்களின் காலங்கழிய ஏழாவது வைவஸ்வதமனுவின் காலம் ஆரம்பித்து அதில் 27 மகாயுகங் கழித்து 28-வது மகாயுகத்திலே கிருதத் திரேதத் துவாபரம் என்னும் மூன்றுயுகமுங் கழிந்தன. இப்போது கலியுகம் ஆரம்பித்து அதில் 5010-ம் வருஷத்தில், பிரபவாதி 42-வது கீலகவருஷத்தில் இந்த நூலை இயற்றி அச்சிட்டேன்.

### சதுர்யுகப் பிரமாணம்

| | |
|---|---|
| கிருதயுகம் | 1728000 வூ. |
| திரேதாயுகம் | 1296000 வூ. |
| துவாபரயுகம் | 864000 வூ. |
| கலியுகம் | 432000 வூ. |

# ஜாதக பாஸ்கரன்

### கடவுள் வணக்கம்

ஐங்கர னீச னுமைகுகன் மாலய னரணநா
மங்கையைச் சூரியன் சந்திரன் சேய்புதன் மன்னனுசன்
பங்கர வஞ்சிகிக் கோட்களைச் சாதக பாஸ்கரனூல்
மங்கல மாக நிறைவேறு மாறு வணங்குதுமே.

## 1-ம் அத்தியாயம்

### திதியாதிகளின் குணவிசேடம்

திதி ஒருபங்கு குணம். கரணம் இரண்டுபங்கு குணம். யோகம் மூன்றுபங்கு குணம். நக்ஷத்திரம் நான்கு பங்கு குணம்; வாரம் எட்டுப்பங்கு குணம்; வாரயோகம் பதினறுபங்கு குணம். நல்ல சுபலக்கினம் நூறுபங்கு குணம். இவையெல்லாம் நல்லனவாகவும், கிரகங்களும் நல்ல தானங்களிலே இருக்கவும்பெற்ற சுபமுகூர்த்தம் பதினயிரம் பங்கு குணம். இவ்விதமான முகூர்த்தங்களிலே ஜனித்த குழந்தையும், செய்த கருமமும் சிறப்படையும்.

### கிரக பெலம்

புதன் சாதாரண பெலமுடையவர். புதனிலுஞ் செவ்வாய் பெலமுடையவர். புதன், செவ்வாய் இருவரிலும் சனி பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி மூவரிலும் வியாழன் பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி, வியாழன் நால்வரிலும் சுக்கிரன் பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன் ஐவரிலும் சந்திரன் பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன், சந்திரன் அறுவரிலும் சூரியன் பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன், சந்திரன், சூரியன் எழுவரிலும் இராகு கேது பெலமுடையவர். அபரபக்ஷ சந்திரனும் புதனும் ஒத்தபெலமுடையவர்களாகக் கொள்ள வேண்டியது.

### கோட்களின் தானவலிமை

புதன் வியாழன் இருவரும் உதயத்தில் (1-ல்) வலியர். சந்திரன் சுக்கிரன் இருவரும் நீர்க்கீழில் (4-ல்) வலியர். சனி பாம்பு இருவரும் பாட்டில் (7-ல்) வலியர். சூரியன் செவ்வாய் இருவரும் உச்சியில் (10-ல்) வலியர்.

### வர்க்கோத்தமம், சரம், திரம் உபயம்

இராசியின் கால்கள் ஒன்பதில், சரராசியின் முதற் காலிலும், திரராசியின் ஐந்தாங் காலிலும், உபயராசியின் ஒன்பதாங்காலிலும் நிற்குங் கிரகங்கள் வர்க்கோத்தம பெலமுடையர்.

சரராசி :— மேடம், கர்க்கடகம், துலாம், மகரம்.
திரராசி :— இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.
உபயராசி :— மிதுனம், கன்னி, தனு, மீனம்.

சரக்கிரகம் :— சந்திரன், செவ்வாய், ராகு, கேது.
திரக்கிரகம :— சூரியன், சுக்கிரன்.
உபயக்கிரகம் :— புதன், குரு, சனி.

### சிரோதயம், பிருட்டோதயம், சிரபிருட்டோதயம்

சிரோதயராசி :- மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம்.
பிருட்டோதயராசி :- மேடம், இடபம், கர்க்கடகம், தனு, மகரம்
சிரபிருட்டோதயராசி :- மீனம்,

சிரோதயக்கிரகம் :— புதன். வியாழன், சுக்கிரன், ராகு.
பிருட்டோதயக்கிரகம் :- சூரியன், செவ்வாய், சனி.
சிரபிருட்டோதயக்கிரகம் :- சந்திரன், கேது.

### ஆண், பெண், அலி

ஆண்ராசி :- மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு, கும்பம்.
பெண்ராசி : இடபம், கர்க்கடகம், கன்னி. விருச்சிகம, மகரம், மீனம்.

ஆண்கிரகம் : சூரியன், செவ்வாய், வியாழன்.
பெண்கிரகம் : சந்திரன், சுக்கிரன், ராகு.
அலிக்கிரகம் : புதன், சனி, கேது.



### இராசிகள் வலிபெறுங் காலம்

சிரோதயராசி பகலிலும், பிருட்டோதயராசி இரவிலும், சிரபிருட்டோதயராசி பகலிலும் இரவிலும் வலிமையுடையன.

### கோட்கள் வலிபெறுங் காலம்

சூரியனும் வியாழனும் சுக்கிரனும் பகலில் வலியர். சந்திரனும் செவ்வாயும் சனியும் இரவில் வலியர். புதன், இராகு, கேது பகலிலும் இரவிலும் வலியர்.

### கிரகங்களின் நட்பாதி ஐவகைப் பெலம்

நட்புப்பெற்ற கிரகங்களுக்கு உள்ள வலிதே வலிது.

ஆட்சிப்பெற்ற கிரகங்களுக்கு உள்ள வலிதில் இரு பங்கு வலிது.

உச்சம்பெற்ற கிரகங்களுக்கு உள்ள வலிதில் மூன்று பங்கு வலிது.

பகைப்பெற்ற கிரகங்களுக்கு உள்ள வலிதில் அரைப் பங்கு வலிது.

நீசம்பெற்ற கிரகங்களுக்கு உள்ள வலிதிற் காற் பங்கு வலிது

கிரகங்கள் நட்பாட்சி உச்சத்தில், வர்க்கோத்தம பெலனோடு வக்கிரித்துமிருக்கின் மேற்சொல்லிய பெலத்திலும் மும்மடங்கு பெலம்பெறுவர்.

சூரியனுக்கு உத்தராயணகாலம் பெலம். சந்திரன் முதலிய சுபர்களுக்குப் பூர்வபக்ஷம் பெலம். மற்றையோர் ஒருவரோடொருவர் கூடினும் வக்கிரித்து நிற்பினும் பெலம்பெறுவர்.

### இராசிகளின் நிறம்

| | | | |
|---|---|---|---|
| மேடம், | சிங்கம், | தனு | செம்மை. |
| இடபம், | கர்க்கடகம், | துலாம் | வெண்மை |
| விருச்சிகம், | கும்பம், | மீனம் | பசுமை. |
| மிதுனம், | கன்னி, | மகரம் | கருமை. |

### கிரகங்களின் நிறம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | — அக்கினிநிறம். | குரு | — பொன்னிறம். |
| சந்திரன் | — படிகநிறம். | சுக்கிரன் | — பால்நிறம். |
| செவ்வாய் | இரத்தநிறம். | சனி, ராகு | — கருநிறம். |
| புதன் | — பசுமைநிறம். | கேது | — செந்நிறம். |

### இராசிகளின் வடிவம்

மேடம் — ஆடு.
இடபம் — எருது.
மிதுனம் — ஒருபுருஷனும் ஸ்திரீயும், புருஷன் கையிலே தடியும, ஸ்திரீ கையிலே வீணையுங்கொண்டு ஒரு ஆசனத்திலே இருப்பார்கள்.
கர்க்கடகம் — நண்டு.
சிங்கம் — சிங்கம்.
கன்னி — ஒரு கன்னிகை கையிலே முளைப்பாலிகையும், மற்றொரு கையிலே விளக்குங்கொண்டு ஒரு ஆசனத்திலே இருப்பாள்.
துலாம் — ஒரு புருஷன் தராசுதூக்கி நிற்பன்.
விருச்சிகம் — தேள்.
தனு — அரைக்குக் கீழே குதிரைவடிவும், அரைக்கு மேலே புருஷவடிவுமாக விற்பிடித்துநிற்கும்.
மகரம் — அரைக்குக்கீழே சுறுவடிவும், அரைக்குமேல் மான்வடிவுமாக நிற்கும்.
கும்பம் — ஒருபுருஷன் குடமேந்திநிற்பன்.
மீனம் — தெற்றுமாற்றாக விழுவதும் எழும்புவதுமான இரண்டு மீன்களாக இருக்கும்.

### கிரக காரகம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | — பிதிர்காரகன். | சுக்கிரன் | — களத்திரகாரகன் |
| சந்திரன் | — மாதுருகாரகன். | சனி | — ஆயுட்காரகன், |
| செவ்வாய் | — சகோதரகாரகன். | ராகு | — பிணிகாரகன். |
| புதன் | — வித்தியாகாரகன். | கேது | — ஞானகாரகன். |
| வியாழன் | — புத்திரகாரகன். | | |

சூரியன் :— ஈசுரவழிபாடு, சத்தியநெறி, சீவனம், சீவாதாரமான சுகங்கள், தேகம், மனச்சிந்தனை, கீர்த்தி, சிநேக வெறுப்பு, இராஜகாரியம், பிதாவின் பலாபலன்கள் இவைகளை விளக்குவது.

சந்திரன் :— புத்தி, மனநிலை, நற்குணம், வாசனைத் திரவியம், ஸ்நாநாதிகள், பால்முதலிய போசனாதிகள், ரூபலக்ஷணம், மாதாவின் பலாபலன்கள்.



செவ்வாய் :- பூமி, சரீரபெலம், உற்சாகம், கடூரவசனம், அவமிருத்துவுக்குரிய நோய், கடன் சத்துருபீடை, அகங்காரம், சகோதர பலாபலன்கள்.

புதன் :- கல்வி, விவேகம், ஞான அறிவு, வாக்குவல்லபம், வாத வாயு ரோகாதிகள், நுட்பமான வேலை, கணக்கு வல்லபம், வியாபாரம், பண்டிதத்தன்மை, மாமன், பந்துக்களின் பலாபலன்கள்.

வியாழன் :- சரீரபுஷ்டி, திரவியம், ஞானசாஸ்திரவுணர்ச்சி முதன்மை, மந்திரோபதேசம், வேதாகம ஆராய்வு, ஒழுக்கம், ஆலோசனை, புத்திரரின் பலாபலன்கள்.

சுக்கிரன் : விவாகம், போகாதிசுகானுபவம், குளிர்ந்த வாக்குவிலாசம், விஷயப்பிரவேசம், வஸ்திராதி அலங்காரச்சிறப்பு, வாகனம் கப்பல் முதலானவை, நவரத்தினங்கள், தேவப்பிரசாதம், மனையாளின் பலாபலன்கள்.

சனி :- வேளாண்மை, பசு முதலியவைகளின் விருத்தி, புராதன சீவனமாற்றம், ஒழுக்கந்தவறுதல், இராஜவிரோதம், தேச சஞ்சாரம், சேவகாவிருத்தி, ஆயுட்பெலம்.

இராகு :- மந்திரசாதனை, அந்நியதேசவாசம், விஷம், விகடம், சுவாசம் (மூச்சு) முதலியவைகளின் நோய், சத்துரு துன்பம், இரணாதிகள், விஷநீர், பிதாவழிப் பாட்டனின் பலாபலன்கள்.

கேது : ஞானசாதனை, உதரரோகம், வலிப்பு, முதலியவை, சித்தசுவாதீனமில்லாத வார்த்தை, கீழ்த்தொழில்செய்ய அஞ்சாமை, குஷ்டம், பரிகாசவார்த்தை, மாதாவழிப் பாட்டனின் பலாபலன்கள்.

### பாவ காரகம்

1-ம் இடம் : தேகம், பலன், குணம், கீர்த்தி, தெய்வ வணக்கம், சரீர நிலை.

2-ம் இடம் :- நேத்திரம் வாக்கு, தனம், குடும்பம், சத்தியவசனம், தத்துவவிசாரணை, வித்தியாகுரு.

3-ம் இடம் : சகோதரர், பராக்கிரமம், வீரியம், கேள்வி, போசனம்.

4-ம் இடம் : மாதா, பந்துக்கள், வாகனம், பூமி, வீடு, சுகம், பாற்பசு, பரவிஷயம் சாஸ்திராப்பியாசம்,

5-ம் இடம் ;- புத்திரர், மாமன், பிதா, விவேகம், ஞானம், மந்திரம், பூர்வபுண்ணியம், யோகாப்பியாசம்.

6-ம் இடம் :- சத்துரு, சோரர், ரோகம், ஆயுதவிரணம், கடன்.

7-ம் இடம் :- களத்திரம், காமம், விவாகம், குணம், இன்பம், ஜனவசியம்.

8-ம் இடம் : ஆயுள், மரணம், துக்கம், விஷபயம்.

9-ம் இடம் : பிதா, குரு, தருமம், திரவியம், திருப்பணி' உபதேசம்.

10-ம் இடம் :- சீவனத்தொழில், கீர்த்தி, சற்கருமம், ஞானம், தயை, பூஜை, தேவபக்தி.

11-ம் இடம் :- மூத்த சகோதரர், லாபம், ராஜவித்தை, துக்கநிவிர்த்தி; ஞான அறிவு.

12-ம் இடம் :- செலவு, தேச சஞ்சாரம், கீர்த்தி, திரவியச்சேதம்.

இன்னும் இவைகளின் விரிவான பலன்கள், இலக்கினம் முதலிய பன்னிரண்டு இராசிகடோறும் ஒன்பது கிரகமும் நிற்கும் நூற்றெட்டுவித பலன்களுக்கு முன்னே எழுதப்படும்.

### கேந்திர பேலம்

கேந்திரங்களாகிய 1-ம், 4-ம், 7-ம் 10-ம் இடங்களில்: 1-ம் இடத்தை உதயமென்றும், 4-ம் இடத்தை நீர்க்கீழ் என்றும், 7-ம் இடத்தைப் பாடு என்றும், 10-ம் இடத்தை உச்சியென்றும்; இவற்றை முறையாக இலக்கினகேந்திரம் சதுர்த்தகேந்திரம், ஸப்தமகேந்திரம், தசமகேந்திரம் என்றும் சோதிட நூல்களில் வழங்கிவருவதுண்டு. இந்தத் தானதிபர்கள் முன்னையவரினும் பார்க்கப் பின்னையவர் ஏற்றமான பலனைச் செய்வர்.

### திரிகோண பேலம்

இவ்விதமாகவே திரிகோணமாகிய 1-ம், 5-ம், 9-ம் இடங்களுக்கதிபர்களும் (கேந்திராதிபர்களைப் போலவே) முன்னையவரினும் பார்க்கப் பின்னையவர் ஏற்றமான யோக பலனைச் செய்பவராகி உயர்ந்த கேந்திராதிபதியாகும் பத்தாமிடத்ததிபதியும், உயர்ந்த திரிகோணதிபதியாகும்



ஒன்பதாமிடத்ததிபதியுமே விசேஷபலனைச் செய்யத்தக்கவர்களாவர்.

பாபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானால் சுப பலனைச் செய்வார்களென்றும், சுபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானல் அசுப பலனைச் செய்வார்களென்றும் சில நூற்சம்மதம்.

மிருத்துகாரகன், மாரகன், சட்டமாதிபன், அட்டமாதிபன், வியஸ்தானதிபன், ஆகிய இவர்களும் இவர்களுக்குச் சம்பந்தமானவர்களும் தீப்பலனைச் செய்வார்கள். மிருததுகாரகன், இராகுநின்ற நக்ஷத்திரபாதாங்கிஷ இராசியதிபதி. மாரகர்: 2-ம், 3-ம், 7-ம், 8-ம் இடங்களுக்கதிபர்கள் இன்னும், நவாம்சலக்கினதிபதி கால மிருத்து, நவாம்சத்திற் சூரியன் நின்ற வீட்டுக்கதிபதி அவ மிருத்து, நவாம்சத்தில் சனிநின்ற வீட்டுக்கதிபதி அதி மிருத்து, நவாம்சத்தில் கேதுநின்ற வீட்டுக்கதிபதி தோஷமிருத்து எனவும் வழங்குவர்.

மேற்சொல்லியவற்றின் விபரங்கள் இங்கே சுருக்கமாகக் காட்டப்பட்டன. பின்னே இந்த நூலில் அவையவை வேண்டுமிடங்களிலே விரிவாக எழுதப்படும்.

### கிரக இரத்தினம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | — மாணிக்கம். | சுக்கிரன் | —வைரம். |
| சந்திரன் | — முத்து. | சனி | —நீலம். |
| செவ்வாய் | — பவளம் | ராகு | —கோமேதகம். |
| புதன் | — மரகதம் (பச்சை) | கேது | —வைடூரியம் |
| வியாழன் | — புஷ்பராகம். | | |

### கிரக குணம்

இராசதக்கிரகம் :- சூரியன், செவ்வாய், சுக்கிரன்.
சாத்விகக்கிரகம் :- சந்திரன், குரு.
தாமதக்கிரகம் : புதன், சனி, ராகு, கேது.

### கிரக ரோகம்

வாதக்கிரகம் - புதன், குரு, சனி
பித்தக்கிரகம் :- சூரியன், செவ்வாய், ராகு, கேது.
சிலேட்டுமக்கிரகம் :- சந்திரன், சுக்கிரன்.

### கிரக சுவை

சூரியன் — கார்ப்பு.
சந்திரன், குரு, சுக்கிரன் — தித்திப்பு.

| | |
|---|---|
| செவ்வாய் | — துவர்ப்பு. |
| புதன் | — உவர்ப்பு. |
| சனி | — கைப்பு. |
| இராகு, கேது | — புளிப்பு |

### கிரக அங்கம்

| | | |
|---|---|---|
| சூரியன் – சிரம். | புதன் – முதுகு. | சனி – தொடை. |
| சந்திரன் – முகம். | வியாழன் – வயிறு. | ராகு – கை |
| செவ்வாய் – மார்பு. | சுக்கிரன் – அரை | கேது – கால் |

### இராசி அங்கம்

| | | | |
|---|---|---|---|
| மேடம் | — தலை. | துலாம் | — வயிறு. |
| இடபம் | — முகம். | விருச்சிகம் | — குறி. |
| மிதுனம் | — கழுத்து | தனு | — தொடை |
| கர்க்கடகம் | — தோள். | மகரம் | — முழந்தாள். |
| சிங்கம் | — மார்பு. | கும்பம் | — கணைக்கால். |
| கன்னி | — விலாப்புறம். | மீனம் | — பாதம் |

### புருஷகாலம், ஸ்திரீகாலம்

ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி வாரங்களில் காலை சூரியோதயம் முதல் ஒன்றேகால் நாழிகைவரை புருஷகாலம்; மேல் ஒன்றேகால் நாழிகைவரை ஸ்திரீ காலம். திங்கள், புதன், வெள்ளி வாரங்களில் சூரியோதயம் முதல் ஒன்றேகால் நாழிகைவரை ஸ்திரீகாலம். மேல் ஒன்றேகால் நாழிகைவரை புருஷகாலம் இவ்விதமாக ஒன்றேகால் நாழிகைக்கு ஒவ்வொரு காலமாக அறுபது நாழிகைவரையும் முறையே அறிந்துகொள்ளவேண்டும்

### கிரக நோக்கு

கிரகங்களின் நோக்கு (பார்வை)கள் கால்நோக்கு, அரை நோக்கு, முக்கால்நோக்கு முழுநோக்குளென்னும் நான்குபிரிவாக இருக்கின்றன. சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், ராகு கேது இந்த அறுவரும் தாம் இருக்கும் இராசியிலிருந்து ஏழாமிடத்தை முழுப்பார்வையாக நோக்குவார்கள். செவ்வாய் நான்காமிடத்தையும், எட்டாமிடத்தையும் முக்கால்பார்வையாக நோக்கும். வியாழன் ஐந்தாமிடத்தையும், ஒன்பதாமிடத்தையும அரைப்பார்வையாக நோக்கும். சனி மூன்றுமிடத்தையும், பத்தாமிடத்தையும் காற்பார்வையாக நோக்கும். எல்லாருந் தத்தமக்கு ஏழாமிடத்தை நோக்குவாரென்பாருமுளர்.



### யாழ்ப்பாணத்துக்குரிய இராசிப்பிரமாணம்

| இராசி | நாடி | விநாடி | தற்பரை | இராசி | நாடி | விநாடி | தற்பரை |
|---|---|---|---|---|---|---|---|
| மேடம்.. | 4 | 34 | 40 | துலாம் ... | 5 | 9 | 28 |
| இடபம்... | 5 | 7 | 10 | விருச்சிகம் | 5 | 26 | 00 |
| மிதுனம் | 5 | 27 | 5 | தனு ... | 5 | 20 | 26 |
| கர்க்கடகம் | 5 | 18 | 54 | மகரம் ... | 4 | 50 | 31 |
| சிங்கம் .. | 5 | 1 | 2 | கும்பம் ... | 4 | 22 | 32 |
| கன்னி ... | 4 | 56 | 15 | மீனம் ... | 4 | 16 | 8 |

### பகல் நாழிகை

பகலில் எந்த நேரத்துக்கு நாழிகை அறியவேண்டுமோ அப்பொழுது அடியளந்து கீழே குறித்திருக்கும் பிரகாரம் (அந்தமாதத்தேதிக்குரிய) அவச்சாயை, பாதச்சாயையடி வியடிகளைக் கழித்து, மீதத்தை வியடியாக்கி இரண்டாற் பெருக்கி அதனுடனே 840கூட்டி வந்த தொகையினல் அந்தத்தினத்தின் (சூரியோதயாதி அஸ்தமனந்தமுள்ள) பகல் மானநாழிகையை விநாடியாக்கி ஏழாற்பெருக்கிய தொகையைப் பிரித்துவந்தது நாழிகை; மீதத்தை அறுபதாற் பெருக்கி முன்தொகையினல் பிரித்துவந்தது விநாடி.

இது முன்பகலாகில் உதயாதி சென்றநாழிகையாம். பின் பகலாகில் குறித்த நேரத்துக்குப்பின்னே சூரியாஸ்தமனம் வரைநின்ற நாழிகையாகக் காணப்படும். இதை பகல்மான நாழிகையிலே கழித்தால் உதயாதி சென்றநாழிகைவரும்.

### யாழ்ப்பாணத்துக்குரிய அவச்சாயை பாதச்சாயை

| மாதம் | 5உ | | 15உ | | 25உ | |
|---|---|---|---|---|---|---|
| | அடி | வியடி | அடி | வியடி | அடி | வியடி |
| சித்திரை .... | 0 | 37 | 1 | 01 | 1 | 23 |
| வைகாசி ... | 1 | 43 | 1 | 57 | 2 | 07 |
| ஆனி ... | 2 | 12 | 2 | 11 | 2 | 05 |
| ஆடி ... | 1 | 52 | 1 | 36 | 1 | 17 |
| ஆவணி ... | 0 | 52 | 0 | 36 | 1 | 02 |
| புரட்டாதி | 1 | 33 | 2 | 02 | 2 | 31 |
| ஐப்பசி | 3 | 03 | 3 | 31 | 3 | 58 |
| கார்த்திகை | 4 | 21 | 4 | 40 | 4 | 53 |

| மாதம் | | 5உ | | 15உ | | 25உ | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அடி | வியடி | அடி | வியடி | அடி | வியடி |
| மார்கழி | ... | 4 | 58 | 4 | 56 | 4 | 47 |
| தை | ... | 4 | 30 | 4 | 09 | 3 | 43 |
| மாசி | ... | 3 | 18 | 2 | 49 | 2 | 19 |
| பங்குனி | ... | 1 | 50 | 1 | 21 | 0 | 53 |

அளந்துகண்ட அடியிலே இவைகளைக் கழிப்பது. அளக்கும்போது முதல்மிதித்த அடியையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## நிலவு நாழிகை

சந்திரன் எப்போதும் ஒரேவிதமாக உதயமாகாமல் நாளுக்குநாள் சுமார் 2 நாழிகைபிந்தி உதயமாதலால் குறித்த நேரத்துக்கு நாழிகை அறியமுன் சந்திரோதயத்தை நிதானித்தல்வேண்டும்.

அமாவாசைக்கடுத்த பிரதமை முதல் பூர்வசதுர்த்தசி ஈறாக உள்ள நாட்களில் பகலிலே நிலவுதிக்கும். பூரணைக்கடுத்த பிரதமை முதல் அபரசதுர்த்தசியீறாகவுள்ள நாட்களில் இரவில் நிலவுதிக்கும்.

அமாவாசைக்கடுத்துவரும் (பூர்வபக்கப்) பிரதமை முதல் நிலவுதிக்கின்ற திதிக்கு முதற்றிதி முடிவாகஉள்ள திதிகளை எண்ணி இரட்டித்துக்கண்ட நாழிகையைக் குறித்துக்கொண்டு, அந்தநேரத்தில் நிற்குந் திதியிற் சென்றநாழிகையை அறுபதாற் பெருக்கி விநாடியாக்கி அந்தத் திதிக்குள்ள பரமநாழிகையினாற் பிரித்துவந்த விநாடியை இரட்டித்து முன்திதியை இரட்டித்த நாழிகையோடு கூட்டச் சந்திரன் மத்திமோதயமாகும்.

மத்திமோதயநேரத்தில் என்ன நக்ஷத்திரம், அதில் எத்தனையாவது பாதம், அப்பாதத்தில் எவ்வளவு நாழிகை சென்றதென்றும் (ஒரு இராசிக்குள்ள இரண்டேகால் நக்ஷத்திரத்துக்கு ஒன்பது கால்களாதலால்) நிலவுதிக்கின்ற இராசிக்குள்ள கால் ஒன்பதில் எத்தனை கால் சென்றதென்றும், நிதானித்தறிந்து, சென்ற காலின் தொகையினால் நிலவுதிக்கின்ற இராசிநாழிகையை விநாடியாக்கிய தொகையைப் பெருக்கி ஒன்பதாற் பிரித்து வந்த விநாடியை நாடிவிநாடியாக்கிய தொகையுடன், சந்-



திரன் நிற்குங் காலிற் சென்ற நாழிகையை விநாடியாக்கி இராசிநாழிகையை விநாடியாக்கிய தொகையாற் பெருக்கி, பாதநாழிகையை விநாடியாக்கி ஒன்பதாற் பெருக்கிய தொகையாற் பிரிந்துவந்த விநாடியையுங்கூட்ட சந்திரன் உதயமாகும்போது உதிக்கின்ற இராசியிற்சென்ற நாழிகையாகும். குறித்த தினத்திலே சூரியன் உதயமாகும்போது உதிக்கின்ற இராசியில் சூரியன் உதித்தபின் நின்ற நாழிகை (சூரிய உதயாற்பரம்) முதல் சந்திரன் உதிக்கின்ற இராசியிற் சந்திரன் உதிக்கமுன் சென்ற நாழிகை (சந்திர உதயாற்பூருவம்) அளவும் கிரமமாக இராசிகளின் நாழிகைகளைக் கூட்டிக்கண்டது சூரியோதயாதி நிலவுதயாந்தஞ் சென்ற நாழிகையாகும். இது சந்திரன் சுத்தோதயமாகும்.

சந்திரனுதிக்கும் இராசியிற் சென்ற நாடிவிநாடிகளை விநாடியாக்கி, அவ்விராசிமுதல் ஏழாவதான இராசியின் பிரமாணத்தை விநாடியாக்கிய தொகையாற் பெருக்கி, சந்திரோதய இராசிப்பிரமாணத்தை விநாடியாக்கிய தொகையாற் பிரிக்கவரும் பலம் விநாடியாம். இத்துடன் ஒருநாழிகை கூட்டவருவது சந்திரன் அஸ்தமிக்கும் இராசியிற் சென்ற நாடிவிநாடிகளாம். சந்திரன் உதிக்கும் இராசியிற் சென்ற நாடிவிநாடிகளை அவ்விராசிப் பிரமாணத்திலிருந்து கழித்த சேடத்துடன், அவ்விராசிக்கும் சந்திராஸ்தமன இராசிக்கும் இடையிலுள்ள இராசிப்பிரமாணங்களையும், சந்திரன் அஸ்தமிக்கின்ற இராசியிற் சென்ற நாடிவிநாடிகளையும் ஒருங்கே கூட்டவரும் நாடிவிநாடிகள் நிலவுமானமாம்.

அளந்துகண்ட அடியிலே சந்திரன் நிற்கும் இராசி முற்கூறோ? நடுக்கூறோ? பிற்கூறோ? என்றறிந்து, அந்த இராசிமாதம் எதுவென்றும். முதற்கூறானால் முற்பத்தும், நடுக்கூறானால் நடுப்பத்தும், கடைக்கூறானால் கடைசிப் பத்துமாகிய தேதிகளுக்குரிய அவச்சாயை பாதச்சாயை அடிவியடிகளைப் பகல்நாழிகைக்குச் சொன்ன கிரமமாகக் கழித்து, மீதத்தை வியடியாக்கி இரண்டாற் பெருக்கி அதனுடன் 840 கூட்டி வந்த தொகையினால், நிலவுமானத்தை விநாடியாக்கி ஏழாற் பெருக்கிய தொகையைப் பிரிக்கவருவது நாழிகை. மீதத்தை 60 ஆற் பெருக்கி முன்தொகையினால் பிரிக்கவருவது விநாடி.

இவை நிலவு முன்னேரமானால் நிலவு உதயாதி ஜனனாந்தஞ் சென்ற நாழிகையாம். நிலவு பின்னேரமானால் ஜனனாதி நிலவு அஸ்தமனாந்தம் நின்ற நாழிகையாம்.

நிலவுமானத்திலே, ஜனனாதி நிலவு அஸ்தமனாந்தம், நின்ற நாழிகையைக் கழிக்க, நிலவு உதயாதி ஜனனாந்தஞ் சென்ற நாழிகையாகும். சூரிய உதயாதி நிலவு உதயாந்தஞ் சென்ற நாழிகையுடனே நிலவு உதயாதி ஜனனாந்தஞ் சென்ற நாழிகையைக் கூட்டச் சூரிய உதயாதி ஜனனாந்தஞ் சென்ற நாழிகைவரும்.

நக்ஷத்திரங்களின் வடிவமும்;
உச்சமாகும்போது இராசிகளிற் சென்ற நாழிகையும் அறிய

| நக்ஷத்திரம் | எண் | சாயல் | லக்கினம் | சென்றது நாடி | சென்றது விநாடி |
|---|---|---|---|---|---|
| அச்சுவினி … … | 6 | குதிரைமுகம் | கர்க்கடகம் | 1 | 44 |
| பரணி … … | 3 | அடுப்பு | கர்க்கடகம் | 3 | 03 |
| கார்த்திகை … | 6 | சதுரவிசிறி | சிங்கம் | 0 | 34 |
| ரோகிணி … | 12 | முடிபோல | சிங்கம் | 2 | 35 |
| மிருகசீரிடம் … | 3 | தேங்காய்க்கண் | கன்னி | 0 | 02 |
| திருவாதிரை … | 1 | பவளரத்தினம் | கன்னி | 0 | 52 |
| புனர்பூசம் … | 5 | ஓடம் | துலாம் | 0 | 29 |
| பூசம் … … | 3 | புடலம்பூ | துலாம் | 2 | 58 |
| ஆயிலியம் … | 4 | அம்மி | துலாம் | 3 | 33 |
| மகம் … … | 4 | முடநுகம் | விருச்சிகம் | 1 | 18 |
| பூரம் } … | 2 | 4 } கட்டிற்கால் | விருச்சிகம் | 4 | 03 |
| உத்தரம் } … | 2 | | தனு | 0 | 03 |
| அத்தம் … | 5 | உள்ளங்கைவிரல் | தனு | 1 | 56 |
| சித்திரை … | 2 | புலிக்கண்போல | தனு | 4 | 03 |
| சுவாதி … … | 1 | மாணிக்கரத்தினம் | மகரம் | 0 | 50 |
| விசாகம் … | 6 | குயவன் சக்கரம் | மகரம் | 2 | 16 |
| அனுஷம் … | 6 | முடப்பனை | கும்பம் | 0 | 31 |
| கேட்டை … | 4 | ஈட்டி | கும்பம் | 1 | 30 |
| மூலம் … … | 6 | எக்காளம் | கும்பம் | 4 | 10 |
| பூராடம் } | 2 | 4 } பந்தற்கால் | மீனம் | 1 | 46 |
| உத்தராடம் } | 2 | | மீனம் | 3 | 12 |
| திருவோணம் … | 3 | முழக்கோல் | மேடம் | 1 | 16 |
| அவிட்டம் … | 6 | சக்கரம் | மேடம் | 3 | 19 |
| சதயம் … … | 100 | புட்பக்குவியல் | இடபம் | 4 | 15 |
| பூரட்டாதி } | 2 | 4 } கட்டில் | இடபம் | 4 | 46 |
| உத்தரட்டாதி } | 2 | | மிதுனம் | 2 | 17 |
| ரேவதி … … | 30 | மீன்கூட்டம் | மிதுனம் | 5 | 00 |



நவக்கிரக நட்பு; ஆட்சி, உச்சம், பகை, நீசம்

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| ரவி —நட்பு | ரவி உச்சம் | ரவி - பகை | ரவி -பகை |
| சந்திரன் —நட்பு | சந்திரன் - பகை | சந்திரன் - உச்சம் | சந்திரன் -நட்பு |
| செவ்வாய் —பகை | செவ்வாய் ஆட்சி | செவ்வாய் நட்பு | செவ்வாய் நட்பு |
| புதன் — நீசம் | புதன் - நட்பு | புதன் நட்பு | புதன் -ஆட்சி |
| வியாழன்—ஆட்சி | வியாழன் பகை | வியாழன் - நட்பு | வியாழன் - நட்பு |
| வெள்ளி —உச்சம் | வெள்ளி - நட்பு | வெள்ளி - ஆட்சி | வெள்ளி -நட்பு |
| சனி —நட்பு | சனி நீசம் | சனி - நட்பு | சனி -நட்பு |
| ராகு,கேது-நட்பு | ராகு,கேது பகை | ராகு, கேது-நீசம் | ராகு,கேது-நட்பு |
| கும்பம் | அதி உச்சம் | | கர்க்கடகம் |
| ரவி —பகை | ரவி மேடத்தில் | 10 ம்பாகை | ரவி -பகை |
| சந்திரன் —பகை | சந்திரன் இடபத்தில் | 3-ம்பாகை | சந்திரன் - ஆட்சி |
| செவ்வாய் —பகை | செவ்வாய் மகரத்தில் | 28-ம்பாகை | செவ்வாய் - நீசம் |
| புதன் —நட்பு | புதன் கன்னியில் | 15-ம்பாகை | புதன் - நட்பு |
| வியாழன் —நட்பு | வியாழன் கடகத்தில் | 5-ம்பாகை | வியாழன் -உச்சம் |
| வெள்ளி —நட்பு | வெள்ளி மீனத்தில் | 27-ம்பாகை | வெள்ளி -பகை |
| சனி —ஆட்சி | சனி துலாத்தில் | 20-ம்பாகை | சனி -பகை |
| ராகு கேது-பகை | | | ராகு,கேது-பகை |
| மகரம் | அதி நீசம் | | சிங்கம் |
| ரவி —பகை | ரவி துலாத்தில் | 10 ம்பாகை | ரவி -ஆட்சி |
| சந்திரன் —பகை | சந்திரன் விருச்சிகத்தில் | 3-ம்பாகை | சந்திரன் -பகை |
| செவ்வா —உச்சம் | | | செவ்வாய் -பகை |
| புதன் —நட்பு | செவ்வாய் கடகத்தில் | 28-ம்பாகை | புதன் -பகை |
| வியாழன் —நீசம் | புதன் மீனத்தில் | 15-ம்பாகை | வியாழன் - நட்பு |
| வெள்ளி —நட்பு | வியாழன் மகரத்தில் | 5 ம்பாகை | வெள்ளி -பகை |
| சனி —ஆட்சி | வெள்ளி கன்னியில் | 27 ம்பாகை | சனி -பகை |
| ராகு,கேது-நட்பு | சனி மேடத்தில் | 20-ம்பாகை | ராகு,கேது -பகை |
| தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| ரவி —நட்பு | ரவி - பகை | ரவி - நீசம் | ரவி -பகை |
| சந்திரன் —நட்பு | சந்திரன் - நீசம் | சந்திரன் -பகை | சந்திரன் -நட்பு |
| செவ்வாய்—பகை | செவ்வாய் ஆட்சி | செவ்வாய் - நட்பு | செவ்வாய் -நட்பு |
| புதன் —நட்பு | புதன் - நட்பு | புதன் -நட்பு | புதன் -ஆட்சி, உச் |
| வியாழன்—ஆட்சி | வியாழன் - பகை | வியாழன் - நட்பு | வியாழன் - நட்பு |
| வெள்ளி —நட்பு | வெள்ளி - நட்பு | வெள்ளி - ஆட்சி | வெள்ளி .நீசம் |
| சனி —நட்பு | சனி பகை | சனி - உச்சம் | சனி -நட்பு |
| ராகு,கேது நட்பு | ராகு,கேது- உச்ச | ராகு,கேது-நட்பு | ராகு,கேது-நட்பு |

### கிரக மூலத்திரிகோண இராசி, பாகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | — சிங்கம், | 20. | வியாழன் | — தனு, | 13. |
| சந்திரன் | — இடபம், | 27. | சுக்கிரன் | — துலாம் | 10. |
| செவ்வாய் | — மேடம், | 18. | சனி | — கும்பம் | 20. |
| புதன் | — கன்னி, | 5, | | | |

### கிரக மித்துரு

சூரியன் — வியாழன்
சந்திரன் — புதன், வியாழன்.
செவ்வாய் — புதன், சுக்கிரன்.
புதன் — சந்திரன், செவ்வாய் வியாழன் சுக்கிரன், சனி.
வியாழன் — சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி.
சுக்கிரன் — செவ்வாய், புதன், வியாழன், சனி.
சனி — புதன், வியாழன், சுக்கிரன்.

### கிரக சத்துரு

சூரியன் — சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், சனி.
சந்திரன் — சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி.
செவ்வாய் — சூரியன், சந்திரன், வியாழன், சனி.
புதன் — சூரியன்.
வியாழன் — செவ்வாய்.
சுக்கிரன் — சூரியன். சந்திரன்.
சனி — சூரியன், சந்திரன், செவ்வாய்.

### கிரக தற்கால மித்துரு, சத்துரு:

ஒவ்வொரு கிரகத்துக்கும் தான் இருக்கிற இராசிக்கு 2-3-4-10-11-12-ஆம் இராசிகளிலிருக்கிற கிரகங்களும் அக்கிரகங்களின் ஆட்சி இராசிகளும் தற்கால மித்துரு; அல்லாதன தற்கால சத்துரு.

முதலாம் **அத்தியாயம்** முற்றிற்று.

---

# 2-ம் அத்தியாயம்

## துவாதச லக்கினம்

### 1-வது உதய (ஜன்ம) லக்கினம்

ஜாதகர் எந்த மாதத்திலே, எந்தத் தேதியிலே, எந்த நேரத்திலே ஜனனமென்று அறிந்து, அந்தத் தேதிக்குப் பஞ்சாங்கத்திலே சூரியோதய லக்கினத்தில் உதயாற்பர நாடி விநாடி எவ்வளவு குறிக்கப்பட்டிருக்கின்றதென்று அறிந்து சூரியோதயம் முதல் ஜாதகரின் ஜனனகாலம் வரை சென்ற நாழிகையில், முதலில் உதயாற்பரத்தையும் அதன்பின் அதற்கு அடுத்த இராசிகளின் நாழிகைகளை யும் முறையே கழித்து, கழிக்கப்படாமல் நின்ற இராசி எதுவோ அதுவே ஜன்மலக்கினமாகும்.

### 2-வது ஹோரா லக்கினம்

உதயாதி ஜனனுந்தஞ் சென்ற நாழிகையை இரண்டரை நாழிகைக்கு ஒரு இராசியாக உதயலக்கினத்தி லிருந்து ஆண் இராசிக்கு வலமாகவும், பெண்ராசிக்கு இடமாகவும் கணித்துக்கண்ட இலக்கினம்.

### 3-வது கடிகா லக்கினம்

உதயாதி ஜனனுந்தஞ் சென்ற நாழிகையை நாழிகை ஒன்றுக்கு இராசி ஒன்ருக உதயலக்கினத்திலிருந்து ஆண் இராசிக்கு வலமாகவும். பெண் இராசிக்கு இடமாகவும் கணித்துக்கண்ட இலக்கினம்.

### 4-வது ஆரூடலக்கினம்

இலக்கினம் முதல் இலக்கினுதிபதி நின்ற இராசிவரை எண்ணிக்கண்ட தொகையை இலக்கினுதிபதி நின்ற இராசி முதல் எண்ணிவந்த இலக்கினம். இலக்கினுதிபதி இலக்கினத்திலாவது ஏழிலாவது நின்ருல் உதயலக்கினமே ஆரூடலக்கினம்.

### 5-வது நக்ஷத்திர லக்கினம்

ஜன்மநக்ஷத்திரத்தில் ஜனனகாலம்வரை சென்ற நாழிகையை ஐந்து நாழிகைக்கு ஒரு இராசியாக உதய லக்கினம் முதல் கணித்துக்கண்ட இலக்கினம்.

### 6-வது காரகலக்கினம்

உதயாதி ஜனனுந்தச் சென்ற நாழிகையை ஐந்து நாழிகைக்கு ஒரு இராசியாகக் கணித்துவந்த தொகையை, எந்தக் கிரகஸ்புடத்தில் அதிக பாகை சென்று இருக்கின்றதோ அந்தக் (காரகக்) கிரகம் இருக்கின்ற இராசிமுதலாக எண்ணிக்கண்ட இலக்கினம்.

7-வது ஆதரிச லக்கினம்

ஜன்மலக்கினத்துக்கு ஏழாம் இலக்கினம்,

8-வது ஆயுர்லக்கினம்

உதயாதி ஜனனந்தஞ் சென்ற நாழிகையை ஐந்து நாழிகைக்கு ஒரு இராசியாகக் கணித்து வந்த தொகையைச் சந்திரன் நின்ற நவாம்ச இராசிமுதலாக எண்ணிக் கண்ட இலக்கினம்.

9-வது திரேக்காண லக்கினம்

இலக்கினத்தை மூன்றுகூறுசெய்து எத்தனையாங் கூற்றில் ஜனனமென்றறிந்து, இலக்கினத்தின் மூன்றுகூறுகளையும் இலக்கினம் சரராசியானால் அதிலிருந்து முறையே ஒன்று ஐந்து ஒன்பது ஆகிய இராசிகளாகவும், திரராசியானால் ஒன்பது ஒன்று ஐந்து ஆகிய இராசிகளாகவும், உபயராசியானால் ஐந்து ஒன்பது ஒன்று ஆகிய இராசிகளாகவும் எண்ணிவந்ததில், இலக்கினத்தில் ஜனனகாலக்கூறு அமைந்துள்ள இராசி எதுவோ அது திரேக்காண இலக்கினம்.

10-வது அங்கிச லக்கினம்

கிரகஸ்புடத்தில் அதிக பாகை சென்றிருக்கும் (காரகக்) கிரகத்தின் துவதாம்ச இராசியே அங்கிசலக்கினம்.

11-வது நவாம்சலக்கினம்

இலக்கினத்தை ஒன்பது கூறுசெய்து, எத்தனையாங் கூற்றில் ஜனனமென்றறிந்து, அத்தொகையை மேடம் சிங்கம். தனு இலக்கினமானால் மேடம் முதலாகவும், இடபம் கன்னி மகரம் இலக்கினமானால் மகரம் முதலாகவும், மிதுனம் துலாம் கும்பம் இலக்கினமானால் துலாம் முதலாகவும், கர்க்கடகம் விருச்சிகம் மீனம் இலக்கினமானால் கர்க்கடகம் முதலாகவும் எண்ணிக் கண்ட இலக்கினம்.

12-வது பாவலக்கினம்

உதயாதி ஜனனந்தஞ் சென்ற நாழிகையை ஐந்து நாழிகைக்கு ஒரு இராசியாகக் கணித்து வந்த தொகையை மேடம் முதலாக எண்ணிக் கண்ட இலக்கினம்.

சந்திர கதி

ஜன்மநக்ஷத்திரத்தின் பரமநாழிகையை அறுபதுகூறாக்கி ஜனனகாலத்தில் சந்திரன் எத்தனையாங்கூற்றில் நின்றதென்று கண்டு, இதன்கீழ்ச் சொல்லப்படும் அறுபது தொழிலையும் முதற்கூறு தொடங்கிச் சந்திரன்நின்ற கூறுவரை கிரமமாக எண்ணிக்கண்டது சந்திரனின் நக்ஷத்திர கதியாம்.



ஒரு இராசிக்கு ஐந்துகதியாக மேடம் முதல் இடபம் இறுதியாக எண்ணிவந்த நக்ஷத்திரகதியின் தொகையை உதயலக்கினம் முதலாகக் கணித்துவந்தது இராசிக்கதி.

மேடத்தின் கூறு

1. **தானச்சேதம்**
2. **தவஞ்செய்தல்**
3. **பரதாரபரிக்கிரகம்**
4. **களவைக் காண்டல்**
5. **பாம்பினாற் கடிபடல்**

மீனத்தின் கூறு

6. **சிங்காசனத்திருத்தல்**
7. **இராச்சியஞ்செய்தல்**
8. **இராஜசேவை**
9. **சத்துருவை ஜயித்தல்**
10. **சேனைத்தலைவனாக இருத்தல்**

கும்பத்தின் கூறு

11. **பிராணனை விடல்**
12. **தலைவெட்டுண்ணல்**
13. **கால்வெட்டுண்ணல்**
14. **கட்டுண்ணல்**
15. **சரீரத்துக்குச் சேதம்**

மகரத்தின் கூறு

16. **இராச்சியஞ் செய்தல்**
17. **வேதாத்தியயனஞ்செய்தல்**
18. **தியாகங்கொடுத்தல்**
19. **தருமஞ்செய்தல்**
20. **பல சாஸ்திரங்களை அப்பியாசித்தல்**

தனுவின் கூறு

21. **நல்ல குலத்திலே பிறத்தல்**
22. **தனந்தேடல்**
23. **துலாக்கோல்கொண்டு நிறுத்தல்**
24. **வித்தை அதிகரித்தல்**
25. **சத்துருவை ஜயித்தல்**

விருச்சிகத்தின் கூறு

26. **வெப்புநோய் கொள்ளல்**
27. **நிலைகுலைதல் அழித்தல்**
28. **சத்துருக்களின் நாட்டை**
29. **பிறரைச் சேவித்தல்**
30. **சத்துருக்களின் தனத்தை அபகரித்தல்**

துலாத்தின் கூறு

31. **சபையில் இருத்தல்**
32. **சத்துருவை ஜயித்தல்**
33. **மந்திரித்துவம் செய்தல்**
34. **தன் தேவியுடனே கூடுதல்**
35. **யானையேறல்**

கன்னியின் கூறு

36. **மந்திரியாய் இருத்தல்**
37. **யுத்தத்தில் அபசெயப்படல்**
38. **பயந்திருத்தல்**
39. **பிராமணபோசனஞ் செய்தல்**
40. **அக்கினிகாரியஞ் செய்தல்**

சிங்கத்தின் கூறு

41. **பசியுண்டாதல்**
42. **போசனஞ் செய்தல்**
43. **தியாகமிடல்**
44. **கள்ளுண்ணல்**
45. **உதிரங்குடித்தல்**

கர்க்கடகத்தின் கூறு

46. **மனைவியைக் கைப்பிடித்தல்**
47. **பந்துவிளையாடல்**
48. **தூதுபோதல்**
49. **இராச்சியஞ் செய்தல்**
50. **விசனப்படல்**

மிதுனத்தின் கூறு

51. சயனித்தல்
52. அரசருடன் பகைத்தல்
53. இராஜசினேகஞ்செய்தல்
54. யோகாப்பியாசஞ் செய்தல்
55. சன்னியாசியாயிருத்தல்

இடபத்தின் கூறு

56. அன்னம் புசித்தல்
57. பாலன்னம் புசித்தல்
58. பலரையும் உண்பித்தல்
59. ஆடுதல்
60. சுகாசனத்திருத்தல்

## அங்க நிலை

### அங்கச் சூரியன்

சூரியன் நின்ற நக்ஷத்திரம் முதலாக ஜன்மநக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி சூரியன் நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக,

| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 3 | தலை | இராசாதிகாரம் | 19 | கை | தனநாசம் |
| 6 | வாய் | கல்விநலம் | 27 | கால் | வறுமை |
| 11 | வயிறு | செல்வம் | | | |

### அங்கச் சந்திரன்

ஜன்மராசிமுதல் சந்திரன்நிற்கும் இராசிவரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் இடவரையறைப்படி சந்திரன் நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக.

| இடம் | அங்கம் | பலன் | இடம் | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | அரை | இன்பம் | 7 | வாய் | போசனசுகம் |
| 2 | தொடை | நன்மை | 8 | செவி | இடர் |
| 3 | கணைக்கால் | சுகம் | 9 | தோள் | இன்பம் |
| 4 | கால் | நோய் | 10 | கழுத்து | மகிழ்ச்சி |
| 5 | உச்சி | பெண்சேவை | 11 | மார்பு | பொருள்வரவு |
| 6 | கண் | துன்பம் | 12 | வயிறு | நோய் |

### அங்கச் செவ்வாய்

செவ்வாய் நின்ற நக்ஷத்திரம் முதலாக ஜன்மநக்ஷத்திரம்வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி செவ்வாய் நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக.



| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 3 | அரை | அழிவு | 20 | வாய் | போகானுபவம் |
| 6 | தொடை | துன்பம் | 21 | தோள் | மக்கட்பேறு |
| 11 | கால் | தனநாசம் | 25 | வயிறு | தனலாபம் |
| 17 | உச்சி | தனவரவு | 27 | நெஞ்சு | நோய் |
| 18 | கண் | நோய் | | | |

### அங்கப்புதன்

புதன்நின்ற நக்ஷத்திரம் முதலாக ஜன்மநக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி புதன்நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக.

| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | கால் | பிரயாணம் | 14 | மார்பு | பகை |
| 4 | தொடை | போகம் | 17 | தோள் | துன்பம் |
| 7 | அரை | மக்கட்பேறு | 21 | முகம் | அழிவு |
| 9 | வயிறு | நோய் | 27 | உச்சி | சுகம் |

### அங்க வியாழன்

வியாழன் நின்ற நக்ஷத்திரம் முதலாக ஜன்மநக்ஷத்திரம்வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி வியாழன் நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக.

| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 4 | தலை | பல அனுபவம் | 20 | கால் | பீடை |
| 8 | தோள் | போசனசுகம் | 25 | வயிறு | தனலாபம் |
| 9 | கழுத்து | செல்வம் | 27 | கண் | சுகம் |
| 14 | மார்பு | பகை | | | |

### அங்க வெள்ளி

மீனம் முதலாக, வெள்ளிநின்ற இராசிவரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் இராசிவரையறைப்படி வெள்ளி நிற்கும் அங்கங்களை அறிக.

| இராசி | அங்கம் | இராசி | அங்கம் |
|---|---|---|---|
| மீனம் | உச்சி | கன்னி | வயிறு |
| மேடம் | கண் | துலாம் | அரை |
| இடபம் | வாய் | விருச்சிகம் | தொடை |
| மிதுனம் | கழுத்து | தனு | கணைக்கால் |
| கர்க்கடகம் | தோள் | மகரம் | உள்ளங்கால் |
| சிங்கம் | மார்பு | கும்பம் | கால்விரல் |

இவைகளில் உச்சி மிகநன்று. மற்றைய அங்கங்களாக வரும்போது, வெள்ளிநின்ற நக்ஷத்திரம் வலநாளாயின் வலப்புறத்தில் உள்ள அங்கமாகவும் இடநாளாயின் இடப்புறத்தில் உள்ள அங்கமாகவும்நிச்சயித்து, வலப்புறமாயின் நன்மையென்றும். இடப்புறமாயின் தீமையென்றும்அறிக.

வலநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை, புநர்பூசம், பூசம் ஆயிலியம், அத்தம், சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி.

இடநாள்: ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்தரம், விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம்.

அங்கச் சனி

சனிநின்ற நக்ஷத்திரம் முதலாக ஜன்மநக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி சனிநிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலனையும் அறிக.

| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | வாய் | அழிவு | 20 | வயிறு | செல்வம் |
| 5 | வலக்கை | கேடு | 23 | உச்சி | மேன்மை |
| 11 | கால் | பிரயாணம் | 25 | கண் | சுகம் |
| 15 | இடக்கை | நோய் | 27 | அரை | துக்கம் |

அங்க இராகு, கேது

ஜன்மநக்ஷத்திரம் முதலாக இராகு கேதுநின்ற நக்ஷத்திரம்வரை எண்ணிக்கண்ட தொகைக்குக் கீழேகாணும் நாள் வரையறைப்படி இராகு கேது நிற்கும் அங்கங்களையும் அவற்றின் பலன்களையும் அறிக

| நாள் வரை | அங்கம் | பலன் | நாள் வரை | அங்கம் | பலன் |
|---|---|---|---|---|---|
| 3 | முகம் | மிருத்துபயம் | 20 | இடக்கை | மரணபயம் |
| 6 | தலை | அதிகாரம் | 21 | கழுத்து | இராசமகிமை |
| 10 | மார்பு | ரோகபீடை | 27 | கால் | நற்சுகம் |
| 15 | வலக்கை | சுகம் | | | |



கிரகசமயம்

மேடம் முதல் ஜன்மலக்கினம்வரை எண்ணிய தொகையை ஜன்மலக்கினம் முதல் அந்த அந்தக் கிரகம் இருந்த இராசிவரையும் எண்ணிய தொகையாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்த சேஷத்தை அவரவர் தெசை வருஷத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்த சேஷம் கிரக சமயம்.

1. ஸ்நானஞ்செய்தல்.
2. அலங்காரஞ்செய்தல்.
3. விபூதி சந்தனயணிதல்.
4, ஜபஞ்செய்தல்.
5. சிவபூசை செய்தல்.
6. ஔபாசனக்கினிகாரியஞ் செய்தல்.
7 விஷ்ணுபூசைசெய்தல்.
8. பிராமணபூஜைசெய்தல்.
9. நமஸ்காரஞ்செய்தல்.
10. பிரதக்ஷிணஞ்செய்தல்.
11. வைசுவதேயஞ்செய்தல்
12. அதிதிபூசை செய்தல்.
13. போசனஞ்செய்தல்
14. புராணப்பிரசங்கஞ்செய்தல்
15. கோபங்கொள்ளுதல்.
16. தாம்பூலமருந்தல்.
17. இராசாங்கஞ்செயதல்.
18. கிரீடம்பூணல்.
19. ஜலபானஞ்செய்தல்.
20. ஆலிங்கனஞ்செய்தல்.
21- சயனஞ்செய்தல்.
22. அமிர்தபானஞ்செய்தல்,
23. மதனலங்காரஞ்செய்தல்.
24. லீலைசெய்தல்.
25. போசனஞ்செய்தல்.
26, நித்திரைசெய்தல்,
27. இரத்தினப்பரீக்ஷைசெய்தல்

கிரியாகமனம்

கிரகஸ்புடத்தில் பாகை ஒன்றுக்கு ஒரு கமனமாக ஒற்றை இராசிக்கு 1 முதல் 30வரை நேராகவும், இரட்டை இராசிக்கு 30 முதல் 1 வரை மாறுகவும் கொள்க.

1, நிர்ச்சலபோசனம்.
2. அன்னதானம்
3. சுயம்பாகம்.
4. விருந்துாண்புசித்தல்.
5. பரவீட்டிலன்னசிந்தை.
6. சுகபோசனம்
7. வாகன சஞ்சாரம்
8. அநேகவாகனம்
9. தீர்த்தயாத்திரை.
10. தானப்பிரஷ்டம்
11. மங்களயாத்திரை.
12. மண்டலாதிக்கம்.
13. குலாதிக்கம்.
14. கிராமாதிக்கம்-
15. குடும்பாதிக்கம்.
16. பூர்வாதிக்கம்-
17. தேசாதிகாரம்.
18. களத்திரகோபம்
19. தீர்க்கநித்திரை.
20. களத்திரமோகம்-
21. நிர்ச்சலநித்திரை.
22. சயனப்பிரதாபம்.

23. பரதாரகமனம்.
24. உற்றதுக்கம்.
25. பூமிகமனம்.
26. வர்ச்சிதம்.
27. ஆபத்துக்காலம்
28. இராஜதண்டனை.
29. கருவிவிஷாக்கினிபீடை.
30. தேகமெலிவு.

## கிரக அவஸ்தை

| மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு, கும்ப இராசிகளில் | | இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம் மகரம் மீனஇராசிகளில் | |
|---|---|---|---|
| பாகைவரை | அவஸ்தை | பாகைவரை | அவஸ்தை |
| 6 | வாலிபம் | 6 | மரணம் |
| 12 | யௌவனம் | 12 | விருத்தாப்பியம் |
| 13 | கௌமாரம் | 18 | கௌமாரம் |
| 24 | விருத்தாப்பியம் | 24 | யௌவனம் |
| 30 | மரணம் | 30 | வாலிபம் |

சனி இராகு கேதுக்களுக்கு விருத்தாவஸ்தையும், சுக்கிரனுக்கு வாலிபமும் மரணமுந் தவிர மற்ற அவஸ்தையும், புதனுக்கு மரணந் தவிர மற்ற அவஸ்தையும், சூரியனுக்கும் குருவுக்கும் மரணம் தவிர மற்ற அவஸ்தையும் உத்தமம். சந்திரனுக்கு யௌவனம் உத்தமம். வாலிபமும் கௌமாரமும் மத்திமம்; மற்றவை ஆகா.

## முக்குணவேளை

| நா-வி வரை | ஞாயிறு புதன் சனி | திங்கள் வியாழன் | செவ்வாய் வெள்ளி |
|---|---|---|---|
| 3-45 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 7-30 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 11-15 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 15-00 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 18.45 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 22 30 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 26-15 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 30-00 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 33-45 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 37-30 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 41-15 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 45-00 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 48-45 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 52-30 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 56-15 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 60-00 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |



## காலவோரை

| நா.வி வரை | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 2-30 | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 5-00 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| 7-30 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| 10-00 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| 12-30 | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| 15-00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| 17-30 | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| 20-00 | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 22-30 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| 25-00 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| 27-30 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| 30-00 | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| 32-30 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| 35-00 | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| 37-30 | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 40-00 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| 42-30 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| 45-00 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| 47-30 | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| 50-00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| 52-30 | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| 55 00 | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 57 30 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| 60-00 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |

## கேந்திராதி ஐந்துவித இடம்

கேந்திரம் :- ஒன்று, நான்கு, ஏழு, பத்தாமிடங்கள்.

பணபரம் :- இரண்டு, ஐந்து, எட்டு, பதினோராமிடங்கள்.

ஆபோக்கிலீபம் :- மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டாமிடங்கள்,

உபசயம் :- மூன்று, ஆறு, பத்து, பதினோராமிடங்கள்.

திரிகோணம் : ஒன்று, ஐந்து. ஒன்பதாமிடங்கள்.

**இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று**

# 3-ம் அத்தியாயம்

## அஷ்டக வர்க்கம்

அஷ்டகவர்க்கம் கணிக்கும்போது, கிரகநிலைச் சக்கரத்திலே அந்த அந்தக் கிரகம் நின்ற இராசிமுதலாக சொல்லப்பட்ட எண்ணுக்குரிய இராசி ஒவ்வொன்றிலும் ஒரு பரல்வீதமாகக் குறித்து, அவ்வாறு ஒவ்வொரு இராசியிலுங் குறிக்கப்பட்ட மொத்தப் பரல்களைக் கூட்டி இராசிச் சக்கரத்தில் எழுதுவது.

### சூரியன் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 | |
| சந்திரன் | ... | 3 | 6 | 10 | 11 | | | | | |
| செவ்வாய் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 | |
| புதன் | | 3 | 5 | 6 | 9 | 10 | 11 | 12 | | |
| வியாழன் | ... | 5 | 6 | 9 | 11 | | | | | |
| சுக்கிரன் | ... | 6 | 7 | 12 | | | | | | |
| சனி | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 | |
| இலக்கினம் | ... | 3 | 4 | 6 | 10 | 11 | 12 | [ஆக பரல் 48] | | |

### சந்திரன் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 3 | 6 | 7 | 8 | 10 | 11 | | |
| சந்திரன் | ... | 1 | 3 | 6 | 7 | 9 | 10 | 11 | |
| செவ்வாய் | ... | 2 | 3 | 5 | 6 | 9 | 10 | 11 | |
| புதன் | ... | 1 | 3 | 4 | 5 | 7 | 8 | 10 | 11 |
| வியாழன் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 10 | 11 | |
| சுக்கிரன் | ... | 3 | 4 | 5 | 7 | 9 | 10 | 11 | |
| சனி | ... | 5 | 6 | 11 | | | | | |
| இலக்கினம் | ... | 3 | 6 | 10 | 11 | [ஆக பரல் 49] | | | |

### செவ்வாய் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 3 | 5 | 6 | 10 | 11 | | |
| சந்திரன் | ... | 3 | 6 | 11 | | | | |
| செவ்வாய் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 10 | 11 |
| புதன் | ... | 3 | 5 | 6 | 11 | | | |
| வியாழன் | ... | 6 | 10 | 11 | 12 | | | |
| சுக்கிரன் | ... | 6 | 8 | 11 | 12 | | | |
| சனி | ... | 1 | 3 | 5 | 8 | 9 | 10 | 11 |
| இலக்கினம் | ... | 1 | 3 | 6 | 10 | 11 | [ஆக பரல் 39] | |



### புதன் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 5 | 6 | 9 | 11 | 12 | | | |
| சந்திரன் | ... | 2 | 4 | 6 | 8 | 10 | 11 | | |
| செவ்வாய் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 |
| புதன் | ... | 1 | 3 | 5 | 6 | 9 | 10 | 11 | 12 |
| வியாழன் | ... | 6 | 8 | 11 | 12 | | | | |
| சுக்கிரன் | ... | 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 9 | 11 |
| சனி | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 |
| இலக்கினம் | ... | 1 | 2 | 4 | 6 | 8 | 10 | 11 [ஆக பரல் 54] | |

### வியாழன் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 1 | 2 | 3 | 4 | 7 | 8 | 9 | 10 | 11 |
| சந்திரன் | ... | 2 | 5 | 7 | 9 | 11 | | | | |
| செவ்வாய் | ... | 1 | 2 | 4 | 7 | 8 | 10 | 11 | | |
| புதன் | ... | 1 | 2 | 4 | 5 | 6 | 9 | 10 | 11 | |
| வியாழன் | ... | 1 | 2 | 3 | 4 | 7 | 8 | 10 | 11 | |
| சுக்கிரன் | ... | 2 | 5 | 6 | 9 | 10 | 11 | | | |
| சனி | ... | 3 | 5 | 6 | 12 | | | | | |
| இலக்கினம் | ... | 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 10 | 11 |

[ஆக பரல் 56]

### சுக்கிரன் அஷ்டகவர்க்கம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 8 | 11 | 12 | | | | | | |
| சந்திரன் | ... | 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 9 | 11 | 12 |
| செவ்வாய் | ... | 3 | 4 | 6 | 9 | 11 | 12 | | | |
| புதன் | ... | 3 | 5 | 6 | 9 | 11 | | | | |
| வியாழன் | ... | 5 | 8 | 9 | 10 | 11 | | | | |
| சுக்கிரன் | ... | 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 9 | 10 | 11 |
| சனி | ... | 3 | 4 | 5 | 8 | 9 | 10 | 11 | | |
| இலக்கினம் | .... | 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 9 | 11 | |

[ஆக பரல் 52]

### சனி அஷ்டகவர்க்கம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் ... | 1 | 2 | 4 | 7 | 8 | 10 | 11 |
| சந்திரன் ... | 3 | 6 | 11 | | | | |
| செவ்வாய் ... | 3 | 5 | 6 | 10 | 11 | 12 | |
| புதன் ... | 6 | 8 | 9 | 10 | 11 | 12 | |
| வியாழன் ... | 5 | 6 | 11 | 12 | | | |
| சுக்கிரன் ... | 6 | 11 | 12 | | | | |
| சனி ... | 3 | 5 | 6 | 11 | | | |
| இலக்கினம் | 1 | 3 | 4 | 6 | 10 | 11 [ஆகபரல் 39] | |

### திரிகோண சோதனை

ஒவ்வொரு கிரகத்தின் அஷ்டகவர்க்கத்திலும் மேட-சிங்க-தனு, இடப-கன்னி-மகரம், மிதுன-துலா-கும்பம், கர்க்கடக-விருச்சிக-மீனம் என்று சொல்லப்படுந் திரிகோணராசிகள் மும்மூன்றிலும் பரற்கணக்குத் தொகை சரியாக இருந்தால் மூன்று இராசியிலும் உள்ள தொகைகளை நீக்கவும், ஒரு இராசியிற் பரல் குறைந்திருந்தால் அத்தொகைப்படியே மற்ற இராசிகளிலுள்ளவைகளையும் குறைத்துச் சரியாகச் செய்யவும், ஒரு இராசியிற் பரல் இல்லாதிருந்தால் திரிகோணசோதனையில்லை.

### ஏகாதிபத்திய சோதனை

திரிகோணசோதனை செய்தபின்பு, மேட-விருச்சிகம், இடப-துலாம், மிதுன-கன்னி, தனு-மீனம்; மகர-கும்பம் என்னும் ஏகாதிபத்திய இராசிகள் இவ்விரண்டிலும் கிரகமிருந்த இராசியில் பரல்தொகை குறைந்தும் கிரகமில்லாத இராசியில் பரல்தொகை அதிகமாகவும் இருந்தால் குறைந்த தொகைப்படி மற்றதையுங் குறைத்துச் சரியாகச் செய்யவும். இரண்டு இராசிகளிலும் தொகை சரியாக இருந்தாலும், கிரகமில்லாத இராசியில் தொகை குறைந்திருந்தாலும் கிரகமில்லாத இராசியின் தொகையை நீக்கிவிடவும். இரண்டு இராசியிலும் கிரகமில்லாமல் இருக்க, தொகை கூடியுங் குறைந்தும் இருந்தால் குறைந்தபடி மற்றதையுங் குறைத்துச் சரியாகச் செய்யவும். சரியாக இருந்தால் இரண்டு இராசியின் தொகைகளையும் நீக்கவும். ஒரு இராசியில் மாத்திரம் தொகையிருந்தால் சோதனையில்லை. இரண்டு இராசியிலும் கிரகமிருக்க, தொகை கூடியுங் குறைந்தும் இருந்தாலும், சரியாக இருந்தாலும், ஒரு இராசியில் மாத்திரம் தொகை இருந்தாலும் சோதனையில்லை. கிரகம் இருந்த இராசியில் தொகையில்லாமலிருக்க, கிரகமில்லாத இராசியில் தொகை இருந்தால் அதை நீக்கவும்.



ஏகாதிபத்திய சோதனை செய்தபின்பு பன்னிரண்டு இராசிகளிலும் சேடமாக இருக்கும் பரல்களின் மொத்தத் தொகையே சோத்தியசேடம் எனப்படும்.

### இராசிக் குணகாரம்

ஒவ்வொரு கிரக அஷ்டகவர்க்கத்திலும் ஏகாதிபத்திய சோதனை செய்தபின்பு, இடபத்திலும் சிங்கத்திலும் இருந்த தொகையைக் கூட்டிப் பத்தாலும், மிதுனத்திலும் விருச்சிகத்திலும் இருந்த தொகையைக் கூட்டி எட்டாலும், மேடத்திலும் துலாத்திலும் இருந்த தொகையைக் கூட்டி ஏழாலும், கன்னியிலும் மகரத்திலும் இருந்த தொகையைக் கூட்டி ஐந்தாலும், கர்க்கடகத்தில் இருந்த தொகையை நான்காலும், தனுவில் இருந்த தொகையை ஒன்பதாலும், கும்பத்தில் இருந்த தொகையைப் பதினொன்றாலும், மீனத்தில் இருந்த தொகையைப் பன்னிரண்டாலும் பெருக்கி ஒன்றாகக் கூட்டிவைத்துக்கொள்வது இராசிக் குணகாரம்.

### கிரகக் குணகாரம்

ஒவ்வொரு கிரக அஷ்டகவர்க்கத்திலும், ஏகாதிபத்திய சோதனை செய்தபின்பு, குரு இருந்த இராசித்தொகையைப் பத்தாலும், செவ்வாய் இருந்த இராசித்தொகையை எட்டாலும், சுக்கிரன் இருந்த இராசித்தொகையை ஏழாலும், சூரியன், சந்திரன், புதன், சனி இவர்கள் இருந்த ராசித்தொகையைத் தனித்தனியே ஐந்தாலும் பெருக்கி ஒன்றாகக்கூட்டி வைத்திருப்பது கிரகக் குணகாரம்.

### குணசமூகம்

இராசிக் குணகாரம், கிரகக் குணகாரம் இரண்டையும் ஒன்றாகக் கூட்டினதொகை குணசமூகம்.

### அஷ்டகவர்க்கப் பரமாயு

ஒவ்வொரு கிரகத்தின் குணசமூகத்தையும் ஏழாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்த பலம் வருஷம். (இது இருபத்தேழுக்கு மேற்படில் இருபத்தேழாற் பிரித்து எஞ்சிய சேடத்தையே வருடமாகக் கொள்க). சேடத்தைப் பன்னிரண்டாற் பெருக்கி இருபத்தேழாற்

பிரித்துவந்தது மாதம், சேடத்தை முப்பதாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்தது நாள். சேடத்தை அறுபதாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்தது நாழிகை. இந்தவிதமாக எல்லாக் கிரகங்களின் அஷ்டகவர்க்கத்திலுங் கணக்கிட்டு வந்த வருடம் மாதம் நாழிகைகளை ஒன்ருகக் கூட்டி, அதிலே வருஷம் ஒன்றுக்கு முப்பத்தாறு நாளும், மாதம் ஒன்றுக்கு மூன்றுநாளும், நாள் ஒன்றுக்கு ஆறுநாழிகையும், நாழிகை ஒன்றுக்கு ஆறு விநாடியுமாகக் கழித்துவந்ததில், நீச அஸ்தமனக் கிரகங் கொடுத்ததிற் பாதியும், பகைக்கிரகங் கொடுத்ததில் மூன்றிலொன்றும் கழித்துக் கண்டது ஜாதகருக்குத் தூல பரமாயுவாம். இது சில நூல்களில் அற்ப பேதமாகவும் கூறப்பட்டுள்ளது,

## அஷ்டகவர்க்க போதுப்பலன்

சூரியன் முதலாக ஒவ்வொரு கிரகங்களின் அஷ்டகவர்க்கத்திலும் ஒவ்வொரு இராசியிலும் மூன்று பரலுக்குள் இருந்தால் அற்ப பலன். நான்கு இருந்தால் மத்திம பலன். ஐந்துக்குமேல் எட்டுவரை இருந்தால் விசேட பலன்.

ஒன்று இருந்தால் திரவியசேதம். இரண்டு இருந்தால் பீடை. மூன்று இருந்தால் சஞ்சலம். நான்கு இருந்தால் இலட்சுமீகரம். ஐந்து இருந்தால் விவாகசித்தி. ஆறு இருந்தால் திரவிய லாபம். ஏழு இருந்தால் ஐசுவரியம். எட்டு இருந்தால் இராஜயோகம். தத்தம் அஷ்டகவர்க்கங்களில், தொகை குறைந்திருக்கிற இராசியிலும், பகை நீச இராசிகளிலும் சூரியாதி கிரகங்கள் வரும்போது தீமையும், தொகை கூடிய இராசியில் வரும்போது லாபமும் உண்டாகும்.

இலக்கிஞதிபதி இலக்கினத்திலாவது நான்கு ஏழு பத்திலாவது ஐந்து பரலோடாயினும் அதற்கு மேற்பட்ட பரலோடாயினும் இருக்கப்பெற்ருல் அதிக லாபமுண்டாகும். சூரியன் நான்கு கிரகங்களோடுகூடி ஐந்து பரலோடாயினும் அதற்கு மேற்பட்ட பரலோடாயினும் இருப்பினும், நட்பு ஆட்சி உச்சம்பெற்ற கிரகங்கள் நாலுக்கு மேற்பட்ட பரலுடன் இலக்கினம் முதலிய கேந்திரங்களில் இருப்பினும் இராஜயோகம் உண்டாம்.



## சூரியன் அஷ்டகவர்க்க பலன்

சூரியன் நின்ற இராசிக்கு ஒன்பதாம் இராசியில் உள்ள தொகை எவ்வளவோ அவை பிதாவின் சகோதரர். அவை ஆண் கிரகங் கொடுத்ததாஞல் ஆணும், பெண்கிரகங் கொடுத்ததாஞல் பெண்ணுமாகும்.

ஜன்மலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும் பரல் தொகை குறைந்திருப்பினும், சூரியன் நீசமடைந்தும் பங்கமாயிருப்பினும் பிதாவுக்குப் பீடையுண்டு. ஐந்தாம் ஆருமிராசிகளில் மூன்றுக்குக் குறைந்த தொகையோடு சூரியனிருப்பினும், இரண்டாம் ஐந்தாமிடங்களில் மூன்று பரலோடு சூரியனிருக்க ஒன்பதில் இராகுவிருப்பினும், பிதாவுக்கு ஐந்துவருஷம்வரை பீடையுண்டாகும். குறைந்த பரலோடு ஐந்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இவர்களிருப்பின் பிதா மாதா சகோதரருக்கு அரிஷ்டம் உண்டாம்.

சூரியன் நின்ற இராசிக்கு ஒன்பதாமிராசியிலுள்ள பரலின் தொகையைச் சோத்திய சேடத்திஞற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்த சேடம் எத்தனை என்று கண்டு, பூர்வபக்ஷ ஜாதகமாயின் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷ ஜாதகமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணி வந்த நக்ஷத்திரத்திலாவது அதற்குத் திரிகோண இராசியிலாவது குரு வரும்காலம் பிதாவுக்குச் சுகமும், சனி வரும் காலம் பிதாவுக்கு நிரியாணமுமாகும்,

## சந்திரன் அஷ்டகவர்க்க பலன்

சந்திரன் நின்ற இராசிக்கு நான்காமிராசியிலுள்ள பரல்தொகை எவ்வளவோ அவ்வளவு மாதாவின் சகோதரர். இதுவும் முன்சொல்லியபடியே ஆண்கிரகம் கொடுத்த விந்தும் பெண்கிரகம் கொடுத்த விந்தும் அறிந்து ஆண் பெண் தொகையை நிச்சயிக்கவும். இலக்கினத்துக்கு நான்காமிராசியிலுள்ள பரலேக்கொண்டு அறிவதும் ஒன்று.

ஜன்ம லக்கினத்திலும் சந்திரலக்கினத்திலும் பரல் அதிகமாக இருந்து அவற்றிற் சுபக்கிரகம் இருப்பினும்

பார்ப்பினும் மாதாவுக்கு அதிக சுகமும், தீர்க்காயுளும் உண்டாம்.

சந்திரன் நின்ற இராசிக்கு நான்காம் இராசியிலுள்ள பரலின் தொகையைச் சோத்திய சேடத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்த சேடம் எத்தனை என்று கண்டு, பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷமாயின் அவிட்டம் முதலாகவும், எண்ணிவந்த நக்ஷத்திரத்திலாவது அதற்குத் திரிகோண இராசியிலாவது குருவரும் காலம் மாதாவுக்கு அதிக சுகமும், சனிவரும் காலம் மாதாவுக்கு நிரியாணமும் உண்டாம்.

### செவ்வாய் அஷ்டகவர்க்க பலன்

செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாம் இராசியில் எவ்வளவு பரல் என்று கண்டு இளைய சகோதரர்களை நிச்சயிக்கவும். இதையும் முன்போலவே ஆண்கிரகங் கொடுத்த பரலையும் பெண்கிரகங் கொடுத்த பரலையும் அறிந்து ஆண் பெண் இத்தனை என்று நிச்சயிக்க வேண்டியது.

செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாமிராசிப் பரல் தொகையைச் சோத்திய சேடத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்த சேடத்தைப் பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாகவும் அபரபக்ஷமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணிவந்த நக்ஷத்திரத்திலும் அதன் திரிகோண இராசியிலும் குருவரும் காலம் சகோதரசுகமும், சனிவரும் காலம் சகோதர பீடையும் உண்டாம்.

செவ்வாய் நின்ற இராசிக்கு எட்டாம் இராசிக்கதிபதி உச்சம்பெற்று அதிக பரலோடிருப்பின் சகோதரருக்குத் தீர்க்காயுளும், தனக்குப் பூமிலாபம்; தானியலாபமும், கிருஷி மேன்மேலும் பலித்து விருத்தியடைதலுமாகும். செவ்வாய் நின்ற இராசிக்கு எட்டாம் இராசிக்கதிபதியுஞ் செவ்வாயும் பகைநீசமாய் அற்ப பரலோடிருப்பின் சகோதர ஒற்றுமையின்மையும், பீடையும், கிருஷிகபலிதமாகாமையுமாம்.

### புதன் அஷ்டகவர்க்க பலன்

புதன் இலக்கினம் நான்கு ஏழு பத்து என்னும் கேந்திரத்தானங்களிலாவது ஐந்து ஒன்பது என்னுந் திரி



கோண ஸ்தானங்களிலாவது ஐந்து பரலோடாயினும் அதற்கு மேற்பட்ட பரல்களோடாயினுமிருக்கக் குரு பார்த்தால் நல்ல கல்வியுண்டு. இரண்டாமிடத்ததிபதி ஐந்துபரலோடு நீசமடையாமல் ஆறு, எட்டு அல்லாத இடங்களிலிருப்பின், கணிதம், சிற்பம் முதலிய கல்விவரும். புதனிருக்கும் இராசிக்கதிபதி சுபக்கிரகமாய் ஐந்துக்கு மேற்பட்ட பரலுடனிருந்தால் வித்துவானும்.

புதனிருந்த இராசிக்கு நான்காம் இராசிப் பரலைச் சோத்திய சேடத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்து வந்த சேடத்தை பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணி வந்த நக்ஷத்திரத்திலாவது அதற்குத் திரிகோண இராசியிலாவது சனி வருங்காலம் தாயின் சகோதரரான மாதுலருக்குப் பீடையுண்டாம்.

### வியாழன் அஷ்டகவர்க்க பலன்

குரு இருந்த இராசிக்கு ஐந்தாம் இராசிப் பரல் எத்தனையோ அத்தனை புத்திரருண்டு. ஆண்கிரகங் கொடுத்த பரல் ஆணாகவும், பெண்கிரகங் கொடுத்த பரல் பெண்ணாகவும் இருக்கும். ஜன்மலக்கினத்துக்கு ஐந்தாம் இடத்திலிருக்கும் பரலின் கணக்காலுஞ் சொல்வதுமுண்டு. இலக்கினத்துக்கு ஐந்தில் மூன்று பரல் இருந்தால் அற்ப புத்திரயோகம். பரல் ஐந்துக்கு மேற்படவிருப்பின் அதிக புத்திரர் உண்டு. சோதித்தபின் இருக்கும் பரலின் தொகையைக்கொண்டு பார்ப்பதே விசேஷமாகும்.

குரு இருந்த இராசிக்கு ஐந்தாம் இராசிப் பரலைச் சோத்திய சேடத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்து வந்த சேடத்தைப் பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணி வந்த நக்ஷத்திரத்திலும் அதன் திரிகோண இராசியிலும் குருவரும் காலம் புத்திரசுகம் உண்டு. சனி வருங்காலம் புத்திரபீடை உண்டாம்.

### சுக்கிரன் அஷ்டகவர்க்க பலன்

சுக்கிரனிருக்கும் இராசிக்கு ஏழாம் இராசிப் பரல் எவ்வளவோ அவ்வளவு ஸ்திரீகளுண்டாம். அப்பரல் சூரியன் கொடுத்ததாயின் பிதிர்வர்க்கத்திலும், சந்திரன் கொடுத்ததாயின் மாதுருவர்க்கத்திலும், செவ்வாய் சனி கொடுத்ததாயின் அன்னியவர்க்கத்திலும் களத்திரமுண்டாம். சோதித்தபின் நின்ற பரலால் இதை அறிவது விசேஷம்.

சுக்கிரன் ஏழாமிடத்திலே பாபக்கிரகங்களோடுகூடி, பரல் குறையப்பெற்று இருந்தால் அந்த ஸ்திரீ புருஷனோடு இஷ்டமாகவிருந்து அவனுக்குத் தீமைசெய்வாள்.

சுக்கிரனிருந்த இராசிக்கு ஏழாம் இடத்திலிருந்த பரலின் தொகையைச் சோத்திய சேடத்தாற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்த சேடத்தைப் பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணிவந்த நக்ஷத்திரத்திலாயினும் அதன் திரிகோண இராசியிலாயினும் குருவரும் காலம் களத்திரசுகமும், சனிவரும் காலம் களத்திரபீடையும் உண்டாம்.

### சனி அஷ்டகவர்க்க பலன்

சனி அஷ்டகவர்க்கத்தில் இலக்கினம் முதல் சனி நின்ற இராசிவரை எத்தனை பரல் இருந்ததோ அத்தனையாவது வருஷத்தில் தத்து உண்டாகும். சனி நின்ற இராசிமுதல் இலக்கினம்வரை உள்ள பரல் தொகை எவ்வளவோ அத்தனையாவது வருஷத்தில் பொருட்சேதம் உண்டாம்; தேகபீடையுஞ் சம்பவிக்கும்.

சனி நின்ற இராசிக்கு எட்டாம் இராசிப் பரலின் தொகையைச் சோத்திய சேடத்தினுற் பெருக்கி இருபத்தேழாற் பிரித்துவந்த சேடத்தைப் பூர்வபக்ஷமானுல் அச்சுவினி முதலாகவும், அபரபக்ஷமானுல் அவிட்டம் முதலாகவும் எண்ணிவந்த நக்ஷத்திரத்திலும் அதன் திரிகோண இராசியிலுங் குருவருங் காலம் சுகமும், சனி வருங் காலம் நிரியாணமும் உண்டாம்.



### சர்வாஷ்டகவர்க்க பலன்

சூரியன் முதல் சனிவரை ஏழு கிரகங்களின் அஷ்டகவர்க்கங்களிலும் மேடம் முதல் ஒவ்வொரு இராசிகளிலுமுள்ள பரல்களைத் தனித்தனி கூட்டி எழுதியது சர்வாஷ்டகவர்க்கம் எனப்படும்.

சர்வாஷ்டகவர்க்கத் தொகை முந்நூற்று முப்பத்தேழில் இலக்கினம் முதல் பன்னிரண்டாமிடம்வரை முறையே தேகம், குடும்பம், சகோதரர், மாதுரு, புத்திரர், சத்துரு, மனையாள், ஆயுள், பிதா, தொழில், லாபம், செலவு இவைகளுக்குரிய தானங்களாதலால். இலக்கினம் முதலான இராசிகளில் பரல் தொகை முப்பதுக்குமேலிருந்தால் அந்த அந்த ஸ்தானுதிபதிகளுக்கு நல்ல பலனும், முப்பதுக்குக் கீழிருந்தால் மத்திமபலனும், இருபதுக்குக் கீழிருந்தால் அதமபலனுமாகும். இந்த வீதப்படி அங்கங்கே உள்ள தொகையைக்கொண்டு யூகித்துப் பலன் அறியலாம்.

பதினேராமிடத்துப் பரல் அதிகமாகவும், பத்தாம் பன்னிரண்டாமிடங்களின் பரல் (அதிலும்) குறைந்துமிருந்தால் இராஜயோகமுண்டாம். பதினேராமிடம் பரல் குறைந்தும், பன்னிரண்டாமிடம் பரல் அதிகமாகவுமிருந்தால் வரவுக்கு மிஞ்சிய செலவுண்டாகும். பத்தாமிடத்தில் பரல் குறைந்தும். பன்னிரண்டாமிடத்தில் பரல் அதிகமாகவும் இருந்தால் செய்தொழில் விருத்தியாகாமலும், செய்தொழிலாற் பலனில்லாமலுமிருக்கும். எடுத்த காரியம் முடியாது. ஆறுமிடத்திற் பரல் குறைந்தும், நான்காமிடத்தில் பரல் கூடியுமிருந்தால் சுகங் கூடுதலாகவுந் துக்கம் குறைவாகவுமிருக்கும். பதினொராமிடத்திலும், பன்னிரண்டாமிடத்திலும் பரல் குறைந்து, பத்தில் பரல் அதிகமாயிருந்தால் இராஜயோகமுண்டாகும்.

### கந்தாயம்

சர்வாஷ்டகவர்க்கத்தில் இலக்கினம் முதல் நான்காம் இராசிவரையுள்ள பரலை ஒன்றுகக் கூட்டிய தொகை முதற்கந்தாயம். ஐந்தாமிராசிமுதல் எட்டாமிராசிவரையுள்ள பரலை ஒன்றுகக் கூட்டிய தொகை இரண்

டாங் கந்தாயம். ஒன்பதாம் இராசிமுதல் பன்னிரண்டாம் இராசிவரையுள்ள பரலை ஒன்ருகக் கூட்டிய தொகை மூன்ருங் கந்தாயம். இந்த மூன்று கந்தாயங்களும் முறையே பிரதம கண்டம், துதியகண்டம், திருதியகண்டம் என்று சொல்லப்படும்.

முதற் கந்தாயத்தில் உள்ள தொகை அதிகமானுல் வாலிபத்திலும், இரண்டாங் கந்தாயத்திலுள்ள தொகை அதிகமானுல் யௌவனத்திலும், மூன்ருங் கந்தாயத்தில் உள்ள தொகை அதிகமானுல் வயோதிகத்திலும் சகல வித யோகமும் லாபமுமுண்டாம். வாலிபத்தில் உண்டாகும் யோகம் பதினுறு வயசுக்குள் பிதாவுக்கு உண்டாகுமென்பது விதி. இன்னும் பகல்விழிப்பு இராசித் தொகை அதிகமானுல் இரவிலும் சுகமும் சந்தோஷமும் உண்டாகும்.

### திக்கு விந்து

சர்வாஷ்டகவர்க்கத்தில் மேடம் இடபம் மிதுனம் ஆகிய மூன்று இராசித்தொகையைக் கூட்டியது கிழக்கு விந்து. கர்க்கடகம் சிங்கம் கன்னி ஆகிய மூன்று இராசித் தொகையைக் கூட்டியது தெற்கு விந்து. துலாம் விருச்சிகம் தனு ஆகியமூன்று இராசித்தொகையைக் கூட்டியது மேற்குவிந்து. மகரம் கும்பம் மீனம் ஆகிய மூன்று இராசித் தொகையைக் கூட்டியது வடக்குவிந்து.

எந்தத் திக்கில் பரல் தொகை அதிகமிருக்கிறதோ அந்தத் திக்கில் சகல காரியத்திற்கும் அதிக விசேஷித்த பலனுண்டாகும்.

**மூன்ரும் அத்தியாயம்** முற்றிற்று.

# 4-ம் அத்தியாயம்

### தசவர்க்கம்

60 விகலை ஒரு கலை.
60 கலை ஒரு பாகை.
30 பாகை ஒரு இராசி
12 இராசி ஒரு வட்டம் அல்லது மண்டலம்.

ஒவ்வொரு இராசிகளிலும் கிரகங்கள் நிற்கும் நிலையைப் பத்துவித அம்மிச அளவைகளால் நிதானித்து அறிந்து கிரகங்களுக்குள்ள பெலனை அறிவது தசவர்க்கமாகும்.

### 1. ஓரை

கிரகநிலைச் சக்கரத்தின்படி கிரகமிருந்த இராசியே ஓரை என்னும் அம்சமாகும்.

### 2. கோட்கூறு

கிரகமிருந்த இராசியை இரண்டு கூறு செய்தது கோட்கூறு. ஆண் இராசிக்கு 15 பாகைவரை சூரியன் கூறு. மேல் சந்திரன் கூறு. பெண் இராசிக்கு 15 பாகை வரை சந்திரன் கூறு; மேல் சூரியன் கூறு.

(மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு, கும்பம் இவை ஆறும் ஆண் இராசி. இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவை ஆறும் பெண் இராசி.)

கிரகமிருந்தது சூரியன் கூற்றிலானுல் சிங்கத்திலும், சந்திரன் கூற்றிலானுல் கர்க்கடகத்திலுமாகக் காண்க.

### 3. திரேக்காணம்

கிரகம் இருந்த இராசியை மூன்றுகூறு செய்தது திரேக்காணம். கிரகம் முதற் பத்துப் பாகைக்குள் இருந்தால் அதே இராசியாகவும், அடுத்த பத்துப் பாகைக்குள் இருந்தால் ஐந்தாம் இராசியாகவும், கடைசிப் பத்துப் பாகைக்குள் இருந்தால் ஒன்பதாம் இராசியாகவும் காண்க.

## 4. திரிசாம்சம்

ஆண் இராசிக்கு

| பாகை | திரிசாம்சம் | அம்சஇராசி |
|---|---|---|
| 5 வரை | செவ்வாய் | மேடம் |
| 10 ,, | சனி | கும்பம் |
| 18 ,, | குரு | தனு |
| 25 ,, | புதன் | மிதுனம் |
| 30 ,, | சுக்கிரன் | துலாம் |

பெண் இராசிக்கு

| பாகை | திரிசாம்சம் | அம்ச இராசி |
|---|---|---|
| 5 வரை | சுக்கிரன் | இடபம் |
| 12 ,, | புதன் | கன்னி |
| 20 ,, | குரு | மீனம் |
| 25 ,, | சனி | மகரம் |
| 30 ,, | செவ்வாய் | விருச்சிகம் |

## 5. ஸப்தமாம்சம்

கிரகமிருந்த இராசியை ஏழுகூறு செய்தது ஸப்தமாம்சம்

ஸப்தமாம்ச விபரம்

| | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|
| 1-வது கூறு | 4 | 17 | $8\frac{4}{7}$ வரை |
| 2-வது கூறு | 8 | 34 | $17\frac{1}{7}$ ,, |
| 3-வது கூறு | 12 | 51 | $25\frac{5}{7}$ ,, |
| 4-வது கூறு | 17 | 8 | $34\frac{2}{7}$ ,, |
| 5-வது கூறு | 21 | 25 | $42\frac{6}{7}$ ,, |
| 6-வது கூறு | 25 | 42 | $51\frac{3}{7}$ ,, |
| 7-வது கூறு | 30 | 00 | 00 [illegible] ,, |

ஆண் இராசிக்குக் கிரகமிருந்த இராசி முதலாகவும் பெண் இராசிக்கு ஏழாம் இராசி முதலாகவும் காண்க.



## 6. நவாம்சம்

கிரகமிருந்த இராசியை ஒன்பதுகூறு செய்தது நவாம்சம்.

நவாம்ச விபரம்

| | பாகை | கலை | | | பாகை | கலை | |
|---|---|---|---|---|---|---|---|
| 1-வது கூறு | 3 | 00 | வரை | 6-வது கூறு | 20 | 00 | வரை |
| 2-வது கூறு | 6 | 40 | வரை | 7-வது கூறு | 23 | 20 | வரை |
| 3-வது கூறு | 10 | 00 | வரை | 8-வது கூறு | 26 | 40 | வரை |
| 4-வது கூறு | 13 | 20 | வரை | 9-வது கூறு | 30 | 00 | வரை |
| 5-வது கூறு | 16 | 40 | வரை | | | | |

கிரகம் இருந்த இராசி மேடம் சிங்கம் தனுவானுல் மேடம் முதலாகவும், இடபம் கன்னி மகரமானுல் மகரம் முதலாகவும், மிதுனம், துலாம் கும்பமானுல் துலாம் முதலாகவும், கர்க்கடகம், விருச்சிகம் மீனமானுல் கர்க்கடகம் முதலாகவும் கிரமமாக எண்ணிக் காண்க.

| அம்சம் | மேடம் சிங்கம் தனு | இடபம் கன்னி மகரம் | மிதுனம் துலாம் கும்பம் | கர்க்கடகம் விருச்சிகம் மீனம் |
|---|---|---|---|---|
| 1-வது | மேடம் | மகரம் | துலாம் | கர்க்கடகம் |
| 2-வது | இடபம் | கும்பம் | விருச்சிகம் | சிங்கம் |
| 3-வது | மிதுனம் | மீனம் | தனு | கன்னி |
| 4-வது | கர்க்கடகம் | மேடம் | மகரம் | துலாம் |
| 5-வது | சிங்கம் | இடபம் | கும்பம் | விருச்சிகம் |
| 6-வது | கன்னி | மிதுனம் | மீனம் | தனு |
| 7-வது | துலாம் | கர்க்கடகம் | மேடம் | மகரம் |
| 8-வது | விருச்சிகம் | சிங்கம் | இடபம் | கும்பம் |
| 9-வது | தனு | கன்னி | மிதுனம் | மீனம் |

## 7. தசாம்சம்

கிரகமிருந்த இராசியைப் பத்துக்கூறு செய்தது தசாம்சம்

தசாம்ச விபரம்

| | பாகை | | பாகை |
|---|---|---|---|
| 1-வது கூறு | 3 வரை | 6-வது கூறு | 18 வரை |
| 2-வது கூறு | 6 வரை | 7-வது கூறு | 21 வரை |
| 3-வது கூறு | 9 வரை | 8-வது கூறு | 24 வரை |
| 4-வது கூறு | 12 வரை | 9-வது கூறு | 27 வரை |
| 5-வது கூறு | 15 வரை | 10-வது கூறு | 30 வரை |

ஆண் இராசிக்குக் கிரகமிருந்த இராசி முதலாகவும் பெண் இராசிக்கு ஒன்பதாம் இராசி முதலாகவும் கிரமமாக எண்ணிக் காண்க.

## 8. துவாதசாம்சம்

கிரகமிருந்த இராசியைப் பன்னிரண்டு கூறுசெய்தது துவாதசாம்சம்.

### துவாதசாம்ச விபரம்

| | பாகை | கலை | | | பாகை | கலை | |
|---|---|---|---|---|---|---|---|
| 1-வது கூறு | 2 | 30 | வரை | 7-வது கூறு | 17 | 30 | வரை |
| 2-வது கூறு | 5 | 00 | வரை | 8-வது கூறு | 20 | 00 | வரை |
| 3-வது கூறு | 7 | 30 | வரை | 9-வது கூறு | 22 | 30 | வரை |
| 4-வது கூறு | 10 | 00 | வரை | 10-வது கூறு | 25 | 00 | வரை |
| 5-வது கூறு | 12 | 30 | வரை | 11-வது கூறு | 27 | 30 | வரை |
| 6-வது கூறு | 15 | 00 | வரை | 12-வது கூறு | 30 | 00 | வரை |

கிரகமிருந்த இராசிமுதலாகக் கிரமமாக எண்ணிக்காண்க.

## 9. ஷோடசாம்சம்

கிரகமிருந்த இராசியைப் பதினாறு கூறுசெய்தது ஷோடசாம்சம்.

| | பாகை | கலை | விகலை | | | பாகை | கலை | விகலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1-வதுகூறு | 1 | 52 | 30 | வரை | 9-வதுகூறு | 16 | 52 | 30 | வரை |
| 2-வதுகூறு | 3 | 45 | 00 | வரை | 10-வதுகூறு | 18 | 45 | 00 | வரை |
| 3-வதுகூறு | 5 | 37 | 30 | வரை | 11-வதுகூறு | 20 | 37 | 30 | வரை |
| 4-வதுகூறு | 7 | 30 | 00 | வரை | 12-வதுகூறு | 22 | 30 | 00 | வரை |
| 5-வதுகூறு | 9 | 22 | 30 | வரை | 13-வதுகூறு | 24 | 22 | 30 | வரை |
| 6-வதுகூறு | 11 | 15 | 00 | வரை | 14-வதுகூறு | 26 | 15 | 00 | வரை |
| 7-வதுகூறு | 13 | 7 | 30 | வரை | 15-வதுகூறு | 28 | 7 | 30 | வரை |
| 8-வதுகூறு | 15 | 00 | 00 | வரை | 16-வதுகூறு | 30 | 00 | 00 | வரை |

கிரகமிருந்த இராசி மேடம் கர்க்கடகம் துலாம் மகரமானால் மேடம் முதலாகவும், இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பமானால் சிங்கம் முதலாகவும், மிதுனம் கன்னி தனு மீனமானால் தனு முதலாகவும் கிரமமாக எண்ணி அறிக.



## 10. ஷஷ்டியாம்சம்

கிரகமிருந்த இராசியை அறுபது கூறுசெய்தது ஷஷ்டியாம்சம்.

| ஆண் இரா்சி | | | | | பெண் இராசி | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூறு | பாகை | கலை | அம்சம் | பலன் | கூறு | பாகை | கலை | அம்சம் | பலன் |
| 1 | 0 | 30 | கோரம் | குரூரம் | 1 | 0 | 30 | சந்திரரேகை | சுபம் |
| 2 | 1 | 00 | இராக்ஷதம் | குரூரம் | 2 | 1 | 00 | பிரமணம் | குரூரம் |
| 3 | 1 | 30 | தேவம் | சுபம் | 3 | 1 | 30 | பயோர்தி | சுபம் |
| 4 | 2 | 00 | குபேரம் | சுபம் | 4 | 2 | 00 | சுதா | சுபம் |
| 5 | 2 | 30 | யக்ஷாவளி | சுபம் | 5 | 2 | 30 | சீதளம் | சுபம் |
| 6 | 3 | 00 | கின்னரம் | சுபம் | 6 | 3 | 00 | சோபனம் | சுபம் |
| 7 | 3 | 30 | ஹிருஷ்டம் | சுபம் | 7 | 3 | 30 | சுபம் | சுபம் |
| 8 | 4 | 00 | குலநாசம் | குரூரம் | 8 | 4 | 00 | நிர்மலம் | சுபம் |
| 9 | 4 | 30 | விஷம் | குரூரம் | 9 | 4 | 30 | தண்டாயுதம் | குரூரம் |
| 10 | 5 | 00 | அக்கினி | குரூரம் | 10 | 5 | 00 | காலாக்கினி | குரூரம் |
| 11 | 5 | 30 | மாயை | குரூரம் | 11 | 5 | 30 | பிரவீணம் | சுபம் |
| 12 | 6 | 00 | பிரேதபுரீசம் | குரூரம் | 12 | 6 | 00 | சாதிரமுகம் | சுபம் |
| 13 | 6 | 30 | அபாம்பதி | சுபம் | 13 | 6 | 30 | தம்ஷ்ட்ராகராளம் | குரூரம் |
| 14 | 7 | 00 | கணேசம் | சுபம் | 14 | 7 | 00 | சீதளம் | சுபம் |
| 15 | 7 | 30 | காலன் | குரூரம் | 15 | 7 | 30 | மிருது | சுபம் |
| 16 | 8 | 00 | சர்ப்பம் | குரூரம் | 16 | 8 | 00 | ஸௌமியம் | சுபம் |
| 17 | 8 | 30 | அமிர்தம் | சுபம் | 17 | 8 | 30 | காலன் | குரூரம் |
| 18 | 9 | 00 | சந்திரம் | சுபம் | 18 | 9 | 00 | உற்பாதம் | குரூரம் |
| 19 | 9 | 30 | மிருது | சுபம் | 19 | 9 | 30 | வம்சக்ஷயம் | குரூரம் |
| 20 | 10 | 00 | கோமளம் | சுபம் | 20 | 10 | 00 | முக்கியம் | சுபம் |
| 21 | 10 | 30 | பதுமம் | சுபம் | 21 | 10 | 30 | குலநாசம் | குரூரம் |
| 22 | 11 | 00 | பானு | சுபம் | 22 | 11 | 00 | விஷப்பிரதிக்தம் | குரூரம் |
| 23 | 11 | 30 | லக்ஷ்மீசம் | சுபம் | 23 | 11 | 30 | பூரணசந்திரன் | சுபம் |
| 24 | 12 | 00 | வாசீசம் | சுபம் | 24 | 12 | 00 | அமிர்தம் | சுபம் |
| 25 | 12 | 30 | திகம்பரம் | சுபம் | 25 | 12 | 30 | சுதா | சுபம் |
| 26 | 13 | 00 | தேவேந்திரன் | சுபம் | 26 | 13 | 00 | யமகண்டகம் | குரூரம் |
| 27 | 13 | 30 | கலிநாசம் | சுபம் | 27 | 13 | 30 | கோரம் | குரூரம் |
| 28 | 14 | 00 | க்ஷிதீஸ்வரம் | சுபம் | 28 | 14 | 00 | தாவாக்கினி | குரூரம் |
| 29 | 14 | 30 | கமலாகரம் | சுபம் | 29 | 14 | 30 | காலன் | குரூரம் |
| 30 | 15 | 00 | குளிகன் | குரூரம் | 30 | 15 | 00 | மிருத்தியு | குரூரம் |
| 31 | 15 | 30 | மிருத்தியு | குரூரம் | 31 | 15 | 30 | குளிகன் | குரூரம் |
| 32 | 16 | 00 | காலன் | குரூரம் | 32 | 16 | 00 | கமலாகரம் | சுபம் |
| 33 | 16 | 30 | தாவாக்கினி | குரூரம் | 33 | 16 | 30 | க்ஷிதீஸ்வரம் | சுபம் |

| ஆண் இராசி | | | | | பெண் இராசி | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூறு | பாகை | கலை | அம்சம் | பலன் | கூறு | பாகை | கலை | அம்சம் | பலன் |
| 34 | 17 | 00 | கோரம் | குரூரம் | 34 | 17 | 00 | கலிநாசம் | சுபம் |
| 35 | 17 | 30 | யமகண்டகம் | குரூரம் | 35 | 17 | 30 | தேவேந்திரன் | சுபம் |
| 36 | 18 | 00 | சுதா | சுபம் | 36 | 18 | 00 | திகம்பரம் | சுபம் |
| 37 | 18 | 30 | அமிர்தம் | சுபம் | 37 | 18 | 30 | வாகீசம் | சுபம் |
| 38 | 19 | 00 | பூரணசந்திரன் | சுபம் | 38 | 19 | 00 | லக்ஷ்மீசம் | சுபம் |
| 39 | 19 | 30 | விஷப்பிரதிக்தம் | குரூரம் | 39 | 19 | 30 | பானு | சுபம் |
| 40 | 20 | 00 | குலநாசம் | குரூரம் | 40 | 20 | 00 | பதுமம் | சுபம் |
| 41 | 20 | 30 | முக்கியம் | சுபம் | 41 | 20 | 30 | கோமளம் | சுபம் |
| 42 | 21 | 00 | வம்சக்ஷயம் | குரூரம் | 42 | 21 | 00 | மிருது | சுபம் |
| 43 | 21 | 30 | உற்பாதம் | குரூரம் | 43 | 21 | 30 | சந்திரம் | சுபம் |
| 44 | 22 | 00 | காலம் | குரூரம் | 44 | 22 | 00 | அமிர்தம் | சுபம் |
| 45 | 22 | 30 | ஸௌமியம் | சுபம் | 45 | 22 | 30 | சர்ப்பம் | குரூரம் |
| 46 | 23 | 00 | மிருது | சுபம் | 46 | 23 | 00 | காலன் | குரூரம் |
| 47 | 23 | 30 | சீதளம் | சுபம் | 47 | 23 | 30 | கணேசம் | சுபம் |
| 48 | 24 | 00 | தம்ஷ்ட்ராகராளம் | குரூரம் | 48 | 24 | 00 | அபாம்பதி | சுபம் |
| 49 | 24 | 30 | சந்திரமுகம் | சுபம் | 49 | 24 | 30 | பிரேதபுரீசம் | குரூரம் |
| 50 | 25 | 00 | பிறவீணம் | சுபம் | 50 | 25 | 00 | மாயை | குரூரம் |
| 51 | 25 | 30 | சாலாக்கினி | குரூரம் | 51 | 25 | 30 | அக்கினி | குரூரம் |
| 52 | 26 | 00 | தண்டாயுதம் | குரூரம் | 52 | 26 | 00 | விஷம் | குரூரம் |
| 53 | 26 | 30 | நிர்மலம் | சுபம் | 53 | 26 | 30 | குலநாசம் | குரூரம் |
| 54 | 27 | 00 | சுபம் | சுபம் | 54 | 27 | 00 | ஹிருஷ்டம் | சுபம் |
| 55 | 27 | 30 | சோபனம் | சுபம் | 55 | 27 | 30 | கின்னரம் | சுபம் |
| 56 | 28 | 00 | சீதளம் | சுபம் | 56 | 28 | 00 | யக்ஷாவலி | சுபம் |
| 57 | 28 | 30 | சுதா | சுபம் | 57 | 28 | 30 | குபேரம் | சுபம் |
| 58 | 29 | 00 | பயோதி | சுபம் | 58 | 29 | 00 | தேவம் | சுபம் |
| 59 | 29 | 30 | பிரமணம் | குரூரம் | 59 | 29 | 30 | இராக்ஷதம் | குரூரம் |
| 60 | 30 | 00 | சந்திரரேகை | சுபம் | 60 | 30 | 00 | சோரம் | குரூரம் |

ஆண் இராசிக்குக் கிரகமிருந்த இராசிமுதல் வலமாகவும், பெண்ணிராசிக்குக் கிரகமிருந்த இராசிமுதல் இடமாகவும் எண்ணி அறிக.

## தசவர்க்க அம்சம்

தசவர்க்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கிரகமும் உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, வர்க்கோத்தமம், நட்பு ஆகிய சுப அம்சங்களிலிருந்தால் ஒவ்வொரு சுபவர்க்கம் பெற்றதாகும். இவ்வாறு ஒவ்வொருகிரகமும் பத்துவர்க்கங்களிலும் எத்தனை சுபவர்க்கம் பெற்றதென்பதைக் கண்டு'



1 சுபவர்க்கம்பெற்றால் — நிஷ்பலம்
2 சுபவர்க்கம்பெற்றால் — பாரிசாதாங்கிஷம்
3 சுபவர்க்கம்பெற்றால் — உத்தமாங்கிஷம்
4 சுபவர்க்கம்பெற்றால் — கோபுராங்கிஷம்
5 சுபவர்க்கம்பெற்றால் — சிங்காசனாங்கிஷம்
6 சுபவர்க்கம்பெற்றால் — பாராவதாங்கிஷம்
7 சுபவர்க்கம்பெற்றால் — தேவலோகாங்கிஷம்
8 சுபவர்க்கம்பெற்றால் — வைசேஷிகாங்கிஷம்
9 சுபவர்க்கம்பெற்றால் — ஐராவதாங்கிஷம்
10 சுபவர்க்கம்பெற்றால் — தேவேந்திராங்கிஷம்

## தசவர்க்க அங்கிஷ பலன்

பாரிசாதாங்கிஷம் — நற்குணம், தனம், சுகம், பெருமை
உத்தமாங்கிஷம் — நல்லொழுக்கம், நிபுணத்துவம்.
கோபுராங்கிஷம் — பூமி, வீடு, வாகனம், தனம், நன்னேக்கம்.
சிங்காசனாங்கிஷம் — செல்வம், அதிகாரம், இராஜசமானம்
பாராவதாங்கிஷம் — வித்தை, செல்வம், கீர்த்தி
தேவலோகாங்கிஷம் — சைனியபதி, கொடைவள்ளல்.
வைசேஷிகாங்கிஷம் — லோகாதிபதி.
ஐராவதாங்கிஷம் — அஷ்டைஸ்வரியம்.
தேவேந்திராங்கிஷம் — இந்திரபோகி, சார்வபௌமன்.

## தசவர்க்க கிரக பலம்

| வர்க்கங்கள் | உச்சம் | மூலத்திரிகோணம் | ஆட்சி | நட்பு | பகை |
|---|---|---|---|---|---|
| இராசி ... ... | 100 | 75 | 50 | 25 | 06 |
| ஓரை ... ... | 50 | 37 | 25 | 12 | 03 |
| திரேக்காணம் | 50 | 37 | 25 | 12 | 03 |
| திரிம்சாம்சம் | 50 | 37 | 25 | 12 | 03 |
| ஸப்தாம்சம் | 25 | 18 | 12 | 06 | 01 |
| நாவம்சம் | 50 | 37 | 25 | 12 | 03 |
| தசமாம்சம் | 25 | 18 | 12 | 06 | 01 |
| துவாதசாம்சம் | 50 | 37 | 25 | 12 | 03 |
| ஷோடசாம்சம் | 50 | 37 | 25 | 12 | 03 |
| ஷஷ்டியாம்சம் | 25 | 18 | 12 | 06 | 01 |

இப்படியே ஒவ்வொரு வர்க்கங்களிலும் கிரகமிருந்த இராசியில் உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, நட்பு, பகைபெற்றதற்கு எவ்வளவு பெலம் உண்டோ அவற்றை ஒன்ருகக் கூட்டிய தொகை அவ்வக்கிரகத்தின் தசவர்க்க பெலமாகும். நீசம், அஸ்தமனமடைந்த கிரகங்களுக்குப் பெலமில்லை.

ஜாதக பலாபலன்களை நிச்சயித்து அறிதற்கு அநேகம் வழிகள் உண்டு. இந்தத் தசவர்க்க வழி மற்றெந்த வழியால் நிச்சயிப்பதிலும் பார்க்க மிகச்சிறந்தது. ஜாதகத்தை ஸ்தூலமாகப் பார்க்கும்போது, கிரகமானது உச்சம் ஆட்சி முதலியவைகளால் நல்லதாகக் காணப்படினும், அது தசவர்க்கத்தால் பெலன் குறைந்திருக்குமாயின் நற்பலன் நடவாது. ஸ்தூலமாகப் பார்க்கும்போது நன்ருகக் காணப்படாவிடினும், தசவர்க்கத்தாற் பலமுண்டாயின் நற்பலஞக நடக்கும். ஆதலால் தசவர்க்கமும் ஆவசியகம் வேண்டற்பாலதொன்று.

**நான்காம் அத்தியாயம் முற்றிற்று.**

# 5-ம் அத்தியாயம்

## துவாதச பாவபலன்

ஒருகிரகம் ஜனனகாலத்திலே இராசியில்நீசமாகி நவாம்சத்தில் உச்சம்பெற்ருல் நற்பலனும், இராசியில் உச்சமாகி நவாம்சத்தில் நீசம்பெற்ருல் துர்ப்பலனுமாகும்.

மூலத்திரிகோண பலன் : சோகமில்லாமல் இருக்குமிடத்திலே சுகசீவியாக இருத்தல். உச்சபலன் : சரீர காந்தி, அதிகசெல்வம். ஆட்சிப்பலன் : சுகசோபஞதிகளால் மங்கள புருஷஞக வாழுதல். நட்புப் பலன் : திடசித்தம், சாந்தகுணம், நியாயம்பேசுதல். பகைப் பலன் : அங்கவீனம், நோய், சனவிரோதம், துஷ்ட புத்தி. நீசபலன் : வறுமை, இழிவு, பயம்.

ஒருகிரகம் 6, 8, 12-ல் பகைநீச வீட்டில் இருப்பினும், இத்தானங்களின் அதிபதியுடன்கூடினும் விபரீதபலஞகும்.

பன்னிரண்டு தானங்களுக்குள் ஒரு தானத்துக்கதிபதி அந்தக்காரகனுமாகி 1-2-4-5-7-9-10-ல் பெலனேடு நின்ருல் அந்தக் காரகனுக்கு உத்தம பலன்.

பன்னிரண்டு தாஞதிபதிகளுள்ளும் அதிக பெலன் பெற்று யோகபலன் கொடுப்போர் தங்கள் தங்களுக்குரிய காலத்திலேதான் கொடுப்பர். இலக்கிஞதிபதி மாத்திரம் முதலிலே கொடுப்பர்.

1-4-5-9,10-ம் இடங்களுக்கதிபர்களிருந்த தாஞதிபர்களும், இவர்களோடு கூடியவர்களும், உச்ச முதலிய சுபபெலன் பெற்றிருந்தால் அதிக பலனைச் செய்வார்கள்.

சுபக்கிரகம் நின்ற இராசிக்கதிபதி கொடுக்கும் பலன் நன்மை. தீயகிரகம் நின்ற இராசிக்கதிபதி கொடுக்கும் பலன் தீமை.

ஜன்மலக்கினத்திலே அஷ்டமாதிபதி நின்ருல், நின்ற நக்ஷத்திரமும் அந்த இராசிமாதமும் கஷ்டபலனைக் கொடுக்கும்.

### இலக்கினபாவம்

இலக்கிஞதிபதி பெலமாகவிருக்க, சூரியன் தேவ லோகாங்கிஷமேற, ஒன்பதாமிடத்ததிபதி சுபாங்கிஷத்திலிருக்கப் பாக்கியமுங் கீர்த்தியுமுண்டாம்.

இலக்கினத்திற் பாபியிருக்க, 2-ற் சுபரிருக்க 9-ற் பாபரிருக்கப் பாலியத்திலே சுகம், பின்பு துக்கம்.

இலக்கினாதிபதி 10-ம் இடத்திலிருக்கச் சுபக்கிரக பார்க்க மத்தியவயதிலே சுகமும் யோகமுமுண்டாம்.

இலக்கினாதிபதி பெலவானாயிருக்க, சுபக்கிரகங் கேந்திர திரிகோணங்களிலிருக்க, 10-ம் இடத்ததிபதிகூட, சுபர் பார்க்க ஆயுள் கீர்த்தி செல்வமுண்டாம்.

இலக்கினாதிபதி கேந்திர திரிகோணங்களிலே பெலமாயிருக்க, சுபக்கிரகம் பார்த்தால் மிருத்துப்பிணிகளில்லாமல் நீடித்த ஆயுளுண்டாம்.

1-4-5-7-9-10-லும் 8-லும் பாபிகளில்லாமலிருக்க, இலக்கினாதிபதியும் வியாழனும் 1-4-10-ல் இருக்கக் கீர்த்தியும் புண்ணியபலனுமுண்டாம்.

1-2-4-5-7-9-10-க்கு உடையவர்களின் தெசாபுத்திகளில் அதிக யோகபலனுண்டாம். இலக்கினாதிபதி பாபியாக, அத்தெசையில் 3-6-8-12-க்கு உடையவர்களின் புத்திகள் வரும்போது கஷ்டபலனுண்டாம்.

## இரண்டாம் பாவம்

இரண்டாதிபதி உச்சம்பெற, இலக்கினாதிபதி பெலமாயிருக்க, 2-ம் இடத்ததிபதியிருந்த வீட்டுக்குடையவன் 1-4-5-7-9-10-ல் இருக்க வெகுசனமித்துருத்துவமுங் கீர்த்தியுமுண்டாம்.

இரண்டாதிபதி பாராவதாங்கிஷமேறத் திரவியமுண்டாம்.

இலக்கினாதிபதி சிங்காசனாங்கிஷமேற, வியாழன் பாராவதாங்கிஷமேறத் திரவிய விருத்தியுண்டாம்,

இலக்கினாதிபதி, இரண்டாதிபதி, வியாழன் மூவரும்உச்சமாகிச் சுபபெலனோடிருக்க மிகுந்த ஐசுவரியமுண்டாம்.

வியாழன் சிங்காசனாங்கிஷமும், சுக்கிரனும் ஐந்துக்குடையவனுங் கோபுராங்கிஷமும், சந்திரனும் இரண்டாமிடத்துக்குரியவனும் ஐரவதாங்கிஷமுமேற மிகுந்த செல்வமுண்டாம்.

2-4-10-க்கு அதிபர்கள் 4-ல் சுபபெலனோடிருக்கச் சுகசீவனமுண்டாம்.



இரண்டாதிபதி குரு சுக்கிரராற் பார்க்கப்பட்டுக் குரூர சஷ்டியாங்கிஷமேற, பதினொன்றாதிபதியும் இலக்கினாதிபதியும் 6-8-ல் இருக்கப் பொருள் முன் வந்து, பின் சேதப்படும்.

இலக்கினாதிபதி இரண்டிலிருக்க, பதினொன்றாதிபதி ஆறாதிபதியோடு கூட, ஏழிற் சுக்கிரனிருக்க ஸ்திரீமூலமாகப் பொருள் அழியும்.

இரண்டாதிபதி சுபக்கிரகமாக, இரண்டிற் சுபரிருக்க அத்தெசையிற் சுபர்புத்தியிற் சுபபலன்களுண்டாம்.

இரண்டாதிபதி பாபியாக, இரண்டிற் பாபியிருக்க அத்தெசையிற் செவ்வாய், சனி, இராகு புத்திகள் வரும்போது கீர்த்தி செல்வம் குன்றும்; இராஜகோபம் வரும். இரண்டிற் சுபரிருந்தாற் சமபலன்.

## மூன்றும் பாவம்

மூன்றாதிபதி நின்ற இராசியதிபதி நீசமாக, மூன்றிற் பாபக்கிரகங்களிருக்க, பாபர் பார்க்க, மூன்றாதிபதி 6-8-12-ல் இருக்க, இத் தானங்களைச் சுபர் பார்க்காமலிருப்பின் சகோதர பலனில்லை.

மேற்சொல்லியபடி இல்லாமலிருப்பினும், மூன்றாதிபதியுஞ் செவ்வாயும் சுபாங்கிசமேற, இந்தத் தானங்களையுந் தானாதிபதிகளையும் சுபர் பார்க்கினும் சகோதரபலனுண்டாம்.

சுக்கிரனுஞ் சந்திரனும் பெலமாக இருக்க, சுபர் கூட, மூன்றிற் புதனிருக்க, சுபர் பார்க்க, நல்ல ஆபரணங்களும் பாத்திரங்களுமுண்டாம்.

சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் மூன்றிலிருக்க அநேக தரும நூல்களைக் கேட்டறிதலுண்டாம். மூன்றில் ஒரு கிரகம் உச்சம் பெறில் அத்தெசையிற் சமபலனுண்டு. மூன்றுக்குடையவன் பாபியாய்ப் பாபருடன் கூடியிருக்க, அத்தெசாபுத்தியிற் கஷ்டபலன்.

## நான்காம் பாவம்

நாலாமிடத்திலே சுக்கிரனிருக்க, நாலாதிபதி 1-2-4-5-7-9-10 அல்லது உச்சத்திருக்க, வியாழன் பெலமேறச் சுகமும் வாகனமும் உண்டாம்.

சுக்கிரன் வியாழனுடனே கூடினாலும், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், ஒன்பதாமிடத்ததிபதி நாலாமிடத்ததிபதியோடு கூடினாலும் வாகனமுஞ் சுகமுமுண்டாம்.

9-ம் இடத்ததிபதி நாலாமிடத்ததிபதியோடு கூடியிருக்க, வியாழன் நாலிற் பெலமாயிருக்க, இலக்கினாதிபதி இரண்டிலிருக்க வாகனம் சுகம் இவையுண்டாம்.

நாலாமிடத்ததிபதி பத்தாமிடத்ததிபதியுடனே கூட, செவ்வாய் உச்சம்பெற, நாலாமிடத்ததிபதி கோபுராங்கிசமேற நல்ல பூமிப் பலனுண்டாம்.

நான்காதிபதி பாபியாக, அத்தெசையிற் பாபர் புத்தியிற் பந்து பொருள் நாசமுங் கிலேசமுமுண்டாம்.

நாலாதிபதி சுபக்கிரகமாக, அத்தெசையிற் சுபர் புத்தியில் வாகனம் பூமி முதலிய பலனுண்டு.

## ஐந்தாம் பாவம்

நவக்கிரகங்களுள்ளும் குரு பெலமாக இருந்தால் பாக்கியமுந் தீர்க்காயுளுமுள்ள புத்திரருண்டாம். இலக்கினத்திலும் ஐந்தாமிடத்திலும் பாபக்கிரகம் இருந்து, அதற்கு மேற்பட்ட பெலமுள்ள சுபக்கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை இல்லாதிருப்பின் புத்திரஹானி உண்டாகும்.

புத்திரத்தானமாகிய 5-ம் இடத்தைக் குரு பார்க்க, புத்திரத் தானாதிபதி பரிபூரண பெலமடைய புத்திரயோகமுண்டாம்.

புத்திரத்தானாதிபதியும், வியாழனும் 1-4-5-7-9-10-ல் இருக்க, இரண்டாதிபதி பெலவானாகப் புத்திரயோகமுண்டு.

ஐந்தாமிடம் புதனுடைய வீடாக இருக்க, புத்திரத்தானாதிபதியாயினும் வியாழனாயினும் 6-8-12-ல் இருக்க, அல்லது பகை நீசமாகவிருக்க, 5-ம் இடத்தையும் புத்திரத்தானாதிபதியையுங் குருவையும் பாபர் பார்க்க, இராகு கேது 5-ல் இருக்கப் புத்திரதோஷமுண்டாம்.

## ஆறும் பாவம்

ஆறுமிடத்துக்கதிபதியும் இலக்கினாதிபதியும் பெலவீனமாக இருக்க, ஆறுதிபதி இருந்த அங்கிஷாதிபதி சூரியன் சனியாக, நோயுங் கடனுமுண்டாம்.



6-ம் இடத்ததிபதி 1-4-7-10-ல் இருக்க, ஆறுதிபதியைப் பாபக்கிரகம் பார்க்க, ஆறுமிடத்திற் பாபி இருக்கச் சத்துருவிருத்தியுண்டாம்.

6-ம் இடத்ததிபதி நீசாஸ்தானமாகியிருக்க, அல்லது நீசாஸ்தமனக் கிரகங்களின் வீடுகளிலிருக்க, இலக்கினாதிபதி பெலவானாயிருக்கச் சத்துரு நாசம்.

## ஏழாம் பாவம்

இலக்கினத்துக்கு ஏழில் சுக்கிரன் இருந்தால் ரூபகளத்திரம்; சனி இருந்தால் ரோககளத்திரம; புதன் இருந்தால் களத்திரவீனம; சூரியன் செவ்வாய் இருந்தால் காந்தருவ களத்திரமாம்.

சுக்கிரன் இருந்த இராசிக்கு ஏழாம் இராசிக்கதிபதி எந்த இராசியில் இருந்ததோ அந்த இராசியில் ஜாதகனுடைய ஸ்திரீ ஜனனமாவாள். அந்த ஸ்திரீக்கு இவன் புருஷனாகில் பிரபல இராஜயோகம் உள்ளவனாவன். அந்த ஸ்திரீக்குப் பெண்பிரஜை குறையும்.

7-ம் இடத்ததிபதியுஞ் சுக்கிரனுங் கூடி 1-4-5-7-9-10-ல் இருக்க, அல்லது ஆட்சி உச்ச வீடுகளிலிருக்க யோககளத்திரமுண்டாம்.

ஏழாமிடத்ததிபதி சுபக்கிரங்கடனே கூடிச் சுபக்கிரகமத்தியிலிருக்க நல்ல களத்திரம்.

சுக்கிரனும் ஏழாமிடத்ததிபதியும் சுபாங்கிஷத்திலிருக்க, பத்தாதிபதி அதிக பெலவானாயிருக்க நல்ல களத்திரம்.

ஏழாமிடத்ததிபதி ஆட்சி உச்ச வீடுகளிலிருக்க, அல்லது கோபுராங்கிஷம் சுபஷஷ்டியாங்கிஷமேற அனுகூலமுள்ள களத்திரம்.

ஏழாதிபதியை வியாழன் பார்க்க, வியாழனுஞ் சுக்கிரனும் அதிக பெலமாயிருக்கப் பதிவிரதையான களத்திரம்.

ஏழாதிபதி சனியுடனே கூடி வியாழனாலே பார்க்கப்பட, வியாழனும் ஒன்பதாதிபதியுங் கூடிக் கேந்திரத்திலிருக்கத் தருமக்குணமுள்ள களத்திரம்.

## எட்டாம் பாவம்

அட்டமாதிபதி ஆட்சி உச்சம் பெற, சனி சுபக்கிரகத்துடனே கூடிப் பெலமாயிருப்பினும்,

1-4-7-10-க்கு அதிபதி இலக்கினத்திலிருக்க, இலக்கினாதிபதி சுபக்கிரகத்துடனே கூடிப் 12-ல் இருக்க, ஆறாதிபதியையும் இலக்கினாதிபதியையும் சுபக்கிரகம் பார்ப்பினும்,

பத்தாமதிபதியும் இலக்கினாதிபதியும் இலக்கினத்திலிருக்கச் சுபக்கிரகம் பார்த்தாலும்,

1-4-7-10-ம் இடங்களில் சுபக்கிரகங்களிருக்க, இலக்கினாதிபதி சுபர்வீட்டிலே சுபக்கிரகமத்தியில் இருந்து வியாழனாலே பார்க்கப்பட்டாலும்,

இலக்கினாதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமாதிபதியைப் பார்க்க, வியாழனுஞ் சுக்கிரனும் இலக்கினாதிபதியைப் பார்க்கினும்,

8-ம் இடத்திலே ஒரு கிரகம் உச்சமாக, அட்டமாதிபதியை வியாழன் பார்க்கினும்,

சுபக்கிரகங்களெல்லாம் 1-4-5-7-9-10-ல் இருக்க, பாபகிரகங்கள் 3-6-11-ம் இடங்களிலிருப்பினும்,

அட்டமாதிபதி 1-4-5-7-9-10-ல் இருக்க, வியாழன் பார்க்க, ஒரு பாபக்கிரகம் பெலவீனமாக அட்டமத்திலிருப்பினும்,

இலக்கினாதிபதியும் அட்டமாதிபதியுஞ் சரராசி முற்கூற்றிலிருப்பினும் ஆயுள்வலிமையுண்டாம்.

### ஒன்பதாம் பாவம்

பிதாவின் ஜன்மலக்கினாதிபதி உதயத்திலிருக்க அதுவே இலக்கினமாகப் பிறப்பினும், பிதாவின் ஜன்மராசிக்கு இரண்டாம் இடத்ததிபதி சந்திரனுடனே கூடியிருப்பினும் அல்லது பதினோராம் இடத்திலாயினும் இருப்பினும் பிதாவின் அந்தியகாலத்திலே சமீபத்திலிருந்து பிதிர்கர்மஞ் செய்வான்; பிதாவின் பாக்கியங்களையும் அனுபவிப்பான்.

பிதாவின் இலக்கினத்துக்கு ஒன்பதாம் இராசியில் ஜனித்தால் பிதாவுக்குச் சமமான கீர்த்தியை அடைவான். பிதாவின் ஒன்பதாம் இடத்து அதிபதி இவன் பிறந்த இலக்கினத்திலிருந்தால் பிதாவினும் பார்க்கப் பலவிதத்தாலும் விசேஷித்தவனாவன். பிதுர்த்தானாதிபதி இலக்கினத்தைப் பார்த்தால் வம்மிசம் விருத்தியாகும்; பிதாவினும் பிரபலனாவான்.



ஒன்பதாதிபதி சுபக்கிரகமாய் மூலத்திரிகோணத்திலே நல்ல அங்கிஷமேற, 9-ல் வியாழன் சுபபெலனோடிருப்பினும்,

புதன், வியாழன், சுக்கிரன் இவர்களிலொருவர் ஒன்பதாதிபதியாகிச் சுபக்கிரகங்களின் மத்தியிலிருக்க, பத்தாமிடத்திலே சுபக்கிரகங்கள் பெலனோடிருக்க, பாபக்கிரகங்கள் குரூர சஷ்டியாங்கிஷமேறினும்,

ஒன்பதாமிடத்திலே ஒரு சுபக்கிரகம் குரு சுக்கிரரில் ஒருவரோடு கூடிக் கோபுராங்கிஷத்திலிருப்பினும்,

ஒன்பதாதிபதி சுபக்கிரகங்களோடு கூடித் திரிகோணங்களிலே இருந்து பாராவதாங்கிஷமேறினும்,

பதினோராமிடத்ததிபதி ஒன்பதிலிருக்க ஒன்பதாதிபதி இலக்கினத்திலிருக்க, பத்தாதிபதியைப் பாராவதாங்கிஷமேறின சுபக்கிரகங்கள் பார்ப்பினும்,

ஏழாதிபதி உச்சமாக, ஒன்பதாதிபதி தசவர்க்கத்திலே ஆறு சுபவர்க்கம் பெற, வியாழன் பார்ப்பினும் தேவபக்தியும் தருமச்செய்கையும் பாக்கியவிருத்தியுமுண்டாம்.

### பத்தாம் பாவம்

பத்தாதிபதி சுபக்கிரகமாய் 2-9-11-ம் இடங்களிலே ஆட்சி உச்சம் பெற்று இருப்பினும்,

பத்தாதிபதி சுபக்கிரகமாய் அதிக பெலத்தோடு பத்தாமிடத்திலே பாபக்கிரகங்களாலே பார்க்கப்படாமல் சுபபெலனோடிருப்பினும்,

பத்தாதிபதி வியாழன் அல்லது சுக்கிரனாகி உச்சம் பெற்று, சுபக்கிரகங்களுடனே கூடிச் சுபப்பார்வை பெறினும்,

வியாழனுஞ் சுக்கிரனும் அதிக பெலனோடிருக்க, அவர்களிருந்த வீட்டதிபர்கள் சுபக்கிரகங்களாகிச் சுபர்பார்வை பெறினும்,

பத்தாதிபதியும் நாலாதிபதியுஞ் சுபக்கிரகமாய்க் கூடியிருப்பினும்,

புதன் பத்தாதிபதியோடு கூடிப் பத்திலிருக்க, ஒன்பதாம் அதிபதியைப் பாபக்கிரகங்கள் பாராமலிருப்பினும் நல்ல தொழில் செய்தலும், நல்ல சீவனஞ் செய்தலும் உண்டாம்.

### பதினேன்றும் பாவம்

பதினொராமிடத்ததிபதி சுபக்கிரகங்களின் மத்தியிலே பாராவதாங்கிஷவர்க்கத்திலிருக்க, ஒன்பதாமிடத்ததிபதி பார்ப்பினும்,

பதினொராதிபதி நின்ற அங்கிஷாதிபதி சுபக்கிரகமாக, ஒன்பதாதிபதி பார்ப்பினும்,

இலக்கினதிபதி உச்சக்கிரகத்துடனே கூடிச் சுபபெலனேடிருப்பினும்,

2-ம் 11-ம் இடத்ததிபதிகள் நாலாமதிபதியுடனே கூட, பத்தாமிடம் அல்லது இரண்டாமிடஞ் சுக்கிரன் வீடாக இருக்க, அதை ஒன்பதாமதிபதி பார்ப்பினும் தனலாபமுண்டாம்.

### பன்னிரண்டாம் பாவம்

சனி இராகு 12-ல் இருக்க, பன்னிரண்டாதிபதி குரூராங்கிஷம் ஏறினும், பாபர் பார்ப்பினும்.

பன்னிரண்டாதிபதி பாபிகளுடனே கூடியிருக்கப் பாபிகள் பார்ப்பினும்,

பன்னிரண்டாதிபதி செவ்வாயுடனே கூடிக் குரூராங்கிஷமேறினும்,

ஆருதிபதியும் பன்னிரண்டாதிபதியும் 12-ம்இடத்திலிருப்பினும், குரூராங்கிஷமேறினும் பொருட்சேதமாகும்.

12-ம் இடத்திலே ஒரு கிரகம் உச்சமாக இருக்க, ஒன்பதாதிபதி பெலமாகவிருக்க, பன்னிரண்டாதிபதி சுபக்கிரகமாக 1-4-7-10-ல் இருப்பினும்,

பத்தாதிபதி பெலமாக இருக்க, பன்னிரண்டாமதிபதி சுபக்கிரகமாகவிருந்து பார்ப்பினும்,

சுபக்கிரகம் ஆட்சி உட்சமாகப் 12-ல் இருக்க, பன்னிரண்டாதிபதி சுபக்கிரகமாக 1-4-7-10-ல் இருப்பினும்,

பத்தாதிபதியும் பன்னிரண்டாதிபதியுங் கூட, சுபக்கிரகம் பார்ப்பினும் நல்ல மரணமும் மறுமையில் நல்ல பதவியுமுண்டாம்.

சூரியனுஞ் சந்திரனும் அதிக பெலத்தோடு இருக்க, பன்னிரண்டாமதிபதி 1-4-7-10-ல் இருந்தால் தெய்வீகமான சுபமரணமும், மறுமையில் நற்பதவியுமுண்டாம்.



இலக்கினதிபதி 1-4-7-10-ல் இருந்தாலும், சந்திரன் தசவர்க்கத்தில் ஆறு சுபவர்க்கம்பெற்ற கிரகங்களோடு கூட, 12-ல் ஒரு கிரகம் ஆட்சியுச்சமாகவிருப்பினும்,

12-ம் அதிபதி 1-4-5-7-9-10-ல் இருப்பினும், மித்துருக் கிரகம் பார்ப்பினும், 12-ல் ஒரு கிரகம் உச்சம் பெறினும்,

நாலாமதிபதியும் பத்தாமதிபதியுங் கூடியிருக்க, பன்னிரண்டாமதிபதி சுபக்கிரகமாகி, 1-4-5-7-9-10-ல் இருந்து பார்க்கினும்,

பூர்வபக்ஷச் சந்திரன் 1-4-7-10-ல் இருக்க, வியாழன் சுபபெலனேடு 4-ல் இருந்து பார்ப்பினும் கீர்த்தியும் இராஜயோகமும் உண்டாம்.

## முக்குணவேளையின் பலன்

இராஜதகுணம்:— உயிர்கள்மீது இரக்கம், நல்லறிவு, இனிமையான பேச்சு, கல்வித்தேர்ச்சி, இன்பசுகம், பரோபகாரம், எவர்களுக்குந் தீமை நினையாமை, தானதருமங்கள் செய்ய விருப்பம், நடுவுநிலைமையாகப் பேசுதல் இவைகள் உண்டாம்.

சாத்விககுணம்:— அங்கச்சிறப்பு, நுட்பமான புத்தி, ஞானம், தெய்வபக்தி, குருபக்தி, தீமையை விலக்கி நடத்தல், தனக்குள்ள சுகத்தை அனுபவித்துக்கொள்ளுதல் இவைகள் உண்டாம்.

தாமதகுணம்:— அதிக நித்திரை, பொய் பேசுதல், நிதானக்குறைவு, சோம்பற்குணம், பாவசிந்தை, ஆலோசியாமற் சில காரியங்களைச் செய்தல் இவைகள் உண்டாம்.

## ஏழு வாரங்களின் பலன்

ஞாயிற்றுக்கிழமை:— அழகு, பொருளாசை, வீரம், சம்பத்து, தெய்வபக்தி.

திங்கட்கிழமை— விரதநியமம், அபிமானம், தருமசிந்தை, அதிககீர்த்தி.

செவ்வாய்க்கிழமை:— வாக்கு நிதானம், வஞ்சகக்குணம், துஷ்டர்களோடு சகவாசஞ் செய்தல்.

புதன்கிழமை:— உண்மை பேசுதல், பெரியோர்களுக்கு மரியாதை செய்தல், தெய்வப் பிராமண பக்தி, புத்திநுட்பம், சற்கிருத்தியஞ்செய்தல், ஈசுரத்தியானம்.

**வியாழக்கிழமை** :— பொய் பேசாமை, பல தருமங்களைச் செய்தல், யாகாதி கிரியைகள் செய்வித்தல், நல் விவேகம், நல்லொழுக்கம், கீர்த்தி, இராஜப்பிரபு சிநேகம்.

**வெள்ளிக்கிழமை** :— செல்வத்தைப் பேணுதல், தானியங்கள் உடைமை, அதிகாரஞ் செலுத்துதல், மேலான காரியங்களைச் செய்தல், அதிக ஆலோசனை, ஸ்திரீகலகம்.

**சனிக்கிழமை** :— பந்து சனங்களாற் சுகமில்லாமை, தைரியக் குறைவான தேகம், பரஸ்திரீகளிடத்தன்பு.

## இருபத்தேழு நட்சத்திரங்களின் பலன்

### அச்சுவினி

தான் செய்யுங் கருமங்களை வழுவாதுசெய்தல், ஸ்திரீமோகம், கொடையுபகாரம், வீரத்தன்மை, பொய் பேசாமை, அலங்காரப் பிரியம், கோபக்குணம், சாமர்த்தியம், சாந்தம். நல்லறிவு, அதிகபுகழ், தேசாபிமானம், உபாயக்குணம்.

**முதற்கால்:**— கோட்சொல்லல், பாவத்துக்கு அஞ்சாமை, அந்நியர்மேல் அன்பு.

**இரண்டாங்கால்:**— சாஸ்திர உணர்ச்சி, பிறருடைய குணங்களை அறிதல், மேலறிவு.

**மூன்றுங்கால்:**— கணிதசாஸ்திர உணர்ச்சி, அடைந்தவர்களுக்கு நற்புத்தி கூறுதல்.

**நாலாங்கால்:**— நுட்பமான புத்தி, சோதிட அறிவு, இச்சை. உண்மைபேசுதல்.

### பரணி

பிதாமாதாவிடத்தன்பு, ஞானஅறிவு, அற்பநித்திரை, அற்ப கோபம், தருமக்குணம், ஐஸ்வரிய விருத்தி, புகழ் பெறுதல், பூமியிலாசை. திடமான பேச்சு, மறுப்பொருந்திய தேகம், வார்த்தை பேசிக்கொண்டிருப்பதில் விருப்பு, பிறர்செய்த நன்றியைச் சிந்தியாமை, சில காரியங்கள் பிரயாசப்படாமலிருக்க ஊழ்வலியாற் சம்பவித்தல்.



**முதற்கால்:**— பராக்கிரமமான நடை, நீதிபேசுதல், சத்துருக்களுக்கு அஞ்சாமை.

**இரண்டாங்கால்:**— சோம்பற்குணம், அதிகபுத்தி, சாஸ்திரத்தைப் பிறருக்குச் சொல்லுதல், தருமக்குணம்.

**மூன்றுங்கால்:**— கோபக்குணம், சீக்கிரசந்தோஷம், சன்மார்க்கம்.

**நாலாங்கால்:**— சேவகத்துவம், துர்ச்சனர்கூட்டம், கர்வநடை.

### கார்த்திகை

நல்லவிவேகம், அரசர்நட்பு, தேகபெலம். வழக்குரைத்தல், இரசவர்க்கத்தில் விருப்பம், பிறருக்கு உபகாரஞ்செய்தல், அற்பநித்திரை, சாதுரியமாகப் பேசுதல், பிரயாசத்தோடு பொருள் சம்பாதித்தல், பிறர்பொருளாசை, கீர்த்தி, பரஸ்திரீகமனம்.

**முதற்கால்:**— ஆசாரம், வித்துவத்தன்மை. பிரபுத்துவம், பொருள்லாபம், விவேகம், ரோகதேகம், மனோதைரியம்.

**இரண்டாங்கால்:**— ஆசாரக்குறைவு, மிகுகோபம், அன்னியசன நட்பு.

**மூன்றுங்கால்:**— துஷ்டஸ்திரீ சங்கமம், அதிகவிவேகம், சோம்பற்குணம்.

**நாலாங்கால்:**— மனோதுக்கம். ரோகம், பொறுமைக் குறைவு, மிடி, மனஸ்தாபம்.

### ரோகிணி

பிறர்சொல்லும் புத்திக்கு அமைந்து நடத்தல், அதிக நீர்த்தாகம், கல்வி, வாக்குவல்லபம், அரசர்நட்பு, அன்னதானம் முதலிய தானதருமங்களில் விருப்பம், செட்டுப் பலிதம், பால் நெய் இவற்றை விரும்பி உண்ணுதல், விசாலித்த கண்கள், ஓரஞ்சொல்லாமை, கடுநடை, சாஸ்திர ஆராய்வு, திடசித்தம், அந்நிய ஸ்திரீகளிடத்து விருப்பம்.

**முதற்கால்:**— அங்கலக்ஷணம், அபிமானம், ஸ்திரீகளிடத்தாசை. பொறுமையில்லாமை, வர்மக்குணம் பிறருக்குத் துன்பஞ் செய்தல்.

இரண்டாங்கால் :— சாந்தகுணம், நோய்க்கிடமான சரீரம், ஆசாரம், உண்மை பேசுதல், ஏகதாரம், வாய்ச் சாலம்.

மூன்றாங்கால் :— குருவினால் அனுக்கிரகம் பெறுதல், கணிதசாஸ்திரவுணர்ச்சி, சங்கீத மந்திர அப்பியாசம், சுகம். [பொருட்செலவு.

நாலாங்கால் :— ஸ்திரீலோலம், பிறர்பொருளாசை,

மிருகசீரிடம்

ஞான அறிவு, கல்வியில் ஆசை, விசாலித்த கூர்மையான கண், மயிர் அழகு, தைரியமான தேகம், மன வர்மம், மன அடக்கம், ஆடல் பாடல்களில் விருப்பு, தாம்பூலப் பிரீதி, நினைத்தவைகளை முடித்தல், தேசசஞ்சாரம், அச்சம்.

முதற்கால் :— பொருள் அனுபவம், சத்துருவெற்றி, தூலதேகம், உண்மைபேசுதல், ஆசாரக்குறைவு.

இரண்டாங்கால் :— சாதுவான குணம், இஷ்டசித்தி, ஸ்திரீமோகம், உண்மைபேசுதல்.

மூன்றாங்கால் :— உதார குணம், சீக்கிர சந்தோஷம், உத்தம குணம், இனியவாக்கு, நல்லவிவேகம், கொடையுபகாரம். [சகத்தன்மை.

நாலாங்கால் :— வீரத்தன்மை, கோபக்குணம், வஞ்

திருவாதிரை

கீர்த்தி, பொய்பேசுதல், மனோதைரியம், கோபக்குணம், இடம்பம், சரீரபெலம், சினேகபட்சம், பிடிவாதம், பிரபுத்தன்மை.

முதற்கால் :— நல்ல வசனம், நற் குணம், பெருமையான மனம், யௌவனஸ்திரீ விருப்பம், பெரியோர்களுக்கு இசைந்து நடத்தல்.

இரண்டாங்கால் :— நிதானமான ஒரே வார்த்தை, வாய்ச்சாலம், வன்கண்மை, ஞான விரோதம், உத்தம ஸ்திரீ சேர்க்கை.

மூன்றாங்கால் :— முற்கோபம், அன்பின்மை, கோட் சொல்லல், ஸ்திரீகளுக்குப் பயம், நற்குணமில்லாமை, வாதநோய்.

நாலாங்கால் :— மனத்துணிவு, விரைவாகக் காரியம் பார்த்தல், பந்துக்கள் பகை, ஈனத்தொழில், துர்விவேகம், ஆசாரக்குறைவு.



புநர்பூசம்

சுகதேகம், புயபெலம், சொற்சாதுரியம், வருந்தி நடத்தல், கடின வார்த்தை, மனக்கிலேசம், நற்குணம், நற்புத்தி, பலரிடத்தன்பு, மனவிசாரம், கொடையுபகாரம்.

முதற்கால் :— தூலதேகம், அனுபோகம், ஸ்திரீ மோகம், மனச்செவிடு, இடம்பம்.

இரண்டாங்கால் :— பித்தம், சோம்பல், ஆசாரக் குறைவு, உஷ்ணதேகம்.

மூன்றாங்கால் :— காவிய சாஸ்திர உணர்ச்சி, தந்த ரோகம், குஷ்டம், தீர்க்காயுள்.

நாலாங்கால் :— அங்கலக்ஷணம், குயுக்தி, பெரியோர் கூட்டம், காரிய நிதானக் குறிப்பு.

பூசம்

வாக்குவல்லபம், வழக்குரைத்தல், கபடம், குத்திர வசனம், பிதாமாதாவை இரக்ஷித்தல், ஒழுக்கம், சிறப்பு, செல்வம், முகலக்ஷணம், பசியைப் பொறுக்கமுடியாமை, சந்தனம் முதலிய வாசனைகளிற் பிரியம், நற்குணம், பாக்கியவிருத்தி, ஆபரணச் சிறப்பு, பரோபகாரம், தானியம், வாகனம், தேவபக்தி, சகலசனமித்துரு, தருமம்.

முதற்கால் :— தருமஞ்செய்தல், கோபக்குணம், புத்திப்பெலம், தீர்க்காயுள்.

இரண்டாங்கால் :— பிரபுத்துவம், அடைந்தவர்களை ஆதரித்தல், நிதானம், அந்நியர் நட்பு.

மூன்றாங்கால் :— பந்துக்களில் நட்பு, விவேகம், ஞான அறிவு, சந்தோஷ சித்தம், நற்காரியங்களைச் செய்தல்.

நாலாங்கால் :— கோபம், கலகம், வஞ்சகம், ஸ்திரீக மனம்.

## ஆயிலியம்

இனிமையோடு சாதுரியமாகப் பேசுதல், சத்துருக்களை நேசித்தல், மனோதுக்கம், சிற்றுணர்வுகளிற் பிரீதி, பிதாமாதாவுக்கு இனிமையாக நடத்தல், கபடமில்லாமை, எவர்களுக்குந் தாழ்மைசொல்லல், சுகத்தில் விருப்பம், வலிமையோர்க்கு அஞ்சாமை, விசாலமான கண், தன் எண்ணத்தைப் பிறருக்கு மறைததல், பிறரை வஞ்சித்துப் பொருள் தேடுதல், பாபத்தொழிலைச் செய்தல்.

முதற்கால்:— அதிக செல்வம், பெண் பூமி இவற்றில் மிகுந்த ஆசை, நுண்ணிய அறிவு, சந்தோஷசித்தம், பல தொழிலையுஞ் செய்தல்.

இரண்டாங்கால்:— அந்நியர் ஏவற்றொழில் செய்தல், தீயநடை, குருரபுத்தி.

மூன்றுங்கால்:— கோபக்குணம், ஞான அறிவு, சோம்பல், நிதானம், உபயோகமில்லாமற் பேசுதல், ஸ்திரீயை உபத்திரவப்படுத்தல்.

நாலாங்கால்,— பொருளை அபகரித்தல், தீமைசெய்தல், தீமை செய்பவர்களோ டிணங்குதல், நீசஸ்திரீ சங்கமம்.

## மகம்

அங்கலக்ஷணம், சேர்ந்தவர்களுக்கியைந்த நடை, பலவிடங்களிலுஞ் சஞ்சரித்தல், பல நூலையுமறியும் விவேகம், நீராட விருப்பம், சுகந்த பரிமளப் பிரியம், பொருளுடைமை, வலப்புறத்தில் மறு, நியாயம்பேசுதல், அற்பநித்திரை, தருமச்செய்கை, அளவான பேச்சு, பிறருடைய பொருளைத் தனதாக்குதல், தெய்வ பிதிர்பக்தி, உற்சாகம், ஸ்திரீபோகத்திற் பிரியம்.

முதற்கால்:— அச்சங்கொள்ளும்விதமான கோபநோக்கம், அதிக யூகம், பேராசை, சிவந்த மயிர்.

இரண்டாங்கால்:—அழகான தேகம், பெருஞ்செல்வம், மனச்சந்தோஷம், சிறந்த கண், தாதுநோய்.

மூன்றுங்கால்:— சரீரபெலம், நோய், சாதுவான குணம், பொல்லாங்கு செய்தல், கடினசித்தம், பேராசை, புனிதம்.

நாலாங்கால்:— பெண்புத்தி கேட்டல், மனச்சஞ்சலம், இனிமையான பேச்சு, சிரங்கு முதலிய நோய்.



## பூரம்

சந்தோஷமான நல்லவசனம், நல்ல அறிவு, சிவந்த கண், பொருளை வருந்தித் தேடுதல், தனக்குப்பின்னே நடக்கப்போவதை முன்அறிந்துகொள்ளுதல், பலவிதமான வியாபாரங்களிற் பொருளை ஈட்டுதல், கடுஞ்சொல், ஒரே காலத்திலே பற்பல நினைவைச்செய்கின்ற நெஞ்சம், பொதுப்பெண்களை வெல்லுதல் அழகிய பற்கள், துர்ப்புத்தி, உதாரகுணம், புகழான, கொடை, இராசசேவை.

முதற்கால்:— வீரக்குணம், இன்சொல், கோபம், ஆசாரம், பொருளைச் செலவுசெய்துவிடுதல், வியாபாரஞ் செய்தல், சிறிய வீட்டில் வாழுதல்.

இரண்டாங்கால்:— கமத்தொழில் செய்தல், மனக்கிலேசம், கீர்த்திக்குறைவு, பிறரால் உதவிபெறுதல், சிறுகுடிளை, தாகம்.

மூன்றுங்கால்;— நான் என்ற தத்துவம், மேம்பாடு, கீர்த்தி.

நாலாங்கால்:— துக்கம், பிறர்நிந்தை, தேவப்பிராமண தூஷணை.

## உத்தரம்

சுத்தமான வீரக்குணம், இன்சொல், கல்வித்திறமை, தைரியமான கை, அழகான அங்கம், ஆயுட்பெலம், பெண்களிடத்தன்பு, முற்கோபம், முற்பக்கத்திலே மறு, அற்ப பசி, நீராடவிருப்பு, தெய்வபக்தி, நன்னடை, தருமக்குணம், ஞான அறிவு, கீர்த்தியை விரும்புதல், செய்நன்றி மறவாமை, பழையபொருள் சேருதல், அனுபோகம், பெண்போகத்தில் விருப்பு, பழமையைக் கைக்கொள்ளுதல்.

முதற்கால்:— அன்பான பேச்சு, கீர்த்திப்பிரியம், கண்ணியமான நடை, தைரியம், இன்பம், பந்துக்களில் அன்பு.

இரண்டாங்கால்:— காமுகத்தன்மை, தரித்திரம், போசனப்பிரியம், சஞ்சலசித்தம், யாசித்தல்.

மூன்றுங்கால்:— இடம்பம், ஆசாரம், பசுக்காத்தல், வாணிபஞ் செய்தல்.

நாலாங்கால்; — சிநேகம் மறவாமை, பிறரைத்தூஷித்தல், துட்டத்தனம், கருமஞ்செய்தல், பாலியத்திலே மாதுரு நிரியாணம்.

## அத்தம்

கல்வித்திறமை, தாமதபுத்தி, அற்பபசி, எவர்களும், மதிக்க வாழுதல், குறிப்பறிதல், வீரத்தன்மை, கடின மொழி, நற்புத்தி, அங்கலக்ஷணம், தருமக்குணம், குரு பக்தி, நீராடவிருப்பு, பிறர் அறியாமற் சோரஞ்செய்தல், அதிகநீர்த்தாகம்.

முதற்கால்:— பொய் பேசல், கர்வம், திருத்தமான வேலை செய்தல், அகங்காரம், பசுக்களிடத்து அன்பு.

இரண்டாங்கால்:— நற்குணம், செய்தொழிலை நன்ருய் அறிதல், ஆடல் பாடல்களிற் பிரியம், மாதுருபீடை, பாக்கியம்.

மூன்றுங்கால்:— மனப்பகை, பிதிர்பீடை, தந்திரமான நடை, ரோகதேகம், வியாபாரம்.

நாலாங்கால்:— நீதியானநடை, கொடையுபகாரம், இராசயோகம், சந்தோஷசித்தம், மாதாவிடத்து அன்பு, நற்குணம், நற்கீர்த்தி.

## சித்திரை

தேகபெலம், கடுநடை, பரிவும் அன்புமான பேச்சு, நற்குணம், நல்லொழுக்கத்தில் விருப்பு, தாமதபுத்தி, பெரியோரிடத்து அன்பு, நிலையான திட வசனம், முகத்திலே மறு, அற்ப நித்திரை, உலோபக்குணம், மனோதுக்கம், கோபம், தைரியம், விசித்திரவாக்கு, சமயோசிதமான புத்தி.

முதற்கால்:— தீங்குசெய்ய முயலுதல், நேத்திரரோகம், தேசசஞ்சாரம்.

இரண்டாங்கால்:— வாக்குறுதி, தேகத்தைப் பாதுகாத்தல், வறுமையை அனுபவித்தல், மனோசஞ்சலம்.

மூன்றுங்கால்:— பரந்தகீர்த்தி, பராக்கிரமம், வித்துவத்தன்மை, ஞான அறிவு, நன்னடை, ஒழுக்கம், அறிவு.

நாலாங்கால்:— விவேகம், வெற்றி, சத்துருக்களை அடக்குதல்.



## சுவாதி

கல்வித் திறமை, தெய்வ பக்தி, சகலசன வசீகரம், போசனப்பிரியம், தன் எண்ணப்படியேநடத்தல், இராசசேவை, தாய்தந்தையரில் பட்சம், விசுவாசம், கடின தேகம், யதார்த்தவசனம், திரவியமுடைமை, ஆயுதம் வைத்திருத்தல், உண்மைபேசுதல், வியாபாரம், எவர்களிடத்தும் அன்பு, பிரியவார்த்தை, தருமபரிபாலனம், தியாகஞ்செய்தல், ரூபலக்ஷணம், அசத்துக்களைநிந்தித்தல்.

முதற்கால்:— வித்தியாப்பிரசங்கம், சாதுக்குணம், வீரம், பிரபுசேவை, ஞான அறிவு.

இரண்டாங்கால்:— திடசரீரம், வாய்ச்சாலம், நுண்ணறிவு, காமக்குணம், தீவிரபுத்தி, காரியசமர்த்து, உண்மைபேசுதல், தன் எண்ணத்தை வெளியிடாமை.

மூன்றுங்கால்:— குரூரபுத்தி, நல்லொழுக்கம் இல்லாமை, கலகஞ்செய்தல்.

நாலாங்கால்:— கலகப்பிரியம், சோரக்குணம், துர்வாதம், காமக்குணம், அங்கச் சிறப்பு.

## விசாகம்

நீதியாகப் பேசுதல், அடக்கமான பேச்சு, சுற்றத்தவர்களுக்கும் அரசர்களுக்கும் பிரியமான நடை, நல்ல வசனம், பொறுமை, நன்னடையுடையவர்களில் அன்பு, தலை மார்பு இடுப்பு இவற்றென்றிலே மறு, பாக்கியவிருத்தி, சாஸ்திரங்களை அறிதல், நற்குணமுடைமை, முற்கோபம், சேவைசெய்தல், விசாரமில்லாமை, தெய்வபக்தி, வஞ்சகம், கூர்மையான புத்தி, பின்வருவதை ஆலோசித்தல், கடுவசனம்.

முதற்கால்:— கல்வியுடைமை, சோதிட உணர்ச்சி, சுகானுபவம், வஞ்சகக்குணம், கீர்த்தி, வியாபாரம்.

இரண்டாங்கால்:— சத்திய வாக்கு, மந்திர சாதனை, நீதியுடைமை, ரோகதேகம், சரசமான பேச்சு, சந்தோஷ சித்தம், பிறர் குறிப்பறிதல், தற்புகழ்ச்சி, இன்பத்தில் ஆசை.

மூன்றுங்கால்:— வாய்ச்சாலம், வருங்காரியம் அறிதல், தேகபெலன்.

நாலாங்கால்:— அமைதியானபுத்தி, செல்வமுடைமை, தனக்கு இயைந்த விவாகம், ஞான அறிவு.

## அனுஷம்

நற்குணம், நல்விவேகம், எவர்களையும் புகழ்ந்து விநயமொழி பேசுதல், தாம்பூல விருப்பம், பலராலும் புகழப்படுதல், நீதியுடைமை, சுத்தம்: அரசராலே சன்மானிக்கப்படுதல், பெண்களிடத்தில் அன்பு, பிதாமாதாவை அன்போடு ஆதரித்தல், சிவந்த கண், அழகிய மயிர், உபயார்த்தமாகப் பேசுதல், திரவியமுடைமை, உலோபக்குணம், சுகானுபவம், தேசசஞ்சாரம், தயவு, விரைவான நடை.

முதற்கால்:— நீதியுடைமை, பிறர்குறிப்பறிதல், சத்திய வசனம், ஆசாரம், மந்திரசாதனை.

இரண்டாங்கால்:— வாய்ச்சாலம், நற்புத்தி, நுட்பமான நூதனவேலை செய்தல், சங்கீதம் முதலியவற்றில் பிரீதி, பெண்ணாசை,

மூன்றாங்கால்:— தேகலக்ஷணம், சமயோசிதமான புத்தி, நற்கல்வி, சாதுரியம், குருவிசுவாசம், உற்சாகம்.

நாலாங்கால்:— அபிமானம், அடைந்தவர்களுக்கு அன்பு, விஷவாக்கு, சகோதரதோஷம்.

## கேட்டை

சமயோசிதமான புத்தி, ஈகை, உபசாரம், கீர்த்தி, நல்லவிவேகம், கேள்வியால் பல காரியம் அறிதல், நீராட விருப்பம், மூத்தோரை இரக்ஷித்தல், இராசசினேகம், அகங்காரம், துஷ்டரோடு சகவாசம். பொய்பேசல், கோபக்குணம், சிற்றுணவுகளிலே விருப்பம், கடுநடை, சிவந்த கண், வெஞ்சொற் பொறுமை, பொய்யை மெய்யாக்குதல், கடுவசனம், உள்மூச்சு, தருமச்செய்கை, பொருள்தேடுதல், அபிமானம், அந்நியஸ்திரீகளில் பிரியம்.

முதற்கால்.— காரியங்களை விளங்கிச் செய்தல், பரிகாச வசனம், விளையாட்டுநடை, சந்தோஷம், தேக அழகு, கர்வம்.

இரண்டாங்கால்:— வாய்ச்சாலம். ஈகை, இன்சொல் சுகானுபவம், போக விருப்பு, சங்கீதப் பிரியம், தன் எண்ணப்படியே நடத்தல், ரோகதேகம்.

மூன்றாங்கால்:— சாதுவான குணம், பிறர் காரியங்களைத் தன் காரியம்போலச் செய்தல், பசுக்களில் விருப்பு, புத்தியீனமாகச் சில கருமஞ் செய்தல், நேத்திரரோகம்.

நாலாங்கால்:— முற்கோபம், கலகப்பிரியம், வஞ்சகம், குரூரபுத்தி, தன் குலத்தைப் புகழுதல்.



## மூலம்

கீர்த்தி, செய்காரியம் வழுவாமற் செய்தல், பிதா மாதாக்களில் அன்பு, சிற்றுண்டிகளில் விருப்பு, கல்வியறிவு, உலோபக்குணம், உறவினருக்கு இசையாமை, தவசீலம், முற்கோபம், நித்திரைப் பிரியம், ஆயுதத்தில் விருப்பு, தனக்கு முன் இருந்த இடம் முதலியவை பின் மாறிவிடுதல், பிறர் செய்த நன்றியை நினையாமை, அகங்காரசித்தம், பிறரை அடக்குதலில் பிடிவாதமான புத்தி, அபிமானம், சுகம், போகம்.

முதற்கால்:— பிதிர்பீடை, ரோகம், பாபச்செயல், ஒரேவித நடை.

இரண்டாங்கால்:— மாதுருபீடை, கல்வித்திறமை, வயிற்றில் நோய், உண்மை பேசுதல், அதிக புத்தி, மரியாதை பெறுதல்.

மூன்றாங்கால்:— பொருட் செலவு, துஷ்டர் பிசாசு சூனியம் முதலியவற்றாற் பயம், சோம்பல், கனிவர்க்கத்தில் விருப்பு.

நாலாங்கால்:— அதிகச் சிறப்புஞ்செல்வமுமுடைமை, பெலம், கோபமில்லாமை, சாதுக்குணம், சாமர்த்தியம், சத்துருவை அடக்குதல், கண்டத்துக்குமேல் ரோகமுண்டாதல்.

## பூராடம்

இராசசினேகம், வாசனைப் பிரியம், மனவிசாரம், அடைந்தவர்களை ஆதரித்தல், மாதாவில் அன்பு, பின் வருபவைகளை முந்திச் செய்தல், வீரத்தன்மை, கபடம், தேகலக்ஷணம், பொய்பேசாமை, பிறதேசசஞ்சாரப் பிரியம், பெண்களிற் பட்சம், பரோபகாரம், அபிமானம், மன அன்பான விவாகம், நிலையான புத்தி, விநயமொழி.

முதற்கால்:— விநயமான நடை, அற்ப புத்திரர், விவாதஞ் செய்தல், சூரக்குணம், மத்திய வயதிற் பீடை.

இரண்டாங்கால்:— பரோபகாரம், ரூபலக்ஷணம், சிநேகிதரில் அன்பின்மை, பரஸ்திரீ கமனம்.

மூன்றாங்கால்:— சுகமனுபவித்தல், பாக்கியமுடைமை, நற்குணம், மத்தியவயதில் மாதுருபீடை.

நாலாங்கால்:— ரோகதேகம், மனக்கபடம், பிதிர்பீடை.

### உத்தராடம்

விவேகம், நல்வசனம், சரீரபெலம், போசனப் பிரியம், சலத்திலே ஸ்நானாதிகள் செய்ய அஞ்சாமை சிநேகிதரில் அன்பு, பிறர்பொருளில் ஆசையில்லாமை, மனவர்மம், நல்லவர்களுக்கு இனிமையாக நடத்தல். நிறைந்த சொல், உபகாரஞ் செய்தல், மனத்திருப்தியுடைமை, கீர்த்தியை விரும்புதல், கல்விப்பிரியம், சுகம், ஆலோசனை செய்யும் மனம்.

முதற்கால் :— நற்புத்தி, ஈகை, பல சாஸ்திரங்களை அறிதல், பிறரை உபசரித்தல்.

இரண்டாங்கால் :— கருமங்களை இரகசியமாகவும் கிரமமாகவும் செய்துமுடித்தல், திடசரீரம், உலோபக் குணம்.

மூன்றுங்கால் ;— கல்வித்திறமை, குரூரகுணம், விசார மனம், கோபக்குணம்.

நாலாங்கால் : பந்துக்களில் அன்பு, விசேஷ காரியஞ் செய்தல், வியாபாரம்.

### திருவோணம்

கல்வித்திறமை, மனச்சலனமில்லாமை, ஒரே விதமான நடை, கோபித்தவுடனே சாந்தமாதல், தான் ஒரு காரியத்திற் பிரவேசிக்கும்போது பல வகைகளையும் பார்த்து ஆலோசித்துச் செய்தல், உற்சாகம், வாசனை திரவிய விருப்பு, சரீரகாந்தி, கண்ணியமான நடை, பிறருடைய உபாயத்தை அறிதல், மனக்கபடம், தான் நினைத்து ஈதலே அன்றி ஏற்பவர்களுடைய எண்ணத்துக்கு இசையாமை, மங்கலஸ்திரீ யுடைமை, கீர்த்தி, பிடிவாதம் உலோபம்.

முதற்கால் :— விவேகம், போகம், புத்திரர் அற்பம், உற்சாகம், கலகம், காவியமறிதல்.

இரண்டாங்கால்:— பிரமஞானம், தயவில்லாமை, உலோபக்குணம், சிநேகர் குறைவு.

மூன்றுங்கால்:— ரோகம், உலோபம், காமம், செல்வம், உதாரம். தயவில்லாமை.

நாலாங்கால்; — பயிர்ச்செய்கை, தருமக்குணம், செல்வம், பொதுமகளிரில் ஆசை.



### அவிட்டம்

கிரமமான காரியங்களைச் செய்தல், தன் சொல் மேலாயிருக்க வேண்டுமென்ற எண்ணம், பிறருக்கு அஞ்சாமை, பரோபகாரம், கொடை, தன்னைக் குற்றமாகச் சொன்னாற் சகிக்கமுடியாமை, போசனப் பிரியம், பிதா மாதாக்களில் அன்பு, பெண்கள்மீதில் ஆசை, அதிக ஆசையோடு பொருள் சம்பாதித்தல், அழகான தேகம், அறிவுடைமை, அடக்கமுடைமை, பிறர்பொருளில் ஆசை இல்லாமை, தூலதேகம், சுகானுபவம், இனிமையான கீத வாக்கியங்களில் விருப்பம், சரசவார்த்தை.

முதற்கால் :— உண்மை பேசுதல், விவேகமுடைமை, பசி பொறுக்க முடியாமை, மனக்கிலேசம், நிஷ்டூரவசனம், இரக்கம் இல்லாமை.

இரண்டாங்கால் :— சாஸ்திரங்களை அறிதல், அதிக யூகம், தருமக்குணம்.

மூன்றுங்கால்:— திடசித்தம், நற்குணம், அபிமானம், எவர்களும் மதிக்கும்படியான நடை.

நாலாங்கால்: — அதிக செல்வம், குரூரக்குணம், கர்வ நடை, பேதஞ்செய்தல், தூலதேகம், மயிர் அழகு.

### சதயம்

அன்பின்றிக் கோபித்துச் சொல்வதைப் பொறுதிருத்தல், ரோகதேகம், பிறர்க்கினிமை, புத்தியுடைமை, கைகால் பெலமாயிருத்தல், இன்பமாகப் பேசுதல், பொய்சொல்வதைக் கேட்க விருப்பமில்லாமை, இராசசினேகம், வீரத்தனம், கல்வித்திறமை, பெண்களில் அன்பு நீராட விருப்பு, சத்துருஜயம், வழக்குரைத்தல், காலத்தை அறிந்து அதற்கிசைய நடத்தல், முயற்சியை விடாமை, பொறுமை, அற்ப போசனம், நற்கருமங்களைச் செய்தல், ஆழ்ந்த வசனம், உண்மை பேசுதல், வியாகுலமுள்ள ஸ்திரீ, பெரியோர் சினேகம்.

முதற்கால் :— பொருளுடைமை, நற்குணம், அழகு, உதாரகுணம், ஆசாரம், பிராமணரிடத்தும் பசுக்களிடத்தும் அன்பு.

இரண்டாங்கால் :— சீக்கிரகோபம், மனக்கிலேசம்.

மூன்றுங்கால் :— நற்காரியங்களைப் பிரயாசப்பட்டு முடித்தல், பசியுடைமை, பித்ததேகம், வயிற்றில்நோய், சேவகாவிருத்தி.

நாலாங்கால் :— நற்குணம், சுகம் அனுபவித்தல், பிறருடைய கடூரவசனத்தைப் பொறுத்தல், அபிமானம், நினைத்தவற்றைச் செய்துமுடித்தல்.

## பூரட்டாதி

பிறர் பொருளில் ஆசையில்லாமை, குற்றமான சொற்களைக் கேளாமை, கல்வியுடைமை, சத்துருக்களுக்கு இனிமை கூறித் தூரத்தே செலுத்துதல், ஸ்திரீகளாற் பலன், மனவியாகூலம்.

முதற்கால் :— பிராமண பக்தி, மனைவிமேல் அன்பு, தேகபெலம், சுகம் அனுபவித்தல்.

இரண்டாங்கால் :— சிரேஷ்டமான குணம், மந்திர சாஸ்திரம் அறிதல், எவர்களுக்கும் இதங்கூறிக் காரியம் முடித்தல்.

மூன்றுங்கால் :— பொறுமை, நன்னடை, பிறர்மனைப் போசனப் பிரியம், பித்தரோகம், கல்வித்திறமை.

நாலாங்கால் :— பிறர் புகழும் நற்குணம், உண்மை, பேசுதல், அழகு, சிநேகிதரில் அன்பு, நல்ல தொழில் செய்தல், பாக்கியமுடைமை,

## உத்தரட்டாதி

விவேகம், கல்வி, வம்மிச விருத்தி, திரவிய விருத்தி, ஸ்திரீகளில் அன்பு, சொற்சாதுரியம், நீராட விருப்பம், வஞ்சகவார்த்தை, கோட்சொல்லல், தாம்பூலப் பிரியம், பிறர்கருமம் பார்த்தல், நல்லவர்களுக்கு இனிய நடை, வழக்கில் வல்லமை, அளவாகப் பேசுதல், புத்திரவிருத்தி, மனத்திருப்தி.

முதற்கால் :— பிரதான இடங்களிற் சிரேஷ்டத்தன்மை பெறுதல், பரோபகாரம், சஞ்சலம், கோபம்.

இரண்டாங்கால் :— சாதுக்குணம், ரோகதேகம், நற்குணம், மிடி, நிலைபரமான நன்னடை.



மூன்றுங்கால் :— விவேகம், தீமைக்குணம் இல்லாமை, முற்கோபம், தேவபக்தி, சந்தோஷம், பிறர்சொற் கேட்டல், கோட்சொல்லல்.

நாலாங்கால் :— உதார குணம், பிறர் சொற் கேட்டல், கிலேசம், பயிர்ச்செய்தல்.

## ரேவதி

ஈசுரபக்தி, திடமான புத்தி, நற்குணம், அலங்காரப் பிரியம், சொற்சாதுரியம், பிராமணவிசுவாசம், கொடுக்கத்தக்கவைகளை இல்லை என்று சொல்லாமை, பழிக்கு இடங்கொடாமை, சிலகாலம் அதிக செல்வப்பேறு, பெண்களிடத்து அதிக பிரீதி, பிறர்சொற்கேட்டு நடத்தல்.

முதற்கால் :— நற்குணம், கல்வித்திறமை, விரைவாகக் காரியம் பார்த்தல், சந்தோஷசித்தம், கலகப்பிரியம், மனக்கிலேசம்.

இரண்டாங்கால் :— நல்ல விவேகம், சுகசரீரம், கோபக்குணம், அகங்காரம், சஞ்சலசித்தம், மிருதுவான சரீரம்.

மூன்றுங்கால் :— புத்திக்குறைவு, கஷ்டம் அனுபவித்தல், தன்னுடைய அதிகாரஞ் செலுத்த இயலாமை.

நாலாங்கால் :— சத்தியவாக்கு, அலங்காரம், சரீரசுகம், வீரத்தன்மை, சத்துருஜயம்.

## பதினைந்து திதிகளின் பலன்

பிரதமை :— பலசன மித்துருத்துவம், அதிக செல்வம், கீர்த்தி, காரியங்களை நன்றாக ஆலோசித்துச் செய்தல், தேககாந்தி, வித்தியா விவேகம், நடுவுநிலைமை.

துதியை :— தயை, நற்குணம், பொருள், ஆசாரம், ஆடல்பாடல்களில் விருப்பு

திருதியை :— பொருள். கல்வி, சரீரபெலம், அதிக ஆசை, இராசசினேகம், கீர்த்தி, நாகரீகம், எண்ணிய கருமங்களைச் செய்து முடித்தல்.

சதுர்த்தி :— கடன் கொடுத்தலும் வாங்குதலுஞ் செய்தல், பிறரை வஞ்சித்தல், வாக்குவாதஞ் செய்தல், பல இடங்களிலும் சஞ்சரித்தல்.

பஞ்சமி :— சிறந்த தேகம், களத்திர புத்திர மித்திர அன்பு, ஆன்ம இரக்கம், இராசமரியாதை.

ஷஷ்டி :— உண்மை பேசுதல், அதிக செல்வம், புத்திர விருத்தி, மிகுந்த கீர்த்தி, சரசவார்த்தை, முற்கோபம், ரோகதேகம்.

ஸப்தமி :— ஞான அறிவு, நற்குணம், பருத்த கண். சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கவும் தேவார்ச்சனை செய்யவும் விருப்பம், ஸ்திரீகளைத் தாபரித்தல்.

அஷ்டமி :— பலவிதமான சம்பத்துக்கள், புத்திர சுகம், ஆன்ம இரக்கம், இராசசினேகம், விசேஷக்கல்வி, ஸ்திரீயிடத்து அன்பு, மனச்சஞ்சலம்.

நவமி : தன் குடும்பத்தில் கவனமில்லாமை, பரஸ்திரீ மோகம், கடூரவாக்கு, நற்குணமுள்ளவர்களை விரோதித்தல், ஆசாரக்குறைவு.

தசமி :— தரும விருப்பு, நல்லறிவு, மகிமை, எவர்களோடும் இனிமையான வார்த்தை பேசுதல், கிரமமாகப் பல சாஸ்திரங்களை அப்பியாசித்தல்.

ஏகாதசி :— தேவவழிபாடு, பிராமணரிடத்தும் குருவிடத்தும் அன்பு, விரதம் அனுட்டித்தல், தானஞ்செய் சுத்தமாக இருத்தல், திரிகரணசுத்தி, புண்ணியஞ் செய்யுஞ் சித்தம், உத்தம கிருத்தியம்.

துவாதசி :— நீராட விருப்பு வியாபாரம், தனக்குச் சொந்தமான இடத்திலே வாசஞ்செய்தல், கீர்த்தி, அன்னதானஞ் செய்தல், இராசசம்பத்து.

திரயோதசி :— ரூபலக்ஷணம், அடக்கம், அருள் ஞான அறிவு, தவம், பொறை, மேன்மை, மௌனம், உண்மை பேசுதல், இனிமையான வாக்கு, வீரம்.

சதுர்த்தசி :— வீரத்தன்மை, சரசவார்த்தை, ஈனசீலே, சித்த விருத்தி, துக்கம், சினேகவிரோதம்.



பூரணை :— சிறப்பான தேகம், நியாயமாகப் பொருள் சம்பாதித்தல், பெண்சனக்கூட்டம், பிரபல கீர்த்தி, சீவகாருண்ணியம், நற்குணம், காரியங்களை இலகுவாக முடித்தல்.

அமாவாசை :— சாந்தமானகுணம், பிதுர், மாதுருபக்தி, கூடுதலுங் குறைந்ததுமான செல்வமுடைமை, மனக்கிலேசம், மரியாதை.

## யோகம் இருபத்தேழின் பலன்

விஷ்கம்பம் :— நிலைபரமான களத்திரம், புத்திரமித்திராதியோர் சுகம், தன் எண்ணப்படியே நடத்தல், பல கருமங்களை நடத்துவித்தல், தேகத்திலே மறு.

பிரீதி :— வாக்குச் சாதுரியம், அழகு, திரவியம், ஈகை, முகவசீகரம், நூதனப் பொருட்களில் விருப்பம், தருமத்திற் பிரீதி.

ஆயுஷ்மான் :— பொருள் சம்பாதித்தல், பலவிடங்களிலுஞ் சஞ்சரித்தல், வாகனமுடைமை, ஆயுள்விருத்தி.

சௌபாக்கியம் :— ஞான அறிவு, செல்வமுடைமை, உண்மை பேசுதல், ஆசாரசீலம், சரீரபெலம், விவேகம், இராசசன்மானம், அபிமானம்.

சோபனம் :— விரைவாகப் பல கருமங்களைச் செய்தல், அதிகாரம், நித்திய சோபனமாக வாழுதல்.

அதிகண்டம். — இந்த யோகத்தோடு அச்சுவினி, மகம், மூலம் இவற்றின் முதற்காலும், ஆயிலியம், கேட்டை, ரேவதி இவற்றின் நாலாங்காலும் கூடிவருமாயில் மாதுருபீடை, பந்துப்பீடை உண்டாம்.

சுகர்மம் :— சகலசன மித்துருத்துவம், சிறப்பு, பொருளாசை, விசேஷமான நற்குணம், போகத்தில் மிகுந்த விருப்பு, நற்கருமங்களைச் செய்தல்.

திருதி :— கீர்த்தி, மனத்திடம், செல்வவிருத்தி, சுகவாழ்வு, கல்விப்பேறு, நற்குணம்.

சூலம் :— தருமஞ்செய்தல், சாஸ்திரங்களை அப்பியாசித்தல் கல்வியில் ஆசை, சேமமாக இருத்தல்.

கண்டம் :— மனக்கிலேசம், அவயவங்களிற் பீடையுண்டாதல், வீரத்தன்மை, போகவிருப்பு, திடமான சரீரம்.

விருத்தி :— ரூபலக்ஷணம் புத்திரவிருத்தி, நற்களத்திரம், செல்வவிருத்தி, சுகபோசனம், சந்தோஷசித்தம்.

துருவம் :— தீர்க்கவயசு, எல்லோர்மீதும் அன்பு, நிலைபரமான காரியங்களைச் செய்தல், மனச்சலனமில்லாமை.

வியாகாதம் :— நல்லறிவு, பலராலும் மரியாதைபெறுதல், பல கருமங்களைச் செய்தல்.

அரிஷணம் :— மிகுந்த பாக்கியம், இராசசினேகம், அசைவில்லாதமனம், சாஸ்திராப்பியாசம், பலவிசாரணை.

வச்சிரம் :— பல சாஸ்திரங்களை அப்பியாசித்தல், தனம் தானியம் இவைகளை உடைமை, தத்துவஞானம், வெற்றிபெறுதல்.

சித்தி :— நற்குணமுள்ள மனைவி, பொருளீகை, சுகபோசனம், தொடங்கிய கருமஞ் சித்திபெறுதல், மனக்கிலேசம், ரோகதேகம்.

வியதீபாதம் :— உத்தமகுணம், பாக்கியவிருத்தி, ஆசாரம், இடையிடையே கஷ்டம் அனுபவித்தல்.

வரியான் :— சரீரபெலம், சிற்பசாஸ்திரம் அறிதல், பலசரித்திரம் அறிதல், ஆடல் பாடல்களில் விருப்பு.

பரிகம் :— எவர்களோடும் பிரியவார்த்தை பேசுதல், தன்குலத்தை விருத்திசெய்தல், சாஸ்திரங்களை அறிதல், சுகசீவனம், கொடை, சுகபோசனம், நல்லஅனுபவம்.

சிவம் :— சந்தோஷமான குணம், பாக்கியவிருத்தி, எப்பொழும் நற்குணம், ஈசுரத் தியானம்.

சித்தம் :— ஈகை, மந்திரசித்தி, சிறந்த விவாகம், பல சம்பத்து.

சாத்தியம் :— செய்யவேண்டியவைகளை மனம் வாக்குக் காயம் இவை ஒருமித்துச் செய்தல், நற்கீர்த்தி, சுகசீவனம்,



சுபம் :— செல்வமுடைமை, ஞான அறிவு, பொருளீகை, பிராமண விசுவாசம்.

சுப்பிரம் :— கலைக்ஞானங்களை அறிதல், ஞான அறிவு, வித்துவத்தன்மை, மனோதைரியம், சகலஜனப் பிரியம்.

பிராமியம் :— கல்வித்திறமை, வேதசாஸ்திரஉணர்ச்சி, பிரமக்ஞானம், பல காரியங்களைச் செய்வதில் வல்லமை.

மாகேந்திரம் :— நற்குடிப்பிறப்பு, இராசமரியாதை, அற்பாயுள், சுகானுபவம், நற்போகம், நற்குணம்.

வைதிருதி :— எப்பொழுதும் உற்சாகமாக இருத்தல், அலங்காரம், ஜனப்பிரியம்,

## கரணம் பதினொன்றின் பலன்

பவம் (சிங்கம்) :— அபிமானம், தருமஞ்செய்தல், நிலையான காரியஞ்செய்தல், மங்கலகருமஞ் செய்தல், சுகதேகம், அச்சமில்லாமை, இராசசம்பத்து, சோதிடசாஸ்திரத்தை அறிய விருப்பம், நல்விவேகம், பீடைப்படுதல், சிறப்பான தேகம்.

பாலவம் (புலி) :— தீர்த்தமாடல், தேவாலய சேவை, கல்வியில் விருப்பு, சுகசம்பத்து, இராஜசன்மானம், நற்குணம். ஈகை, பந்துக்களிற் பிரியம், தொழில் விருத்திக் குறைவு.

கௌலவம் (பன்றி) :— சகலஜன மித்துருத்துவம், ஆசாரம், பிதாமாதாக்களில் அன்பு, இராஜசினேகம், பூமிசேருதல், அதிகாரக் குணம், குதிரை முதலிய வாகனமுடைமை.

தைதிலம் (கழுதை) :— நல்லபாக்கியம், பலஜனசினேகம், விசித்திரமான வீடு சரீரசுகம், உலோபக் குணம், கடின வார்த்தை.

கரஜம் (யானை) :— பயிர்ச்செய்கையில் விருப்பு, வீட்டிற் கருமங்களிற் கவனம், நினைத்தவைகளை முடித்தல், ஈகை, சத்துரு ஜயம், இராஜசம்பத்து.

வணிசம் (எருது) :— இஷ்டசித்தி, வியாபாரம், பல தேசங்களிலும் போக்குவரவு செய்தல், ஈகையில்லாமை, குரூரக்குணம், இனிய வார்த்தை பேசுதல், ஸ்திரீமோகம், கதை வருணித்துப் பேசுதல்.

**விட்டி (கோழி):—** அசுபகாரியஞ் செய்தல், விஷம புத்தி, பரதார விருப்பு, மனோதைரியமின்மை, மனக் கிலேசம், சந்தோஷ வார்த்தை பேசுதல்.

**சகுனம் (கூகை):—** நற்குணம், அழகு, செல்வம், தானியவகை, நற்புத்தி, கல்வி, பந்துசனம் இவை விருத்தி. ஔஷதஞ் செய்தல்.

**சதுர்ப்பாதம் (நாய்):—** தேவவழிபாடு, பிராமண மரியாதை, பசு முதலிய நாற்காற்சீவ பரிபாலனம், உறுதியில்லாத வார்த்தை, துர்த்தநடை, கோபக்குணம், சாஸ்திராப்பியாசம்.

**நாகவம் (பாம்பு):—** கோபக்குணம், அற்ப அறிவு, பெண்ணிடத்து அன்பு, நற்போசனம், அங்கங்களில் சில குறை, சனமரியாதை.

**கிம்ஸ்துக்கினம் (புழு):—** சுபகரும விருத்தி. மங்கலச் சிறப்பு, பிதாமாதா சகோதரரில் அன்பு, உலகநடை அறிதல், பரோபகாரம், கலகஞ்செய்தல், தைரிய தேகம்.

## காலவோரையின் பலன்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | மிருத்தியு |
| சந்திரன் | — | பூர்வபக்ஷமாயின் மகிழ்ச்சி<br>அபரபக்ஷமாயின் தீது. |
| சேவ்வாய் | — | கலகம். |
| புதன் | — | சந்தோஷம். |
| வியாழன் | — | வஸ்திரம். பொன் விருத்தி. |
| சுக்கிரன் | — | விவாக பலன். |
| சனி | — | சிறைப்பயம். |

## உதயலக்கின பலன்

### மேடம்

இராஜசன்மானம், திடமானபுத்தி, சுயசன வெறுப்பு, அன்னிய சனங்களில் தயவு, அபிமானம், பொருளைப் பாதுகாத்தல், கோபக்குணம், பிடிவாதம், அழகான தேகம், தைரியக்குறைவு, திரவியம் ஆபரணாதிகளையுடைமை, சாமர்த்தியம். தருமசாஸ்திர விசாரணை, சொல்வன்மை, மிருக இம்சை செய்தல்,



வபது 5-7-10-20-22-25-ல் அக்கினிசுரம், வாக்குச் சாபல்ய நோய். சர்ப்ப பயம், ஜல பயம், விரணம் ஆகிய இவற்றுளொன்றினால் பீடை உண்டாகும். சுபக்கிரகங்கள் அதிக் பெலனோடு இலக்கினத்தில் இருந்தாலும், சுபஸ்தானங்களில் இருந்து பார்த்தாலும் பூரண ஆயுள் உண்டு.

இந்த இலக்கினத்துக்குச் சனி அதிக அதிக பெலவானாக இருந்தால் தோஷமில்லை. அல்லாவிடில் சனியின் தெசாபுத்தி சித்திரங்களில் தீமைக்கு இடம் உண்டாம்.

### இடபம்

தேவபூஜா் துரந்தரம், குரு விசுவாசம், எவர்களோடும் அன்பான வார்த்தை, நற்குணம், பொருளுடைமை, உலோபக்குணம், வீரத்தன்மை. பூரிப்பான தேகம், ஏவலாட்களை வைத்திருத்தல், அறுசுவைகளுள் புளிப்பிற் பிரியம், கணக்குவல்லபம், வஸ்திராபரணச் சிறப்பு, சிறுவர்களின் பரிகாசம்போலிருந்து பின்பு வெற்றியாகப் பிறர் பொருளைக் கைப்பற்றுதல், இருமல்நோய், மழலை வார்த்தை கேட்டலிற் பிரியம், அற்பபுத்திர யோகம், மனக்கபடம், களத்திர பீடை.

வயது 5-16-19-20-27-ல் சுரம், கண்டத்தில் நோய், க்ஷயம், நீரழிவு முதலிய ரோகங்களில் ஒன்று வரும். சுபக்கிரகங்கள் பூரண பெலத்தோடு இலக்கினத்தை நோக்கினாலும், இலக்கினத்தில் இருந்தாலும் மேற்சொல்லிய குற்றமற்ற 77 வயதுக்குக் குறையாத ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் சுக்கிரன் குரு சந்திரன் இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் அதிக சுபபலனைச் செய்யமாட்டா.

### மிதுனம்

கீர்த்தி, அபிமானம், தன் பந்துக்களுக்குள் மேலாயிருத்தல், கொடை, அனுபவம், செல்வம், சத்துருஜயம், பெண்போகம், ஆசாரநியமம், விரதம், உபயார்த்தமாகப் பேசுதல், கிரமமாகத் தன்னுடைய காரியம் பார்த்தல், பித்தரோகம், பசிய உடம்பு விவாகக் குழப்பம், ஸ்திரீசொற் கேட்டல், உலகவழக்க மறிதல், தாரசுகக் குறைவு, பெண்மோகம்.

வயது 3–5–8–10–18–28-ல் அவமிருத்து அக்கினி ஆயுதம் சத்துரு வாதம் நேத்திரரோகம் இவற்றென்றுற் பீடை காட்டும். இலக்கினத்தைச் சுபக்கிரகம் அதிக பெலனோடு பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும், இக்குற்றமின்றி 65-க்குக் குறையாத ஆயுள் உண்டு. சூரியன், செவ்வாய், வியாழன் இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் அதிக சுபமல்ல.

கர்க்கடகம்

தருமஞ் செய்பவர்களில் விருப்பு, தன் பந்துஜனங்களில் ஆசை, அனுபவம், அன்னம் பானம் முதலியவைகள் இஷ்டப்படியே கிடைத்தல், பாக்கியச்சிறப்பு, சாமர்த்தியம், வேகமான நடை, பொதுப் பெண்களில் ஆசை, தானியசம்பத்து, குருபக்தி, பிதாவுக் கிசையாமை, காணுவிடத்தில் மறு, சிலநாள் தரித்திரம் அனுபவித்தல், துக்கம், களத்திர சுகவீனம், புத்திரர் குறைவு.

வயது 5–16–20–25 இவைகளில் அவமிருத்து உண்டாகும். சுபக்கிரகம் இலக்கினத்தை அதிக பெலனோடு பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் இக்குற்றமின்றி, 90 வயது வரை ஆயுள் உண்டாம். புதன், சுக்கிரன் இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் சுபமல்ல.

சிங்கம்

எவர்களிலும் அன்பு, சத்துருமர்த்தனம், அற்ப புத்திரர், உற்சாகம், கடன் கொடுத்தல், போகவிருப்பு, அதிகபோசனம், தருமக்குணம், தேவார்ச்சனை செய்தல். பசி பொறுக்காமை, நுட்பமான புத்தி, நோய் வந்தால் உடனே நீங்கிவிடுதல், முகரோகம், பிதாமாதாக்களில் துவேஷம், கெம்பீர வசனம், தொழில் செய்ய விருப்பம்.

வயது 5–10–27 இவற்றென்றில் சுரம் முதலிய நோய் வந்து பீடைப்படுத்தும். சுபக்கிரகம் இலக்கினத்தை வலிமையோடு பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் இவற்றாலே தீங்கின்றி 80 வயதிற்குக் குறையாத ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குப் புதன், சுக்கிரன் இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் அதிக சுபமல்ல,



கன்னி

பலசாஸ்திர விசாரணை, நற்குணம், பாக்கியம், அழகு, குதிரை முதலிய வாகனங்களில் விருப்பம், தருமம், ஆசாரம், அனேக காரியங்களை அறிதல், முன்வயதிற் கஷ்டம், பின்வயதில் அதிக செல்வம், புத்திர விருத்தி, பந்துசனக் கூட்டம், இதாகிதக் கிரியை, சுபகாரியம் பார்த்தல்.

வயது 5–10–18 இவற்றில் அக்கினிபயம், சுரம், வசூரி இவற்றென்றுற் பீடை உண்டாம், சுபக்கிரகம் வலிமையோடு இலக்கினத்தைப் பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் மேற்சொல்லிய குற்றம் நீங்கி 77 வயதுக்குக் குறையாத ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் செவ்வாய், குரு இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் நற்பலனுக்குரியனவல்ல.

துலாம்

தயவு, நற்குணம், சற்கருமசீவனம், சகல கலைகளையும் ஆராயும் கல்வித்திறமை, பொருள், சனமரியாதை ,தடும்பவிருத்தி, புத்திரவிருத்தி, மனப்பயம், வல்லபம், அறிவு, அபிமானம் மிகுந்த ஐஸ்வரியம், இராஜசினேகம், கூட்டமான பந்துக்கள் பரிமளபுஷ்பாதி வாசனுதிரவிய விருப்பு.

வயது 7–12–19–28–42 இவற்றில் அக்கினி, விரணம், சத்துரு. ஆயுதம், ஜலம் இவற்றென்றுற் பீடை உண்டாம். சுபக்கிரகம் இலக்கினத்தைப் பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் இவ்வகையான தோஷம் நீங்கி 85 வயதுக்குக் குறையாத ஆயுள் உண்டு. இந்த இலக்கினத்துக்குச் சூரியன், செவ்வாய், குரு இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் நற்பலனுக்கு உரிவனல்ல.

விருச்சிகம்

தைரியம், செல்வம், நற்குணம், தன் குலமத்தியிற் பிரதானியாய் இருத்தல், பேரறிவு, பிதாமாதாக்களிடத்து அன்பு, தனது ஸ்திரீயினிடத்திற் பிரியம், இனிமையான வார்த்தை பேசுதல், எண்ணிய கருமத்தைக் கிரமமாக முடித்தல், வெகுமானம், சிலநாள் தரித்திரமனுபவித்தல்,

வயது 4–5–10–12–18–40 இவற்றில் தோஷம், விரணம், அக்கினி, சன்னி இவற்றொன்றாற் பீடை உண்டாம். சுபக்கிரகம் இலக்கினத்தை பெலத்தோடு பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் இப்பீடைகள் நீங்கி 90 வயதுவரை ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் செவ்வாய், புதன், சுக்கிரன் இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் சுபபலனுக்கு உரியவையல்ல.

## தனு

நீதி, தருமம், தயை, குலப்பிரதானமான நடை, அறிவு, ஜனமரியாதை, பெரியோர்களிடத்து மரியாதையும் அச்சமும் உண்டாவதுபோலச் சிறியோர்களிடத்தும் இருத்தல், நற்கீர்த்தி, போகம், இத சத்துருக்களைக் காணுதல், நல்ல கல்வியை இளவயதிற் கற்றல். பல இடங்களில் திரிதல், நடுவயதிலே த்ரவியச் செலவால் அலைச்சல், எப்பொழுதும் முயற்சி, நல்வசனம், பிறருக்கு இனிமை, உண்மை பேசுதல்.

வயது 12–15–32–40 இவற்றில் நேத்திரரோகம் முதலிய பீடை காட்டும். சுபக்கிரகம் பெலனோடு இலக்கினத்தைப் பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் 77 வயது ஆயுள் உண்டாம். இந்த சுக்கிரன் தெசாபுத்தி அந்தரங்கள் சுபத்துக்குரியனவல்ல.

## மகரம்

சுயகாரியம் பார்த்தல், சனக்கூட்டம், சுகசீவனம், நற்புத்தி, பிறர் அறியாத இடத்தில் மறு, வாசனுபுஷ்ப விருப்பம், நீண்ட கண், அபிமானம், சுகதேகம், ஸ்திரீயினிடத்து அன்பு, பட்சிகளை இம்சித்தல், வாய்ச்சாலம், உபாயபுத்தி, ஆசை.

வயது 10-32-37 இவற்றில் சுரம், யாத்திரையிற் பீடை, விஷம் இவற்றொன்றால் கஷ்டம் வரும். சுபக்கிரகம் பெலனோடு இலக்கினத்தைப் பார்த்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும் 67 வயதுக்குக் குறையாத ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் செவ்வாய் குரு இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் சுபபலனுக்குரியன வல்ல.



## கும்பம்

சுகானுபவம், சலனசித்தம், காரியங்களைத் தாமதமாகச் செய்துமுடித்தல், பரஸ்திரீகமனம், சினேகவிரோதம், தன்னைப் புகழுதல், பிறரை இகழுதல், பித்ததேகம், பிறர் செய்த உபகாரத்தை மறத்தல்.

வயது 11–19 இவற்றில் சுரம், ஜன்னி இவற்றொன்றால் பீடை உண்டாகும். சுபக்கிரகம் இலக்கினத்தைப் பெலனோடு பார்த்தாலும் இலக்கினத்திலே இருந்தாலும் 80 வயதுக்குக் குறையாத ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் சந்திரன், செவ்வாய், இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் சுபபலனுக்குரியவல்ல.

## மீனம்

நவரத்தினம், பொன் இவைகளுடைமை, அற்ப ஆசை, ஞாபகசித்தம், தேவபக்தி, பிராமண விசுவாசம், பெரியோரிடத்து அன்பு, பொருட்செலவு, அழகு, வீரம், அறிவு, வாசனையுள்ள புஷ்பாதிகளில் விருப்பு, கண்ட சிற்றுண்டிகளைப் புசித்தல், ஸ்திரீகலகம், காதில் நோய், பிறர் பொருளில் ஆசை, காரியங்களில் அதிக கவனம்.

வயது 12-20-28 இவற்றில் சுரம், இவற்றொன்றால் பீடை உண்டாகும். சுபக்கிரகம் பெலனோடு உதயலக்கினத்தைப் பார்த்தாலும் இலக்கினத்தில் இருந்தாலும் பூரண ஆயுள் உண்டாம். இந்த இலக்கினத்துக்குச் சுக்கிரன், சனி இவர்களின் தெசாபுத்தி அந்தரங்கள் சுபபலனுக்கு உரியனவல்ல.

# சந்திர இலக்கின பலன்

மேடம் :— சரீரபெலம், பொருளைச் சம்பாதித்துப் பாதுகாத்தலிற் கவனமில்லாது செலவுசெய்தல், சிரசில் மறு, ஜலத்துக்கு அச்சப்படல், சிவந்த கண், அதிக ஆசை, சீக்கிரத்தில் சந்தோஷமடைதல், பெண்போகம், தூரவழி நடத்தல்.

இடபம் :— பாக்கியம், நற்குணம், தயவு, தேக அழகு பக்கங்களில் மறு, சிநேகிதர்களில் நட்பு, பெண்களுக்கு இனிய நடை, காரியங்கள் முற்றாய் முடிந்தபின்பே அதனால் சந்தோஷித்தல், இருசொல் வார்த்தை, முற்சகோதரர் உடைமை, தேக சௌக்கியம், பெண்பிரஜை, மத்திம ஆயுள்.

**மிதுனம்:**— பிரியவாக்கு, போசனப்பிரியம், உண்மை பேசுதல், நல்விவேகம், பட்டுவஸ்திரங்களில் விருப்பு. ஸ்திரீஜனங்களால் சந்தோஷிக்கப்படுதல், சுகசீவனம், பாக்கியமுடைமை.

**கர்க்கடகம்:**— சிநேக விருப்பு, வீடு முதலிய கட்டடச் சிறப்புகளிலே விருப்பமாகி அவைகளைச் செய்வித்தல், மனக்கபடம், காரியங்களை உத்தேசத்தினுல் அறிதல், உபாயமான புத்தி, எவர்களுக்கும் அன்பாக நடக்கும் குணம், பெண்களைப் பரிகாச வார்த்தையினுல் வெல்லல்.

**சிங்கம்:**— உற்சாகம், சாஸ்திர விருப்பு, கடிந்து பேசுதல், பெண்களோடு கலகம், மலை, வனம் முதலிய இடங்களில் சஞ்சரிக்க விருப்பு, பசிதாகமுடைமை, தயவுக் குறைவு, மனத்துக்கம், தைரியபுத்தி இல்லாமை, அற்ப காரியங்களிலே கோபித்தல், கர்வநடை, முகலக்ஷணம், பொருள் ஈகை, தாம்பூல விருப்பு.

**கன்னி:**— சரீரசுகம், உண்மை பேசுதல், தைரியக் குறைவான தேகம், பலவித கல்வி கற்றல், தருமசாஸ்திர அப்பியாசம், அபிமானம். நற்கருமங்களிலே தானும் உடன்படுதல், காரியங்களில் வெற்றியும் மேன்மையும் உடைமை, தருமசிந்தை, மிருதுவான வார்த்தை, பிற தேசசஞ்சாரம், நல்லோர்கள் பலரால் மரியாதைபெறுதல், அற்ப புத்திர யோகம்.

**துலாம்:**— சாந்தகுணம், ஆசாரக்கிரமம், வித்துவத் தன்மையான கல்வியுடைமை, தேவபக்தி, பிராமண விசுவாசம், மனச்சந்தோஷம் இல்லாமை, பந்துவிரோதம், மனவர்மம், வியாபார விஷயத்தில் கொள்ளவும் விற்கவும் சாமர்த்தியம், குலஸ்திரீயுடைமை, மனநிலை இல்லாமை.

**விருச்சிகம்:**— அச்சமுள்ள மனம், ஜனங்கள் அறியாத விதமாகப் பாவச்செயல் செய்தல், பட்சிகள் மிருகங்களுக்கு இம்சை செய்தல், சேஷ்டைக்குணம், பாலியத்திலே பிதாமாதாவை இழத்தல்.

செவ்வாய் அல்லது இராகு இந்தச் சந்திரலக்கினத்தில், அல்லது சந்திரனுக்கு 4–7–10-ம் இடங்களில் ஒன்றிலே நின்றால் மேற்சொல்லிய பலன்கள் நடவாது இராஜ யோகம் உண்டாகும் என விசேஷ விதிகள் இருக்கின்றன.



**தனு:**— பொருள்தேடும் இயல்பு, சரீரபெலம், உற்சாகம், நுட்பமாகக் காரியங்களை அறிதல், அதிக ஆசை, வெல்லுஞ்சொற் பேசுதல், வீரம், பிதாவின் பொருளைச் செலவுசெய்தல், பொருள் ஈகை, காவியம் அறிதல், அந்நியசன வசீகரம், பந்துக்களைத் தூஷித்தல்.

**மகரம்:**— பாக்கிய விருத்தி, சரீரபெலம், தனக்கு இஷ்டமானவைகளையே செய்தல், அங்க லக்ஷணம், காவியம் அறிதல், வேண்டியபோது பொருளினுல் கஷ்டப்படல், உலோபக்குணம், கோட் சொல்லல் கேட்டல், தயை குறைவு, தன்குடும்பத்தில் கவனம் கொண்டாடல்.

**கும்பம்:**— வாசனைப் புஷ்பாதிகளில் விருப்பு, இடுப்பின் பக்கத்தில் மறு, ஸ்தூலமான உறுப்புக்கள், சிலகாரியங்களை உண்டாக்கவும் அழிக்கவும் வல்லபம்உள்ளஉபாய புத்தி, தூரவழி நடக்க அஞ்சாமை, ஸ்திரீமோகம்.

**மீனம்:**— நூதனமான பொருளிலும் சலசம்பந்தமான வஸ்துக்களிலும் விருப்பு, வீடு முதலியவைகளைத் திருத்தமாகச் செய்வித்தலில் மனஞ்செல்லுதல், குலஸ்திரீயினிடத்தில் ஆசை.

## அம்ச பலன்

ஜனனமாகும்போது எந்த நக்ஷத்திரம், எத்தனையாவது பாதம் என்றும், அப் பாதத்துக்கு எந்தக் கிரகம் அதிபதி என்றும் அறிந்து, அந்தக் கிரகத்தின் பலனே அம்ச பலன்.

இதை இலகுவாக அறியுமிடத்து, நவாம்ச சக்கரத்தில் சந்திரன் நின்ற இராசி மேடவிருச்சிகமானுல் செவ்வாயும், இடபதுலாமானுல் சுக்கிரனும், மிதுனகன்னியானுல் புதனும், தனுமீனமானுல் வியாழனும், மகரகும்பமானுல் சனியும், சிங்கமானுல் சூரியனும், கர்க்கடகமானுல் சந்திரனும் இராசி அதிபதிகளாம்.

### சூரியன் அம்சம்

பித்ததேகம், கோபம், சாஸ்திரங்களை அறியும் ஞானம், தியாகஞ்செய்தல், சாந்தகுணம், தேக அழகு, அதிக சிநேகம், நல்விவேகம், சிவந்த கண், ஆசாரக்கிரமம், பெலமான ரோகம், ஸ்தூலமான வயிறு, ஸ்தலயாத்திரையில்விருப்பம், உண்மைபேசுதல், சீமானுய்இருத்தல்.

### சந்திரன் அம்சம்

கல்வித்திறமை, பொருள், தீர்க்காயுள், முகத்தில் மறு, நற்குணம், அழகு, தைரியம், ஈகை, தாமதகுணம், வாத சிலேட்டும தேகம், செய்நன்றி மறவாமை, சிநேகிதப் பிரியம், விவேகம், கபடம் இல்லாமை, இரக்கம். நீராட விருப்பு, பிறரால் இகழப்படாமை,

### செவ்வாய் அம்சம்

கீர்த்தி, கோபக்குணம், கடுஞ்சொல், வர்க்கு விரோதம், கலகப் பிரியம், பெருமை, முற்கோபம், பித்தவியாதி, சஞ்சாரப் பிரியம், சிற்றுண்டிகளில் விருப்பு, கபடம், உலோபக்குணம், முதுகில் மறு, மனக்கிலேசம், குற்றமான சொற் கேட்பதைச் சகிக்காமை, திரவியம் நிலையில்லாதிருத்தல், பொய் பேசுதல்.

### புதன் அம்சம்

தருமச்செய்கை, ஐசுவரியம், விசேஷ கல்வி, பெண்களில் அன்பு, ஞானம், இசைத்தமிழ் அறிதல், பொய் பேசாமை. செய்நன்றி மறவாமை, நேர்மையான நடை, சங்கீதவித்தை, விசேஷ குணமுடமை, காரியங்களில் சற்றும் வழுவாமை, அபிமானம், எக்காலத்தும் மறவாத தேவ வணக்கம், சந்தோஷம், பிடிவாதம், அச்சமில்லாமை, அழகு.

### வியாழன் அம்சம்

நற்கல்வி, பிரகாசமான தேகம், புத்திரவிருத்தி, மந்திரிப் புத்தி, சிறந்தகண். மேலான காரியங்களிற்கவனம், மிகுந்த பொருள், மனச்சந்தோஷம், சுகசீவனம், நீராட விருப்பு, வாக்குச் சாதுரியம், ஸ்தூலதேகம், ஞான அறிவு, பல அனுபவம், கீர்த்தியுடைமை, நூதன விவேகம்.

### சுக்கிரன் அம்சம்

செல்வச் சிறப்பு, ஸ்தூலதேகம், செய்நன்றி அறிந்து நடத்தல், உத்தமகுணம், சுகவாழ்வு, வம்மிசத்துக்கு இனிய நடை, தருமச் செய்கை, பரமேசுவரனுடைய புகழைப் பேச ஆசை, அன்பு கல்வித்திறமை, வீரக்குணம்.

### சனி அம்சம்

கீர்த்திக்குறைவு, தயை குறைவு, பிறர் தன்மீது நம்பிக்கை வைக்காத பேச்சு, நீண்ட வார்த்தை, குள்ளத்தனம், குரூர சரீரம், பலவிடங்களிலும் அலைச்சற்படல், அச்சமில்லாத மனம், தரித்திரம் அனுபவித்தல், போசன விருப்பு, அருமையாகப் பொருள் தேடுதல், உலோபக்குணம்.



### நக்ஷத்திரங்களின் கணம், யோனி, நாமாக்ஷரம்

| நக்ஷத்திரம் | கணம் | யோனி | நாமாக்ஷரம் 1ம் கால் | 2ம் கால் | 3ம் கால் | 4ம் கால் |
|---|---|---|---|---|---|---|
| அச்சுவினி ... | தேவ | ஆண் குதிரை ... | சு | சே | சோ | ல |
| பரணி ... | மனுஷ | ஆண் யானை ... | லி | லு | லே | லோ |
| கார்த்திகை ... | ராக்ஷத | பெண் ஆடு ... | அ | இ | உ | ஏ |
| ரோகிணி ... | மனுஷ | ஆண் பாம்பு ... | ஒ | வ | வி | வு |
| மிருகசீரிடம் ... | தேவ | பெண்பாம்பு ... | வே | வோ | க | கி |
| திருவாதிரை ... | மனுஷ | பெண்நாய் ... | கு | க4 | ங | ச2 |
| புனர்பூசம் ... | தேவ | பெண்பூனை ... | கே | கோ | ஹ | ஹி |
| பூசம் ... | தேவ | ஆண் ஆடு ... | ஹு | ஹே | ஹோ | டா |
| ஆயிலியம் ... | ராக்ஷத | ஆண் பூனை ... | டி | டு | டே | டோ |
| மகம் ... | ராக்ஷத | ஆண் எலி ... | ம | மி | மு | மே |
| பூரம் ... | மனுஷ | பெண் எலி ... | மோ | ட3 | டி3 | டு3 |
| உத்தரம் ... | மனுஷ | ஆண் மாடு ... | டே3 | டோ3 | ப | பி |
| அத்தம் ... | தேவ | பெண் எருமை ... | பு | ஷ | ண | ட2 |
| சித்திரை ... | ராக்ஷத | பெண் புலி ... | பே | போ | ர | ரி |
| சுவாதி ... | தேவ | ஆண் எருமை ... | ரு | ரே | ரோ | த |
| விசாகம் ... | ராக்ஷத | ஆண் புலி ... | தி | து | தே | தோ |
| அனுஷம் ... | தேவ | பெண் மான் ... | ந | நி | நு | நே |
| கேட்டை .. | ராக்ஷத | ஆண் மான் ... | நோ | ய | யி | யு |
| மூலம் ... | ராக்ஷத | ஆண் நாய் ... | யே | யோ | ப3 | பி3 |
| பூராடம் ... | மனுஷ | ஆண்குரங்கு ... | பு3 | த4 | ப4 | ட4 |
| உத்தராடம் ... | மனுஷ | ஆண் கீரி ... | பே3 | போ3 | ஜ | ஜி |
| திருவோணம் ... | தேவ | பெண் குரங்கு ... | கி2 | கு2 | கே2 | கோ2 |
| அவிட்டம் ... | ராக்ஷத | பெண் சிங்கம் ... | க3 | கி3 | கு3 | கே3 |
| சதயம் ... | ராக்ஷத | பெண் குதிரை ... | கோ3 | ஸ | ஸி | ஸு |
| பூரட்டாதி ... | மனுஷ | ஆண் சிங்கம் ... | ஸே | ஸோ | த3 | தி3 |
| உத்திரட்டாதி | மனுஷ | பெண் மாடு ... | து2 | ஶ | ச4 | த2 |
| ரேவதி ... | தேவ | பெண் யானை ... | தே3 | தோ3 | ச | சி |

☞ 1, 2, 3, 4 ஸம்ஸ்கிருதாக்ஷர வர்க்கங்கள்.

### நக்ஷத்திர கணபலன்

தேவகணம் :— அழகு, ஈகை, விவேகம், சிறந்த ஒழுக்கம் அற்ப போசனம், பேரறிவு.

மனுஷகணம் :— அபிமானம், செல்வமுடைமை, கிருபை, அதிகாரம், சுயாசனங்களைப் பாதுகாத்தல்.

இராக்ஷதகணம் :— பராக்கிரமம், அதிக மோகம் கலகப்பிரியம், துக்கம், பயங்கரமான வடிவம், கலிச்செயல்.

## நக்ஷத்திர யோனிபலன்

குதிரை:— சுயாதிகாரம், சற்குணம், தைரியம், அழகு, கிராமாதிக்கம், எஜமானுக்குப் பிரீதியான நடை.

யானை:— இராஜமரியாதை, சரீரபெலம், போகம், இராஜஸ்தானத்தில் மரியாதை, தானுகவே உற்சாகமாய் இருத்தல்.

பசு:— பலவித நியாயங்களை விசாரித்தறிதல், பெண்களில் விருப்பு, அற்பாயுள்.

ஆடு:— வழக்குரைத்தல், பரோபகாரம், சகலசன சிநேகம், முயற்சியில் பிரயாசமிகுதி, பரஸ்திரீகமனம், சஞ்சாரப்பிரியம்.

சர்ப்பம் (பாம்பு):— மாருத கோபம், குரூரமான பேச்சு, பிறருடைய உபகாரத்தை அங்கீகரிக்காமை, புத்திக்குறைவு, ஒழுங்கீனமான பற்கள்.

சுவானம் (நாய்):— முயற்சி, உற்சாகம், வீரம், சுயசன விரோதம், பிதிர்மாதுரு பக்தி.

மார்ச்சாரம் (பூனை):— தனது காரியத்திலே சாமர்த்தியம், இஷ்டான்ன ஆகாரம், தயவில்லாமை, துஷ்ட சகவாசம்.

மூஷிகம் (எலி):— அதிக விவேகம், மிகுசெல்வம், தன்காரியங்களில் கவனம், அடக்கமான குணம், விசுவாசமில்லாமை.

சிங்கம்:— சுயதருமம், சதாசாரம், சற்கிருத்தியம், சற்குணம், குடும்பசம்ரக்ஷணை.

மகிஷம் (எருமை):— வெற்றி, ஆசை, வெகுசனக் கூட்டம், வாததேகம், மந்தபுத்தி.

வியாக்கிரம் (புலி):— சுயஅதிகாரம், பொருள் சம்பாதித்தல், தீட்சாசாரம், சுயசனமேன்மை, தன்னைத்துதிப்பவர்களில் தயவு.

மான்:— சுவதந்திரம், பொறுமை, நற்கிரியை, உண்மைபேசுதல், சுயசனப்பிரியம், தானதருமஞ் செய்தல், தைரியம்.

வானரம் (குரங்கு):— தைரியக் குறைவு, இஷ்டபோகம், உலோபக்குணம், கலிச்செயல், ஆசை, நற்சனக் கூட்டம், தைரியம்.

கீரி:— பரோபகாரம், செல்வமுடைமை, சன்மார்க்கம், பிதிர்மாதுருபக்ஷம்.



## துவாதச பாவம்

ஜன்மலக்கினம் முதலாகப் பன்னிரண்டாம் இடம் வரை ஒவ்வொரு ஸ்தானங்களுக்கும் பலன் சொல்லுவதற்குரிய ஆதார நியாயங்கள்.

இலக்கினம்:— தேகம், நிறம், சிரசு, புலன், ஞாபகம், குணம், கீர்த்தி, சம்பத்து, வயது சந்தோஷம், கிலேசம், தெய்வ வணக்கம், கமனம், சரீரநிலை இவைகளுக்குரிய தானம்.

2-ம் இடம்: நேத்திரம், வர்க்கு, தனம், குடும்பம், முகம், வித்தை, மந்திரம், இருதயம், சத்தியவசனம், நவரத்தினம், தத்துவவிசாரணை, உத்தேசம், சந்துஷ்டி இவைகளுக்கும், வித்தியாகுருவுக்கும் உரிய தானம்.

3-ம் இடம்:— சகோதரர், பராக்கிரமம், வீரியம், கேள்வி, போசனம், கர்ணநோய், கழுத்து, போகம், கர்ணபூஷணம், கானவித்தை, தேவபக்தி, கடன், ஆயுள், ஜயம் இவைகளுக்கும் உரிய தானம்.

4-ம் இடம்:— மாதுரு, பந்துக்கள் இவர்களுக்கும், வாகனம், பூமி, சுகம், ஜலரோகம், வீடு, வித்தை, வியாபாரம், வஸ்திரம், மேன்மை, பாற்பசு, பரவிஷயம், தேக வளர்ச்சி, சாஸ்திராப்பியாசம் இவைகளுக்கு உரியதானம்

5-ம் இடம்:— புத்திரர், பிதா, மாமன் இவர்களுக்கும், விவேகம், ஞானம், மந்திரம், பூர்வபுண்ணியம். சுயகல்வி, சங்கீதம், கர்ப்பம், மறுஜன்மம், யோகாப்பியாசம் இவைகளுக்கும் உரிய தானம்.

6-ம் இடம்:— சத்துரு, சோரர் இவர்களுக்கும், ரோகம், ஆயுதவிரணம், தேகவாதை, கடன், பெண்ரோகம், சிறை, துக்கம் இவைகளுக்கும் உரிய தானம்.

7-ம் இடம்:— களத்திரம், பின்தாரம் இவர்களுக்கும் காமம், விவாகம், குணம், இன்பம், பிரியநட்பு, இராஜசன்மானம், ஜனவசியம், விவாத வியாச்சியம் இவைகளுக்கும் உரிய தானம்.

8-ம் இடம்:— ஆயுள், மரணம், துக்கம், குய்யம், அபஜயம், யுத்தம், தேகவிரணம், வியாதி, கிலேசரணம், பகை, விஷபயம் இவைகளுக்கு உரிய தானம்.

9-ம் இடம்:— பிதா, குரு இவர்களுக்கும், தருமம், திரவியம், மடம், சத்திரம், பாடசாலை, திருப்பணி, உபதேசம், அஷ்டமாசித்தி, தடாகம், குளம், வனவாசம் இவைகளுக்கும் உரிய தானம்.

10-ம் இடம்: சீவனம், கீர்த்தி, ஞானம், சற்கருமம், க்ஷேத்திரம், இரக்கம், தயை. பூஜை, தேவபக்தி, வஸ்திரம் இவைகளுக்கு உரிய தானம்.

11-ம் இடம்: மூத்த சகோதரத்துக்கும், லாபம், இராஜவித்தை, துக்கநிவிர்த்தி, ஞான அறிவு இவைகளுக்கும் உரிய தானம்.

12-ம் இடம்:— வியயம் (செலவு), தேசசஞ்சாரம், கீர்த்தி, திரவியச்சேதம், சயனம் இவைகளுக்கு உரிய தானம்.

## கிரக பலன்

### சூரியன்

1-ல் சூரக்குணம், அபிமானம், உத்தமகுணம், கோபம், அங்கலட்சணம், அழகிய கண், நீண்ட மயிர், சுகபோசனம்.

2-ல் பொருட்செலவு புத்திரசேதம், முகத்தில் மறு, தைரியக் குணம், புண்ணியச்செய்கை, தயவு. புத்திரராலும் இராசாக்களாலும் பொருட்சேதம், அறிவுடைமை, இராஜசிநேகம், தந்தரோகம், நேத்திரவியாதி, வித்தையில் விரோதம், முகரோகம், வாக்கு விரோதம், மாடு முதலிய மிருகச்சேதம், மித்துருக்களோடு விரோதம், வாய்ச்சாலம், கோப வசனம், சோரரால் தனச்சேதம்.

3-ல் விவேகம், சகோதர அன்பு, பக்ஷணங்களிற் கண்ட போசனம் புசித்தல், சகோதர அரிட்டம், சரீர பெலம், சிரரோகம், நிலைமைச் சேதம், அடிமைச் சேதம், கொடை விருப்பு, தைரியமான தேகம், துர்ச்சனர் சேர்க்கை, பகைவரை வெற்றிகொள்ளுதல், வெகு சன சினேகம், புத்திர பீடை.

4-ல் பந்துசனக்குறைவு, மனப்பீடை, கீர்த்திக் குறைவு, வாகனமின்மை, மனஸ்தாபம், தரித்திரம், தலபேதம், பந்துசன விரோதம், மந்தபுத்தி, கிருகசுகக் குறைவு, பொருட்சேதம், மாதுருபீடை, பலவிசாரம், பிரபு சேர்க்கை.



5-ல் பிதிர்தோஷம், மனோசுகமின்மை, வீட்டிற் சுகம் அற்பம், மத்திம ஆயுள், பொருட்செலவு, புத்திரர் சிதைவு திடமான பக்தி, ஞான அறிவு, சனவிரோதம், இராச கோபம், வித்தையினூற் பயன் அற்பம்.

6-ல் பிரபலம், சரீரபெலம், இலட்சுமிவாசம், நற்குணம், பிரபு சேவை, புத்திர விருத்தி, பெலம், அபிமானம் இராஜசிநேகம். கீர்த்தி, மாருத பசி, பிரசித்தி, வலியப் பகை வருதல், விரோதக்குணம், கடன் கொடுக்கல் வாங்கல்.

7-ல் உபய களத்திரம், பரதூஷணை, தூலதேகம், ரோகம் உடைமை, பாடலிற் சாமர்த்தியம், மனப்பயம், மனோபலமின்மை, இராசதகுணம், பாக்கிய நிலை, மனப்பீடை.

8-ல் சுகமில்லாமை, பொருட்குறைவு நிலையான தலமில்லாமை, அற்பாயுள், கண்ணோய், வியாதி, துராசை, அக்கினிபயம், சினேக விரோதம், மாறுகண், அபிமானமின்மை, பெண்பிணக்கு. அநாசாரம், போகம், கர்வம், அழகு, ஸ்திரீவிரோதம், தூரயாத்திரை, பொருட்செலவு, மனப்பீடை.

9-ல் குரோதமுடைமை, கர்வநடை, கோபம், புத்திரசேதம், பந்துச்சேர்க்கை, பாபசிந்தை, மித்திரர்க்கு இனிமை, தெய்வபக்தி, பிராமணபக்தி, பொருளுடைமை பிதிர்தோஷம், குருவுக்குப் பகை.

10-ல் இராச நிலைமை, பொருள் நிலைபேறு, தேவபக்தி குருபக்தி, வாகனசித்தி, வித்தை, பிதிர்வழியிற் கன்மி, தருமபுத்தி, இராசசேவை, சில புத்திரசேதம், காரிய சமர்த்து, முன்னோர்களுடைய பொருள் அடைதல், பூமி லாபம், சரீரபெலம், பந்துசுகக்குறைவு.

11-ல் பாக்கிய விருத்தி, கீர்த்தி, புத்திரவிருத்தி, தெய்வபிராமண பக்தி, போகமுடைமை, அடிமையுடைமை, கைத்திருத்தமான தொழில் செய்தல், வீரக்குணம், இராஜசிநேகம் வெஞ்சொற் பொறுமை, கோபித்தவுடனே ஆறுதல், பிதிர்பாக்கிய விருத்தி, கீர்த்தியான பெயர், எடுத்த காரியம் ஜயமடைதல், மனச்சோர்வு, சனப்பகை, காதில் நோய்.

12-ல் கண்ணில் ரோகம், நற்குணம், அந்நியர்களோடு வெறுப்பு, பிதிர்ப்பலன் குறை[illegible] கொழும்புத் தமிழ்ச் சங்க
வழியினூற் பொருட்செலவு.

## சந்திரன்

1-ல் தாட்சணியம், பொருள் சேருதல், பொறை யுடைமை, நற்குணம், பிரதாபம், பெருமை, அனு போகம், பூமிலாபம், போகம், பாலியத்தில் விவாகம் நல் வசனம், பொருள்விருத்தி, தேக அழகு, சற்கீர்த்தி, மித்தி ரர் கூட்டம்.

2-ல் புததிர விருத்தி, அதிக காமம், மன அடக்கம், மனச்செவிடு, சிவந்த தேகம், துஷ்டர்களோடு சேர்க்கை, காரியப் பிரவிருத்தி, பூர்வபக்ஷமாயின் அதிக பொருள் வரவு, அபரபக்ஷமாயின் பொருட்செலவு.

3-ல் தைரிய மனம், ஸ்திரீசொற் கேட்டல், பல ருடைய திரவியங்களைச் சேர்த்தல், வித்தை, ஞானம், வஸ் திராபரண அலங்காரம், கர்ணபூஷண லாபம், தருமசரித் திரங்களைக் கேட்டல், பெண்துணை உடைமை, சௌக்கிய முடைமை, சிரேஷ்டமுடைமை, பொறுமை உடைமை, மனப்பூரணம், அழகு, சகோதரவிருத்தி.

4-ல் தாய்க்கு இனிமை, தான் சுகித்து வாழுதல், அள வறிதல், பரதாரகமனம், இனக்கட்டு, அழகு, ஸ்திரீ போகம், ஒழுக்கம், சொற்செலவு, வாகனலாபம், விசேட வீடு, வஸ்திராபரணலாபம், நற்போசனம், நல்லவித்தை, நடுவயதில் வாகனமுடக்கம், இனசனவிரோதம், மாதுரு பீடை, கிருகபேதம், ஜலபயம், தைரியம், கீர்த்தி.

5-ல் மாதுருசுகக்குறைவு, மாந்திரீகவித்தை, சோம் பல், காமம், சௌபாக்கியம், அழகிய தேகம், நல்ல விவா கம், புத்திரிகள் மிகுதி.

6-ல் சஞ்சலரோகம், உதாரக்கினிக்குறைவு, ஆலசிய மாய் இருத்தல், காரியத்தாழ்ச்சி, க்ஷயரோகம், முயற்சி யுடைமை, கடன் கொடுக்கின் வாங்கமாட்டாமை, போக் குவரவுச் சஞ்சாரம், பொருள் மிகுதி, பூர்வபக்ஷ சந்திரனு யில், தீர்க்காயுள், அபரபக்ஷ சந்திரனுயின் அற்ப ஆயுள், பெரியோர் சேர்க்கை, நற்செய்கையின்மை, பொய்பேசல்.

| புதன் | 0 | 29 | 45 |
| கேது | 0 | 12 | 15 |
| சுக்கிரன் | 1 | 5 | 0 |
| சூரியன் | 0 | 10 | 30 |

**5-வது செவ்வாய்புத்தி**
*மாதம் 4, நாள் 27.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| செவ்வாய் | 0 | 8 | 34½ |
| ராகு | 0 | 22 | 3 |
| வியாழன் | 0 | 19 | 36 |
| சனி | 0 | 23 | 16½ |
| புதன் | 0 | 20 | 49½ |
| கேது | 0 | 8 | 34½ |
| சுக்கிரன் | 0 | 24 | 30 |
| சூரியன் | 0 | 7 | 21 |
| சந்திரன் | 0 | 12 | 15 |

**6-வது இராகுபுத்தி**
*வரு 1, மீ 0, நாள் 18.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| ராகு | 1 | 26 | 42 |
| வியாழன் | 1 | 20 | 24 |
| சனி | 1 | 29 | 51 |
| புதன் | 1 | 23 | 33 |
| கேது | 0 | 22 | 3 |
| சுக்கிரன் | 2 | 3 | 0 |
| சூரியன் | 0 | 18 | 54 |
| சந்திரன் | 1 | 1 | 30 |
| செவ்வாய் | 0 | 22 | 3 |

**7-வது வியாழபுத்தி**
*மாதம் 11, நாள் 6.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| வியாழன் | 1 | 14 | 48 |
| சனி | 1 | 23 | 12 |
| புதன் | 1 | 17 | 36 |
| கேது | 0 | 19 | 36 |
| சுக்கிரன் | 1 | 26 | 0 |
| சூரியன் | 0 | 16 | 48 |
| சந்திரன் | 0 | 28 | 0 |
| செவ்வாய் | 0 | 19 | 36 |
| ராகு | 1 | 20 | 24 |

**8-வது சனிபுத்தி**
*வரு 1, மீ 1, நாள் 9.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| சனி | 2 | 3 | 10½ |
| புதன் | 1 | 26 | 31½ |
| கேது | 0 | 23 | 16½ |
| சுக்கிரன் | 2 | 6 | 30 |
| சூரியன் | 0 | 19 | 57 |
| சந்திரன் | 1 | 3 | 15 |
| செவ்வாய் | 0 | 23 | 16½ |
| ராகு | 1 | 20 | 51 |
| வியாழன் | 1 | 23 | 12 |

**9-வது புதபுத்தி**
*மாதம் 11, நாள் 27.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| புதன் | 1 | 20 | 34½ |
| கேது | 0 | 20 | 49½ |
| சுக்கிரன் | 1 | 29 | 30 |
| சூரியன் | 0 | 17 | 51 |
| சந்திரன் | 0 | 29 | 45 |
| செவ்வாய் | 0 | 20 | 49½ |
| ராகு | 1 | 23 | 33 |
| வியாழன் | 1 | 17 | 36 |
| சனி | 1 | 26 | 31½ |



## பரணி, பூரம், பூராடம் சுக்கிரதேசை வரு 20.

**1-வது சுக்கிரபுத்தி**
*வருஷம் 3, மாதம் 4.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| சுக்கிரன் | 6 | 20 | 0 |
| சூரியன் | 2 | 0 | 0 |
| சந்திரன் | 3 | 10 | 0 |
| செவ்வாய் | 2 | 10 | 0 |
| ராகு | 6 | 0 | 0 |
| வியாழன் | 5 | 10 | 0 |
| சனி | 6 | 10 | 0 |
| புதன் | 5 | 20 | 0 |
| கேது | 2 | 10 | 0 |

**2-வது சூரியபுத்தி**
*வருஷம் 1.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| சூரியன் | 0 | 18 | 0 |
| சந்திரன் | 1 | 0 | 0 |
| செவ்வாய் | 0 | 21 | 0 |
| ராகு | 1 | 24 | 0 |
| வியாழன் | 1 | 18 | 0 |
| சனி | 1 | 27 | 0 |
| புதன் | 1 | 21 | 0 |
| கேது | 0 | 21 | 0 |
| சுக்கிரன் | 2 | 0 | 0 |

**3-வது சந்திரபுத்தி**
*வருஷம் 1, மாதம் 8.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| சந்திரன் | 1 | 20 | 0 |
| செவ்வாய் | 1 | 5 | 0 |
| ராகு | 3 | 0 | 0 |
| வியாழன் | 2 | 20 | 0 |
| சனி | 3 | 5 | 0 |
| புதன் | 2 | 25 | 0 |
| கேது | 1 | 5 | 0 |
| சுக்கிரன் | 3 | 10 | 0 |
| சூரியன் | 1 | 0 | 0 |

**4-வது செவ்வாய்புத்தி**
*வருஷம் 1, மாதம் 2.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| செவ்வாய் | 0 | 24 | 30 |
| ராகு | 2 | 3 | 0 |
| வியாழன் | 1 | 26 | 0 |
| சனி | 2 | 6 | 30 |
| புதன் | 1 | 29 | 30 |
| கேது | 0 | 24 | 30 |
| சுக்கிரன் | 2 | 10 | 0 |
| சூரியன் | 0 | 21 | 0 |
| சந்திரன் | 1 | 5 | 0 |

**5-வது இராகுபுத்தி**
*வருஷம் 3.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| ராகு | 5 | 12 | 0 |
| வியாழன் | 4 | 24 | 0 |
| சனி | 5 | 21 | 0 |
| புதன் | 5 | 8 | 0 |
| கேது | 2 | 3 | 0 |
| சுக்கிரன் | 6 | 0 | 0 |
| சூரியன் | 1 | 24 | 0 |
| சந்திரன் | 3 | 0 | 0 |
| செவ்வாய் | 2 | 3 | 0 |

**6-வது வியாழபுத்தி**
*வருஷம் 2, மாதம் 8.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| வியாழன் | 4 | 8 | 0 |
| சனி | 5 | 2 | 0 |
| புதன் | 4 | 16 | 0 |
| கேது | 1 | 26 | 0 |
| சுக்கிரன் | 5 | 10 | 0 |
| சூரியன் | 1 | 18 | 0 |
| சந்திரன் | 2 | 20 | 0 |
| செவ்வாய் | 1 | 26 | 0 |
| ராகு | 4 | 24 | 0 |

**7-வது சனிபுத்தி**
*வருஷம் 3, மாதம் 2.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| சனி | 6 | 0 | 30 |
| புதன் | 5 | 11 | 30 |
| கேது | 2 | 6 | 30 |
| சுக்கிரன் | 6 | 10 | 0 |
| சூரியன் | 1 | 27 | 0 |
| சந்திரன் | 3 | 5 | 0 |
| செவ்வாய் | 2 | 6 | 30 |
| ராகு | 5 | 21 | 0 |
| வியாழன் | 5 | 2 | 0 |

**8-வது புதபுத்தி**
*வருஷம் 2, மாதம் 10.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| புதன் | 4 | 24 | 30 |
| கேது | 1 | 29 | 30 |
| சுக்கிரன் | 5 | 20 | 0 |
| சூரியன் | 1 | 21 | 0 |
| சந்திரன் | 2 | 25 | 0 |
| செவ்வாய் | 1 | 29 | 30 |
| ராகு | 5 | 3 | 0 |
| வியாழன் | 4 | 16 | 0 |
| சனி | 5 | 11 | 30 |

**9-வது கேதுபுத்தி**
*வருஷம் 1, மாதம் 2.*

அந்தரம்

| கிரகம் | மீ | நாள் | நாடி |
|---|---|---|---|
| கேது | 0 | 24 | 30 |
| சுக்கிரன் | 2 | 10 | 0 |
| சூரியன் | 0 | 21 | 0 |
| சந்திரன் | 1 | 5 | 0 |
| செவ்வாய் | 0 | 24 | 30 |
| ராகு | 2 | 3 | 0 |
| வியாழன் | 1 | 26 | 0 |
| சனி | 2 | 6 | 30 |
| புதன் | 1 | 29 | 30 |

**கார்த்திகை, உத்தரம், உத்தராடம். சூரியதேசை வருஷம் 6.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சூரியன் | 0 | 3 | 18 |
| சந்திரன் | 0 | 6 | 0 |
| செவ்வாய் | 0 | 4 | 6 |
| ராகு | 0 | 10 | 24 |
| வியாழன் | 0 | 9 | 18 |
| சனி | 0 | 11 | 12 |
| புதன் | 0 | 10 | 6 |
| கேது | 0 | 4 | 6 |
| சுக்கிரன் | 0 | 0 | 0 |

**ரோகிணி, அத்தம், திருவோணம். சந்திரதெசை வருஷம் 10.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சந்திரன் | 0 | 10 | 0 |
| செவ்வாய் | 0 | 7 | 0 |
| ராகு | 1 | 6 | 0 |
| வியாழன் | 1 | 4 | 0 |
| சனி | 1 | 7 | 0 |
| புதன் | 1 | 5 | 0 |
| கேது | 0 | 7 | 0 |
| சுக்கிரன் | 1 | 8 | 0 |
| சூரியன் | 0 | 6 | 0 |

**மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். செவ்வாதேசை வருஷம் 7**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| செவ்வாய் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| வியாழன் | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |

**திருவாதிரை, சுவாதி, சதயம். ராகுதேசை வருஷம் 18.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| ராகு | 2 | 8 | 12 |
| வியாழன் | 2 | 4 | 24 |
| சனி | 2 | 10 | 6 |
| புதன் | 2 | 6 | 18 |
| கேது | 1 | 0 | 18 |
| சுக்கிரன் | 3 | 0 | 0 |
| சூரியன் | 0 | 10 | 24 |
| சந்திரன் | 1 | 6 | 0 |
| செவ்வாய் | 1 | 1 | 18 |

**புநர்பூசம், விசாகம், பூரட்டாதி. வியாழதேசை வருஷம் 16.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| வியாழன் | 2 | 1 | 18 |
| சனி | 2 | 6 | 12 |
| புதன் | 2 | 3 | 6 |
| கேது | 0 | 11 | 6 |
| சுக்கிரன் | 2 | 8 | 0 |
| சூரியன் | 0 | 9 | 18 |
| சந்திரன் | 1 | 4 | 0 |
| செவ்வாய் | 0 | 11 | 6 |
| ராகு | 2 | 4 | 24 |

**பூசம், அனுஷம், உத்தரட்டாதி. சனிதேசை வருஷம் 19.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சனி | 3 | 0 | 3 |
| புதன் | 2 | 8 | 9 |
| கேது | 1 | 1 | 9 |
| சுக்கிரன் | 3 | 2 | 0 |
| சூரியன் | 0 | 11 | 12 |
| சந்திரன் | 1 | 7 | 0 |
| செவ்வாய் | 1 | 1 | 9 |
| ராகு | 2 | 10 | 6 |
| வியாழன் | 2 | 6 | 12 |

**ஆயிலியம், கேட்டை, ரேவதி. புததேசை வருஷம் 17.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| புதன் | 2 | 4 | 27 |
| கேது | 0 | 11 | 27 |
| சுக்கிரன் | 2 | 10 | 0 |
| சூரியன் | 0 | 10 | 6 |
| சந்திரன் | 1 | 5 | 0 |
| செவ்வாய் | 0 | 11 | 27 |
| ராகு | 2 | 6 | 18 |
| வியாழன் | 2 | 3 | 6 |
| சனி | 2 | 8 | 9 |

**அச்சுவினி, மகம், மூலம். கேதுதேசை வருஷம் 7.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |
| செவ்வாய் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| வியாழன் | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |

**பரணி, பூரம், பூராடம். சுக்கிரதேசை வருஷம் 20**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சுக்கிரன் | 3 | 4 | 0 |
| சூரியன் | 1 | 0 | 0 |
| சந்திரன் | 1 | 8 | 0 |
| செவ்வாய் | 1 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 |
| வியாழன் | 2 | 8 | 0 |
| சனி | 3 | 2 | 0 |
| புதன் | 2 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 |

**மகாதெசை கணிக்கும் வகை:** ஜனனகாலம் ஜன்ம நக்ஷத்திரத்தில் நின்ற நாழிகையை அந்நக்ஷத்திர தெசாவருஷத்தாற் பெருக்கி, அந்நக்ஷத்திர பரமநாழிகையாற் பிரிக்கவருவது வருஷம்; சேஷத்தை 12-ஆற் பெருக்கி ஷை தொகையாற் பிரிக்கவருவது மாதம்; சேஷத்தை 30-ஆற் பெருக்கிப் பிரிக்க வருவது நாள், சேஷத்தை 60-ஆற் பெருக்கிப் பிரிக்கவருவது நாழிகையாம்;



# மகாதெசாபுத்தி பலன்

மகாதெசாபுத்திகள் நடக்கும்போது, இராஜயோக வலிமை பெற்ற கிரகங்களும் கேந்திர திரிகோணபதித்துவம் பெற்ற கிரகங்களும் பாக்கியலாபாதிபதிக் கிரகங்களும் (தெசாபுத்திக்கு அதிபர்களானால்) சுபபலனைச் செய்வர்.

மகாதெசாபுத்திகளின் பலனை அறிவதற்கு முன்னே அவற்றின் நற்பலனைத் தடுத்தற்குரிய கிரகஸ்திதிகளை அறியவேண்டியது ஆவசியகமாதலால், அவைகளிற் பிரதானமானவை இங்கே குறிக்கப்படுகின்றன.

2-3-7-8-12-ம் இடங்களுக்கு அதிபர்களின் தெசாபுத்தி நடக்குங் காலமும் மிருத்துகாரகரின் தெசாபுத்திகளின் காலமும், பஞ்சசக்கரங்களில் தத்துக்கள் உண்டாகும் காலமும், ஒவ்வொரு தெசைகளிலும் வேதகனாக வருங் கிரகத்தின் புத்தியும், அஸ்தமனமான கிரகத்தின் தெசாபுத்திகளும், கோசரங்களில் குரூரஸ்தானங்களில் நிற்குங் கிரகங்களின் காலமும் சுபபலனுக்கு உரியனவல்ல.

கோசரமுந் தெசாபுத்தியுமாகிய இரண்டுந் தோஷமல்லாத காலமாயிற் சொல்லிய பலன் சரியாக நடக்குமென்றும். இரண்டுந் தீமையாக வரிற் சொல்லிய பலன் நடவாமல் தீமை சம்பவிக்கும் என்றும், ஒன்று தீதாகவும் ஒன்று நன்மையாகவும் வரில் இரண்டிலும் வலிமை பெற்ற கிரகங்களைக் கொண்டு பலன் அறிதல் வேண்டுமென்றும் பெரியோர்களுடைய சம்மதம்.

மகாதெசாபுத்தி பலன்களை அறியும்போது மேற்சொல்லியவைகளையும் அறிந்துகொள்ளல் வேண்டும். தெசாபுத்திகளின் பலனை அறியும்போது இலக்கினத்திலிருந்து சுபாசுபஸ்தானங்களை அறிவதுபோலவே தெசாநாதர்கள் இருந்த இடத்திற்குப் புத்திநாதர்கள் கேந்திர திரிகோண தன பாக்கிய லாபஸ்தானங்களிலே சுபாம்சம் பெற்றிருந்தால் அந்தப் புத்திகளில் சுபபலன் நடக்குமென்றும், தெசாநாதர்களுக்குப் புத்திநாதர்கள் 6-8-12-ம் இடங்களிலே குரூராம்சம் பெற்றிருந்தால் சுபபலன் நடவாதென்றும் அறிதல் வேண்டும்,

### மகாதேசைக்குப் போதகன் முதலியோர்

சூரியன் முதல் சனி வரை மகாதெசாபலன் அறியும்போது போதகன். வேதகன், பாசகன், காரகன் ஆகிய தொழிற் கிரகங்களையும் அறியவேண்டும். போதகன் முதலிய நால்வருள்ளும் வேதகன் மாத்திரம் நற்பலனைத் தடுத்தற்குரிய கிரகம். இராகு கேது தெசைக்கு இத் தன்மையில்லை.

| மகாதேசை | போதன் | வேதகன் | பாசகன் | காரகன் |
|---|---|---|---|---|
| சூரியதெசைக்கு | செவ்வாய் | சுக்கிரன் | சனி | வியாழன் |
| சந்திரதெசைக்கு | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செவ். தெசைக்கு | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புதன்தெசைக்கு | சந்திரன் | வியாழன் | செவ்வாய் | சுக்கிரன் |
| வியாழதெசைக்கு | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிரதெசைக்கு | வியாழன் | சனி | புதன் | சூரியன் |
| சனிதெசைக்கு | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | வியாழன் |

## சூரிய மகாதெசை வருஷம் 6.

பலன் :- பித்தாதிக்கம், இடம் விட்டுத் தேசசஞ்சாரஞ்செய்தல், தனது பந்துக்களுக்குள் துக்கச்சம்பவம், நிலையான பொருட்களுக்குக் கேடு. உத்தியோக பங்கம். ரோகபயம், சோரபயம், தன் முயற்சியினுல் அற்ப பலன் உண்டாதல், நாலுகாற் சீவன்களுக்குச் சேதம் உண்டாதல், அக்கினி பயம். சூரியன் இலக்கினத்துக்கு 3-ம், 6-ம் இடங்களில் இருந்தாற் பூமிப்பலன், சௌக்கியம், தனதானிய பலன், விவசாய பலன், பிதிர்பந்துக்களிற் பீடை, தேவபூஜை, பிராமணபக்தி, ஆசாரக்கிரியை செய்தல், இராஜபிரீதி உண்டாம்.

சூரியன் ஆட்சி உச்சமாகிச் சுபவர்க்கம் பெற்றுச் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் குதிரை முதலிய வாகனங்கள் சேருதல், முயன்ற காரியஞ் சித்தியாதல், வியாபார பலிதம், பிரபுக்களினுற் பிரீதி உண்டாம்.

சூரியன் நீசமாகி 8-12-ம் இடங்களில் இருந்தாலும் குரூரத் தானுதிபர்களோடு கூடினுலும் துக்கம். தரித்திரம், பீடை உண்டாம்.

சூரியன் மாரகத் தானுதிபர்களோடு கூடினுல் தேக மெலிவும், இருமாரக சம்பந்தமானுல் கடின பீடையும் உண்டாம்.



### சூரிய மகாதேசையிற் சூரியபுக்தி மாதம் 3, நாள் 18.

சூரியன் உச்சம், ஆட்சி, கேந்திர திரிகோணங்களில் இருந்தால் தேகசுகம், வாகன பூஷணுதிகள், பூமி, பசு, திரவிம் உண்டாம்.

சூரியன் பாபராசியிலே பாபியாய் இருந்தால் சேர்ர ரோகாக்கினி பீடை. கடன்கொடுக்கக் கஷ்டப்படுதல், அரசர் பகை, தொழிற் குறைவு, சித்தப்பிரமை, சிர நேத்திர ரோகம் உண்டாம்.

சுபபலனும் பாபபலனும் சமமாக இருந்தால் சமமான பலனுகச் சொல்லப்படும்.

### சூரிய மகாதேசையிற் சந்திரபுத்தி மாதம் 6.

சந்திரன் கேந்திர திரிகோணங்களிலே பூரணனுக நின்ருல் தனதானிய விருத்தி, கிருக விருத்தி, பசு விருத்தி, விவாககாரியப் பிரயக்தனம், வாகனம் உண்டாம்.

சந்திரன் உச்சம்பெற்று அதிக பெலனேடு தரும கருமாதிபதிகளோடு சம்பந்தமானுல் தாரபுத்திர சுகம், இராஜப்பிரீதி, இஷ்டசித்தி, திரவியவிருத்தி, பகைநிவாரணம், பந்துசுகம் உண்டாம்.

சந்திரன் நீசம் பெற்றுப் பாபியாய் அஷ்டமாதிபதியுடன் கூடினுல் சீதளச்சுரம், ரோகபயம், தாரபுத்திரருக்கு மிருத்துப்பீடை, சத்துருபீடை, கலகம், தனதானிய விரயம் உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்குத் தன பாக்கிய லாப கேந்திர திரிகோணங்களில் இருந்தால் தானியவிருத்தி, இராஜப்பிரீதி, புத்திர விருத்தி, மன உற்சாகம், இடம் மாறுதல், அன்னியதேசம் போயிருந்தால் ஊர் வந்து சேருதல், புண்ணியகைங்கரியம், ஆலய தடாகாதிகள் உண்டுபண்ணுதல், தேவபக்தி, சத்துருநாசம், இஷ்டான்ன போசனம் உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் பொருட்சேதம், பந்துத்துவேசம், மித்துருத்துவேஷம், சத்துருசோரபீடை, இராஜவிரோதம், மிருத்துப் பீடை உண்டாம்.

சந்திரன் 7-ம் இடத்தில் மாரகாதிபதிகளோடு சம்பந்தமானுல் அவமிருத்துதோஷம் உண்டாம். வெண்ணிற வஸ்திரந் தானஞ்செய்ய விதி.

சூரிய மகாதேசையில் செவ்வாய் புத்தி மாதம் 4, நாள் 6.

செவ்வாய் லெக்கினத்திற்குக் கேந்திர திரிகோணங்கள், ஆட்சி வீடுகள், தனலாப ஸ்தானங்கள், 3-ம் இடங்கள் இவைகளில் இருந்தால் பூமிப்பலன், வியாபாரபலன், பாக்கியவிருத்தி, தனதானிய விருத்தி, சிவந்த நிறமுள்ள வஸ்திராபரணலாபம், ஜனுதிகாரம், சத்துரு ஜயம், இராஜப்பிரபுக்கள் மூலமாக வாகனபூஷணுதிகள் கிடைத்தல் உண்டாம்.

செவ்வாய் நீசமாகிப் பாபியோடு கூடி 6-8-12-ம் இடங்களில் இருந்தால் பாபகருமஞ் செய்தல், இராஜத்துவேஷம், சத்துருபயம், சுயபந்துக்களுள் நாசம், தாரபுத்திரக்கேடு, எடுத்த காரியம் அபஜயம். தேகத்தில் இரணபீடை, அக்கினிபயம், மனஸ்தாபம், வியாச்சியம், சரீரவரட்சி, பொருட்சேதம், பூமிப்பலன் குறைவுண்டாம்.

செவ்வாய் இலக்கினுதிபதியோடு கூடினுற் சுகம், இராஜயோகம், தனலாபம் உண்டாம். கேந்திரத்தானத்திலிருந்து மாரகனேடு கூடினுல் மூத்த சகோதர பீடை, சத்துருபீடை, அற்பசுகம், அற்பலாபம், அன்னத்துவேஷம் இராஜபயம் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானத்தில் இருந்தால் சில தருமஞ் செய்தல், சமமானசுகம், சமமானலாபம், ஸ்தானப்பிரஷ்டம், புத்திர பீடை, துர்ச்கிரியைசெய்தல், பந்துஜனப்பீடை உண்டாம்.

செவ்வாய் மாரகத்தாஞதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப் பீடை உண்டாகும். செவ்வாய்க்கு ஜபம், அன்னதானஞ் செய்ய விதி.

சூரிய மகாதேசையில் இராகுபுத்தி மாதம் 10, நாள் 24.

இராகு இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் தனச்சேதம், சோரபயம், இராஜமூலத்தில் தனவிரயம், தாரபுத்திர சுகவீனம், சத்துருபயம், விஷபயம் உண்டாம்.

இராகு உச்சம்பெற்று இலக்கினுதிபதியோடு கூடினுலும், சுபருடன் கூடிச் சுபர்திருஷ்டி பெற்ருலும், தேக ஆரோக்கியம், சுபம், தனதானியலாபம், வஸ்திராபரண வாகன பலன், விவசாயம் கொடுக்கல்வாங்கல் இவைகள் பலனுதல், அகாலபோசனம் உண்டாம்.

இராகு இலக்கினத்துக்கு 6-8-12-ம் இடத்தில் பாபியோடு கூடினுல் பூமி நஷ்டம், சோரபயம், நாலுகாற்சீவன்களிற் சில நஷ்டமடைதல், கிருகப் பிரவேசம் உண்டாம்.



இராகு தெசாநாதனுக்கு 6-8-12-ம் இடத்தில் பாபியோடு கூடியிருந்தால் இராஜதண்டனே, சோராக்கினி பயம். கிருகபீடை, பொருள்நஷ்டம், பிராணபயம், சுரம் குன்மமார்வது க்ஷயமாவது வருதல், தானப்பிரஷ்டம், விஷபீடை இவை உண்டாம்.

இராகு இலக்கினுதிபதியோடு கூடிச் சுபர்திருஷ்டி பெற்ருல் அதிககீர்த்தி, பாக்கியவிருத்தி, தாரபுத்திர சுகம், வீட்டில் விவாகாதி சுபகரும சம்பவம், தானிய விருத்தி உண்டாம். மாரகத்தாஞதிபதிகளோடு கூடினுலும், அவர்களின் பார்வைபெற்ருலும் மிருத்துப்பீடை, விஷபயம் உண்டாம். இராகுவுக்கு எருமை தானஞ் செய்ய விதி.

சூரிய மகாதேசையில் வியாழ புத்தி மாதம் 9, நாள் 18.

வியாழன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் ஆட்சி வீடுகளிலாவது தனலாபஸ்தானங்களிலாவது தெசாநாதனுடன் கூடினுல் விவாகம், இராஜதரிசனம், தனதானிய லாபம், ஆரோக்கியம், புத்திரசுகம், தேகபுஷ்டி, இராஜப்பிரீதி, வஸ்திராபரணம். குதிரை முதலிய வாகனலாபம், கீர்த்தி, இஷ்டசித்தி தாமதத்தில் உண்டாதல், அனுபவம், சமானமான ஜனங்களின் மரியாதை பிரியம், சத்துரு ஜயம் உண்டாம்.

வியாழன் தரும கருமாதிபதிகளோடு கூடினுல் இராஜமூலத்தில் உத்தியோகம், வாகனம், அதிகாரம் உண்டாம்.

வியாழன் நீசமாய்ப் பாபியுடன் கூடினுல் பாவத்தொழில் செய்தல், வீணுகப் பொருள் நஷ்டம், தேசப்பிரஷ்டம், பயம், இராஜகோபம், இஷ்ட பந்துக்களுள் நஷ்டம் உண்டாம்.

வியாழன் தெசாநாதனுக்குக் கேந்திரத்தில் இருந்தால் புத்திரபலன், ஐசுவரியம், சற்கருமங்கள் செய்தல், ஆரோக்கியம் சிவபூஜை, விஷ்ணுபூஜை, தனதானிய விருத்தி, புராணகாவியங்களேக் கேட்டல், தடாகம், கோபுரம் முதலியவை இயற்றுவித்தல் உண்டாம்.

தெசாநாதனுக்கு 9-ல்இருந்தால் தேவப்பிரதிஷ்டை. மந்திரசித்தி, குருபக்தி, வாகனம், பூஷணம் உண்டாம்.

வியாழன் தெசாநாதனுக்கு 11-ல் இருந்தால் சத்துரு ஜயம், திரவியலாபம், பூமி, வீடு முதலியவை உண்டாம்.

வியாழன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியோடு கூடியிருந்தால் இராஜபயம், சோரபயம் உண்டாம். புத்தி முதலில் எப்போதும் விசனமும், கடைசியிற் சுப பலனும் உண்டாம்.

வியாழன் மாரகத்தானாதிபதிகளோடு சம்பந்தமானால் தேகபீடை உண்டாம். வியாழனுக்குச் சுவர்ண தானம், உருத்திராபிஷேகம், பசுத்தானஞ் செய்ய விதி.

சூரிய மகாதேசையில் சனிபுத்தி மாதம் **11,** நாள் **12.**

சனி இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோண சுவக்ஷேத்திரங்களிற் சுபர்பார்வை பெற்றிருந்தால் தன தானிய பாக்கிய விருத்தி, சத்துருநாசம், மனஉற்சாகம், விவாகசம்பிரமம், சுபகருமஞ்செய்தல், பூமிலாபம், பந்துஜனமரியாதை, கல்விவிருத்தி, இராஜசேவை உண்டாம்.

சனி பாபர்களோடு சம்பந்தமும் பார்வையும் பெற்றால் இராஜவிரோதம், பந்துக்கள் கலகம், பொருட்சேதம், காரியநஷ்டம், மித்துரு கிலேசம், நாலுகாற்சீவ நஷ்டம், சத்துருபகை உண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபர் சம்பந்தமானால் தாரபுத்திரப் பிரிவு, தேசசஞ்சாரம், இராஜபயம், மானநஷ்டம், சத்துருபயம், சூனியம் பிசாசு முதலியவற்றாற் பயம், தேவநிந்தை, குருநிந்தை, பணமில்லாமை, விவசாயம் பசு முதலியவை நஷ்டம் உண்டாம். புத்திமுதலில் சொற்ப பலன் உண்டாம்.

தெசாநாதனுக்கு லாபஸ்தானத்தில் இருந்தால் தன தானிய லாபம், கறுப்பு வஸ்துக்களின் பலன் உண்டாம்.

சனி மாரகத்தானாதிபதிகளோடு சம்பந்தமானால் அவமிருத்து பயம் உண்டாம். மிருத்துஞ்ஜய ஜபஞ் செய்ய விதி.

சூரியமகாதேசையில் புதன்புத்தி மாதம் **10,** நாள் **6**

புதன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் சுயக்ஷேத்திரம் பெற்றுச் சுபர்களுடன் கூடிப் பெலத்திருந்தால் மனஉற்சாகம், இராஜயோகம், தன தானிய விருத்தி, நித்தியகருமக் கிரமம், வித்தியா லாபம், கலைக்ஞானம் அறிதல், பிரபுக்களிடம் கீர்த்தி, வஷ்திரபூஷணங்கள், வாகனம், புண்ணியதீர்த்த பலன், வேளாண்மைப் பலன் போசனசுகம் இவைகள் உண்டாம்.



புதன் பாக்கிய லாபாதிபதிகளோடு கூடி 5 - 9-ல் இருந்தால் திரவியலாபம். இராஜப்பிரீதி, தேவப்பிராமண பக்தி, விவாகபலன் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6 - 8 – 12-ல் நீசனாய் இருந்தால் புத்தி முதலில் சுகமும், பின்பு இராஜவிரோதம், பல நஷ்டம், நோய், பீடையும் உண்டாம்.

புதன் மாரகத்தானாபதிகளோடு கூடினால் அவமிருத்து பீடை உண்டாம். புதனுக்கு விஷ்ணுஜபஞ் செய்யவிதி.

சூரிய மகாதேசையில் கேதுபுத்தி மாதம் **4,** நாள் **6.**

தேகபிணி, பொருள் நட்டம், சுயபந்துக்களாற் காரியநஷ்டம், நிலைப்பிரிவு, விரோதம், விஷயம்உண்டாம்

கேது இலக்கினாதிபதியுடன் கூடினால் புத்திமுதலில் சுகம், பொருள் வரவு, புத்திநடுவிலும் கடைசியிலும் துக்கம், மரணக்கேள்வி உண்டாம்.

கேது இலக்கினத்துக்கு 6-8-12-ல் பாபருடன் கூடினால் சிரரோகம், பல்நோய், விஷவிருத்தியாகும் நோய், இடமாற்றம், சிநேகத்துரோகம், பிதுர்வழி மிருத்துப் பீடை உண்டாம்.

கேது இலக்கினத்திற் சுபருடன் கூடினால் பொருள் லாபம், சற்கருமங்கள் செய்தல், சுபகாரியஞ் செய்தல், புத்திரப்பேறு, சந்தோஷம், குதிரை முதலிய வாகன லாபம் உண்டாம்.

கேது தெசாநனுக்கு லாபத்தானத்தில் இருந்தால் சுபபலன் உண்டாம்.

கேது மாரகத் தானாதிபதிகளோடு சம்பந்தமானால் அவமிருத்து. கேதுவுக்குத் துர்க்காதேவி ஜபஞ்செய்யவிதி

சூரிய மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் **1**

சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் சுவக்ஷேத்திரம் பெற்றிருந்தால் அதிகசுகம், சாதுக்கள் தரிசனம், பிராமண விசுவாசம், இஷ்டமான பெண்களுக்குச் சுகம், பிரயாணம் போய்வருதல் உண்டாம்.

சுக்கிரன் பாபிகளோடு கூடினும் நீசமாயினும் 6-8-12-ல் இருந்தாலும் புததிரசுகவீனம், வீடுவாசல் பூமிகளுக்குப் பீடை, மாமன்வழிப் பந்துக்களின் விசனம், உத்தியோக பங்கம், தேகபிணி, சத்துருபீடை, வீட்டிற் கலகம், இராஜவிரோதம், ஸ்திரீ விரோதம், மனஸ்தாபம், அற்பசுகம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தன லாபத்தானத்தில் இருந்தால் இராஜப்பிரீதி உற்சாகம், கீர்த்தி, தனலாபம், ஸ்திரீசௌக்கியம், புத்திரசுகம், தேவப்பிராமண பக்தி, இராஜமுன்னிலையிற் போக்குவரவு, வஸ்திர பூஷண லாபம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியுடன் கூடினால், இராஜகோபம், தன விரயம், ஸ்திரீ புத்திர பீடை உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிகதிகளோடு கூடினால் அவமிருத்துப் பீடை வரும். சுக்கிரனுக்கு எருமை தானஞ் செய்ய விதி.

சந்திரன் மகாதேசை வருஷம் 10.

பலன்:—ஐசுவரியம், மாதுருசுபம், தருமார்த்த லாபம், வாகனம், சத்துருஜயம், விவசாய விருத்தி, புத்திரபலன், சந்தோஷம், போசன சௌக்கியம் உண்டாம்.

சந்திரன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் தனலாபத்தில் உத்தமாங்கிஷ சுயவர்க்கம் பெற்றிருந்தால் பொருள்வரவு, பூமிப்பலன், புத்திரபலன், பசு விருத்தி, விவேகம், கல்விப்பேறு, இராஜமரியாதை உண்டாம்.

சந்திரன் 6-8-12—ம் இடங்களுக்கதிபதியோடு கூடி நீசமானால் களத்திர புத்திர பீடை, தனதானிய நஷ்டம், ஜலபயம், தேசசஞ்சாரம், சுகக்குறைவு உண்டாம். இவை பொதுப்பலன். இதில் முற்கூறு சந்தோஷம், கீர்த்தி. நடுக்கூறு தாரபுத்திரர் வீடு பொருள் இவற்றென்றுற் பீடை. கடைக்கூறு சுகம், கீர்த்தி, இஷ்ட போசனம், ஆபரண பூஷண லாபம் உண்டாம்.

சந்திரன் மகாதேசையிற் சந்திரபுத்தி மாதம் 10.

இராஜப்பிரீதி, விவாகம், புத்திரபலன், கிராமாதிகாரம், வாகனம் உண்டாம்.

சந்திரன் கேந்திர திரிகோண இலாபத் தானங்களில் சுபரோடு கூடியிருந்தால் இராஜயோகம், கீர்த்தி, சுகம், தேவபக்தி, சுபசோபனாதிகள் உண்டாம்.

சந்திரன் பூர்வபக்ஷசந்திரனாய் 4-ல் இருந்து பாக்கிய கருமாதிபதிகளோடு சம்பந்தமானால் தேவபக்தி, புராண காவியம் அறிதல், புண்ணியதீர்த்த பலன் உண்டாம்.



சந்திரன் 6-8-12-ல் நீசனாக இருந்தால் மனவியாகுலம், கோபம், இராஜவிரோதம், தேக ஆயாசம், பொருட்செலவு, வடதிசையிற் பிரயாணஞ் சம்பவித்தல், இஷ்ட ஜனங்களாற் கஷ்டம் வருதல் உண்டாம்.

சந்திரன் ஆறாதிபதியோடாவது செவ்வாயோடாவது கூடினால் ஆயுதபயம், மித்துருபந்துக்கேடு, தன் எசமானுக்குக் கேடு உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துப் பிணி உண்டாம். சந்திரனுக்குத் தேவி வழிபாடு செய்து பசுத்தானஞ் செய்ய விதி.

சந்திரன் மகாதேசையில் செவ்வாய்புத்தி மாதம் 7.

செவ்வாய் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோண சுவக்ஷேத்திரங்களில் இருந்தால் மரியாதை, தேகசுகம், இராஜப்பிரீதி, முயன்ற காரியஞ் சித்திபெறுதல், பூமிப்பலன், வீட்டுத் திருத்தம், செல்வவிருத்தி, வஸ்திராபரணச் சிறப்பு உண்டாம்.

செவ்வாய் 6-8-12-ம் இடங்களில் பாபிகளுடன் கூடிச் சத்துரு வீட்டிலிருந்தால் நல்ல காரியங்களைச் செய்தாலும் இராஜபயம், அபகீர்த்தி, சுயஜனங்களின் நிஷ்டூரமான வாக்கு, கலகம், துக்கம், தேசாந்தரந் திரிதல், தேகத்தில் உஷ்ணரோகம், அதிக விசனம், சோராக்கினி பயம், பொருள் நஷ்டம், சித்தப்பிரமை, பெண் விஷயமாகத் துயரம் உண்டாம்.

செவ்வாய் ஆட்சிவீட்டில் லாபஸ்தானம் பெற்றுச் சுபர் பார்வையோடிருந்தால் வாகனபலன். பசு விருத்தி தனதானிய சம்பத்து, வஸ்திராபரண பலன், விவசாய விருத்தி உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண இலாபங்களில் இலக்கினாதிபதி முதலிய நற்பலனுக்குரிய கிரகங்களோடு கூடினாலும், 5-9-10-க்குரிய அதிபதிகளுடன் கூடினாலும் இராஜ அனுகூலம் தனதானியவிருத்தி, பலவகையான தொழில் விருத்தி, வாகன பூஷணபலன், இரத்தினாபரணப்பேறு, பூமிப்பேறு, இராஜாபிமானம், புத்திர மித்திர களத்திர சுகம் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்காயினும் இலக்கினத்துக்காயினும் மாரகாதிபதிகளோடு சம்பந்தமானால் தேக பிணி, இரணபீடை ஆயாசம், மனோவியாகுலம், தனவிரயம், அவமிருத்துதோஷம் உண்டாம். செவ்வாய்க்குச் சுப்பிரமணிய அருச்சனை, வழிபாடு செய்ய விதி.

**சந்திரன் மகாதேசையில் இராகுபுத்தி வருஷம் 1, மாதம் 6.**

இராகு சுபர்களோடு கூடிச் சுபர்திருஷ்டி பெற்றாலும், இலக்கினாதிபதியுடன் கூடிக் கேந்திர திரிகோண உச்ச ராசியிலிருந்தாலும், புத்திமுதலில் சுகம், லாபம், சத்துரு ஜயம். மத்தியில் சோரபயம், இராஜபயம். கடைக்கூற்றில் தனதானிய விருத்தி, பிரபுக்கள் கூட்டம், மேற்றிசையிலிருந்து பலனடைதல் உண்டாம்.

இராகு அஷ்டமாதிபதியோடு சம்பந்தமானால், கட்டுப்பாடு, இராஜதண்டனை உண்டாம். செவ்வாயுடன் கூடினால், ஆயுதபயம் உண்டாம். சுபர்சம்பந்தமாயிருந்தால் பிரபுக்களாற் பலன். ஆரோக்கியம், கீர்த்தி, தனதானியலாபம், ஸ்திரீலாபம் உண்டாம்.

இராகு தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியோடு கூடியிருந்தால் பொருள் நஷ்டம், தாரபுத்திர பீடை, அவமிருத்துப் பயத்தினால் வியாதி, நிலைப்பிரிவு, சத்துரு விருத்தி, விஷபீடை, பாபகர்மம் உண்டாம்.

இராகு தெசாநாதனுக்கு லாபஸ்தானத்தில் சுபாம்சத்தில் இருந்தால் லாபம், சுகம், தனதானிய விருத்தி, அன்னியதேச சஞ்சாரம். குடும்பத்தில் தானல்லாத மற்றைய ஜனங்களுட் பிணிபீடை உண்டாம்.

இராகு மாரகாதிபர்களோடு சம்பந்தமாக மாரகத்தானங்களில் இருந்தால் அவமிருத்துதோஷம் உண்டு. இராகுவுக்கு ஆடு தானஞ் செய்ய விதி.

**சந்திரன் மகாதேசையில் வியாழபுத்தி வருஷம் 1, மாதம் 4**

வியாழன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் ஆட்சி வீட்டிலிருந்தால் புத்திரசுகம், வாகன பலன்; அலங்காரத்துக்குரிய வஸ்திராபரணங்கள், தேவப்பிராமண பூஜை, இராஜப்பிரீதி, திரவிய வரவு, இஷ்டதேவதா அனுக்கிரகம், கங்காஸ்நானம் முதலிய தீர்த்தஸ்நான பலன், வீட்டில் சம்பவங்கள் நடத்தல், பசு முதலியவை சேருதல் உண்டாம்.

வியாழன் 6-8-12-ம் இடங்களில் பாபிகளோடு கூடி நீசம அஸ்தபனம் முதலிய தோஷங்களை அடைந்தால் புத்திர பீடை, தன்னுடைய குருவுக்குப் பீடை, தனநாசம், நிலைப்பிரிவு, வாகன நஷ்டம், தன்னுடைய பொருள், தன்முன்னோரால் தனக்குக்கிடைத்த பொருள் இவைகளுக்கு நஷ்டம் உண்டாம்,



வியாழன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தன தனலாபங்களில் இருந்தால் சுகபோசனம், வீட்டில் சுபகாரியங்கள் நடத்தல், பிரபுக்கள் தரிசனம், கீர்த்தி, வாகன வஸ்திர பூஷண லாபம், தனலாபம், குடும்ப விருத்தி, குருபக்தி, பிராமண பக்தி, அன்னதானஞ் செய்தல், யாகாதிகருமங்கள் செய்தல், இராஜ அனுசரிப்பு, செய்யுங் காரியங்களில் பொருள் வரவு, வெற்றி உண்டாம்.

வியாழன் மாரகாதிபர்களோடு சம்பந்தமானால் அவமிருத்துத் தோஷம் உண்டாம். குருவுக்கு மிருத்துஞ்ஜய ஜபம், சுவர்ணதானஞ் செய்ய விதி.

**சந்திரன் மகாதேசையில் சனிபுத்தி வருஷம் 1, மாதம் 7.**

சனி இலக்கினத்துக்கு இலாப கேந்திர திரிகோணங்களில் சுபாம்சம் பெற்றிருந்தால் அற்ப சௌக்கியம், சொற்ப லாபம், எடுத்த காரியங்களுக்கு விக்கினம், சுயபந்துவிரோதம், மனப்பயம், துக்கம், பசு முதலிய மிருக நஷ்டம், அன்னிய தேச சஞ்சாரம், சுகவீனம் உண்டாம்,

சனி தெசாநாதனுக்குக் கேந்திர திரிகேணங்களில் உச்ச ஆட்சி வீடுகளில் 3-6-11-ம் இடங்களில் இருந்தால் பூமிப்பலன், புத்திரலாபம், நூதனமான கிருகம், சுபசமீபவங்கள் நடத்தல், இராஜ சினேகம், விசேஷ பூஷணங்கள் வாசனாதிரவியங்கள் சேருதல், எண்ணிச கருமம் அனுகூனமாதல், கிராமாதிகாரம், சொற்ப ஜனங்களுக்காயினுந் தலைமைவகித்தல் உண்டாம்.

சனி -8-12-ம் இடங்களில் நீசமாகிச் சுபக்கிரகங்களுபன் கூடினால் சுபபலன் உண்டாம். பாபரோடு கூடினால் குடும்பசுகக்குறைவு, பிதிர் மாதுரு பீடை, குன்மத்துக்குரிய அசீரணம் வாரு வாத ரோகம் இவற்றில் ஒன்று சம்பவித்தல், அந்நிய ஸ்திரீகளோடு சகவாசஞ் செய்தல் உண்டாம்.

சனி மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் வாதம் முதலிய பிணி காணப்படும். சனிக்கு திலதைலதானம் முதலியவை செய்ய விதி.

**சந்திரன் மகாதேசையில் புதன்புத்தி வூ 1, மாதம் 5.**

புதன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோண தன லாப ஆட்சி வீடுகளில் இருந்தால் வித்தியாவினோதமான கேள்வி ஆராய்ச்சிகளும், கல்வித்திறமையும், வியாபார மூலமாய் லாபமும், சுயஜனங்களால் சந்தோஷமும்,

இராஜப்பிரீதியும், அபூர்வமான வஸ்திரம் முதலிய பொருட்கள் கிடைத்தலும், குதிரை முதலிய வாகனங்கள் சேருதலும், விரைவாக விவேகஞானம் சாஸ்திர ஆராய்ச்சி உண்டாதலும், ஒருகாரியம் மூலமாகப் பொருள் நஷ்டம் உண்டாகி அதிலிருந்து அதிக கவனமும் உண்டாம்.

புதன் 6-8-12-ம் இடங்களில் நீசமாகிப் பாபிகளோடு கூடியிருந்தால் புத்தி முதலில் தேகபிணி. தார புத்திரர்களுக்கு வாத பித்த அசீரண ரோகங்கள் உண்டாதல், தேசசஞ்சாரம், இராஜபயம், சோராக்கினி பயம் உண்டாம்.

புதன் இலக்கினாதிபதியுடன் கூடினால் முற்கூற்றில் பொருட் பலன், இராஜப்பிரீதி, தேகசுகம் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபத்தில் இருந்தால் விவாகாதி சுபபலன்கள், தருமச்செய்கை முதலிய சற்கருமங்கள் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் அல்லது இந்தத்தானங்களுக்கு அதிபதிகளோடும் பாபியோடும் கூடினால் நோய், வியாகுலம், சிரரோகம், துர்க்கிருத்தியஞ் செய்தல், காரியவிக்கினம் உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளுடன் சம்பந்தமானால் அவமிருத்து தோஷம் உண்டாகும். புதனுக்கு விஷ்ணுஜபம் முதலிய வழிபாடு செய்ய விதி.

**சந்திரன் மகாதேசையில் கேதுபுத்தி மாதம் 7.**

கேது கேந்திர திரிகோணங்களில் இலக்கினாதிபதி அல்லது சுபருடன் கூடி உச்சத்தில் இருந்தாலும், சுபர் பார்வை பெற்றாலும், விவாகப்பிராப்தி, இராஜப்பிரீதி, விவசாயம் அனுகூலமடைதல், பசு எருது முதலிய மிருக லாபம் உண்டாம்.

கேது மேற்சொல்லிய தானங்களில் பாபியோடு கூடினால் தேசசஞ்சாரஞ் செய்வதில் அலைச்சல், சத்துருபீடை, சூனியரோகம் உண்டாதல், வியாச்சியஞ் சம்பவித்தல் பந்துஜனப் பீடை, மனவியாகுலம் உண்டாம்.

கேது மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாகும். கேதுவுக்கு வெள்ளியினால் நாகம் செய்வித்துத் தானஞ் செய்ய விதி.



**சந்திரன் மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 1, மாதம் 8**

சுக்கிரன் இலக்கினத்துக்கு லாப கேந்திர திரிகோணங்களில் அதிகபெலன் அடைந்த கிரகத்தோடு கூடினால் இராஜயோகத்துக்கு உரியபலன் நடக்கும்.

சுக்கிரன் 2-4-7-ம் இடங்களில் இருப்பினும், 2-4-7-ம் இடங்களுக்கு அதிபர்களோடு கூடினாலும் நூதனமான வஸ்துக்கள் கிடைத்தல், தனக்கு இஷ்டமான போசன வாகன பூஷணாதிகள் கிடைத்தல, பசு முதலிய சீவபலம், தாரபுத்திர சௌக்கியம், தனக்குத் திருப்தியான சயன சுகம், ஸ்திரீ ஜனங்களாற் சுகபலன் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுடன் கூடினால் அதிகாரஞ் செலுத்துதல், வீட்டில் லக்ஷ்மிவிலாசமாய் இருத்தல், சுப காரியங்கள் நடத்தல், கீர்த்தி, கல்வியினாற் சுகபலன் உண்டாதல், பிதிர் மாதுரு பந்துசுகம் உண்டாம்.

சுக்கிரன் நீசமாய் அஸ்தமனத்தில் பாபியோடு கூடியிருப்பினும், செவ்வாயின் பார்வைபெற்றாலும், பூமி நஷ்டம், சிரசில் நோய், அலைச்சல், களத்திர சுகவீனம், வாகனக்கேடு, இராஜகோபம் உண்டாம்.

சுக்கிரன் ஆட்சி உச்ச வீட்டில் பாக்கியாதிபதியோடு கூடினால் செல்வ விருத்தி, தவப்பயன், தானதருமங்கள் செய்தல், தேவபக்தி, பூமிலாபம், தாரபுத்திர சுகம், பூஷணச்சிறப்பு, மனஉற்சாகம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்குத் தனலாப கேந்திர திரிகோணங்களில் இருந்தால் அதிக கீர்த்தி, சுகம். இராஜப்பிரீதி, வீடுவாசல் திருத்தமாய் விருத்தியடைதல், வித்தியாவிநோதஞ் செய்தல், வாகனம் பசு சேருதல், விவசாயத்தினாற் பலன், சாதுக்களுக்குப் போசனஞ் செய்வித்தல், மதுரமான நல்ல போசனங் கிடைத்தல், தன்னுடைய ஸ்திரீக்கு அதிக கீர்த்தி, சுகம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியோடு கூடினால் அதிக கஷ்டம், அநேக ஜனங்களுக்குச் சத்துருவாதல், கலகம். பந்து ஜனவெறுப்பு, பரஸ்திரீ மோகம், சத்துரு விருத்தி, பொருட்குறைவு, தாரபுத்திர பீடை, இராஜபயம், அந்நியதேச சஞ்சாரம் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் வரும். சுக்கிரனுக்கு உருத்திரஜபம் வெள்ளித் தானஞ் செய்ய விதி.

சந்திரன் மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 6.

சூரியன் கேந்திர தன லாபத்தில் ஆட்சி வீட்டில் அதிக பெலனோடு இருந்தால் முன் நஷ்டமான பொருள் உத்தியோகம் முதலியவை திரும்பக் கிடைத்தல், வீட் சுபசோபனதிகள் நடத்தல், சிநேக பிரபுக்களினால் அனுகூலம், பூமிலாபம் உண்டாம். புத்தி முடிவில் தேகத்திற்கு ஒரு பிணி உண்டாம்.

சூரியன் 8-12-ம் இடங்களில் பாபியோடு கூடிப் பாபர்திருஷ்டி பெற்றிருந்தால் மனோவியாதி, குன்மம், வாதபித்தம், பிதிர்வர்க்கத்தில் விசனம். நாற்காற் சீவன்களுக்குக் கேடு, சத்துரு அக்கினி அரசர் பயம் உண்டாம்.

சூரியன் இலக்கினாதிபதி பாக்கியாதிபதிகளோடு கூடினால் முற்கூற்றில் சுகம். பிற்கூற்றில் மானபங்கம், விசனம், பிதிர் மாதுருபீடை உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தில் இருந்தால் தேகசுகம், வஸ்திர பூஷண லாபம் மனஉற்சாகம், சந்தோஷம், சாஸ்திரவிசாரணை உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு -8-12-ல் பாபியோடு கூடினால் இராஜபயம் திருடர், அக்குனி இவற்றொன்றாற் பீடை, சுரம் குன்மம் அதிகாரம் இவைகளில் ஒன்று காணப்படுதல் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துத் தோஷம் வரும். இதற்குச் சூரிய நமஸ்காரஞ் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசை வருஷம் 8.

பலன்:—தேகசுகக்குறைவு, இராஜகோபம், சோராக்கினிபயம், விசனம், சிரரோகம், கலகம், பூமிநஷ்டம் கண்ணோய், பிசாசுபயம், சத்துருபீடை, குடும்பப் பிரிவு, வீட்டிற் சில பீடை, பிரயாணம், புத்திரபீடை உண்டாம்.

செவ்வாய் ஆட்சி உச்சங்களில் 8-6-10-ம் இடங்களில் இருந்தால் அதிக பொருள்வரவும், பிரபுக்கள் மதிப்பும், புத்திர மித்திர களத்திர சகோதர வர்க்கங்களில் அதிக பலனும் உண்டாம்.

செவ்வாய் நீசாஸ்தனங்களிங் பாபியாய் இருந்தால் புத்திரர் மித்திரர்களுளாயினும் வீடு பசுக்களிலாயினும்



ஒரு பீடை உண்டாதலும், தேகத்தில் மேகரோகம் குன்ம ரோகங்களில் ஒன்றுக்குரிய காரணங்கள் உண்டாதலும், சகோதரபீடை, பொருட்சேதம், சோரர் அக்கினி ஆயுதம் இவற்றொன்றாற் பீடை வருதலும் உண்டாம்.

செவ்வாய் மகாதேசையில் செவ்வாய்புத்தி மாதம் 4, நாள் 27.

செவ்வாய் கேந்திர திரிகோணங்களில் இலக்கினாதிபதியுடன் கூடினால் அற்பசுகம், சொற்ப லாபம், ஒவ்வொரு காரியங்களிலும் முதலில் தாமதத்தைக் கொடுத்து முடிவில் பலன் செய்தல், சகோதரர்களோடு பகை, பந்துக்களுள் வியாச்சியம் உண்டாம்.

செவ்வாய் ஆட்சி உச்சமாய் சுபரோடு கூடி, சுபர் திருஷ்டி பெற்றால் பொருள்வரவு, லக்ஷ்மிகடாக்ஷம், இராஜாங்கத்தில் உத்தியோகம், முன் தவறிப்போன பொருள் கைகூடுதல், தனதானிய விருத்தி உண்டாம்.

செவ்வாய் நீச அஸ்தமன அல்லது சத்துரு வீட்டில் 8-12-ம் இடங்களில் இருந்தால் மனஸ்தாபம். சோர அக்கினி பயம், சகோதர வெறுப்பு, பந்துவிரோதம், அந்நிய கிருக வாசம் உண்டாம்.

செவ்வாய் மாரகத் தானாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாம். செவ்வாய்க்கு சுப்பிரமணியக்கடவுளை வழிபாடு செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில் இராகுபுத்தி வருஷம் 1, நாள் 18.

மனோவியாகுலம், தன்முயற்சிக்குறைவு, பொருட்சேதம், மிருகநஷ்டம், கலகம், சத்துருவிருத்தி. விஷபயம் வாயுரோகம், சென்ற இடங்களில் கஷ்டம் அனுபவித்தல் உண்டாம்.

இராகு இலக்கினாதிபதி முதலிய சுபரோடு கூடிக்கேந்திர திரிகோணங்களில் இருந்தால் பூமிப்பலன், உத்தியோகப்பலன், பொருட்பலன், களத்திரசுகம், தன் முயற்சி கைகூடிவருதல், புண்ணியதீர்த்த ஸ்நானம், அன்னியதேச கமனம், பந்துஜனங்களுள் துக்கசம்பவம், குருபக்தி, விசேஷமான காரியங்கள் பெரியோர்மூலம் அனுகூலமடைதல் உண்டாம்.

இராகு 8-ல் சுபர்திருஷ்டி பெற்றிருந்தால் தேகத்தில் நோய் உண்டாகும். பலவிதமான பயங்கரங்களைக் கொடுக்கும்.

இராகு இலக்கினதிபதியுடன் கூடினாலும் தெசாநாதனுக்கு இலாபத்தானத்தில் இருந்தாலும் மனச்சந்தோஷம், இராஜப்பிரீதி, பிதாவுக்குப் பலன், பொருள் விருத்தி உண்டாம்.

புத்தி முதலில் துன்பம். மத்தியிற் சமபலன். கடைசியில் விசேஷமான பலன்கள் உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாம். இராகுவுக்குச் சர்ப்பதானஞ் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில் வியாழபுத்தி மாதம் **11**, நாள் **6**.

பொருட்சேதம், சத்துருபீடை, கலகம் உண்டாம்,

வியாழன் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் பெரியோர்களால் கீர்த்தி பெறுதல், ஆபரணாதிகள் வாகனம் கிடைத்தல், தான் ஆரம்பிக்கும் காரியம் முடிவுபெறாமற் பிறரால் தடைப்பட்டுப் பின்பு சிரமத்தோடும் சொற்ப பலனோடும் அனுகூலமாதல் உண்டாம்.

வியாழன் உச்ச ஆட்சி வீடுகளில் சுபக்கிரகங்களுடன் கூடி இலக்கினத்திற் சுபாம்சம் பெற்றிருந்தால் பெரியோர்களால் ஐசுவரிய விருத்தி, தனதானிய சம்பத்து எடுத்த காரியம் கைகூடுதல், பிரபுக்கள் கூட்டம், வீட்டில் சுபசம்பவங்கள் நடத்தல், தேக சௌக்கியம், பிதிர்மாதுரு சுகம், விவசாயம் பசு முதலியவை விருத்தியடைதல் உண்டாம்.

வியாழன் இலக்கினத்துக்காயினும் தெசாநாதனுக்காயினும் 6-8-12-ல் பாபியாய்ப் பாபர்களுடைய திருஷ்டியும் பெற்று நீசமாய் இருந்தால் சோரபயம், இராஜதண்டனை, விஷபயம், வியாதி, இடப்பெயர்ச்சி, சகோதரபீடை, போசனக்குறைவு உண்டாம்.

வியாழன் மாரகத் தானாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாம். வியாழனுக்குச் சிவ சகஸ்ரநாமார்ச்சனை, சுவர்ணதானஞ் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில்
சனிபுத்தி வருஷம் **1**, மாதம் **1**, நாள் **9**.

மனக்கிலேசம், நிலைப்பிரிவு, கலகம், வியாச்சியம், பொருட்சேதம், தேகத்தில் விஷநீர் வார்தை உண்டாம்.



சனி ஆட்சி உச்சத்திலாயினும் கேந்திர திரிகோணங்களிலாயினும் சுபாம்சம் பெற்றிருந்தால் ஐசுவரியம், கீர்த்தி, சுகம், தானிய விருத்தி, புத்திர பந்துச் சிறப்பு உண்டாம்.

சனி 8-12-ல் பாபியாயிருந்தால் மனப்பயம், பொருட்சேதம், இராஜபயம், அந்நியதேச கமனம், சத்துருபீடை, சொந்தமான பந்துக்களுள் விசனம் உண்டாம்.

சனி மாரகாதிபர்களோடு சம்பந்தமானால அவமிருத்துத்தோஷம் உண்டாம். சனியைக் குறித்து வழிபாடு செய்க.

செவ்வாய் மகாதேசையில் புதன்புத்தி மாதம் **11**, நாள் **27**.

பொருள் வரவு, லக்ஷ்மீகரம். பிணிநீக்கம், விஷபயம் உண்டாம்.

புதன் கேந்திர திரிகோணங்களில் சுபாம்சம் பெற்றிருந்தால் அதிக விவேகம், புண்ணிய சரித்திரங்களை அறிதல், தருமஞ் செய்தல், சுகபோசனம். கீர்த்தி, வாகன பலன், நீதியான நடை உண்டாம்.

புதன் நீசாஸ்தமன தோஷத்தோடு 6-8-12-ம் இடங்களில் இருந்தால் இருதயத்தில் நோய், பந்துஜனம்தாரம் புத்திரர் இவர்களுள் ஒருவருக்குப் பீடை, பிறவிடங்களுக்குப் போகும்போது சரீரத்தில் தழும்புண்டாதல், கலகம் உண்டாம்.

புதன் தெசாநாதனுடன் கூடினால் அதிகபயம், அந்நிய தேசப் பிரயாணம், பலவித நோய், சத்துருவிருத்தி உண்டாம்.

புதன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களிலாவது உச்சலாப ஸ்தானங்களிலாவது இருந்தால் ஜனோபகாரம், கல்வித்தேர்ச்சி, வஸ்திராபரணச் சிறப்பு, வித்தியாவினோதமான பல சம்பவங்கள், லக்ஷ்மிகடாக்ஷம், வாகன பூஷணங்கள், தாரபுத்திரசுகம் உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் வரும். புதனுக்குக் குதிரைத் தானம், விஷ்ணு ஜபம் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில் கேதுபுத்தி மாதம் **4**, நாள் **27**.

தேகபிணி ஸ்திரீஜனங்களாற் பகை, சத்துருபயம் உண்டாம்.

கேது இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் இலக்கினாதிபதி முதலிய சுபருடன் கூடினால் புத்தி முதலில் அதிக செலவு, சிரமம், அற்பசுகம். நடுக்கூற்றில் பூமிப்பலன், நூதன பிரபுக்கள் சிநேகம், பொருவரவு, புத்தி முடிவில் பிணி பீடைகள் உண்டாம்.

கேது தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களில் பாபியோடு கூடினுல் மனப்பயம், விசனம், சத்துருபகை, பந்துஜனங்களால் உபத்திரவம், சகோதர வர்க்கப் பீடை உண்டாம். இக்காலத்தில் இடம் பிரிந்திருந்தால் சொற்ப சௌக்கியம் உண்டாம்.

கேது தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியோடு சம்பந்தமானுல் கலகம், பல்நோய், பொருள் நஷ்டம் உண்டாம்.

கேது மாரகசம்பந்தமானுலும் 2-7-ல் இருந்தாலும் மிருத்துப்பீடை உண்டாம். கேதுவுக்குச் சர்ப்பதானஞ் செய்து சாதுக்களுக்கு அன்னதானங் கொடுக்க விதி.

செவ்வாய் மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 1. மாதம் 2.

பொருள் வரவு, தேவபக்தி, பிராமணபக்தி ஸ்திரீகளிறுற்பலன், தேகத்தில் விஷநீர், உஷ்ணரோகம் உண்டாம்.

சுக்கிரன் இலக்கினத்துக்குக் கேந்திர திருகோணங்களில் இருந்தால் புண்ணியதீர்த்த ஸ்நானம், தேவதரிசனம், முன் பிறதேசங்களிற் போயிருந்தால் திரும்பி ஊர் வந்து சேருதல், சற்கருமங்கள் செய்தல். மன உற்சாகம், தருமமுயற்சி உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் தேகசுகவீனம், பொருட்குறைவு, இடம் பிரிதல், விசனம், இரணபயம் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் உண்டாம். சுக்கிரனுக்கு எருமை தானஞ் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 4, நாள் 6.

மனவியாகுலம், சத்துருபயம், அதிகாரிகளால் துன்பம், தேகத்தில் உஷ்ணரோகம் உண்டாம்.

சூரியன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் ஆட்சி வீட்டிலிருந்தால் கீர்த்தி, சுகம், காரியங்கள் பார்ப்பதில் அதிக சிரமம், சோரபயம், புத்தி முதலினும் இறுதியிலும் மனவிசனம் உண்டாம்.

சூரியன் இலக்கினுதிபதியுடன் கூடினுல் சந்தோஷம், வதிஸ்ர பூஷணபலன், பொருள்வரவு உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் பிரபுசன்மானம், சுபகாரியங்கள் நடத்தல், பொருள்விருத்தி உண்டாம்.



சூரியன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் தொடங்கிய காரியங்கள் தடைப்படுதல், தேகபிணி, பயம் உண்டாம்.

சூரியன் பாபராசியில் மிருத்துசம்பந்தமானுல் அவமிருத்து தோஷம் வரும். சூரியனுக்குப் பிரீதி, தீர்த்தஸ்நானஞ் செய்ய விதி.

செவ்வாய் மகாதேசையில் சந்திரபுத்தி மாதம் 7.

பொருள் வரவு, பூமிப்பிரயோசனபலன், பசு முதலியவை விருத்தியடைதல், முத்து, பொன் விசேஷமான வஸ்திரம் சேருதல், இடமாற்றம் உண்டாம்.

சந்திரன் பூர்வபக்ஷசந்திரனுய்க் கேந்திர திரிகோணங்களில் அல்லது ஆட்சி லாபத் தானங்களில் இருந்தால் பாக்கிய விருத்தி, களத்திர புத்திர சம்பத்து நல்ல காரியங்களைச் செய்தல், சகோதர சுகம், புண்ணிய தீர்த்தஸ்நானம், தெய்வவழிபாடு, சுகபோசனம், வாகனலாபம் பாற்பசு விருத்தி, பிரயாணம் போனவிடங்களில் தெய்வவழிபாடு, பெரியோர்களுடைய கூட்டம் உண்டாம்.

சந்திரன் 7-ம், 9-ம் இடங்களுக்கதிபதி அல்லது குரு இவர்களோடு கூடிச் சுபக்கிரகங்களுடைய பார்வை பெற்றுல் இராஜ உத்தியோகம், தன் மனதுக்குச் சந்தோஷமான சம்பவங்கள் நடத்தல், தேவாலயத் திருப்பணி தேவவழிபாடு பூஜை ஜபதியானுதிகள் முதலிய சற்கிரியைகள் உண்டாம்.

சந்திரன் நீசத்திலாயினும், சத்துரு வீடுகளிலாயினும் 6-8-12-ம் இடங்களிலாயினும் இருந்தால் தன்னைக் குறித்து அதிகபயம், சுகக்குறைவு, பொருட்குறைவு, தானியக்குறைவு, பசி முதலிய பீடை உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாப ஸ்தானங்களிலிருந்தால் பிதாவுக்குச் சுகம், பந்துஜனசந்தோஷம், புண்ணிய சரித்திரங்களை அறிதல், சுயஜன அதிகாரம், வெற்றி உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ம் இடங்களிலிருந்தால் மனப்பீடை, துக்கம், புத்திக்குறைவு, காரியதாமதம் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளோடு சம்பந்தமானுல் அவமிருத்து தோஷம் உண்டாம். சந்திரனுக்குக் குதிரைத் தானம், தேவிக்கு ஜபம், பூஜை செய்ய விதி.

### இராகு மகாதசை வருஷம் 18.

பலன்:— இராகு, மேடம், இடபம், கர்க்கடகம், கன்னி விருச்சிகம், மகரம், கும்பம் இந்த இராசிகளிலொன்றிலிருக்க, இந்த இடம் இலக்கினத்திலிருந்து கேந்திர திரிகோண தன பாக்கிய லாப ஷஷ்டம ஸ்தானங்களுள் ஒன்றாகவரில் அத்தசை இராஜயோகத்தையும், குடும்ப விருத்தியையும் எவர்களும் மதிக்கும் விதமான அதிக கீர்த்தியையும், ஐசுவரியத்தையும் கொடுக்கத்தக்கதாகும்.

இந்த இராசிகளில்லாத மற்றைய இராசிகளிலும், மேற்சொல்லிய சுபத்தானமல்லாத இடங்களிலும் இருந்தால் விசனம், பித்தரோகம், புத்திக்குறைவு, துக்கம் நற்கருமங்களைச் செய்யத்தக்கதாயிருக்கவுந் துர்ச்கருமங்களைச் செய்தல், தன் முயற்சியினால் சம்பாதித்த பொருளை மேலதிகாரிகள் அபகரித்தல், தேகபீடை, இராஜ பயம், நிலைப்பிரிவு உண்டாம்.

### இராகு மகாதசையில் இராகுபுத்தி
### வருஷம் 2, மாதம் 8, நாள் 12.

தனக்கு மேலாயிருக்கும் அதிகாரிக்குப் பீடை, மனத்துன்பம், களத்திரபீடை, விஷபயம், கோட்சொல்லுதல் காரணமாகக் கலகம், பொருட்சேதம், வாதரோகம், இடம் மாறுதல் உண்டாம்.

இராகு அதிக பெலனடைந்த இலக்கினாதிபதியுடன் கூடி முன் சொல்லிய (இராஜயோகத்துக்குரிய) இராசிகளுளொன்றில் இருந்தால் கீர்த்தி, இராஜ அனுகூலம், அன்னிய தேசப் பொருள்வரவு, புத்திர பலன், வஸ்திர பூஷணச் சிறப்பு, பிரயாணம் போனவிடங்களில் பலன் அடைதல், லக்ஷ்மிகடாக்ஷம், வீட்டுச் சிறப்பு உண்டாம்.

இராகு இலக்கினத்தில் அல்லது 7-9-ம் இடங்களில் பாபியோடு கூடினால் மாதுருபிதிர்பீடை, புத்திரசோகம், மிருகநஷ்டம், சுயஜனங்களால் விசனம், அசீரணரோகம் உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் வரும். இராகுவுக்குத் தேவிவழிபாடு செய்யவிதி.

### இராகு மகாதசையில் வியாழபுத்தி
### வருஷம் 2, மாதம் 4, நாள் 24.

இராஜாக்களால் நன்மை, பிரபுக்களாற் பொருள் வரவு சனச்சந்தோஷம், தொடங்கிய கருமங்கள் சித்தி பெறுதல், வியாதி சாந்தியாதல், மங்கலச்சிறப்பு முதலியவை உண்டாம்.



வியாழன் கேந்திர திரிகோணங்களிலும், ஆட்சி உச்ச லாபத்தானங்களிலும் இருந்தால் தேகசுகம், போசன சுகம், இராஜயோகம், நாளுக்கு நாள் தொழில் முயற்சி விருத்தியடைதல், பொருட்பலன், வாகனசுகம், பசு முதலிய சீவலாபம், பிரயாணத்தினால் காரிய அனுகூலம், விசேஷமான காரியங்களைச் செய்து கீர்த்தி பெறுதல், தலயாத்திரை சற்கருமங்களைச் செய்தல், திருத்தமான வீடு, தன் முதியோர்களுடைய பொருள் சேருதல் உண்டாம்.

வியாழன் நீசாஸ்தமனமாய்ச் சத்துருவீட்டில் 6-8-12-ம் இடங்களில் பாபிகளோடு கூடினால் பாபகன்மஞ் செய்தல், களத்திர புத்திர பீடை இருதயரோகம், பொருள் நஷ்டம், இடம்பிரிதல் உண்டாம்.

வியாழன் தசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தன லாபத்தானத்தில் இருந்தால் போசன சுகம், இரத்தினாபரணங்கள் சேருதல், தேக சௌக்கியம், வீட்டுச்சிறப்பு, தாயபாகம் பெறுதல் உண்டாம்.

வியாழன் தசாநாதனுக்கு 6-8-12-ல் பாபிகளோடு கூடினால் புத்தி முதற்பாகத்தில் சத்துருபீடை, பொருள் நஷ்டம், அன்னிய தேச பிரயாணம், மனப்பீடை, அசீரணம் இவை உண்டாம். பிற்பாகத்தில் சமபலனும்.

வியாழன் மாரகதிபதிகளுடன் சம்பந்தமானால் விஷசுரம், அசீரணம் முதலியவை உண்டாம். வியாழனுக்குப் பிரீதி, சுவர்ணதானஞ் செய்ய விதி.

### இராகு மகாதசையில் சனிபுத்தி வருஷம் 2, மாதம் 10, நாள் 6.

சத்துருபகை, மனவியாகுலம், காரியங்கள் நீடித்த காலத்துக்கு அனுகூலமாகாமலிருத்தல், வாத வாயுரோகம், பிதிர்வர்க்க பீடை உண்டாம்.

சனிகேந்திர திரிகோண ஆட்சி வீடுகளில் இலக்கினாதிபதி முதலிய சுபர்களோடு கூடியிருந்தால் விவாகம் முதலிய சுபசோபனாதிகள் நடத்தல், தருமசற்கிரியைகள் செய்தல், பிரபுக்கள் கூட்டம் வாகன பலன், தீவாந்தரவஸ்துக்கள் கிடைத்தல். தனது அதிகாரியினாற்பலன் உண்டாம்.

சனி 8-12-ம் இடங்களில் சத்துருநீச வீட்டில் பாபியாயிருந்தால் க்ஷயரோகம் முதலியவை உண்டாகத்தக்க சம்பவங்கள், பந்துஜனங்களுள் விபத்து, மனஸ்தாபம், தாயாதிபந்துக்களின் கோபம், தாரபுத்திரபீடை, தன்னுடைய பொருள் குறைதல், விஷபயம் உண்டாம்.

சனி தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண இலாப ஸ்தானங்களில் பாபியாயிருந்தால் சரீரபிணி, புத்திர பீடை, இடம்பிரிதல், பொருட்குறைவு உண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியோடு கூடி இருந்தால் வயிற்றில் நோய், விஷபயம், விஷநீர், குன்ம வாயு, போசன சுகமில்லாமை, முயற்சிக்குறைவு உண்டாம்.

சனி மாரகாதிபதிகளோடு கூடினுல் விஷநீர், வாயு, குன்மம் முதலியவை உண்டாம். சனிக்குப் பிரீதிசெய்து எருமை தானஞ் செய்ய விதி.

**இராகுமகாதேசையில் புதன்புத்தி வருஷம் 2, மாதம் 6, நாள் 18.**

தெய்வபக்தி, சிறந்தவாழ்வு, நன்முயற்சி, புத்திர பலன், பொருள் வரவு, சில காரியங்களைக் குறித்து மன வியாகுலம் உண்டாம்.

புதன் கேந்திர திரிகோணங்களில் ஆட்சி இலாபத் தானங்களில் நின்ருல் வியாபாரப்பொருள் விருத்தி, வித்தியாபலன், நற்காரியங்களைச் செய்தல், களத்திர புத்திர சுகம், ஸ்திரீஜனங்களால் சந்தோஷம் உண்டாம்.

புதன், சூரியன், சனி இவர்களோடு கூடி 6-8-12-ல் இருந்தால் தேகபிணி, துக்கம், கலகம், பகை முதலியவை உண்டாம்.

புதன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாப ஆட்சி வீடுகளிலிருந்தால் தனக்குச் சந்தோஷகரமான போசனம், பசு முதலிய சீவலாபம், சொந்தமான பூமி வீடு இவைகளினுல் அதிக பலன் உண்டாதல், இரத்தினுபரணச்சிறப்பு, வாகனபலன், கூபம் தடாகம் இவைகள் உண்டாகுதல், சற்கருமங்களைச் செய்தல் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியாயிருந்தால் எடுத்த காரியங்கள் சீக்கிரத்தில் முடிவாகாமல் தாமதமாதல், சோரபயம், கலகம், பாபத்தொழில் செய்தல் உண்டாம்.

புதன் மாரகாதிபதி சம்பந்தமானுல் அவமிருத்து தோஷம் வரும். புதனுக்கு விஷ்ணு ஜபம் செய்ய விதி.

**இராகு மகாதேசையில் கேதுபுத்தி வருஷம் 1, நாள் 18.**

விஷபயம், புத்திரபீடை, களத்திர சுகக்குறைவு, அதிகாரிகள் பகை, தேகத்தில் விஷநீர் உண்டாம்.



கேது சுபாம்சம் பெற்ருல் சுப பலமும்; பாபாம்சம் பெற்ருற் பாபபலமும், புத்தி சபலமும், சூனியம் பிசாசு முதலியவைகளினுற் பயமும், பாரிபுத்திரர்களுக்குப் பீடையும், நாற்காற்சீவ நஷ்டமும் உண்டாம். இராஜ யோகம் பெற்ற சுபக்கிரகம் பார்த்தால் புத்திர பலனும், வாகனலாபமும் உண்டாம்.

கேது 8-12-ல் இருந்தால் மிருத்துபயம், பொருட் செலவு, பலவிதமான பீடைகள் உண்டாம். உச்சம் பெற்ருல் பொருள் வரவும் சுகமும் உண்டாம்.

கேது தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத் தானத்தில் நின்ருல் சுகம் வாகனம் பசு வியாபாரம் இவைகளுக்குச் சமமான பலன் உண்டாம். இறுதியில் பொருள் நஷ்டம் உண்டு. கேது பாபியாய் நீசனுடன் கூடினுல் விஷசுரம், மனப்பயம், தன் எஜமானனுல் கஷ்டம், கலகம், பந்துவிரோதம் அந்நிய தேசப் பிரயாணம் உண்டாம்.

கேது 8-ல் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துத்தோஷம் உண்டு. கேதுவுக்குத் தேவிவழிபாடு, சர்ப்ப தானஞ் செய்ய விதி.

**இராகு மகாதேசையிற் சுக்கிரபுத்தி வருஷம் 3.**

பொருள் விருத்தி, பூஷணபலன், இராஜப்பிரபு சன்மானம், ஸ்திரீயினுற் சுகம், ஒரு வஞ்சனையினுல் துன்பம், பீடை வந்து நீங்கி விடுதல் உண்டாம்.

சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் லாபஸ்தானத்திலிருந்தால் பிரபலமான யோகம், பெரியோர் மூலமாகப் பொருள் சேருதல், பத்திரசுகம், சிநேகிதர் கூட்டம், பலவிதமான அனுபவம் உண்டாம்.

சுக்கிரன் உச்சம் ஆட்சி பெற்றிருந்தால் வாகனப்லன், இராஜ உதவி, பாக்கியவிருத்தி, பெரியோர் மூலமாக வீடு முதலிய சில பொருள் வருதல், களத்திர சுகம் உண்டாம்.

சுக்கிரன் 6-8-12-ல் நீசமாய்ச் சத்துருவுடன் கூடினுல் கலகம், தன் எஜமானர்களால் நஷ்டம், தன் வீட்டில் இருப்பவர்களுக்குப் பீடை உண்டாம்,

சுக்கிரன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்திற் சுபருடன் கூடினுல் நூதனமான வீடு, புத்திர பலன், சுகபோசனம், பந்துக்கள் சிநேகிதர்களின் சௌக்கியம், ஸ்திரீயினுற் சந்தோஷம், இராஜ அனுகூலம், நினைத்தகாரியம் அனுகூலமாதல், உபகாரம் பெறுதல், சென்றவிடங்களில் மரியாதை உண்டாம்.

சுக்கிரன் தெசநாதனுக்கு 6-8-12-ல் பாபியாயிருந்தால் மனத்துன்பம், சரீரபீடை, சிரசில் நோய், சுரம், விஷபீடை, அகால போசனம், பலகாரியங்களுந் தாமதமடைதல் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபர்களோடு சம்பந்தமானுல் அவமிருத்து தோஷம் வரும். சுக்கிரனுக்குத் தேவி ஜபம் முதலிய வழிபாடு செய்ய விதி.

**இராகு மகாதெசையில் சூரியபுத்தி மாதம் 10, நாள் 24.**

பொருள் நஷ்டம், பந்துக்கள் பகை, மனப்பயம் களத்திரபீடை, சகோதரசஞ்சலம், நிலைப்பிரிவு உண்டாம்

சூரியன் தனது ஆட்சி வீடாகிய சிங்கத்திலும் கேந்திர திரிகோண லாபத் தானத்திலுஞ் சுபர்களோடு கூடினுலும் சுபர்பார்வை பெற்றுலும் இராஜசன்மானம், ஜனுதிகாரம், புத்திர விருத்தி, ஸ்திரீகளாற் பலன், அற்ப சௌக்கியம், அற்ப லாபம் உண்டாம்.

சூரியன் இலக்கினுதிபதியுடனும் பாக்கியாதிபதியுடனும் கூடினுலும், குருசந்திரரின் பார்வை பெற்றுலும் முதலில் ஒரு விசேஷமான பலன் நடக்கும். பின்பு மனதில் விசனமாவது பயமாவது தோற்றப்பட்டுச் சித்தசுவாதீனமில்லாமல் இருப்பதுமாகும். உச்சம் பெற்றுல் எண்ணிய கருமங்கள் கைகூடுதல், பொருள் விருத்தி உண்டாம்.

சூரியன் 6-8-12-ல் பாபியோடு கூடிப் பெலவீனமானுற் சுரபயம், அதிகாரம், கலகம், சத்துருபீடை, பிரயாணம், சோரபயம், ஜனவிரோதம், சகோதரபீடை உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபிகளுடன் கூடினுல் நோய், பந்துகலகம் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் வரும். சூரியனைக் குறித்துப் பிரீதி செய்ய விதி.



**இராகு மகாதேசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 6**

பந்துக்கள் நஷ்டம், ஸ்திரீயினுற் பொருள் நஷ்டம். கை கால் நோவு, விஷபயம், இடம் பிரிதல் உண்டாம்.

சந்திரன் கேந்திர திரிகோண லாபஸ்தானத்தில் ஆட்சி அல்லது மித்துரு வீட்டில் சுபருடன் கூடினுல் இராஜ உத்தியோகம் வாகனபலன், ஐசுவரியம், சுகம், புத்திர பலன், பூஷணம் உண்டாம். பூரணசந்திரனுனல் இவ்வித பலனும், பூமிப்பலனும், சந்தோஷமும் உண்டாம். அபர பக்கச் சந்திரனுனல் மேற்சொல்லியவைகளுக்குக் குறைவு உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தானத்தில் இருந்தால் எடுத்த காரியங்கள் கைகூடுதல், தேவபக்தி, பிராமண பக்தி. ஆசாரம், பூஜை நியமம், சுகபோசனம், கிணறு குளம் இவைகள் உண்டாக்கல், சற்கருமங்களைச் செய்தல் உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் சத்துருஷேத்திரத்திற் பாபியுடன் கூடினுல் பூமி ஆடு மாடு களத்திர புத்திரர்களுக்குப் பீடை, பிசாசினுற் பயம், சோரபயம், பாண்டுவியாதி அல்லது சிரங்கு முதலிய இரணங்கள் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் வரும். சந்திரனுக்குத் தேவிவழிபாடு செய்ய விதி.

**இராகு மகாதேசையில் சேவ்வாய்புத்தி வருஷம் 1, நாள் 18.**

மனக்கிலேசம், விஷபயம், துஷ்டராற்பீடை, பொருட்செலவு, வீட்டில் சில பீடைகள் உண்டாம்.

செவ்வாய் கேந்திர திரிகோணங்களில் ஆட்சி லாபத்தானங்களிற் சுபருடன் கூடிச் சுபர்திருஷ்டி பெற்றுல் தொடங்கிய கருமஞ் சித்தியாதல், களத்திர புத்திரபலன், சுபகாரியங்கள் செய்தல், மனச்சந்தோஷம் உண்டாம்.

செவ்வாய் 8-12-ம் இடங்களில் பாபியாய் நீசமடைந்து பாபிகளோடு கூடினுல் சீதளசுரம், அதிகாரம், கலகத்தினுற் பொருள் நஷ்டம், அன்னியதேச பிரயாணம், ஆயுதபயம், தனது காரியங்களுக்குத் தீங்கு உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண ஆட்சி இராசிகளிலாயினும், லாபத்தானத்திலாயினும் இருந்தால் அற்பசுகம், அற்பபலன், செந்நிற இரத்தினம் வஸ்திரம் முதலிய பொருள் சேருதல், வாகனபலன், பிரயாணம் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6-8-12-ல் நீசமாயிருந்தால் சகோதரர், தாரம், புத்திரர் இவர்களுள் ஒருவருக்குப் பீடை உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதி சம்பந்தமானுல் அவமிருத்துத்தோஷம் வரும். செவ்வாய்க்குப் பிரீதி, எருது தானஞ்செய்ய விதி.

### வியாழன் மகாதேசை வருஷம் 16.

பலன் :— பலராலும் மரியாதை பெறுதல், மனதில் நியாயமாக நினைக்கப்பட்டவை சித்தியடையப்பெறுதல், தருமத்துக்குரிய சற்கருமங்கள் செய்தல், சாஸ்திரங்களை அறிதல், போதித்தல், நல்ல விவேகம், எப்பொழுதும் ஆராய்ச்சி, அன்பு, எங்கும் கீர்த்தி, தேவபக்தி, பெரியோர்களால் தயவு, பலகாரியங்களைச் செய்யத்தக்க விவேகம், சந்தோஷகரமான புத்திரர்கள், விசேஷமான பூமி, நல்ல வஸ்திரம், குதிரை முதலிய வாகனப்பேறு, தன் குலவொழுக்கப்படி நடத்தல், சற்சனர் கூட்டம் உண்டாம்.

வியாழன் இலக்கினத்துக்குக் கேந்திர திரிகோண லாபத்தானங்களில் ஆட்சிப்பெற்றிருந்தால் இராஜயோகம் உண்டாகும். கீர்த்தி, வாகன பூஷண பலன், தெய்வவழிபாடு உண்டாம்.

வியாழன் இலக்கினத்துக்கு 6-8-12-ல் நீசமானுல் துக்கமும், முன்சொல்லியவைகளுக்குக் குறைவும் உண்டாம்.

வியாழன் மாரகாதிபர்களோடு சம்பந்தமானுல் பயம், மானபங்கம், புத்திரர் மித்திரர்களுக்குக் கஷ்டம், இடம் பிரிதல், பகை சோரபயம் உண்டாம். தெசையின் பிற்கூற்றில் சுகபலன் உண்டாம்.

### வியாழன் மகாதேசையில்
### வியாழ புத்தி வருஷம் 2, மாதம் 1, நாள் 18.

பிரபல கீர்த்தி, பொருள் லாபம், தானிய விருத்தி, பூமிப்பலன், பூஷணச் சிறப்பு, ஸ்திரீலாபம், இராஜசன்மானம் உண்டாம்.



வியாழன் கேந்திர திரிகோண ஆட்சிவீட்டில் சுபாம்சம் பெற்றிருந்தால் இராஜதயவு, சுபபோசனுதிகள் வீட்டில் நடைபெறுதல், சற்கருமங்கள் செய்தல், தேவபூஜை, குருவினுல் அனுக்கிரகம் பெறுதல், பல ஐசுவரியம் உண்டாம்.

வியாழன் தருமகருமாதிபர்களுடன் கூடினுல் பெரியோர்களினுல் தயவும் தனக்கு மேலோர்களாற் காரியங்கள் கைகூடுதலுமாகும்.

வியாழன் நீசம்பெற்று 6-8-12-ல் இருந்தால் முற்கூற்றில் நீதிஸ்தலங்களில் வியாச்சியம் முதலியவை உண்டாதல், பந்துஜனங்களுள் விரோதம், களத்திர புத்திரபீடை, கலகம், விசனம் பயம் உண்டாம்.

வியாழன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துத்தோஷம் வரும். வியாழனுக்கு உருத்திரஜபம்செய்ய விதி.

### வியாழன் மகாதேசையில்
### சனிபுத்தி வருஷம் 2, மாதம் 6, நாள் 12.

பொருட்செலவு, கைகால்களில் நோவு, வாதநோய், களத்திபீடை, இடம் பிரிதல் உண்டாம்.

சனி கேந்திர திரிகோணங்களிலாவது ஆட்சி மித்துரு வீட்டிலாவது இலக்கினுதிபதி முதலிய சுபருடன் கூடினுல் சுகபலன், செல்வவிருத்தி, அந்நிய ஸ்திரீயினுற் பலன், முயன்ற காரியம் சித்தியடைதல், பிரயாணம்போன இடங்களில் மரியாதை பெறுதல், தீர்த்த ஸ்நானம் உண்டாம்.

சனி 6-8-12-ல் நீசனுய் அஸ்தமன தோஷத்தோடு இருப்பின் பல காரியங்களுக்குக் கேடும், பிதிர் மாதுரு புத்திர களத்திரர்களுக்குப் பீடையும் உண்டாம்.

சனி தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தானத்தில் இருந்தாற் பூமிப்பலன், செல்வ விருத்தி, அந்நிய பிரபுக்கள் மூலமாகப் பலவித லாபம் உண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியுடனே கூடினுல் பந்து மித்திரர் விரோதம், உத்தியோகத்துக்குப் பங்கம், தேகத்தில் பிணி, சுயஜன விரோதம் உண்டாம்.

சனி மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துத்தோஷம் வரும். சனிக்குப் பிரீதிசெய்து விஷ்ணுவழிபாடு செய்ய விதி.

வியாழன் மகாதேசையில்
புதன்புத்தி வருஷம் 2, மாதம் 3, நாள் 6.

விவேகம், கல்வித் திருத்தம், விவேகஞானம். ஆடல் பாடல், தேவகைங்கரியம், களத்திர புத்திர சுகம், சத்துரு சிநேகம், ஐசுவரிய விருத்தி உண்டாம்.

புதன் வியாழனுடைய பார்வை பெற்றாலும், கூடினாலும் பலவித பொருட்பலனும், வீட்டில் நற்காரியங்கள் நடத்தலும், நன்முயற்சியாகத் தொடங்கியவை சித்தி பெறுதலும், இராஜ அனுகூலமும் உண்டாம்.

புதன் செவ்வாயுடன் கூடினாலும், செவ்வாயின் பார்வைபெற்றாலும் மலசலாதிகளின் ஒழுங்கீனத்துக்குரிய நோய், குய்யஸ்தானத்தில் இரணம், சுரம் உண்டாம்.

புதன் ஆட்சி உச்ச இராசிகளிலும் கேந்திர திரிகோண தன லாபத்திலும் இருந்தால் எடுத்த காரியங் கைகூடுதல், முன் நஷ்டம் அடைந்த சில பொருள் வருதல், பந்துக்களுட் சுபகாரியங்கள் நடத்தல், புத்திர பலன் உண்டாம்.

புதன் இலக்கினத்துக்கு 6-8-12-ல் பாபியாய்ப் பாபர்களோடு கூடினால் பாபகன்மஞ் செய்தல், சீவ இம்சை செய்தல், விஷபயம், பித்த அதிகாரம், இடம்பிரிதல் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாப ஸ்தானங்களில் நின்றால் பிதிர்வர்க்க சுகம், நெடுந்தூரம் போய்ப் பிரயாசைப் படாமல் சமீபத்தில் இருந்து பொருள்வரவு, சாஸ்திராப்பியாசம், தீர்த்தபலன் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியாய் இருந்தால் மனப்பயம், பொருள் நஷ்டம், இடம் பிரிதல் உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் வரும். புதனுக்கு விஷ்ணுப் பிரீதி செய்ய விதி.

வியாழன் மகாதேசையில் கேதுபுத்தி மாதம் 11, நாள் 6.

அன்னியதேச சஞ்சாரம், பந்துக்கள் விரோதம், குடும்பப்பிரிவு, மனப்பயம், விஷபீடை, சுரம் உண்டாம்.



கேது சுபருடன் கூடிக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் தருணந்தப்பிய போசனம், பித்தமயக்கம், சிரசில் நோய் உண்டாம்.

கேது பாபருடன் கூடிப் பாபர் நோக்கம் பெற்று 8-12-ல் இருந்தால் குடும்பசுகக்குறைவு, சத்துருபீடை, பொருள் நஷ்டம், துக்க சம்பவங் கேட்டல், சகோதர சுகக்குறைவு உண்டாம்.

கேது சுபக்கிரகங்களின் நோக்கம் பெற்றால் சுபபலனைக் கொடுக்கும்.

கேது மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்து தோஷம் வரும். கேதுவுக்குப் பிரீதி செய்ய விதி.

வியாழன் மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 2, மாதம் 8.

நிலைபரமான காரியங்களைச் செய்தல், பொருள் விருத்தியாதல், பூமி சேருதல், வாகனபலன், பந்துசுகம், மனதிற் பல ஆலோசனை, மறதி உண்டாம்.

சுக்கிரன் ஆட்சி வீடுகளில் திரிகோண கேந்திரம் பெற்றாலும் அதியுச்சமானாலும் அதிகாரம், மனதுக்கு இஷ்டமான வாகனம், தன்னோடு ஒத்த சிநேகிதனால் அனுகூலம் பிரயாணம்போன இடத்திற் பொருள்வரவு, தேவகுரு தரிசனம், பல காரியங்கள் அனுகூலமடைதல் உண்டாம்.

சுக்கிரன் குருவுக்குக் கேந்திர திரிகோணங்களில் நின்றால் சமமான பலன், அதிக கீர்த்தி, பரோபகாரஞ் செய்தல், தருமச் செய்கை உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் நீசனாகிச் சத்துருவுடன் கூடினால் பயம். காரியக்கேடு, பொருள் நஷ்டம், சிரமம் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துப் பீடை உண்டாம். சுக்கிரனுக்குப் பிரீதி. லக்ஷ்மிஜபம் செய்ய விதி.

வியாழன் மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 9, நாள் 18.

பொருள்வரவு, நினைத்த காரியங் கைகூடுதல், தருமச் செய்கையில் வெறுப்பு, பிணி, சத்துருபகை, வீட்டிற் கலகம் உண்டாம். பிற்கூற்றில் நற்பலன் உண்டாம்.

சூரியன் கேந்திர திரிகோணங்களில் அஷ்டமாபதி பதியோடு கூடினாலும், அஷ்டமாதிபதியின் பார்வை பெற்றாலும், முற்கூற்றில் பொருட்சேதம், இடம்பிரிதல், சுரம் சத்துருகலகம். பாபகன்மஞ் செய்தல், மனப்பயம் உண்டாம்.

சூரியன் சிங்கராசியில் அல்லது திரிகோண கேந்திர லாப ஸ்தானத்தில் சுபக்கிரகங்களுடன் கூடிச் சுபர் பார்வை பெற்றால் சிரசில் நோய், தான் தொடங்கிய கருமங்கள் கைகூடுதல், சென்ற இடங்களில் மரியாதை, கீர்த்தி உண்டாம்.

சூரியன் 8-12-ல் நீசனாகிப் பாபியுடன் கூடினால் பிற தேசப் போக்குவரவினால் பலவித சுகக்குறைவு, எடுத்த காரியம் தடைப்படுதல், வாகனம், பசு முதலிய நாற்காற் சீவ நஷ்டம் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தில் இருந்தால் ஆயாசம், துக்கம், பகை, அலைச்சல் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 8-12-ல் இருப்பின் தான் பார்க்கும் காரியங்களுக்குக் குறைவும், தலை கண் வயிறு இவற்றொன்றில் ரோகமும் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் வரும். சூரியனுக்குப் பிரீதி, கருமசாந்தி செய்ய விதி.

☞ குருதெசைக்குச் சூரியபுத்தி விசேஷபலனுக்குரியதல்ல

**வியாழன் மகாதேசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 4.**

பொருள் லாபம், ஆபரணபலன், நல்ல விவேகம், நூதன வஸ்துக்கள் கிடைத்தல், களத்திர புத்திர பலன், நினையாதிருக்கச் சில காரியங்கள் அனுகூலமாதல் உண்டாம்.

சந்திரன் பூரணனாய் ஆட்சி வீட்டில் கேந்திர திரிகோணம் பெற்றிருப்பின் குடும்பசுகம், கீர்த்தி, இராஜாங்கத்தில் உத்தியோகம், பிரபுசன்மானம், சரீரசுகம், வாகனம் சத்துருஜயம், தான் பார்க்கும் காரியங்கள் அனுகூலமாதல், தனக்குச் சொந்தமான பந்துக்களுள் சுபகாரியங்கள் சம்பவித்தல் முதலிய நற்பலன்கள் உண்டாம்.

சந்திரன் 6-8-12-ம் இடங்களில் பாபிகளோடு சம்பந்தமானால் பழி, பகை, நோய், காரியவிக்கினம், இடம் மாறுதல் உண்டாம்.



சந்திரன் வியாழனுக்கு 5-9-ம் இடங்களில் வலிமையோடு இருந்தால் இலட்சுமீகரம், நாளுக்குநாள் செல்வ விருத்தி உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியாய் இருந்தால் இராஜகோபம், தண்டனை, சுரம், அன்னிய தேசசஞ்சாரம் உண்டாம்.

சந்திரன் சுபக்கிரகங்களோடு கூடித் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் மனக்கிலேசம், சொற்ப லாபம் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாம். சந்திரனுக்குத் தேவிவழிபாடு செய்ய விதி.

**வியாழன் மகாதேசையில் செவ்வாய்புத்தி மாதம் 11, நாள் 6.**

பலவகையான கஷ்டங்கள், இராஜபகை, பந்துநஷ்டம், நிலைமாறுதல், தொடங்கிய காரியத்தை முடிக்கப் பிரயாசப்படுதல் உண்டாம்.

செவ்வாய் ஆட்சிவீட்டில் 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தால் முற்கூற்றில் அற்ப பலன்; பிற்கூற்றில் பொருள் நஷ்டம், சகோதரபீடை, அதிக அலைச்சல் உண்டாம்.

செவ்வாய் 9-ம் இடத்துக்கு அதிபதியோடு கூடி 6-12-ல் இருந்தால் அதிக செலவு, தேகசுகம், பூமிலாபம் உண்டாம்.

செவ்வாய் 8-12-ம் இடத்தில் நீசமாய்ப் பாபியோடு கூடியிருந்தால் துஷ்டத்தொழில் செய்தல், குலஆசாரம் தவறல், பரஸ்திரீகளினால் பீடை உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ல் இருந்தால் நல்ல காரியங்களைச் செய்யும்பொழுது அதனாற் சில பீடைகள் உண்டாதல், அற்பலாபம், அதிக சிரமம் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியாய் இருந்தால் தனது காரியங்களுக்கு நஷ்டம், சிரநோய், நேத்திரபீடை, மனக்கவலை, பயம் உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துத் தோஷம் உண்டாம். செவ்வாய்க்குச் சிவப்பு எருது தானஞ்செய்ய விதி.

வியாழன் மகாதேசையில் இராகுபுத்தி
வருஷம் 2, மாதம் 4, நாள் 24.

பொருட்சேதம், குடும்ப சுகவீனம், வியாச்சியம், சத்துருபகையினுல் இரகசியமாகப் பல தீங்குகள் உண்டாம்.

இராகு பாபியுடன் கூடி 1-4-5-7-9-10-ல் இருந்தால் கலகம், சுகவீனம், சினேகவிரோதம், வாக்குவாதம், குடும்பசுகவீனம் உண்டாம்.

இராகு சுபக்கிரகங்களோடு கூடி மேற்சொல்லிய தானங்களில் இருந்தால் அற்ப சுகம் உண்டாம்.

இராகு 8-12-ம் இடங்களில் இருந்தால் கலகம், மனக்கவலே, பிசாசினுற் பயம், பொருள் நஷ்டம் உண்டாம்.

இராகு தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் சுபக்கிரகங்களோடு கூடினுல் பந்துவிரோதம், அன்னியதேசப் பிரயாணம், கீர்த்திக்குறைவு, செய்யுங் காரியங்கள் நஷ்டமடைதல் உண்டாம்.

இராகு தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபக்கிரகங்களோடு கூடினுல் அதிக கஷ்டம், சந்தோஷக்குறைவு. பகை உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துத்தோஷம் வரும். இராகுவுக்குப் பிரீதி செய்ய விதி.

சனி மகாதேசை வருஷம் 19.

பலன்: அபகீர்த்தி, பொருட்சேதம், சத்துருபீடை, பந்து விரோதம், பிதிர்வர்க்கப்பீடை உண்டாம்.

சனி இலக்கினத்துக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களிலும் ஆட்சி உச்ச வீடுகளிலும் 3-6-ம் இடங்களிலும் இருந்தால் பொருள்வரவு, பிரபுக்கள் கூட்டம், அதிகாரம், பந்துகலகம் உண்டாம்.

சனி 2-7-8-ம் இடங்களில் இருந்தால் எடுத்த காரியங்கள் அனுகூலமாகாமற்போதல், பகை, விரோதம், குடும்பசுகவீனம், சகோதரபீடை, க்ஷயரோகம், அன்னியதேசப் பிரயாணம் உண்டாம். பிற்கூற்றில் சுகபலன் உண்டாம்.



சனிமகாதேசையில் சனிபுத்தி வருஷம் 3, நாள் 3.

முற்கூற்றில், சரீரபிணி, பொருட்செலவு, பந்துவிரோதம், வாகன நஷ்டம் உண்டாம். பிற்கூற்றில் அற்பசுகம், அற்ப லாபம் உண்டாம்.

சனி 3-6-11-ம் இடங்களில் உச்சபெலனோடு கூடிச் சுபர் திருஷ்டிபெற்றுல் நினைத்த காரியங்கள் கைகூடுதல், நல்ல கீர்த்தி, வாகனபலன், இராஜ உதவி உண்டாம்.

சனி 6-8-12-ல் நீசமடைந்தால் விஷபயம், ஆயுதபீடை, சுரம், தாகம் உண்டாம்.

சனி அஷ்டமாதிபதியுடன் கூடினுல் அவமிருத்துத்தோஷம் உண்டாம். சனிக்குப் பிரீதி, எருமை தானஞ் செய்ய விதி.

சனி மகாதேசையில் புதன்புத்தி
வருஷம் 2, மாதம் 8, நாள் 9.

கல்வி, விவேகம், சிறப்பு, செல்வவிருத்தி, களத்திர பலன் புத்திர அனுகூலம், பந்துக்கூட்டம், கீர்த்தி, புண்ணிய பலன், சுகம் உண்டாம்.

புதன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி பெற்றுலும், சுபக்கிரகங்களோடு கூடி உச்சம் பெற்றுலும் இராஜ அனுகூலம், தேசமரியாதை, வெகுஜன சினேகம், புண்ணியதீர்த்த பலன், வித்தைப் பிரபலம் உண்டாம்.

புதன் நீசனுய்ச் சத்துருவீட்டிற் சூரியன் செவ்வாய் சனி இவர்களோடு கூடி 6-8-12-ல் இருந்தால் தன் காரியங்களுக்குக் குறைவு, சிநேகிதர் சத்துருவாதல், பிதிர் பந்துப்பீடை உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் சுபபெலனோடு இருந்தால் சுகம், வித்தியா லாபம், ஜனமரியாதை, அதிகாரம் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபக்கிரகங்களோடு கூடிப்பாபபெலன் அடைந்தால் பொருட்சேதம், வாகன நஷ்டம், சுகக்குறைவு இவைகள் முற்கூற்றில் உண்டாகி; பிற்கூற்றில் தெய்வபக்தி, குருபக்தி, வாகன பூஷண பலன் உண்டாம்.

புதன் மாரகஸ்தானுதிபதியோடு கூடினுல் அன்னிய தேசப் பிரயாணம், குய்யஸ்தானத்தில் நோய், சோர பயம், சத்துருபீடை, அவமிருத்துத்தோஷம் உண்டாம். புதனுக்கு விஷ்ணுபூஜை, ஜபம் முதலியன செய்ய விதி.

சனி மகாதேசையில் கேதுபுத்தி வருஷம் 1, மாதம் 1, நாள் 9.

வாதரோகம், புத்திரபீடை, பொருட்செலவு, விஷ பயம், ஆசாரக்குறைவு, தைரியக்குறைவு, கலகம், தேகத்தில் விஷநீர், அன்னியதேசப் பிரயாணம் உண்டாம்.

கேது இலக்கினுதிபதியுடன் கூடினுல் கங்காதீர்த்தம் முதலிய ஸ்நானபலன், அற்பசுகம் உண்டாம்.

கேது பாபிகளோடு கூடினுல் தரித்திரம், தன் எஜமானுக்குப்பீடை உண்டாம்.

கேது தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தால் இராஜப்பிரீதி, பிரபுக்கள் சினேகம், வாகன பலன் உண்டாம்.

கேது தெசாநாதனுக்கு 8-12-ம் இடங்களில் இருந்தால் இருதயரோகம், சிரவியாதி, பந்துஜனப் பீடை, இடம்பிரிதல் உண்டாம்.

கேது மாரகத்தானுதிபதிகளோடு கூடியிருந்தால் அவமிருத்து தோஷம் வரும். கேதுவுக்குப் பிரீதி, புண்ணிய தீர்த்த ஸ்நானஞ் செய்ய விதி.

சனி மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 3, மாதம் 2.

கீர்த்தி, சத்துருஜயம், குடும்பசுகம், மனத்துக்கு இன்பமான சம்பவங்கள் உண்டாதல், புத்திரபலன், ஸ்திரீயினுற் சந்தோஷம் உண்டாம்.

சுக்கிரன் 1-4-5-7-9-10-ல் உச்ச ஆட்சி வீடுகளில் இருப்பினும், யோகாதிபதியான சனியோடு கூடினும் செல்வ விருத்தி, தானிய விருத்தி, பாற்பசு விருத்தி, பூமிலாபம், தீவாந்தரங்களில் இருந்து பொருள் வருதல், தன் காரியங்கள் அனுகூலமாக நடத்தல், சற்கருமங்கள் செய்தல், தேவவழிபாடு, பிராமண விசுவாசம், கீர்த்திக்கும் சுகத்துக்கும் உரிய வாகனம் முதலியவை சேருதல், இராஜாங்க உத்தியோக பலன் உண்டாம்.



சுக்கிரன் சத்துரு நீச வீடுகளில் அஸ்தமன தோஷத்தோடு 6-8-12-ல் இருந்தால் நேத்திரரோகம், சத்துரு பீடை, தன் காரியங்கள் அனுகூலமாகாமலிருத்தல், சுயஜன விரோதம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் தெய்வவழிபாடு, தருமம் முதலிய சற்கருமஞ் செய்தல், புண்ணிய சரித்திரங்களைக் கேட்டல், வித்தியாவினேதம், இராஜ உதவி உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியாயிருந்தால் மனக்கிலேசம், வீணன வியாச்சியங்களுண்டாதல், உஷ்ணத்தினுல் வியாதி, நேத்திரரோகம், களத்திரபிணி, இருதயநோய், அன்னத்துவேஷம், குலஸ்திரீபீடை உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் உண்டாம். சுக்கிரனுக்குத் தேவிவழிபாடு செய்ய விதி.

சனி மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 11, நாள் 12.

குடும்ப சுகவீனம், புத்திரபீடை, தேகத்தில் உஷ்ண மிகுதி, ஜலக்கடுப்பு, கைகால்களில் நோவு, வாதநோய், மனப்பயம் உண்டாம்.

சூரியன் இலக்கினுதிபதியுடன் கூடினுல் விசனமாவது பயமாவது உண்டாகும்.

சூரியன் இலக்கினத்திலிருந்தாலும், சந்திரனுடன் கூடினுலும் பந்துஜனங்களாற் பீடைப்படுதல், தேக சுகவீனம் உண்டாம்.

சூரியனைக் குரு பார்த்தால் தீங்கின்றிப் பொருள் விருத்தி, சுகானுபவம் உண்டாம்.

சூரியன் 8-12-ல் இருப்பினும், நீசமடையினும் கடினமான சுரம், மனவியாகுலம், சோரபயம், பிதிர்பந்துக் கிலேசம் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் அன்னிய தேச சஞ்சாரம், போசனக் குறைவு, தன்முயற்சிக்கு விரோதம் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துத்தோஷம் உண்டாம். சூரிய நமஸ்காரம், ஜபம் செய்ய விதி.

சனி மகாதேசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 7.

தானிருக்கும் இடங்களில் வியாச்சியங்களுண்டாதல், கலகம், மனஸ்தாபம், வஸ்திராபரணச் சேதம், நிலைவிட்டுப் பிறதேசங்களுக்குப் போக்குவரவு செய்தல், தன் பிரபுவுக்காயினும் தனக்குச் சொந்தமான பந்துக்களுக்காயினும் பீடை உண்டாம்.

சந்திரன் அபரபக்ஷ சந்திரனைப் பாபிகளோடு கூடினாலும் நீசமடைந்தாலும் அதிககஷ்டம், தைரியக் குறைவு, ஆயாசம் உண்டாம்.

சந்திரன் பூர்வபக்ஷ சந்திரனைச் சுபக்கிரகங்களோடு கூடி உச்சம்பெற்று 1-4-5-7-9-10-ல் இருந்தால் நினைத்த காரியங்கள் அனுகூலமடைதல் உண்டாம்.

சந்திரன் தெசாநர்தனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் நின்றால் செல்வவிருத்தி, அதிகாரம், காரியசித்தி, தான் பார்க்குங் காரியங்கள் சித்தியடைதல் உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் மாதிருபந்துக்களுள் பீடை, விசனம், பொருட்சேதம் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துத்தோஷம் உண்டாம். சந்திரனுக்குத் தேவிபூஜை, ஜபம் முதலிய வழிபாடு செய்ய விதி.

சனிமகாதேசையில் செவ்வாய்புத்தி
வருஷம் 1, மாதம் 1, நாள் 9.

பந்துஜனங்கள் விரோதமடைதல், பலவிடங்களில் அலைந்து திரிதல், பொருள் நட்டம், துக்கசம்பவங்கள் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுடன் கூடி உச்சத்திலாயினும், 1-4-5-7-9-10-11-ம் இடங்களிலாயினும் இருந்தால் சுரம், பித்தமயக்கம், பீடை முதலியவை உண்டாம்.

செவ்வாய் இலக்கினாதிபதியுடன் கூடி ஆட்சி உச்சம் பெற்றாலும், 11-ம் அதிபதியாய் இருந்தாலும், தெசாநாதன் இலக்கினாதிபதியாய் இருந்தாலும், செவ்வாய்



தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தாலும் பூமிப்பலன், முயன்ற காரியங்கள் அனுகூலப்படுதல், வாகன பூஷணங் கிடைத்தல், அதிகாரம், பொருள்வரவு, புத்திக்கடைசியிற் சகோதரபீடை, விசனம் முதலியவை உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதிகளுடன் கூடினால் அல்லது மாரகத்தானங்களில் நின்றால் அவமிருத்து தோஷம் உண்டாம். செவ்வாய்க்கு வெண்ணிற எருது தானஞ் செய்ய விதி.

சனி மகாதேசையில் இராகுபுத்தி
வருஷம் 2, மாதம் 10, நாள் 6,

பொருட்சேதம், விஷபயம், தேகத்தில் விஷநீர், மனவியாகுலம் உண்டாம்.

இராகு இலக்கினாதிபதியுடன் கூடினாலும், பாபிகளோடு கூடி 7-ல் நின்றாலும் குடும்ப கிலேசம், அதிகபயம் பிசாசினாற் பயம், க்ஷயரோகம் முதலியவை உண்டாம். புத்திமுதலிற் சுகமும், மத்தியில் துக்கமும், கடைசியில் சொந்தமான பந்துக்களுள் துக்க சம்பவங்களும் உண்டாம்.

இராகு இடபம், மிதுனம், கர்க்கடகம், கன்னி, தனு, மகரம் இந்த இராசிகளில் இருப்பினும், இலக்கினாதிபதியுடன் கூடினாலும், கீர்த்தி, இராஜமரியாதை, பிரயாணம் போன இடங்களிற் காரியசித்தி உண்டாம்.

இராகு 6-8-12-ல் இருப்பினும், 1-5-9-ல் இருப்பினும் சுபர் திருஷ்டி பெற்றாலும் அற்ப சுகமும், சுபகாரியங்கள் நடைபெறுதலும், தருமச் செய்கையும் உண்டாம்.

இராகு பாபியுடன் கூடினால் அதிகபயம் உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷம் உண்டாம். இராகுவுக்குச் சர்ப்பதானஞ் செய்ய விதி,

சனி மகாதேசையில் வியாழபுத்தி
வருஷம் 2. மாதம் 6, நாள் 12.

தன்னுடைய காரியங்கள் பார்ப்பதற்குப் பலர் துணைபுரிதல், ஏவற்காரர்கள் இருத்தல், மனச் சந்தோஷமான சம்பவங்கள்

நடைபெறுதல், பந்துஜனக்கூட்டம், வஸ்திராபரணங்கள் சேருதல், திரவிய விருத்தி, குடும்பசுகம், எண்ணிய கருமங்கள் அனுகூலமடைதல் உண்டாம்.

வியாழன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி உச்சம் பெற்றுச் சுபக்கிரகங்களோடு கூடிச் சுபாம்சம் பெற்றிருந்தால் அதிக கீர்த்தி, பந்துஜன அதிகாரம், தேவபூஜை, இலட்சுமி கடாக்ஷம், பிரயாணம் போனால் பலவித அனுகூலங்கள், சத்துருஜயம் உண்டாம்.

வியாழன் 6-8-12-ல் பாபிகளோடு கூடியிருந்தால் மனப்பயம், சுகக்குறைவு, மனம் ஒரே நிலையில் நில்லாமற் கலக்கமடைதல், துஷ்ட ஸ்திரீயினாற் பீடை உண்டாம்.

வியாழன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் சுகம், திரவிய விருத்தி, லாபம், நல்லகீர்த்தி,இரத்திநாபரணங்கள்சேருதல்,ஞானசாஸ்திர உணர்ச்சி, குலஸ்திரீயினால் சுகானுபவங்கள் உண்டாம்,

வியாழன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் நீசனோடு கூடினால் கஷ்டம், துக்கம், கலகம், தேகபிணி உண்டாம்.

வியாழன் சுபஸ்தானங்களில் உச்சம் பெற்றால் பிரபு சன்மானம், செல்வவிருத்தி உண்டாம்.

வியாழன் மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துத் தோஷம் வரும். குருவுக்குப் பிரீதி, விஷ்ணுஜபம் செய்ய விதி.

புதன் மகாதேசை வருஷம் **17.**

வித்தியாலாபம் வாகனபலன் வஸ்திராபரணச் சிறப்பு பந்துஜனக்கூட்டம் உத்தியோகம் வியாபாரம் முதலியவைகளிலொன்று சித்தித்தல், நல்ல ஸ்திரீயினால் சந்தோஷபலன், புத்திர விருத்தி உண்டாம்.

புதன் ஆட்சி உச்சத்தில் பூரண பெலனோடிருந்தால் வித்தையினாற் பலனடைதல், வித்தியாவினோதமான கீர்த்தி பசுவிருத்தி, வாகனபலன், போசனசுகம், சயனசுகம், சத்துருஜயம் உண்டாம்.



புதன் இலக்கினத்துக்கு 6-8-12-ல் நீசமாய் பாபிகளோடு கூடினால் சத்துருபீடை, கலகம், தனது காரியங்களுக்குக் குறைவு, சுகவீனம், மனப்பீடை உண்டாம்.

புதன் மகாதேசையில் புதன்புத்தி வருஷம் **2**, மாதம் **4**, நாள் **27**

வம்சவிருத்தி, பொருள்விருத்தி, தானியவிருத்தி, நல்லறிவு, ஞானம், கல்வியினால் கீர்த்தி, தருமம், இஷ்டசித்திகள் உண்டாம்.

புதன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால் வித்தியாபலன், கீர்த்தி, பிரபுக்கள் கூட்டம் பொருள்விருத்தி, சுயபந்துக்களுள் விவாகாதி சுபசம்பவங்கள் நடத்தல், இரத்திநாபரணம் முதலியவை சேருதல் உண்டாம்.

புதன் 6-8-12-ல் பாபியாய் நீசமடைந்தால் வாயு முதலிய பிணி, சத்துருபீடை, பொருட்சேதம், இடம் பிரிதல், கலகம் உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளோடு கூடினால் சுயபந்துகளுட் கேடு, குடும்பக் கிலேசம் உண்டாம், புதனுக்குப் பிரீதி, விஷ்ணுஜபம் செய்ய விதி.

புதன் மகாதேசையில் கேதுபுத்தி மாதம் **11**, நாள் **27**.

சரீரபீடை, பொருட்சேதம், பந்துக்கூட்டம், மனக்கவலை, விஷம்புசித்தல் உண்டாம். கேது 1-4-5-7-9-10-ல் சுபக்கிரகங்களோடு கூடிச் சுபர்திருஷ்டி பெற்றிருந்தாலும், இலக்கினாதிபதியோடு கூடினாலும் அதிகசிரமம், பிரயாணம்போன இடங்களில் விரோதம், பொருள்வரவு, இடையிடையே சுகவீனம் உண்டாம்.

கேது 8-12-ம் இடங்களில் பாபக்கிரகங்களுடன் கூடிப் பாபர் திருஷ்டி பெற்றால் பாபகன்மஞ் செய்தல், புத்திர பந்துபீடை, சோரபயம், இராஜபயம், வாசனத்தினின்று விழுதல் உண்டாம்.

கேது உச்சம்பெற்றால் விஷபயம், வாக்குவாதம்; நீசமடைந்தால் அலைச்சல், காரியநஷ்டம் உண்டாம்.

கேது மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துத் தோஷம் உண்டாம். கேதுவுக்கு சமுத்திர ஸ்நானம் சர்ப்பதானஞ் செய்ய விதி.

**புதன் மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 2, மாதம் 10.**

பிரபலமான கீர்த்தி, வித்தியாபலன், மங்கலகரமான சுகானுபவம், குடும்பசுகம், புத்திரப்பேறு, தனதானிய விருத்தி, முன் தூரதேசம் போயிருந்தால் வீடு வந்து சேருதல் உண்டாம்.

சுக்கிரன் புதனுடன் கூடினுலும் 1-4-5-7-9-10-11-ல் இருப்பினும், ஆட்சி உச்சத் தானத்தில் இருப்பினும் பூமிப்பலன், விவசாயவிருத்தி, பசுவிருத்தி, வாகன பலன், சரீரசுகம், கிணறு குளம் உண்டாக்கல் முதலிய தருமச்செய்கை உண்டாம்.

சுக்கிரன் வியாழனுடன் கூடினுல் பிரபுக்கள் பெரியோர் சினேகிதம், பொருள்லாபம், புண்ணிய சரித்திரம் அறிதல் உண்டாம்.

சுக்கிரன் சூரியனுடன் கூடினுல் வித்தியாவினேதம், அலேச்சல் முதலியவை உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ல் இருந்தாலும், ஆட்சி உச்சத் தானங்களில் இருந்தாலும், இராஜாங்க உதவி, பொருள் வரவு, கீர்த்தி, வாகன பலன் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். சுக்கிரனுக்குத் துர்க்கை இலட்சுமி இவர்களுக்குப் பிரீதி செய்ய விதி.

**புதன் மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 10 நாள் 6.**

மனக்கிலேசம், குடும்பசுகவீனம், சத்துருபகை, வியாச்சியம், தான் பார்க்குங் காரியங்களுக்குக் கஷ்டம் உண்டாம்.

சூரியன் ஆட்சி உச்சத் தானங்களிலாயினும், 1-4-5-7-9-10-11-ம் இடங்களிலாயினும் இருந்தால் பிரபுக்கள் சினேகம், உத்தியோக முயற்சி, இராஜஅனுகூலம் உண்டாம்.

சூரியன் செவ்வாயின் பார்வை பெற்றுல் பூமிப் பலனும், சகோதர சுகமும் உண்டாம்.

சூரியன் இலக்கினுதிபதியுடன் கூடினுல் முற்கூற்றில் சுகபலன், பொருள் விருத்தி, புத்தி நடுவிலுங் கடைசியிலும் பொருட்சேதம், மனக்கவலே, கலகம், பகை, பந்துக்களுக்குள் துக்கசம்பவங்கள் உண்டாம்.



சூரியன், செவ்வாய் சனி இராகு இவர்களோடு கூடினும், இவர்களின் பார்வை பெற்றுலும், சத்துருபீடை, தேகத்தில் புண் முதலியவை உண்டாதல், ஜனவிரோதம் உண்டாம்.

சூரியன் 8-12-ல் சத்துரு வீட்டில் இருந்தால் பிதிர் பந்து நஷ்டம், உஷ்ணரோகம், பசு எருது முதலிய சீவ நஷ்டம், விஷபயம், இடம்பிரிதல், பூமி நஷ்டம் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். சூரியனுக்குப் பிரீதி செய்ய விதி.

**புதன் மகாதேசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 5.**

சுபக்குறைவு, தைரியவீனம், விஷநீர், வெப்பு, பெண் மூலமாகக் கலகம், சந்துருபீடை, சிலேற்பன ரோகம் உண்டாம்.

சந்திரன் 1-4-5-7-9-10-ல் ஆட்சிபெற்றுச் சுபக்கிரகங்களின் பார்வைபெற்றிருப்பின் இராஜ உத்தியோகச் சிறப்பு, தேகசுகம், களத்திர பலன், புத்திரானுகூலம், முத்து முதலிய இரத்தின பலன், கீர்த்தி, வித்தியாவினேதம், இனிய ஆடல் பாடல்களில் விருப்பு விருப்பமான போசனம், பிரயாணம் போனவிடங்களில் காரியசித்தி, பொருள்வரவு உண்டாம்.

சந்திரன் 6-8-12-ல் நீசமடைந்தாலும், கிருஷ்ண பக்ஷ சந்திரனுயினும், சத்துரு வீட்டிலிருப்பினும் தனக்கு அதிகாரியாயிருப்பவருக்குப் பீடையும், சத்துரு பகையும், சுகக்குறைவும், தான் பார்க்குங் காரியங்களுக்குக் கேடும், மனஸ்தாபமும் உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் குருவோடாயினும், சுக்கிரனேடாயினும் கூடியிருந்தால் தனது அதிகாரியினுற் பலன், புராணுதிகாவிய சரித்திரமறிதல் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப்பயம் உண்டாம். சந்திரனுக்குத் துர்க்கா பூஜை ஜபம், வெள்ளிவிம்ப தானஞ் செய்ய விதி.

புதன் மகாதேசையில் செவ்வாய்புத்தி மாதம் 11, நாள் 27

பித்தரோகம், சிரசில் வேதனை, தேகத்தில் தழும்பு உண்டாதல், பழையபகை திரும்ப வருதல், கலகம் உண்டாம்.

செவ்வாய் 1-4-5-7-9-10-ல் உச்ச ஆட்சி வீட்டில் இலக்கினாதிபதியுடன் கூடினால் முன் நஷ்டமடைந்தவை அனுகூலமாதல், பயிர்ச்செய்கையினால் விருத்தி, இராஜ உதவி, கீர்த்தி உண்டாம்.

செவ்வாய் 8-12-ம் இடங்களில் பகை நீசமாகிப் பாபர் திருஷ்டி பெற்றால் தேகபிணி, மனஸ்தாபம், இடம் பிரிதல், கலகம், பசு முதலிய நாற்காற் சீவ நஷ்டம் உண்டாம்.

செவ்வாய் தேசநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ல் பாபியுடன் கூடினும் பாபர் திருஷ்டி பெற்றாலும் மாதுரு பந்துப் பீடை, மனோவியாகுலம், அபகீர்த்தி, மானபங்கம், பலவிதத்தாலும் மனக்கவலை உண்டாம்.

செவ்வாய் மேற்சொல்லிய இடங்களில் இருந்து சுபக் கிரகங்களின் பார்வை பெற்றால் தீமையின்றிச் சமபலன் உண்டாம்.

செவ்வாய் தேசாநாதனுக்கு 6-8-12-ல் பாபியுடன் கூடினால் பிணி, பீடை, சத்துருபகை, சகோதர பந்துக்களுள் கஷ்டம், இராஜகோபம், அன்னியதேசப் பிரயாணம் உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதியோடு கூடினால் அவமிருத்து பயம் உண்டாம். செவ்வாய்க்கு உருத்திரஜபம் சாதுக்களுக்கு அன்னதானஞ் செய்ய விதி.

புதன் மகாதேசையில் இராகுபுத்தி
வருஷம் 2, மாதம் 6, நாள் 18.

பித்தரோகம், தலைநோய், அகாலபோசனம், நிலை பிரிதல், நீசராற்பயம், கலகம், மனஸ்தாபம், பந்து ஜனக்கிலேசம், குடும்பசுகக் குறைவு உண்டாம்.

இராகு 1-4-5-7-9-10-ல் சுபக்கிரகங்களோடு கூடினால் சுகம், நல்லபோசனம், வீட்டில் சந்தோஷமான சம்பவங்கள் நடத்தல் உண்டாம்.



இராகு புதனோடு கூடி 6-8-12-ல் இருந்தால் பிற விடங்களுக்குப் போதல், போசனாதிகள் சயனம் இவைகளாற் சுகக்குறைவு, மனவியாகுலம் உண்டாம்,

இராகு மாரகாதிபதிகளோடு கூடினாலும் மாரகத் தானங்களில் இருந்தாலும் பிணி சத்துருக்களினால் தீங்குண்டாதல், மிருத்துப்பீடை உண்டாம், இராகுவுக்குத் தேவிபூஜை, ஜபம், சர்ப்பதானஞ் செய்ய விதி.

புதன் மகாதேசையில் வியாழபுத்தி வருஷம் 2, மாதம்3, நாள்6.

மனச்சந்தோஷம், பெரியோர் சினேகம், கிலேசமில்லாமை, குடும்பசுகம், புத்திர அனுகூலம், பந்துக்கூட்டம், பொருள் விருத்தி உண்டாம்.

வியாழன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் பொருள்வரவு, பெரியோருதவி, களத்திரபலன், பசு முதலிய சீவ லாபம், தருமசாஸ்திர உணர்ச்சி, தேவவழி பாடு, குரு உபதேசம், தியான பூஜை முதலிய சற்கருமங்கள் செய்தல், இஷ்டசித்தி உண்டாம்.

வியாழன் 6-8-12-ல் நீசமாய்ச் செவ்வாய் முதலிய பாபரோடு கூடியிருந்தால் கலகம், நிஷ்டூரமான வார்த்தை கேட்டல், பிணி, சோரபயம், பிதிர்மாதுரு சுகக்குறைவு, பொருள் நஷ்டம் உண்டாம்.

வியாழன் தேசநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் சுபபெலனோடிருந்தால் மன உற்சாகம், பந்து ஜனங்களால் மரியாதை, வீட்டிற் சுபசோபன சம்பவங்கள் நடத்தல் தருமச்செய்கை உண்டாம்.

வியாழன் தேசாநாதனுக்கு 6-8-12-ல் பாபவர்க்கமடைந்தால் குடும்பவிரோதம், தேகசுகவீனம், பொருள் நட்டம், அவமிருத்துப்பீடை உண்டாம்.

வியாழன் மாரகாதிபதிகளுடன் கூடினால் தேகபீடை காட்டும். வியாழனுக்குப் பூமித்தானம், பசுத்தானம், உருத்திர ஜபஞ் செய்ய விதி.

புதன் மகாதேசையில் சனிபுத்தி வருஷம் 2, மாதம் 8, நாள் 9.

மனக்கிலேசம், வாதபிணி, சத்துருவிருத்தி, பந்து ஜனப்பீடை உண்டாம்.

சனி 1-4-5-7-9-10-ல் உச்சம் ஆட்சி பெற்று இலக்கிஞதிபதியோடு கூடிஞல் சிவப்பிரதிஷ்டை செய்தல், கங்காஸ்நானம் சேது ஸ்நானம் முதலிய தீர்த்த பலன், தன்னுடைய வீட்டில் விவாகாதி சுபசம்பவங்கள் நடத்தல், இலட்சுமி கடாக்ஷம் உண்டாம்.

சனி 8-12-ல் நீசசத்துருத்தானத்தில் இருந்தால் தேக பிணி, காரியதாமதம், இடம்பிரிதல் உண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் பெரியோர் சினேகம், இராஜப்பிரீதி, வாகனபலன் உண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபக்கிரகங்களோடு கூடி இருந்தால் களத்திரபுத்திரபிணி, மனத்துயர், புத்தி ஒருவழிப்படாமை, அன்னிய தேசத்துக்குப் பிரயாணஞ்செய்தல், கால்நடையாக அலைந்து திரிதல் உண்டாம்.

சனி மாரகாதிபதிகளுடன் கூடிஞல் தேகபீடை உண்டாம். சனிக்குப் பிரீதி, விஷ்ணுஜபம் செய்ய விதி.

### கேது மகாதேசை வருஷம் 7.

தேகவரட்சி, பித்தரோகம், வாயு அதிகரித்தல், தைரியக்குறைவு, வித்தியாசமான போசனத்தால் நோய், சூனியம் பிசாசு முதலியவற்ருற் பீடை, கொம்புள்ள மிருகங்களாற் பயம் உண்டாம்.

கேது 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் பூமிப் பலன், அன்னிய தேசசஞ்சாரம், தாரபுத்திராதிகளால் அதிக சிரமம் உண்டாம் தெசை முற்கூற்றில் விசேஷ அனுபவங்களும், மத்தியிலும் பிற்கூற்றிலும் அலைச்சலும் சம பலனும் உண்டாம்.

கேது சுபக்கிரகங்களோடு கூடிச் சுபர்திருஷ்டி பெற்று 9-10-க்குடைய கிரகங்களோடு கூடிஞல் புண்ணிய தீர்த்த பலன், தேவவழிபாடு உண்டாம்.



கேது 6-8-12-ல் பாபிகளுடனே கூடியிருந்தால் வியாச்சியம், இராஜதண்டனை, இடம்பிரிதல், சுகக்குறைவு, விஷ பீடை உண்டாம்.

கேது மகாதேசையில் கேதுபுத்தி மாதம் 4, நாள் 27.

தாரபுத்திர சுகக்குறைவு, சகோதர விரோதம், இராஜபயம், மனக்கிலேசம், அகால போசனம் உண்டாம்.

கேது 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இலக்கிஞதிபதியோடு அல்லது 9-10-ம் அதிபதிகளோடு கூடிஞல் தெய்வவழிபாடு, புண்ணிய தீர்த்தபலன். குருவின் அனுக்கிரகம், நினைத்த காரியங்கள் கைகூடிவருதல் உண்டாம்.

கேது 6-8-12-ல் பாபிகளோடு கூடிஞல் அன்னிய தேசப் பிரயாணம், அகாலபோசனம், தாகம், மனக்கிலேசம் உண்டாம்.

கேது மாரகாதிபதிகளோடு கூடிஞல் அவமிருத்துத் தோஷம் உண்டாம். கேதுவுக்குத் தீர்த்தஸ்நானம், பசுத் தானஞ் செய்ய விதி.

கேதுமகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 1, மாதம் 2.

காரியானுகூலம், புத்திரபலன், களத்திர சுகவீனம் பந்துஜனக்கூட்டம், பொருள்விருத்தி உண்டாம்.

சுக்கிரன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் உச்சம் ஆட்சிப் பெற்ருல் புத்திரசுகம், வாகனபலன், வீட்டில் சுப காரியங்கள் நடத்தல், பலவிதச் சிறப்புக்கள் உண்டாம்.

சுக்கிரன் 9-10-க்குடையவர்களோடு கூடிஞல் முன் தவறிப்போன பொருள் கிடைத்தல், முன்விட்ட முயற்சி கைகூடுதல், தேகசுகம், வாகன பூஷணுதிகளின் பலன், தேவவழிபாடு, குரு உபதேசம் பெறுதல், கங்காஸ்நானம் முதலிய தீர்த்தபலன் உண்டாம்.

சுக்கிரன் 6-8-12-ல் நீசமாய்ப் பாபிகளோடு கூடிப் பாபிகளின் நோக்கம் பெற்ருல் தன்னைக்குறித்துப் பயமடைதல், நிலையற்ற புத்தி, குடும்பசுகக்குறைவு, இடம் பிரிதல், அவமிருத்துப்பீடை, வாயு உபத்திரவம் உண்டாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ல் உச்சம் பெற்ருல் எடுத்த காரியங்கள் அனுகூலமடைதல், தேக சௌக்கியம், வீட்டில் சுபசோபனங்கள் நடத்தல் உண்டாம்.

**சுக்கிரன்** தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபிகளோடு கூடினுல் பொருட்சேதம், பசு முதலிய சீவநட்டம், காரணமில்லாமல் ஒரு கலகமுண்டாதல், அபகீர்த்தி, பந்துஜனவிரோதம் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். சுக்கிரனுக்குத் தேவிவழிபாடு. ஜபம் முதலியவை செய்ய விதி.

**கேது மகாதேசையில் சூரியபுத்தி மாதம் 4, நாள் 6.**

மனக்கிலேசம், சிரநோய், அன்னியதேச சஞ்சாரம், சத்துருபீடை, உஷ்ணரோகம் உண்டாம்.

சூரியன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் நட்பு ஆட்சிப் பெற்றிருந்தால் பொருள்வரவு, சற்கருமங்கள் செய்தல், குடும்பசுகம், நினைத்தகாரியங் கைகூடுதல் உண்டாம்.

சூரியன் 6-8-12-ல் பாபிகளோடு கூடினுல் பித்தரோகம், பொருள்நட்டம், தாரக்கிலேசம், மனஸ்தாபம், பிதிர்மாதுருபீடை, வியாச்சியம் உண்டாம். புத்திக் கடைசியில் அற்பசுகம் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 1-4-5-8-9-10-11-ம் இடங்களில் இருந்தால் செல்வவிருத்தி, நினைத்த காரியங்கள் கைகூடுதல், களத்திரசுகம், தலைநோய் உண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துதோஷம் உண்டாம். சூரியனுக்கு நமஸ்காரம், ஜபம் செய்ய விதி.

**கேது மகாதேசையில் சந்திரபுத்தி மாதம் 7.**

வியாச்சியம், ஸ்திரீஜனங்களாற் கலகம், புத்திரபிணி, சத்துரு பீடை, பலவித துன்பமுண்டாகி நிவிர்த்தியாதல் உண்டாம்.

**சந்திரன்** 1-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி உச்சமானுலும் சுபருடன் கூடிச் சுபர்திருஷ்டி பெற்றுலும் விவாகாதி சுபபலன்கள், மன உற்சாகம், திரவிய விருத்தி வாகன ஆபரணுதிகள் சேருதல், காரியங்கள் தாமதமாகிச் சித்தியடைதல், புண்ணிய தீர்த்த ஸ்நானபலன், தருமச் செய்கை, பசு முதலியவை விருத்தி உண்டாம்.



சந்திரன் 6-8-12-ல் பாபிகளோடு கூடினுலும் நீசமடைந்தாலும் காரியநஷ்டம், மனஸ்தாபம், தேகபிணி உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ல் சுபக்கிரகங்களோடு கூடினுல் கல்வித்தேர்ச்சி, நூதனமான பொருள் சேருதல், தானியபலன், பூமிப்பலன், பந்துஜனங்களால் மரியாதை உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் அட்டமாதிபதியோடு கூடினுல் பொருள் நஷ்டம், கோபம் மனவியாகுலம், தவறிவிழுதல் முதலிய காரணத்தால் நோயுண்டதால், கொடுக்கல் வாங்கல் முதலியவைகளாற் கலகம், வியாச்சியம் வருதல், மர்மத்தானங்களில் நோய் உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதியோடு கூடினுல் அவமிருத்துப் பீடை உண்டாம். சந்திரனுக்கு வஸ்திரதானம், ஜபஞ் செய்ய விதி.

**கேது மகாதேசையில் செவ்வாய்புத்தி மாதம் 4, நாள் 27.**

பொருட்சேதம், பயம், காரியதாமதம், பெண் மூலமான கலகம், சத்துருபயம், வியாச்சியம், தேகத்தில் உஷ்ணரோகம் உண்டாம்.

செவ்வாய் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் பொருள் விருத்தி, பூமிலாபம், வீட்டுச்சிறப்பு, பசு முதலிய நாற்காற்சீவ லாபம், தேகசுகம் உண்டாம்.

செவ்வாய் 8-12-ம் இடங்களில் நீசமாகிப் பாபிகளோடு கூடினுல் பொருட்சேதம், சத்துருபயம், பிசாசபயம், இடம்பிரிதல் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் ஆட்சி வீட்டில் இருந்தால் இராஜ அனுகூலம், பொருள் வரவு, புத்திரபலன் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6-8-12-ல் பாபவர்க்கமடைந்தால் களத்திர சுகவீனம், விஷபயம், சுரம், அன்னியதேசவாசம், சோரபயம், மரணபயம் உண்டாம். புத்தி முடிவில் அற்ப சுகபலன் உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். செவ்வாய்க்கு எருது தானஞ் செய்ய விதி.

**கேது மகாதேசையில் இராகுபுத்தி வருஷம் 1, நாள் 18.**

தேகபிணி, களத்திரபீடை, தனது மேலதிகாரிக்குக் கஷ்டம், கீர்த்திக்குறைவு, வீட்டில் கலகம், ஆசாரவீனம், சத்துருபீடை உண்டாம்.

இராகு உச்சவீடு மித்துரு வீடுகளில் 2-11-ம் இடங்களில் இருந்தால் நீசப்பிரபுக்கள் மூலமாகப் பொருள் விருத்தி, பூமிப்பலன், தானியவிருத்தி உண்டாம். புத்தியின் முற்கூற்றில் மனக்கவலையும், பிற்கூற்றில் அதிக சுகபலனும் உண்டாம்.

இராகு 6-8-12-ல் பாபர்களோடு கூடிநின்றால் சலக்கடுப்பு, சலரோகம், சீதளசுரம், தேக தைரியக்குறைவு, பசு முதலிய நாற்கால் சீவ லாபம் உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் உண்டாம். இராகுவுக்குச் சர்ப்பதானம், தேவிக்கு ஜபம் செய்ய விதி.

**கேது மகாதேசையில் வியாழபுத்தி மாதம் 11, நாள் 6.**

பொருள்வரவு, இராஜசினேகம், களத்திரசுகம், புத்திரபலன் உண்டாம்.

வியாழன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சிப் பெற்று இலக்கினுதிபதியுடன் கூடினுல் திரவிய விருத்தி குதிரை முதலிய வாகனபலன், கீர்த்தி, புண்ணிய தீர்த்த பலன், தேவவழிபாடு, புதிதாகப் பிரபுக்களோடு சினேகஞ் செய்தல், சத்துருஜயம் உண்டாம்.

வியாழன் இலக்கினத்துக்கு 6-8-12-ல் தெசாநாதனுடன் கூடினுலும், தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தாலும் தேகசுகக்குறைவு, இடம்பிரிதல், சத்துருவிருத்தி, பூமிப்பலன், வாகன லாபம், மனவியாகுலம், கலகம் உண்டாம்.

வியாழன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்து தோஷம் உண்டாம். வியாழனுக்குப் பொன் தானஞ் செய்ய விதி.

**கேது மகாதேசையில் சனிபுத்தி வருஷம் 1, மாதம் 1, நாள் 9**

பொருட்சேதம், மனப்பயம், தேகத்தில் விஷ நீர் சொறி சிரங்கு முதலியவை உண்டாதல், களத்திரபீடை உண்டாம்.



சனி 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் பூரணபெலனேடு இருந்தால் இராஜப்பிரீதி, பிரபுக்கள் சினேகம், வாகனபலன் உண்டாம்.

சனி 8-12-ல் இருந்தால் மனஸ்தாபம், ஆலோசனை, காரியக்கேடு, பிதிர்மாதிருபீடை உண்டாம்.

சனி மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துத் தோஷம் உண்டாம். சனிக்கு எருமை தானஞ்செய்ய விதி.

**கேது மகாதேசையில் புதன்புத்தி மாதம் 11, நாள் 27**

இடம்பிரிதல், புத்திரபீடை, கல்வி விருத்தி உண்டாம்.

புதன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி வீட்டில் இருந்தால் அதிகசுகம், புண்ணிய சரித்திரங்களை அறிதல், பூமி கல்வி திரவியம் தானியம் விருத்தியாதல், புத்திர அனுகூலம், இலட்சுமி கடாக்ஷம், சுபகாரியங்கள் நடத்தல், பந்துக்கள் சுகம் உண்டாம்.

புதன் 6-8-12-ல் சனியினுடைய வீட்டில் இருப்பினும் அல்லது சனியுடன் கூடினும், சனியின் பார்வை பெறினும் சத்துருபீடை, வியாச்சியம், கலகம், அன்னிய இடங்களில் வாசஞ்செய்தல், வாகனபீடை, பொருள் நஷ்டம் உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் சுபக்கிரகங்களோடு கூடினுல் வாகனபலன், விசேஷமான ஆபரணலாபம், தேகசுகம், காரியசித்தி உண்டாம்.

புதன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால், மனப்பீடை, களத்திரபுத்திரபிணி, கீர்த்திக்குறைவு உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளுடன் சம்பந்தமானுல் அவமிருத்து தோஷம் உண்டாம். புதனுக்குச் சர்ப்பதானம், பிராமணபோசனஞ் செய்ய விதி.

**சுக்கிரன் மகாதேசை வருஷம் 20.**

பலன்:- புத்திரவிருத்தி, கல்வித்தேர்ச்சி, இராஜசன்மானம், பாக்கியஸ்திரீ சேருதல், ஆபரணபலன், வாகனபலன், அதிககீர்த்தி, ஆசாரக்கிரமம் உண்டாம்.

சுக்கிரன் உச்சம்பெற்று நீசாம்சம் அடைந்தால் நற்கருமங்களைச் செய்தல், பொருளினால் தரித்திரம், பீடை உண்டாம்.

சுக்கிரன் நீசம்பெற்று உச்சமடைந்தால் பலவித அனுகூலம், வியாபாரபலிதம் உண்டாம்.

சுக்கிரன் ஆட்சி மூலத்திரிகோணங்களில் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் இராஜயோகம், தேசாந்திரத்தில் ஐஸ்வரியம், நவரத்தினம் முதலியவை கிடைத்தல் உண்டாம்.

சுக்கிரன் இலக்கினத்துக்கு 2-11-ம் இடங்களில் அல்லது சந்திரனுக்கு 2-11-ம் இடங்களில் இருந்தால் திரவியபலன், கன்னிகாதானஞ்செய்தல், கிணறு தடாகம் முதலியவை உண்டாக்குதல், தேவாலயங்களில் நித்திய நைமித்திகம் முதலியவை செய்வித்தல், இனிமையான கீதம் கேட்டல் முதலிய சுபபலன் உண்டாம்.

சுக்கிரன் மகாதேசையில் சுக்கிரபுத்தி வருஷம் 3, மாதம் 4.

சுக்கிரன், 11-ம் இடத்தில் உச்சம்பெற்றாலும், அல்லது ஆட்சி வீட்டில் 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தாலும் இரத்தினாபரண பலன், குதிரை முதலிய வாகனங்கள் சேருதல், நாளுக்குநாள் செல்வவிருத்தி, இஷ்டமான சுகபோஜனம், இராசப்பிரீதி, ஆடல்பாடல்களில் விருப்பம், வீட்டில் இலட்சுமீகரம், பந்துக்கூட்டம், விவாகாதி மங்கலப்பேறு, புத்திரபலன் உண்டாம்.

சுக்கிரன் 6-8-12-ல் நீசமானாலும், சத்துரு வீட்டில் இருந்தாலும் பந்துக்களினால் மனக்கிலேசம், களத்திர பீடை, பொருட்சேதம், இடம்பிரிதல் முதலியவை உண்டாம்.

சுக்கிரன் 9-10-க்கு அதிபதியானாலும் இலக்கினத்தில் அல்லது 4-ம் இடத்தில் இருந்தாலும் இராஜ உத்தியோக அதிகாரமும், களத்திர புத்திர பலனும், ஐஸ்வரிய விருத்தியும், மனோதைரியமும், தன்சொல் மேலாயிருக்கும் விதமான நடையும் உண்டாம்.

சுக்கிரன் மாரகாதிபதிகளுடன் கூடினால் தேகபிணி, பீடை உண்டாம். சுக்கிரனுக்கு உருத்திரஜபம், சிவார்ச்சனை முதலியவை செய்ய விதி.



சுக்கிரன் மகாதேசையில் சூரியபுத்தி வருஷம் 1.

தேகத்தில் துன்பம், பொருட்சேதம், சத்துருபகை, வியாச்சியம், களத்திரபுத்திரபீடை, பந்துவிரோதம், சுரம், காரியதாமதம் உண்டாம்.

சூரியன் மேடம் அல்லது சிங்கத்தில் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் தனது அதிகாரியினால் சுகபலனடைதல், பொருட்பலன், விவாகாதி சுபபலன்கள், புத்திர அனுகூலம் உண்டாம்.

சூரியன் 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தால் பிதிர் பந்துக் கிலேசம், மனப்பயம், பொருட்குறைவு, இராஜப்பிரீதி, நற்கீர்த்தி உண்டாம்.

சூரியன் 8-12-ல் நீசனாய்ப் பாபக்கிரகங்களோடு கூடினால் தேகபிணி, அலைச்சல், வியாச்சியம், தனக்கும் தனது காரியம் பார்ப்பவர்களுக்கும் கலகம், பயம் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் பாபியாயிருந்தால் பொருள் நஷ்டம், ஜனங்களோடு விரோதம், போசனக்குறைவு, துர்க்கருமங்களைச் செய்தல் உண்டாம். புத்திக் கடைசியில் அற்பபலன் உண்டாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் தேக உஷ்ணம், சுரம், சோரபயம், சத்துருபீடை உண்டாம்.

சூரியன் மாரகாதிபதியோடு கூடினால் அவமிருத்துப் பீடை உண்டாம். சூரியனுக்குப் பிரீதிசெய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 8.

குடும்பசுகம், காரியானுகூலம், நூதனகிருக வாசம் தேக தைரியக்குறைவு உண்டாம்.

சந்திரன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் பூர்வபக்ஷ சந்திரனாய் இலக்கினாதிபதி அல்லது சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் விசேஷ திரவியலாபம், ஜனாதிகாரம், தூரதேசத் திரவியலாபம், தேவாலய தரிசனை, புண்ணிய தீர்த்த ஸ்நானம், குரு உபதேசம், புண்ணிய சரித்திரங்களை அறிதல், இனிமையான கீதம் முதலியவைகளில்

விருப்பு, ஆசாரக் கிரமம், இஷ்டமான சுகபோசனம், கீர்த்தி, பிரபுசினேகம், வாகனபலன், இரத்தினுபரண லாபம், சற்கருமங்கள் செய்தல் உண்டாம்.

சந்திரன் நீசமாய் இலக்கினத்துக்காயினும் தெசா நாதனுக்காயினும் 6-8-12-ல் இருந்தால் விஷநீர்ரோகம், தேகஆயாசம், தனக்கு அனுகூலமானவர்களோடு விரோதம், பலவிடங்களிலுந் திரிதல், பந்துமித்திரர்களுள் கேடு உண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தால் கீர்த்தி, வாகன ஆபரணுதி லாபம், பூமிப் பலன், இராஜப் பிரீதி, ஜனுதிகாரம், தருமச் செய்கை, புத்திமுடிவில் பீடை உண்டாம்.

சந்திரன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் சலரோகம் முதலிய பீடைகாட்டும். சந்திரனுக்குப் பிரீதி, தேவி வழிபாடு செய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் செவ்வாய்புத்தி வருஷம் 1, மாதம் 2

பூமிப்பலன், காரியானுகூலம், சத்துருபகை, தேக சுகவீனம் உண்டாம்.

செவ்வாய் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சி வீட்டில் இருந்தாலும் இலக்கினுதிபதி 9-10-ம் இடத்துக் கதிபதி இவர்களோடு கூடி இருந்தாலும், சுபக்கிரகங்களுடைய பார்வைபெற்றுலும் இலட்சுமி கடாக்ஷம், புத்திரபலன், இராஜப்பிரீதி, பொருள்வரவு, தான் இருக்கும் இடத்தில் விசேஷ சுபசம்பவங்கள் உண்டாதல், காரியானுகூலம் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் தான் செய்யும் காரியங்கள் அனுகூலமாகாமற்போதல், அபகீர்த்தி, சிரரோகம், சுரம், இடம் மாறுதல் முதலிய பீடைகள் உண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் இருந்தால் தனதானியலாபம், பசு முதலிய சீவலாபம், பூமிப்பலன், தருமச்செய்கை, வீட்டில் மங்களகரமான காரியங்கள் நடத்தல் உண்டாம்.

செவ்வாய் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். செவ்வாய்க்கு எருது தானஞ் செய்ய விதி.



சுக்கிரன் மகாதேசையில் இராகுபுத்தி வருஷம் 3

தருமச்செய்கை, தேவபக்தி, சிரசில் நோய், புத்திரர் முதலிய சுயபந்துக்களாற் கலகம், விஷமநந்து முதலியவைகளால் பயம், அலேச்சல் உண்டாம்.

இராகு 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் உச்சம்பெற்றுச் சுபக்கிரகங்களுடன் கூடியிருப்பினும் இலக்கினுதிபதி 9-10-ம் இடத்துக்கதிபதிகளோடு கூடியிருந்தாலும் இராஜயோகம், ஐஸ்வரியவிருத்தி, சத்துருஜயம், தேகசுகம், காரியசித்தி, புண்ணியதீர்த்த ஸ்நானபலன் உண்டாம்.

இராகு 8-12-ம் இடங்களில் பாபிகளோடு கூடியிருந்தால் பிதிர்மாதிரு கருமம், அல்லது பிதிர்மாதிரு விரோதம், பந்துவிரோதம், பிரயாணம், காரியநஷ்டம் உண்டாம்.

இப்புத்திக்குள் வரும் கார்த்திகைமாதங்களில் நோய் வரினும் புதிய காரியங்களில் பிரவேசிப்பினும் அதிக கஷ்டம் உண்டாம்.

இராகு மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்து தோஷம் உண்டாம். இராகுவுக்குச் சாந்தி, சர்ப்ப தானஞ் செய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் வியாழபுத்தி வருஷம் 2 மாதம் 8.

திரவியலாபம், புத்திர அனுகூலம், தானியவிருத்தி, தேவபக்தி, பிராமணவிசுவாசம், சற்கிரியைகள் செய்தல், சில காரியங்கள் முயற்சி செய்யாதிருக்க அனுகூலப்படுதல் உண்டாம்.

வியாழன் ஆட்சிவீட்டில் 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தாலும், தெசாநாதனுக்கு 1-4-5-7-9-10-ல் இருந்தாலும், மித்துருராசியில் 9-10-ம் இராசியதிபர்களோடு கூடினுலும் பந்துஜனங்களுள் அதிகாரியாக இருத்தல், இராஜயோகம், பொருள்வரவு, தானியவிருத்தி, பிரபுசன்மானம், மித்திரர்கூட்டம், முன் அனுகூலமாகாமற்போனவை அனுகூலப்படுதல், களத்திரசுகம், பிரயாணம்போனவிடங்களில் கீர்த்தி, காரியஅனுகூலம், வாகனலாபம் உண்டாம்.

வியாழன் 6-8-12-ம் இடங்களில் சத்துரு நீசராசியில் அஸ்தமனம் முதலிய தோஷத்தோடிருப்பின் தேக சுகக்குறைவு, தைரியக்குறைவு, பாண்டுரோகம், சிலேற்பன ரோகம், களத்திரத்துக்கு அசீரணரோகம் உண்டாதல், புத்திரபௌத்திரர்களுக்குப் பீடை நன்முயற்சிக் குறைவு பூமி நஷ்டம் உண்டாம்.

வியாழன் மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துப்பீடை உண்டாம். வியாழனுக்குச் சிவார்ச்சனை, ஜபம், பொன் தானஞ் செய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் சனிபுத்தி வருஷம் 3 மாதம் 2.

அன்னியதேச சஞ்சாரம், வியாபாராதிகளால் பொருள்விருத்தி, வாதரோகம், போசனக்குறைவு, களத்திரபிணி உண்டாம்.

சனி 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் ஆட்சிப்பெற்று இருந்தால் சத்துருஜயம், ஐஸ்வரியவிருத்தி, இலட்சுமீகரம் உண்டாம்.

சனி 8-12-ம் இடங்களில் நீசசத்துருத்தானம் பெற்ருல் நோய், மனவியாகுலம், பொருள்நஷ்டம், பகை உண்டாம்; புத்திக்கடைசியில் சுகம் உண்டாம். சுக்கிர தெசையில் சனிபுத்தி விசேஷ பலனுக்கு உரியதல்ல.

சனி மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப் பீடை உண்டாம். சனிக்குப் பிரீதி. உருத்திரஜபம் செய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் புதன்புத்தி வருஷம் 2, மாதம் 10

பொருள் விருத்தி, கல்வித்தேர்ச்சி, வாக்குவல்லபம், களத்திர புத்திர சுகம், இஷ்டர்களால் இலாபம், நினைத்த காரியம் அனுகூலமாதல் உண்டாம்.

புதன் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் உச்சம் ஆட்சிப்பெற்றிருந்தால் வாகனலாபம், திரவியவிருத்தி, இராஜப்பிரீதி, புத்திர அனுகூலம், புத்திரர் முதலிய சுயபந்துக்களுள் விவாகாதி சுபகருமங்கள் நடத்தல், ஆபரணபலன், சிறப்பான பொருள் சேருதல், இனிமையான கீதம் முதலியவைகளில் விருப்பு, தருமசாஸ்திர புராணுதி சரித்திரங்களை அறிதல் உண்டாம்.



புதன் 6-8-12-ல் பாபிகளோடு கூடினுல் பசு வாகனுதி சீவ நஷ்டம், மனவியாகுலம் அந்நியக்கிருக வாசம், அகால போசனம், கடன்படுதல் உண்டாம்.

புதன் மாரகாதிபதிகளோடு கூடினுல் மிருத்துப்பிணி துக்கம், வாயு, வாதம் உண்டாம். புதனுக்கு விஷ்ணு ஜபம், எள் அறுகு ஒமஞ்செய்ய விதி.

சுக்கிரன் மகாதேசையில் கேதுபுத்தி வருஷம் 1, மாதம் 2.

விஷபயம், மிருகபயம், குடும்ப அனுபவசுகக்குறைவு பந்துஜன நாசம், சத்துருபீடை, காரிய நஷ்டம் உண்டாம்.

கேது 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் தேவாலய தரிசனம், புண்ணிய தீர்த்த ஸ்நானபலன், இஷ்டமான போசனம், சினேகிதருக்கு ரோகம், இராஜகாரியத்தில் மனக்கவலை உண்டாம்.

கேது 8-12-ம் இடங்களில் பாபிகளோடு கூடிப் பாபிகளின் நோக்கம் பெற்ருல் தன்னைக் குறித்துப் பயமடைதல், சோரபயம், தூரதேசப் பிரயாணம், புத்திர பீடை, பந்துநஷ்டம், அந்நிய கிருகவாசம் உண்டாம்.

கேது மாரகாதிபதிகளோடு கூடினுல் அவமிருத்துப் பீடை உண்டாம். கேதுவுக்குச் சமுத்திரஸ்நானம், கம்பள தானஞ் செய்யவிதி.

ஆரும் அத்தியாயம் முற்றிற்று.

# 7-ம் அத்தியாயம்

தெசாபுத்திகளின் பலனை அறியும்போது யோகமான கிரகங்களின் பலனையும் அறியவேண்டுவதால் அவற்றுள் பிரதானமானவை மாத்திரம் எழுதப்படுகின்றன.

## யோகபலன்

### நீசபங்க இராஜயோகம்

ஒரு இராசியில் ஒரு கிரகம் நீசமானால் அந்த இராசிக்கதிபதியாவது அந்த இராசிக்கு உச்சக்கிரகமாவது சந்திரனுடனாயினும் சந்திரனுக்கு 4-7-10-ம் இடங்களிலாயினும் இருந்தால் நீசம் பங்கமாகிவிடும். இஃதன்றி ஒரு ஜாதகத்தில் பல கிரகங்கள் நீசமாகி இருக்க, அவற்றில் ஒரு கிரகம் மாத்திரம் நீசபங்கமானால் மற்ற (நீசமான) கிரகங்களெல்லாம் நீசபங்கத்தை அடைதலேயன்றி அந்த ஜாதகனுக்கு இராஜயோகமும் உண்டாம்.

### கேசரியோகம்

சந்திரன் நின்ற இராசியிலாயினும், அதற்கு 4-7-10-ம் இடங்களிலாயினும் வியாழனிருந்தால் கேசரியோகமாகும்.

பலன்:- வித்தியாவேகம், தருமத்தில் விருப்பம் உண்டாம்.

1-4-7-10-ம் இடங்கள் சந்திரனுக்கும் வியாழனுக்கும் சுபக்ஷேத்திரங்களாக இருந்தால் விசேஷ யோக பலன் உண்டாம். இந்த யோகபலத்தினால் மற்றைய கிரகங்கள் குரூரஸ்தானங்களிலிருந்து செய்யுந் தோஷங்கள் நிவாரணமாகும்.

### குருசந்திர யோகம், சசிமங்கள யோகம்.

சந்திரனும் வியாழனும் ஒரு இராசியில் ஒரு நக்ஷத்திர பாதத்தில் ஒரு பாகையில் இருப்பது குருசந்திர யோகமாகும். சந்திரனும் செவ்வாயும் கூடி 7-ம் இடத்தில் இருப்பது சசிமங்களயோகமாகும்.

பலன்:- அதிக கீர்த்தி, இராஜயோகம் உண்டாம்.

உதயலக்கினமும் அதற்கு 4-7-10-ம் இடங்களுமாகிய 4 கேந்திரங்களிலும் தவறாமல் கிரகங்கள் நின்றால் பர்வதயோகமாகும்.

பலன்:- ஸ்ரீமானுக்கும், இராஜயோகத்துக்குரிய விசேஷ பலன்களை மேன்மேலுஞ் செய்யும்.

இலக்கினாதிபதி இருந்த வீட்டுக்கதிபதி உச்சம்பெற்றாலும், 1-4-7-10-ல் இருந்தாலும் பர்வதயோகம் என்று சொல்லப்படும். உதயலக்கினத்துக்கும் 12-ம் இடத்துக்கும் 2-ம் இடத்துக்கும் அதிபதிகள் இருவர் கூடிக் கேந்திரங்களில் இருப்பினும் பர்வதயோகம் என்று சிலநூற் சம்மதம்.

பலன்:- சுகானுபவம், மிகுந்த கீர்த்தி, குதிரை முதலிய வாகன பலன், ஸ்திரீகள் மீது அன்பு உண்டாம்.

1-4-7-10-ல் சுபக்கிரகங்கள் நின்றால் கமலயோகமென்று சொல்வதுண்டு.

### தர்மயோகம்

இலக்கினாதிபதியும், ஒன்பதாதிபதியும் கூடியிருப்பினும், ஒருவர் வீட்டில் ஒருவராக வீடுமாறியிருந்தாலும் தர்மயோகமாம்.

பலன்:- குறையாத செல்வம், பரோபகாரம், இராஜயோகம் உண்டாம்.

இலக்கினம் முதல் 6 இராசிகளில் 7 கிரகங்கள் நிற்பதைத் தர்மயோகம் என்று சிலநூல் கூறும்.

### ஆயுள்யோகம்

சந்திரனுக்கு 1-4-7-10 ஆகிய இடங்களில் சுக்கிரன் இருப்பது ஆயுள்யோகமாகும்.

பலன்:- பூரணாயுள், குலாதிபதித்துவம், அதிகசெல்வம், வாகனம் உண்டாம்.

### கேதாரயோகம்

உதயலக்கினத்திலிருந்து 4-ம் இடம் வரையும் சூரியன் முதலிய ஏழு கிரகங்களிருப்பின் கேதார யோகமாகும்.

பலன்:- வேளாண்மையால் செல்வ விருத்தி, சுற்றத்தவர்கள் மீது அன்பு, சரீரசுகம், இராஜமரியாதை, நற்குணம் உண்டாம்.

### சூலயோகம்

இலக்கினத்திலிருந்து மூன்றாமிடம் வரையும் ஏழு கிரகங்கள் நின்றால் சூலயோகமாகும்.

பலன்:- கல்வி, உற்சாகம், அனுபோகம், திரவியந் தேடுதல், கொள்வதிலும் விற்பதிலும் வல்லமை உண்டாம்.

### சுபயோகம்

சந்திரனுங் குருவும் 2-ல் இருக்க, இரண்டாதிபதி 11-ல் இருக்க, 11-க்கு அதிபதி 9-ல் இருப்பது சுபயோகமாகும்.

பலன்:- நீதியான நடை, பலராலும் மரியாதை பெறுதல், கோபமில்லாத வசனம், நெடுங்கால சீவியம் நற்காரியங்களையே செய்தல் உண்டாம்.

### கிரகமாலிகாயோகம்

இலக்கினம் முதலாக ஏழு இராசிகளிலும் இடைவிடாமற் கிரகம் இருந்தால் கிரகமாலிகாயோகமாகும்.

பலன்:- ஜனாதிகாரம், உற்சாகம், நீதியுடைமை, தருமஞ்செய்தல், நல்லறிவு, அதிககீர்த்தி, வித்துவத் தன்மை, சத்திய வசனம், சுகானுபவம் உண்டாம்.

இதைத் தர்மயோகமென்றும் வல்லகியோகமென்றுஞ் சொல்வதுமுண்டு.

### சக்கரயோகம்

இலக்கினம் 3-5-7-9-11 ஆகிய இராசிகளில் தவறாமல் ஏழுகிரகம் நின்றால் சக்கரயோகம் எனப்படும்.

பலன்:- இராஜாதிகாரம், சுகதேகம், கோபமில்லாமை கிருபையுடைமை, ஞானசாஸ்திரவுணர்ச்சி, அதிக விவேகம், தாதாசீமான் என்பவைபோன்ற கீர்த்திக்குரிய பெயர்கள் உண்டாம்.



### பாசயோகம்

இலக்கினம் முதலாக ஐந்து இராசிகளில் தவறாமல் ஏழு கிரகங்கள் நின்றால் பாசயோகம் என்று சொல்லப்படும்.

பலன்:- கூர்மையான புத்தி, யோகசாதனை, பல கலைக்ஞானங்களை அறிதல், பலர் புகழும்படி வாழுதல், அரசர்களால் மரியாதை பெறுதல், அதிக செல்வமுடைமை, தன் காரியங்களைக் கிரமமாகப் பார்க்கும் வல்லமை உண்டாம்.

### சுனபாயோகம்

பூர்வபக்ஷச் சந்திரனுக்கு 2-ம் இடத்தில் சுபக்கிரகம் இருப்பின் சுனபாயோகம்.

பலன்:- பிதாவின் பொருள் முதலிய பூர்வ திரவியமில்லாமல் தான் அதிக திரவியந்தேடி அனுபவித்தல், தைரியம், தருமஞ்செய்தல், இராஜசன்மானம், வாக்கு வல்லபம், கல்வித்திறமை, புண்ணிய விருப்பம் உண்டாம்.

### அனபாயோகம்

பூர்வபக்ஷச் சந்திரனுக்கு 12-ல் சுபக்கிரகம் நிற்பின் அனபாயோகம்.

பலன்:- சற்குணம், நல்லொழுக்கம், சாஸ்திரங்களை அறிதல், தைரியம், ஸ்திரீ சொற்கேட்டல் உண்டாம்.

### துரதுராயோகம்

பூர்வபக்ஷச் சந்திரனுக்கு முன் இராசியிலும் பின் இராசியிலும் சுபக்கிரகங்கள் நின்றால் துரதுராயோகம்.

பலன்:- இராஜ உத்தியோகபலன், சேனைத்தலைமை, தன் ஜனங்களைப் பாதுகாத்தல், வாகனாதி பசு முதலியவைகளைச் சம்பாதித்தல், அனுபோகமுடைமை, நல்வாழ்வு, ஆயுள்விருத்தி உண்டாம்.

### அஸ்வயோகம்

உதயலக்கினத்துக்கு 2-ம் இடத்தில் சுபக்கிரகம் நின்றால் அஸ்வயோகம்.

பலன்:- செல்வமுடைமை, சிரேஷ்டமான பந்துக்கள் உண்டாம்.

### வேசியோகம்

சூரியன் நின்ற இராசிக்கு 12-ம் இடத்தில் சுக்கிரன் சுபபெலனோடு நின்றால் வேசியோகமாகும்.

பலன்:- இராஜமரியாதை, பலவிதமான ஆலோசனைக்கும் ஸ்திரபுத்தி உண்டாதல், பெரியோர்களால் மரியாதை பெறுதல், பூமிப்பலன் உண்டாம்.

புதன் சூரியனுக்கு 12-ல் நின்றால் இவற்றோடு சோதிட சாஸ்திர வல்லமை, தேக அழகு, ஆசார ஒழுக்கம், தேவபக்தி உண்டாம்.

வியாழன் சூரியனுக்கு 12-ல் நின்றால் இராஜமரியாதை, பந்துக்களை இரக்ஷித்தல், அங்கலக்ஷணம், குடும்ப சுகம், அனுபோகம், சங்கீதம் பாட்டு முதலியவைகளில் விருப்பம் உண்டாம்.

மற்றைய கிரகங்கள் சூரியனுக்கு 12-ல் நிற்பது விசேஷ பலம் அல்ல.

### புஷ்களயோகம்

